©
தமிழ்நாடு அரசு
1982

பதிவெண் : எம் —1
விலை : ரூ. 3-20

65 T. ARAVAMUDHAN,
4/25, GENGU REDDY LANE
EGMORE, MADRAS-600008

T. Aravamudhan,
Vice-President,
JANATHA PARTY MADRAS SOUTH DIST

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

### ஆணைப்படி வெளியிடப்பட்டது

எண். 326 சென்னை, வெள்ளிக்கிழமை, 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள்
27 ஆம் நாள், ஆவணி 11, துந்துபி —2013—திருவள்ளுவர் ஆண்டு

## பகுதி II—பிரிவு 2

### தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் அர்ச்சகர் நியமனமுறை பற்றி ஆராய்வதற்காகத் தமிழ்நாடு அரசு நியமித்த வல்லுநர் குழு அறிக்கை

*அரசாணை (பல்வகை) எண் 1001 வணிக வரி மற்றும் அறநிலையத்துறை
நாள் 27-8-1982.*

No. II (2)/CTRE/4435 (g)/1982.

*தமிழ்நாட்டுத் திருக்கோவில்களில் அர்ச்சகர்கள் நியமன முறைபற்றிய வல்லுநர் குழு அறிக்கையின் முக்கிய பகுதிகள் வெளியிடப்படுகிறது.*

பொருளடக்கம்.


| பகுதி எண். (1) | தலைப்பு. (2) | பக்கம். (3) |
|---|---|---|
| I | தோற்றுவாய் .. .. .. .. .. .. | 3 |
| II | அரசு வல்லுநர்குழு அமைத்ததன் நோக்கமும், குழு அமைப்பும். | 5 |
| III | வல்லுநர் குழுவின் செயல்முறை .. .. .. .. | 6 |
| IV | பூசை பற்றிய விவரங்கள் .. .. .. .. .. | 7 |
| V | பூசகர் பற்றிய விளக்கம் .. .. .. .. .. | 7 |
| VI | பூசகர்க்கு ஆகமத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற தகுதிகளும் தகுதிக் குறைபாடுகளும் .. .. .. | 8 |
| VII | ஆகமங்கள் பற்றிய விளக்கம் .. .. .. .. | 9 |
| VIII | வேதங்களும் ஆகமங்களும்— ஆகமங்களின் சிறப்பு .. | 11 |
| IX | ஆகமங்களுக்கு இருந்த முதன்மை .. .. .. .. | 14 |
| X | ஆகமம் வளர்த்த கலைவளம் .. .. .. .. | 15 |
| XI | இலக்கிய வரலாற்றில் ஆகமச் சான்றுகள் .. .. .. | 16 |
| XII | ஆகமங்கள் தமிழில் இருந்தன என்பதற்குச் சான்றுகள் .. | 18 |
| XIII | திராவிட வேதம் என்று சொல்லுகின்ற மரபு .. .. | 19 |
| XIV | ஆகமங்களில் இடைச் செருகல் .. .. .. .. | 20 |
| XV | தமிழர் பண்பாட்டில் பிறப்பும் சாதியும் .. .. .. | 22 |
| XVI | கோயில்களில் இன்று பூசை செய்பவர் பற்றிய விளக்கம் .. | 30 |

| | | |
|---|---|---|
| XVII | இன்றைய சிவாச்சாரியர் பட்டாச்சாரியர் நிலை .. .. | 32 |
| XVIII | பூசகர் பணியை ஒரு தொழில் என்று கருத முடியுமா ? .. | 34 |
| XIX | உள்துறை .. .. .. .. .. .. | 35 |
| XX | கருத்துக்கோவை .. .. .. .. .. .. | 36 |
| XXI | ஆய்வில் கண்ட தெளிவான நிலைமைகள் .. .. .. | 39 |
| XXII | முடிப்புரை .. .. .. .. .. .. .. | 44 |
| XXIII | பரிந்துரைகள் .. .. .. .. .. .. | 44 |
| XXIV | வல்லுநர் குழுத் தலைவர் தரும் சட்ட சம்பந்தமான குறிப்பு (தமிழ்) .. .. .. .. .. .. | 46 |
| | The Chairman's note on the Legal Position .. .. .. | 52 |
| | தமிழ் அருச்சனை பற்றிய குறிப்பு .. .. .. | 55 |
| | செயல் திட்டம் .. .. .. .. | 61 |


## வல்லுநர் குழுவின் உறுப்பினர்கள்.

### தலைவர் :

1 டாக்டர் எஸ். மகராஜன் .. .. ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

### உறுப்பினர்கள் :

2 திரு. சி. சுவாமிநாத குருக்கள் .. .. தென்னிந்திய அர்ச்சகர் சங்கத் தலைவர், சென்னை.

3 திரு. எ. விசுவநாத சிவாச்சாரியர் .. முதல்வர், வேத பாடசாலை, அல்லூர், திருச்சி.

4 திரு. என். ரெங்கராச பட்டர் .. திருவரங்கம் கோயில் பூசகர்.

5 திரு. மு. அருணாசலம் .. .. இலக்கிய வரலாற்றுப் பேராசிரியர், திருச்சிற்றம்பலம்.

6 திரு. க. வச்சிரவேல் முதலியார் .. சைவ சித்தாந்தத் துறைத் தனி அலுவலர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

7 திருமுருக கிருபானந்தவாரியார் .. சென்னை—2.

8 திரு. யு. சுப்பிரமணியன், இ.ஆ.ப. .. ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

9 திரு. கோ. மு. முத்துசாமிப் பிள்ளை .. ஓய்வுபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர், திருவான்மியூர்.

10 திரு. ச. சுந்தரராஜ பட்டர் .. .. ஸ்ரீநிவாசப்பெருமாள் கோயில், நாச்சியார்கோயில், தஞ்சை.

11 திரு. டி. எஸ். சாம்பமூர்த்தி சிவாச்சாரியர் தென்னிந்திய அர்ச்சகர் சங்கச் செயலர், சென்னை.

12 திரு. அ.வெ.ர. கிருஷ்ணசாமி ரெட்டியார். தலைவர், இந்து ஆலய பாதுகாப்புக் குழு, திருச்சிராப்பள்ளி.

### அமைப்புச் செயலர்.

13 திரு. இரா. அர்ஜுனன் .. .. .. ஆணையரின் நேர்முக உதவியாளர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.

குறிப்பு.—திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் எந்தக் கூட்டத்திற்கும் வரவில்லை.

## முன்னுரை.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் பூசை செய்யும் பூசகர்களின் பரம்பரை உரிமையை நீக்கும்பொருட்டு, 1959 ஆம் ஆண்டின் 22 ஆவது சட்டமாகிய இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 55 ஆவது பிரிவு தமிழ்நாடு அரசின் 1971 ஆம் ஆண்டு 2 ஆவது சட்டமாகிய இந்து சமய அறநிலையச் சட்டத்தின் திருத்தச் சட்டம் மூலம் திருத்தப் பெற்றது. இதை எதிர்த்து, தங்கள் முன்வந்த மனுக்களை உச்சநீதி மன்றத்தார் தள்ளுபடி செய்தனர். அர்ச்சகரின் பரம்பரை உரிமை நீக்கப்பட்ட நிலையில் அர்ச்சகர்களின் நியமனம் ஆகமத்திற்குப் புறம்பாக இருக்கக்கூடும் என்று மனுதாரர்கள் தெரிவித்திருந்த அச்சத்தைக் குறிப்பிட்டு, ஒவ்வொரு கோயிலின் மரபு, அதில் வழக்கமாக நடைபெற்று வரும் வழிபாட்டுமுறை, சடங்குமுறை ஆகியவற்றிற்கு முரணான செயல் நடைபெறாமல் இருக்க இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தில் போதிய விதிகள் இருக்கின்றன, ஆக மனுதாரர்களின் அச்சத்திற்கு ஆதாரமில்லை என்ற கருத்தைத் தெரிவித்துள்ளனர். எல்லாருக்கும் வேலை வாய்ப்பு சமமாக இருக்க வேண்டும் என இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டிருப்பதையும், உச்சநீதி மன்றத் தீர்ப்பினையும் கருத்தில் கொண்டு, சாதி இன வேறுபாடு இன்றி, பூசகரையும் இதர உள்துறைப் பணியாளரையும் நியமனம் செய்வது குறித்து ஆராய்ந்து அரசுக்குத் தக்க ஆலோசனை கூறுமாறு வல்லுநர் குழு ஒன்றைத் தமிழ்நாடு அரசு, அரசாணை (பல்வகை) எண். 1573, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள் 24—9—1979 மூலம் அமைத்து, ஆலோசனையை அறிக்கையாக அனுப்பக் கேட்டுக்கொண்டது. இந்த வல்லுநர் குழுவின் ஆய்வுக் கருத்துகள் பின்வரும் அறிக்கை வடிவத்தில் அரசுக்குத் தரப்படுகின்றன.

## I. தோற்றுவாய்.

1. 1959 ஆம் ஆண்டின் இந்து சமய அறநிலையச் சட்டம்.—தமிழ்நாட்டில், முன்பிருந்த இந்து சமய அறநிலையச் சட்டங்கள் தொகுத்துத் திருத்தப்பட்டு, முழுமைபெற்ற சட்டம் மேற்கண்ட தலைப்பில், 1959 ஆம் ஆண்டின் 22 ஆவது சட்டமாக 1960 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் தேதியிலிருந்து அமுலுக்கு வந்தது. தமிழ்நாட்டிலுள்ள எல்லா இந்து சமயப் பொதுக்கோயில்களும், இந்து சமய மடங்களும் இவற்றினைச் சார்ந்த கட்டளைகளும், இந்தச் சட்டத்தின் ஆட்சிக்கு உட்பட்டனவாகும்.

2. 1971 ஆம் ஆண்டின் இந்து சமய அறநிலையத் திருத்தச் சட்டம்.—தீண்டாதவர்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்புகளின் பொருளாதார வளர்ச்சி, கல்வி முன்னேற்றம் ஆகியவற்றினை ஆய்வு செய்வதற்காக, அரசினால் 1969 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட குழு தனது அறிக்கையில், இந்து சமூகத்தில் நிலவும் பரம்பரை அர்ச்சகர் முறையினை நீக்கி, அதற்குப் பதிலாக, சாதி இன அடிப்படையின்றித் தேவையான கல்வித் தகுதி உள்ள ஆடவர்களுக்குத் தக்க நிறுவனங்களின் மூலம் பூசனைத் தொழிலில் பயிற்சி அளித்து அவர்களைக் கொண்டு சமய பூசனையாளர் அமைப்பு ஒன்றினை உருவாக்கி அந்த அமைப்பில் உள்ளவர்களை அர்ச்சகராக நியமனம் செய்யும் முறையை மேற்கொள்ளலாம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப சமூகச் சீர்திருத்தத்தில் மற்றும் ஒரு முன்னேற்ற நடவடிக்கையாக, தமிழ்நாடு அரசு 1970 ஆம் ஆண்டில், 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 55, 56, 116 பிரிவுகளைத் திருத்தி, 1971 ஆம் ஆண்டு 2 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றியது. இத்திருத்தச் சட்டம் 1971 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 8 ஆம் நாள் முதல் செயற்படுத்தப்பட்டது. 1959 ஆம் ஆண்டுச் சட்டம் 55 ஆவது பிரிவு திருத்தப்பட்டது காரணமாக, அச்சட்டத்தின் 56, 116 ஆகிய பிரிவுகளும் திருத்தப்பட்டன.

3. சட்ட பிரிவு 55 : மூலமும் திருத்தமும்.—1959 ஆம் ஆண்டுச் சட்டத்தின் 55 ஆவது பிரிவும், 1971 ஆம் ஆண்டு திருத்தச்சட்டத்தின்மூலம் திருத்தப்பட்ட அதே பிரிவும் கீழே குறிப்பிடப்படுகின்றன.

| 1959 ஆம் ஆண்டு அறநிலையச் சட்டம். | 1971 ஆம் ஆண்டுத் திருத்தச் சட்டம். |
|---|---|
| பிரிவு 55 | பிரிவு 55. |
| உட்பிரிவு (1) : | உட்பிரிவு (1) : |
| ஒரு சமய நிறுவனத்தின் ஊழியர்கள் அல்லது பணியாளர்கள் பதவியில் நிரந்தரமாகவோ தற்காலிகமாகவோ காலியிடம் ஏற்பட்டால், அந்தப் பதவி அல்லது ஊழியம் பரம்பரைப் பதவி அல்லாதபோது அந்தப் பதவியையும் ஊழியத்தையும் அறங்காவலரே நிரப்ப வேண்டும். | ஒரு சமய நிறுவனத்தின் ஊழியர்கள் அல்லது பணியாளர்கள் பதவியில் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ ஏற்படுகின்ற எல்லாக் காலியிடங்களையும் அறங்காவலர் நிரப்ப வேண்டும். |
| | விளக்கம்.—பணியாளர்கள் அல்லது ஊழியர்கள் என்ற சொல்லில் அர்ச்சகர்களும் பூசகர்களும் அடங்குவதாக கொள்ளவேண்டும். |

| | |
|---|---|
| உட்பிரிவு (2) : | உட்பிரிவு (2) : |
| அந்தப் பதவியோ அல்லது ஊழியமோ பரம்பரை முறையில் வந்தால், வாரிசு முறையில் அடுத்தவர் அந்த இடத்தைப் பெறும் உரிமையுடையவராவார். | (1) ஆவது உட்பிரிவில் குறிப்பிட்ட காலியிடம் எதற்கும் ஒருவர் தாம் அந்தப் பதவியில் முன்னிருந்தவருக்குப் பின் வரும் அடுத்த வாரிசு என்ற காரணத்துக்காக மட்டும் அந்தப் பதவியைப் பெறுவதற்குத் தகுதியுடைய வராகமாட்டார். |
| உட்பிரிவு (3) : | உட்பிரிவு (3) : |
| ஆனால், வாரிசு உரிமைபற்றிச் சச்சரவு ஏதேனும் இருந்தால், அல்லது அந்தக் காலியிடத்தை உடனே நிரப்ப முடியாவிட்டால் அல்லது வாரிசு முறைப்பாத்தியம் பெற உரிமையுள்ளவர் உரிய வயது வராதவராக இருந்து, அவருக்குப் பாதுகாவலராக இருப்பதற்குத் தகுதியும் விருப்பமும் உடைய எவரும் இல்லை, என்றால் அல்லது யார் பாதுகாவலராக வருவது என்பது பற்றிச் சச்சரவு ஏற்பட்டிருந்தால், அல்லது பரம்பரைப் பணியாளர் அல்லது ஊழியர் இயலாமை, நோய் அல்லது பிற காரணங்களால் அந்தப் பதவி அல்லது ஊழியத்துக்குரிய அலுவல்களைச் செய்வதற்கு முடியாமலிருந்தால், அல்லது சட்டப்பிரிவு 58 (1) உட்பிரிவின்படி தமது பதவியிலிருந்து தற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தால்,<br><br>சந்தர்ப்பம்போல அந்தப் பணியாளர் அல்லது ஊழியருடைய இயலாமை நீங்குகிற வரையில் அல்லது அந்தப் பதவி அல்லது ஊழியத்தில் வேறொருவர் அமர்கிற வரையில், அந்தப் பதவி அல்லது ஊழியத்தின் அலுவல்களைச் செய்து வருமாறு அறங்காவலர், தக்கார் ஒருவரை நியமிக்கலாம்.<br><br><u>விளக்கம் :</u>—இந்த உட்பிரிவின்படி ஏதேனும் நியமனத்தைச் செய்யும்போது வாரிசு முறையில் உரிமை பெறுவதற்குக் குடும்பத்தின் அங்கத்தினர் எவருக்கேனும் உள்ள பாத்தியதைகளை அறங்காவலர் முறையாகக் கருத்தில் கொள்ள வேண்டும். | நீக்கப்பட்டது. |
| உட்பிரிவு (4) : | உட்பிரிவு (4) : |
| (3) உட்பிரிவின்படி, அறங்காவலர் பிறப்பிக்கும் உத்தரவினால் எவரேனும் பாதிக்கப்பட்டால், அவர் தமக்கு உத்தரவு கிடைத்த நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளாக அந்த உத்தரவின்மீது துணை ஆணையாளரிடம் மேல்முறையிடு செய்து கொள்ளலாம். | (1) ஆவது உட்பிரிவின்படி அறங்காவலர் பிறப்பிக்கும் உத்தரவினால் எவரேனும் பாதிக்கப்பட்டால், அவர் அவ்வுத்தரவு தமக்குத் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் அந்த உத்தரவின்பேரில் துணை ஆணையாளருக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம். |

இந்தத் திருத்தங்களின்படி, புதிய திருத்தச் சட்டமானது அர்ச்சகர் பதவிக்குப் பரம்பரையாக இருந்த வாரிசு பாத்தியதையை அறவே நீக்கிவிடுகிறது.

4. <u>உச்ச நீதிமன்ற வழக்கும், தீர்ப்பும்.</u>—(அ) 1972 ஆம் ஆண்டு 2 ஆவது சட்டமாகிய தமிழ்நாடு இந்து சமய அறநிலையைத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் 1971 ஆம் ஆண்டில், பத்து அர்ச்சகர்களும், இரண்டு மடாதிபதிகளும் ரிட் மனுக்கள்தாக்கல் செய்தனர். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 25 (1), 26 (பி) சரத்துக்களின்படி தங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த சமய சுதந்திரத்தை இருந்தச்சட்டம் மீறுகிறது என்பதும், தங்களுக்குரிய வேறுசில அடிப்படை உரிமைகளில் திருத்தச் சட்டம் தலையிடுகிறது என்பதும் மனுதாரர்களின் வாதம். பிந்திய வாதத்தை அவர்கள் வலியுறுத்தவில்லை. உச்சநீதிமன்றம் மனுதாரர்களின் வாதத்தை ஏற்றுக்கொள்ளாமல் ரிட் மனுக்களை 14—3—1972 ஆம் தேதியில் தள்ளுபடி செய்து, அரசு செய்துள்ள சட்டத்தில் கண்ட திருத்தங்கள் செல்லத் தக்கவை என்ற முடிவைத் தெரிவித்தது. மனுதாரர்கள் தெரிவித்திருக்கிற அச்சம் ஆதாரமற்றவை என்றுகூறி அவ்வச்சங்களை நீக்கப் பின்வரும் கருத்துக்களை நீதிபதிகள் தெரிவித்தனர்.

(ஆ) கோயில்களில் பின்பற்றி வரப்படும் கிரியைகளிலும் சடங்குகளிலும் மாறுதல் செய்வது சட்டத்தின் நோக்கம் அன்று என்றுதெரிகிறது. திருத்தப்பட்ட 55 ஆவது சட்டப் பிரிவின்படி, ஆலய அறங்காவலர் அர்ச்சகரை நியமிப்பது மூலச் சட்டத்தின் 28 ஆவது பிரிவு ஷரத்துக்களுக்கும்,116 (2) ஆவது சட்டப் பிரிவின்படி ஏற்படுத்திய 12 ஆவது விதியின்ஷரத்துக்களுக்கும் உட்பட்டது. ஆலய அறங்காவலர் அந்த அறநிலையத்தின் சாஸன ஷரத்துகளையும் பழக்கங்களையும் அனுசரித்து நிருவகிக்க வேண்டும் என 28 ஆவது சட்டப் பிரிவில் உள்ளது. 12 ஆவது விதி பூசை செய்பவரையும், மந்திரம்,வேதம்,பிரபந்தம், தேவாரம் முதலியன ஓதுபவரையும் ''உள்துறை'' ஊழியர் என்று கூறுகிறது. இவர்கள் இந்த 12 ஆவது விதியில் சொல்லியபடி ஊழியம் பார்க்கத் தகுதிச் சான்று பெறவேண்டும். அர்ச்சகர் நியமனம் சமயச் சார்பற்ற ஒன்றாகும். 105 மற்றும் 107 சட்டப் பிரிவுகளின்படி, ரிட் மனுதாரர்களுக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவர்கள் ரிட் மனுக்களில் சொல்லியிருக்கும் அச்சங்கள்ஆதாரமற்றவை.

(இ) ஆலய நிர்மாணம், திருவுருவப் பிரதிட்டை, தெய்வங்களுக்குச் செய்கிற வழிபாடு முதலியவற்றில் நடைமுறையில் உள்ள சடங்குகளுக்கு விதிமுறையாக ஆகமங்கள் அமைந்துள்ளன. சிவாகமங்கள் 28, அவற்றுள் முக்கியமானவை காமிகம், காரணம், மகுடம், வாதுளம், சுப்ரபேதம் என்பவை. வைணவர்களுக்குத் தனி ஆகமங்கள் உள்ளன. அவை முக்கியமாக வைகானசம், பாஞ்சராத்திரம் எனப்படும். ஆகமப் பூசையின் முக்கியமான நோக்கம் மக்களைத் தெய்வத்தினிடம் ஈடுபடுத்துவதாகும். இரண்டாவது திருவுருவத்தில் தீட்டுப்படாமலும் (அசுசி), புனிதம் கெடாமலும் (தோஷம்), ஆபாசப்படுத்தாமலும் காப்பாற்றி வைத்தலுமாகும். பல காரணங்கள் ல் புனிதத் தன்மை கெடுகிறது என்பதும், சம்பிரதாயமான வழிபாட்டு முறையைக் கைவிட்டால் புனிதம் கெடும் என்பதும் இந்து மக்களின் நம்பிக்கை. கருவறைக்குள் சென்று திருமேனியைத் தொட்டுப் பூசை செய்யும் உரிமை, தகுதிபெற்ற அர்ச்சகருக்கே உரிய தனியுரிமை என்பதும் பிறர் தொட்டாலே புனிதம் கெடும்என்பதால், புனிதம் கெட்டால் பிராயசித்தம் செய்துதான் பிறகு வழிபடலாம் என்பதும் கோட்பாடுகளாகும். குறிப்பிட்ட ஒரு சமூகத்தார் மட்டுமே சிவாலயப் பூசை செய்யலாம் என்று ஆகமம் விதிக்கிறது என்றாலும், சிவாலயப்பூசகர் வைணவ ஆலயத்தில் பூசை செய்ய முடியாது என்பதும், வைணவப்பூசகரும் அப்படியே சிவாலயத்தில் பூசை செய்ய முடியாது என்பதும், வைணவத்தில், வைகானச கோயிலில் வைகானசர் மட்டுமே பூசை செய்யலாம். பிற வைணவர் செய்யக்கூடாது என்பதும் விதிமுறையாக வகுக்கப்பட்டுள்ளது.

(ஈ) புனிதம் கெடுவதற்கான , காரணங்கள், பிரம புராணத்தில் உள்ளன, அவை, திருவுருவம் உடைதல், தூளாகப் போதல், தீ படுதல் ஆதாரப் பீடத்திலிருந்து அகற்றப்படுதல், கழுதை முதலான பிராணிகள் தீண்டுதல், பிற தெய்வ மந்திரங்களால் வழிபடுதல், ஜாதிபிரஷ்டர்தொடுதல் ஆகியவை. இக் கருத்துக்களெல்லாம் சமயநடைமுறைக்குரியவை. அன்றியும் ஏனையோர் எவ்வளவு உயர்ந்த சமூக நிலையில் ஆச்சாரியராகவோ, மடாதிபதியாகவோ இருந்தாலும், வேறு பிராமணராக இருந்தாலும், திருவுருவத்தைத் தீண்டவோ பூசைசெய்யவோ கருவறைக்குள் செல்லவோ, அருகதையுடையவர் அல்லர். இது சைவம் வைணவம் இரண்டுக்கும் பொதுவிதி. கோயில் பூசகர் தெய்வ வழிபாட்டில் எவ்வளவு வல்லவராயிருந்தாலும்கூட ஆகமங்களின்படி குறித்த இனத்தைச் சேர்ந்தவராகத்தான் இருத்தல் வேண்டும். புனிதம் கெடலாகாது என்பது சமய உணர்வின் சாரம். ஆகவே ஆகமங்களின்படி அதிகாரமுடைய இனம் அல்லாத ஒருவர்திருவுருவத்தைத் தீண்டுவது முதலிய காரியங்கள் செய்ய அரசுஅனுமதிக்குமானால், அச்செயல் இந்துக்களின் சமய உணர்வில் தலையிடுவது ஆகும். ஆகவே அச்செய்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 25 (1) ஆவது பிரிவின்படி வெளிப்படையாகவே செல்லத் தகாதது ஆகும்.

II. அரசு வல்லுநர் குழு அமைத்ததன் நோக்கமும், குழு அமைப்பும்.—

மேலே குறிப்பிட்டவாறுள்ள உச்ச நீதிமன்றத் தீர்ப்பையும், கருத்துகளையும் (observations) அனுசரித்து, அரசியலமைப்புச் சட்டத்தில், சாதி பேதமின்றி எல்லாருக்கும் சமயவாய்ப்பு அளிக்க வேண்டும் என்றுள்ள கருத்தைச் செயல் முறைக்குக் கொண்டுவருவதற்கான சமூகச் சீர்திருத்த நடவடிக்கையாக இந்துசமூகத்தைச் சார்ந்த தகுதியுடையவர்களைச் சாதி இன உட்பிரிவு போன்ற வேறுபாடுகளின்றி, பூசகர்கள் மற்றும் உள்துறை ஊழியர்களை இந்து சமய நிறுவனங்களில் நியமனம் செய்வது முறையாகுமா என்று அரசு ஆராய்ந்தது. இந்த நியமன முறையை அமுல் படுத்துவதற்கு உச்சநீதிமன்றத் தீர்ப்பில் இரண்டுவகையான தடைகள் இருப்பதாக அரசு கருதியது. அவையாவன:

1. அர்ச்சகர்களைக் குறிப்பிட்ட ஒரு சமூகத்திலிருந்துதான் தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும் என்று, ஆகமத்தில் விதித்திருப்பதாக எண்ணுகின்ற கருத்து.

2. அவ்வாறு ஆகமத்தில் விதித்திருப்பதாகக் கருதப்படும் கொள்கையைமீறி, 1971 ஆம் ஆண்டு 2 வது சட்டமாகிய இந்து சமய அறநிலைய திருத்தச் சட்டத்தின் 55 ஆவது பிரிவின்படி, சாதி இன வேறுபாடின்றி அர்ச்சகர்கள் நியமிக்கப்பட்டால் அது அரசியலமைப்புச் சட்டத்தின் 25 (1) ஆவது ஷரத்தை மீறுவதாகும் என்ற கருத்து.

இந்தக் கருத்துக்களை ஆராய்ந்து, அரசின் எண்ணத்தைச் செயற் படுத்த வேண்டி, தக்க ஆலோசனைகள் கூறுமாறு, சென்னை உயர் நீதி மன்ற ஓய்வு பெற்ற நீதிபதி திரு எஸ். மகராஜன் அவர்கள் தலைமையில், 13 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு வல்லுநர் குழுவை அரசு, தமிழ்நாடு அரசாணை (பல்வகை) எண். 1573, வணிகவரி மற்றும் அற நிலையத் துறை, 24–3–1979 ஆம் நாள் உத்தரவில் நியமித்தது.

## III. வல்லுநர் குழுவின் செயல் முறை

இந்த வல்லுநர் குழு கீழ்க்காணுமாறு செயலாற்றியது.

1. உறுப்பினர்களின் கருத்தைக் குழுக் கூட்டங்களில் பெற்றது.

2. இந்து சமய சாத்திரங்களில் புலமையுள்ள அறிஞர்களை அழைத்து, அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டறிந்தது.

3. இந்து சமய மடங்களின் தலைவர்களைச் சந்தித்து, அவர்களுடைய கருத்துக்களையும் விளக்கங்களையும் அறிந்து கொண்டது.

4. தமிழ்நாட்டோடு தொடர்பு வைத்துக் கொண்டு, வெளி மாநிலத்திலிருந்து வருகின்ற சமயத் தலைவர்களை, குழுவின் உறுப்பினர்கள் சிலர் சந்தித்துக் கருத்துக்களைக் கேட்டறிந்தது.

இந்து அறநிலையச் சட்டம் 2 வது பிரிவின்படி, இந்து சமய அறநிலையத் துறையின் மேற்பார்வையில் சில சைனக் கோயில்கள் இருக்கின்றன. அரசு ஆணையில் எழுப்பப் பட்டுள்ள பிரச்சனை இந்துக் கோயில்கள் சம்பந்தப்பட்டவை ஆனதால், சைனக் கோயில்களின் பூசைகளை இந்தக் குழு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லை.

அரசினால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு25–1–1980ஆம் நாள் முதல் முறையாக வும், 25–2–80 ஆம் நாள் இரண்டாவது முறையாகவும், முதல் கட்டமாக ஆணையரின் அலுவலகத்தில் கூடி, இப்பொருள் பற்றி விவாதம் நடத்தியது. இவ்விரு கூட்டங்களிலும் அங்கத்தினர் ஆகம நிலையை ஆராய்ந்து தங்கள் கருத்துக்களை ஆகம நூற்சான்றுகளைக் காட்டி எடுத்துரைத்தார்கள்.

அடுத்து இராண்டாவது கட்டமாக15–3–1980 அன்று ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், ஆகமங்களிலும் சமய சாத்திரங்களிலும் புலமை பெற்றிருந்த பல பேரறிஞர்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டன.

மூன்றாவது கட்டமாக, வல்லுநர் குழு உறுப்பினர்கள், தவப்பெருந்திரு தருமபுரம் ஆதீனகர்த்தர் அவர்கள், மதுரை திருஞான சம்பந்தர் மடம் ஆதீன கர்த்தர் அவர்கள், குன்றக்குடி ஆதீன கர்த்தர் அவர்கள், ஆகிய சைவ மடாதிபதிகளையும், நாங்குனேரி வானமாமலை மடம் ஸ்ரீமத் ஜீயர் சுவாமிகள், திருவரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள், திருவரங்கம் முகாமில் தங்கியிருந்த அகோபில மடம் ஸ்ரீமத் ஜீயர் சுவாமிகள் ஆகிய வைணவ ஜீயர் சுவாமிகளையும், வெவ்வேறு தேதிகளில் சென்று அவர்களது மடங்களில் கண்டு அவர்கள் கருத்துக்களைத் தெரிந்து கொண்டது.

பின்னர் நான்காவது கட்டமாக மகாராஷ்டிர மாநிலத்தில் சதாரா என்ற நகரில் முகாமிட்டிருந்த காஞ்சிகாமகோடி பீடம் ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள், காஞ்சிப் பெரிய வர்கள் ஆகிய இருவரையும் , கர்நாடக மாநிலத்தில் சிருங்கேரியில் சாரதாபீடம் ஸ்ரீசங் கராச்சாரிய சுவாமிகளையும்குழுவின் கருத்துப்படி குழு உறுப்பினர்களான திரு அ.வெ.ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களும், திரு. மு. அருணாசலம் அவர்களும், குழுவின் அமைப்புச் செயலாளர் திரு இரா. அர்ஜுனன் அவர்களும் வெவ்வேறு தேதிகளில்அவர் களுடைய மடங்களில் சென்று கண்டு, அவர்களுடைய கருத்தைத் தெரிந்து வந்தார்கள். கர்நாடக மாநிலத்தில் பெங்களூருக்கு அருகே கஞ்சனஹல்லி என்ற இடத்தில் கயிலாச ஆசிரமம் என்ற பிரசித்தமான ஆசிரமத்தை நிறுவி, அங்கு சாதி இன வேற்றுமை பாராட்டாது எல்லாருக்கும் வேதப் பயிற்சியும், சிவாச்சாரியர் பணி புரிவதற்கு ஏற்ற ஆகமப் பயிற்சியும் சிறப்பான முறையில் அளித்து வருகின்ற ஸ்ரீ திருச்சி சுவாமிகளையும், இவர்கள் கண்டு கருத்தறிந்து வந்து தெரிவித்தார்கள்.

பின்னர் கர்நாடக மாநிலம் மைசூரில் மகராஜா சமஸ்கிருதக் கல்லூரியில் ஐந்து வருட ஆகமப் பயிற்சி நடைபெறுவது அறிந்து அங்கு சென்று கல்லூரி முதல்வரைக் கண்டு கல்லூரியின் நடைமுறையையும் பிற கருத்துக்களையும் குழு அங்கத்தினரான திரு மு. அருணாசலம் அவர்களும், அமைப்புச் செயலாளர் திரு. இரா. அர்ஜுனன் அவர்களும் அறிந்து வந்து தெரிவித்தார்கள்.

இவ்வாறு விவாதித்தும் கேட்டும், அறிந்த கருத்துக்கள், பின்னே முறையாகத் தொகுத்துச் சொல்லப்படுகின்றன.

## IV. பூசை பற்றிய விளக்கம்.

1. பூ என்பது தமிழ்ச் சொல்லாகிய பூ. சை என்பது 'செய்' என்ற தமிழ் சொல்லி லிருந்து வந்தது. இதன் பொருளாவது பூவைக் கொண்டு வழிபாடு செய்தல் ஆகும். பூசை என்ற சொல்லைத் தமிழ்ச் சொல் என்றும், இது வட சொல் அல்ல என்றும் பிரசித்திப் பெற்ற இந்தியப் பேரறிஞராகிய டாக்டர் சுநீதி குமார் சட்டர்ஜியும்எழுதி யிருக்கிறார்.

2. பொதுவாகப் பூசையானது, ஆன்மார்த்த பூசை, பரார்த்த பூசை என இரண்டு வகைப்படும். ஆன்மார்த்த பூசையானது பூசை செய்வதற்குரிய தீட்சையும் உபதேச மும் பெற்ற ஒருவர், தமக்காகத் தம் இல்லத்திலோ பிற இடத்திலோ குரு உபதேசித்த மந்திரங்களைக் கொண்டு, தாமே செய்கின்ற பூசையாகும். இது சுமார்த்த பூசை என்றும் சொல்லப்படும்.

3. பரார்த்த பூசை, அரசருக்கு ஆயுள், ரோகமின்மை, சத்துரு ஜெயம்,சம்பத்து இவைகளின் விருத்திக்காகவும், கிராமம் முதலியவைகளின்விசேஷ விருத்திக்காகவும்,. அதாவது சமூக நன்மைக்காகவும் செய்யப்படுவது.(காமிகாகமம், அர்ச்சனா விதிப்படலம் 4வது சுலோகம்). இந்த பரார்த்த பூசை (பரார்த்தம்-பிறருக்காக) சமூக நன்மைக்காக அதிகாரம் பெற்ற ஒரு பூசகர், குறிப்பிட்ட காலங்களில் முறையாக சொல்லப்பட்ட உபகரணங்களோடு, விதிப்படி கோயில்களில் செய்யும் வழிபாடு ஆகும். சமூக நன்மைக் காக கோயில்களில் அழகாக நடைபெறுகின்ற குறித்தகாலப் பரார்த்த பூசையை மட்டுமே இங்கு நாம் பேசுகிறோம்.

4. காமிய பூசை என்ற மூன்றாம் வகையை ஆகமங்கள் கோவிலுக்கு விதிக்கவில்லை ஆதலால் அதை இங்கு ஆராயவில்லை. காமிய பூசை என்பது உலக நன்மைக்காக அல்லாமல், சொந்த நன்மைக்காகச் செய்கின்ற பூசை.

5. பரார்த்த பூசையில், ஆலயநிர்மாணம், பிரதிட்டை, திருவிழா முதலிய அனைத் துக் கிரியைகள் பற்றியும் விளக்கமாக விதி வகுக்கின்ற நூல், ஆகமம் என்று பெயர் பெறுகிறது. அதிலும் சிறப்பாக ஆகமத்தின் கிரியாபாதமே இவற்றை விதிக்கிறது. சைவ சமயத்திற்கான ஆகமங்கள் 28. அவற்றின் உபாகமங்கள் 207 ஆகும். வைணவ சமயத்திற்கு வைகானச ஆகமம், பாஞ்சராத்திர ஆகமம் என்ற இரண்டுமாகும்.

6. பரார்த்த பூசைகள், நித்திய பூசை, நைமித்திகபூசை என இருவகைப்படும். இரண்டிலும் சிவாச்சாரியர்களைக் கொண்டே நடத்துகின்ற பூசைப் பிரிவு ''கலாகமப் பிரிவு'' என்று சொல்லப்படும். அதாவது பிரதிட்டை, நித்திய பூசை, சம்புரோக்ஷணம் கும்பாபிஷேகம், திருவிழா முதலான எல்லாக் கிரியைகளையும் சிவாகமப்படி நடப்பது ''கலம்''. மற்றபடி கிராமதேவதை பூசை முதலியவற்றின் நித்திய பூசைகளைச் சிவாச் சாரியர்அல்லாமல் சாதி இனவேறுபாடு இன்றி எல்லா இனத்தவரும் செய்யலாம். இது 'அகலம்' என்று பெயர் பெறுகின்றது. ஆனால் இந்தப் பூசையுள்ள இடங்களிலும் நித்திய பூஜை அல்லாமல் ஏனையநை மித்திய பூஜை, பிரதிட்டை கும்பாபிஷேகம், திரு விழா ஆகியவற்றைச் சிவாச்சாரியரே நடத்தி வைக்க வேண்டும் என்று ஆகமம் சொல்கிறது. (காரணாகமம், பூர்வபாகம், நித்தியார்ச்சனா விதிப்படலம், சுலோகம் 22—25).

## V. பூசகர் பற்றிய விளக்கம்.

1. சில சொற்பொருள்கள் பிராமணர் என்ற பெயர் சாதி அடிப்படையில் அல்லாமல் பிரம்மத்தை உணர்ந்தவன் என்ற அடிப்படையில்தான் வழங்கப்பட்டது.

. பட்டர் என்ற சொல், சாத்திரத்தை நன்கு உணர்ந்தவர் ஞானி, தபோதனர் பூசகர் என்ற பொருளைக் கொண்டது என்று ''சப்தகல்பத்ருமம்'' என்னும் வட மொழி நிகண்டில் (பக்கம் 478, பாகம் 3) விளக்கப்பெற்றிருக்கிறது.

அவ்வாறு அல்லாமல், தன்னைப் பிராமணன் என்று சொல்லிக்கொண்டு ஜீவிப்போரை ''பிராம்மணப்ருவன்'' (சொல் மாத்திரத்தில் பிராமணன்) என்று அதே சப்தகல்பத்ருமத்தில் (பக்கம் 460, பகுதி 3) சொல்லப்பட்டுள்ளது. ''வாழ்க, அந்தணர்'' (திருஞானசம்பந்தர் தேவாரம்), ''அந்தணர் என்போர் அறவோர்'' (திருக்குறள்) என்ற தொடர்களில், அந்தணர் என்ற சொல் சாதியின்பாற்பட்டதல்ல என்பது ஆன்றோர் கருத்து. ''பேர் கொண்ட பார்ப்பான்'' (திருமூலர்) பரார்த்த பூசையில் சிவனைத் தீண்டினாலும் பூசித்தாலும் ''தேவலகத்துவதோஷம்ன (ஊதியத்துக்காகப் பூசை செய்தல் என்ற குற்றம்) பிறக்கும். ''பாங்கில்லை தீண்டிப் பரார்த்தம், அவர் தீண்டில் தீங்கு உலகுக்காம் என்று தேறு'' என்ற ''மறைஞான சம்பந்தர்'' ''சைவ சமய நெறி'' என்ற நூலில் (பாடல் 437) கூறியுள்ள கருத்து அறிதற்பாலது.

(2) சிவாச்சாரியரும் சுமார்த்தப் பிராமணரும்.—சிவாச்சாரியர் அல்லது சிவத் துவிஜர் அல்லது ஆதிசைவர் என்போர் சுமார்த்தப் பிராமணர் அல்லர். அவர்கள் சிவப் பிராமணர் என்று ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ளது. ஆதிசைவராகிய சிவப்

பிராமணர்கள் அனாதி சைவர் என்று சொல்லப்பட்ட சிவபெருமானுடைய ஐந்து முகங்களிலிருந்து தோன்றி, சிவப்பிரானையே வழிபடுகிறவர் என்றும், சுமார்த்தப் பிராமணர் பிரம்மாவினுடைய நான்கு முகங்களிலிருந்து தோன்றி, பிரமத்தையே வழி படுகிறவர்கள் என்றும் சிவசிருஷ்டியின்பாற்பட்ட சிவப்பிராமணர் அல்லாமல், பிரம சிருஷ்டியில் தோன்றிய சுமார்த்தப் பிராமணர் சிவாலயங்களில் பூசை செய்யத் தகுதியற்றவர்கள் என்றும் ஆகமங்களில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. எனவே சிவாலயங்களில் பரார்த்த பூசை ஆதிசைவர்களாகிய சிவாச்சாரியர் தவிர, இதர பிராமணர் செய்யக்கூடாது என ஆகமங்களில்* கீழ்க்காணுமாறு விதிக்கப்பட்டுள்ளது:-

" சித்தாந்த சாத்திரம் உணர்ந்த ஆதிசைவர்கள், அரசர் ஊர் எஜமானர் இவர் களுடைய சேமத்தின் பொருட்டு, சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசிக்க வேண்டியது. ஆதிசைவர் ஆன்மார்த்த, பரார்த்தங்களுக்கு அதிகாரமுடையவர். இல்லறத்திலுள்ள ஆதிசைவ பிராம்மணோத்தமர் சர்வ காரியங்களிலும் அதிகாரிகளாகச் செய்யலாம். ஆன்மார்த்த பரார்த்தங்களிலும் சிவயாகத்திலும் சிவத்துவிஜர்களாகிய ஆதிசைவர் களே அதிகாரமுடையவர். ஏனையோர் ஆன்மார்த்தமே செய்யத் தக்கவர். அரச னுடைய உலோபத் தன்மையால் ஏனையோர் பரார்த்தமும் செய்வாராயின், அரசனுக்கும் அவனால் காக்கப்படும் நாட்டிற்கும் உடனே கேடு சூழும் என்பதில் சந்தேகமேமில்லை " (காமிகாகமம் தென்னிந்திய அர்ச்சகர் சங்க வெளியீடு, பக்கம் 31–32).

* காரணகாமம், நித்தியார்ச்சனா விதிப்படலம், சுலோகம் 19; மற்றும் காமிகாகமம் பூர்வபாகம், அர்ச்சனாவிதிப்படலம், சுலோகம் 10–14.

(3) சிவாச்சாரியர் பிரிவுகள்—

ஆகமங்கள் பூசைக்கிரியைகளுக்கு ஏற்றவாறு சிவாச்சாரியர்களின் நிலையை ஐந்தாகப் பிரித்துச் சொல்லுகின்றன.—

(அ) ஆச்சாரியர்: இவர் நைமித்திக காரியங்களை மட்டும் செய்பவர், நடத்தி வைப்பவர்.

(ஆ) அர்ச்சகர்:—நித்திய பூசைகளை மட்டும் செய்பவர், ஆச்சாரியரின் ஆணைப்படி நைமித்திக பூசையும் செய்யலாம்.

(இ) ஸ்தானிகர்:—உற்சவமூர்த்திகளுக்கு மட்டும் அலங்காரம் (புட்பம், பரி வட்டம், திருவாபரணம்) செய்பவர். இவற்றின் பாதுகாப்புக்காக கூட இருப்பவர். இவருக்குப் பூசை செய்யும் அதிகாரம் இல்லை.

(ஈ) பாசகர்:—மூர்த்திக்கு நிவேதனம் மட்டும் சமைத்துத் தருபவர்.

(உ) பரிசாரகர்:—இதர பணிவிடைகள், முக்கியமாகக் கருவறையில் திருவல கிடுதல், திருவிளக்கிடுதல், அபிடேகத்தீர்த்தம் அமைத்தல், வஸ்திரம், நிவேதனம், பழங்கள் முதலியன எடுத்து வைத்தல்.

பரிசாரகர், பாசகர், ஸ்தானிகர், அர்ச்சகர் ஆகியோர் தம்முடைய கிரியைகளை மட்டும் செய்யலாமே அன்றி, அவற்றிற்கு மேற்பட்ட கிரியைகளைப் செய்யலாகாது.

(4) திருமால்கோவில் பட்டர்கள் நிலை:—இதேபோல் திருமால் கோயில்களில் வைகானச ஆகமப்படி அமைந்த கோயில்களில் வைகானசரைத் தவிர ஏனையோர் பூசை செய்யக்கூடாது. பாஞ்சராத்திரக் கோயில்களில் பூசை செய்யும் தகுதி மூன்று வகையாகச் சொல்லப்பட்டுள்ளது. முதலாவது உத்தமாதிகாரி என்போர் ஸ்ரீவைணவ குலத் தகுதியோடு, நித்தியம் நைமித்திகம் முதலான எல்லாப் பூசைகளும் செய்யும் அதிகாரமுடையோர். இரண்டாவது மத்தியமாதிகாரி என்போர் ஸ்ரீவைணவராய் இருந்து தீட்சை முதலியன பெற்று நித்தியபூசையும், சாமான்ய விழாக்களும் மட்டும் செய்யும் அதிகாரமுடையோர். இவர்களுக்குப் பிரதிட்டை சம்புரோக்ஷணம் ஆகியவை செய்ய அதிகாரமில்லை. அதமாதிகாரி என்போர் வேறு குலத்தில் பிறந்திருந் தாலும், தீட்சைமுதலியன பெற்று நித்திய பூசை மட்டும் செய்யும் அதிகார முடையோர். இவர் " சாத்தாத வைணவர் " (பூணூல் அணியாதவர்) எனப் பெறுவர்.

## VI. பூசகர்க்கு ஆகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற தகுதிகளும், தகுதிக்குறைபாடுகளும்:

1. தகுதிகள்.—மேற் குறித்த பிறவித் தகுதிகளோடு கூட, அர்ச்சகர்கள் பின்வரும் தகுதிகளையும் பெற்றிருக்க வேண்டும். (காரணகமம், பூர்வபாகம் 26 ஆவது படலம், ஆச்சாரியலச்சண விதிப்படலத்தில் 19 முதல் 78 வரையுள்ள சுலோகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.)

(அ) உடற்பற்றிய தகுதிகள்.—வழிபடுகின்ற மக்கள் விரும்பத் தக்கதோற்றம், சிகை உடைமை, சிகையை முடிந்திருத்தல், தாடி மீசை முதலியன இல்லாது இருத்தல், நோயின்மை.

(ஆ) உள்ளம் பற்றிய தகுதிகள்:—பொறாமையின்மை, பிறரிடத்து அபவாதமின்மை நேர்மையான பாதையில் செல்லுதல், இன்சொல்லுடைமை, சொல்லாற்றல், நன்னடத்தை, சீலம், குளிர்ந்த நோக்கு, உலகியலில் மனம் செல்லாமை, பிற உயிர்களிடத்து அன்பு காட்டுதல்.

(இ) சமய உணர்வு பற்றிய தகுதிகள்:—தர்ம சாத்திரம், கிரியாசாத்திரம் இவற்றில் நிபுணத்துவம்; சைவசித்தாந்த தத்துவ ஞானம், தெய்வம், அக்கினி, குரு ஆகியோரிடம் பக்தி; எல்லா ஆசாரங்களும் பொருந்துதல்; தவம், புலனடக்கம், பற்றற்றிருத்தல், வேதாந்த உண்மைகளை உணர்ந்து மெய்ப்பொருளில் நிலை பெற்றிருத்தல், ஈசுவர தியானம், சாத்திரங்களில் உறுதி, எல்லாச் சாத்திரங்களின் பொருளுணர்வு, சமயாச்சாரத்தைப் பரிபாலிக்கும் திறன், கிரகஸ்தராக இருத்தல், தீட்சையுடைமை, சைவமந்திரம், முத்திரை, கிரியை பற்றிய அறிவு, தர்க்கசாத்திரம், மீமாம்சை, வியாகரணம் ஆகியவை தெரிந்திருத்தல்; பிற சமய அறிவும், சிவாகமங்களில் உறைப்பும், சிற்ப சாத்திர அப்பியாசம், பழுதுபட்டவற்றிற்குப் புதிதாகத் திருப்பணி செய்யும் ஆய்வு; மந்திர கர்மாக்களில் தகுதி.

2. தகுதிக் குறைபாடுகள்:—(அ) உடல் பற்றிய தகுதிக் குறைபாடுகள்:— கவர்ச்சி இல்லாமை, மஞ்சள் கண் உடைமை, கண்ணில் பூ உள்ளமை, அதிகம் பருத்திருத்தல், அதிகம் குள்ளமாயிருத்தல், சொட்டைத் தலை, செம்பட்டை மயிர், அதிக உரோமம் உடைமை, பல் இல்லாமை, பல் உடைபட்டிருந்தல், செவிடு, நொண்டி, அங்கீனம், அதிக உறுப்புடயமை, துக்கமுடைமை, பேடி, தீனன், திறமையற்றிருத்தல், அதிகம் உண்ணுதல், வைத்தியத் தொழில் செய்தல், பாட்டு நாட்டியம், தொழிலாகக் கொள்ளுதல்.

(ஆ) உள்ளம் பற்றிய தகுதிக் குறைபாடுகள்:— டம்பம் உடையவன், தயவு அன்பில்லாதவன், ஜடம் போல் இருப்பவன், சபலபுத்தி உள்ளவன், சமய சாத்திரத்தைக் கைவிட்டவன், வியாபாரி, பெண்களால் பிழைப்பவன், செய்நன்றி மறப்பவன், பாவி, உலோபி, கெட்ட நடத்தை, அசட்டையுடையவன், இழிந்தவன், பாவத்தை அனுபவிக்கிறவன், தாமதமுடையவன், ஐயமுற்றவன்.

(இ) சமய உணர்வு பற்றிய தகுதிக் குறைபாடுகள்:—சந்நியாசி, நாஸ்திகன் தேவநிந்தனை பிராமண நிந்தனை செய்பவன், விரதத்தைக் கைவிட்டவன்.

3. வைணவத்தில் வைகானச ஆகமப்படி விகினசமுனிவர் பரம்பரையில் வந்தவர்கள் தான் வைகானச பூசை செய்யத் தகுதியுடையவர்கள். அவர்களும் இதே மாதிரியான பொருத்தமுடைய தகுதிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

4. முன்சொன்ன பொருத்தமுடைய தகுதிகள் ஜென்ம பாகவதர்களாகிய உத்தமாதிகாரிகளுக்கும் இருக்க வேண்டும்.

பாஞ்சராத்திர ஆகமப்படி அவ்வாகமக் கோயில்களில் பிரதிட்டை பிரம்மோற்சவம், சம்புரோக்ஷணம் ஆகியவைகளை உத்தாமதிகாரிகளே செய்ய வேண்டும். அவர்கள் இல்லாதபோது, அவர்களிடம் தீட்சை பெற்று பிற ஸ்ரீவைணவ பிராமணர்கள் மத்தியமாதிகாரிகளாக இருந்து சாதாரண நித்திய பூசை, சாதாரண உற்சவம் ஆகியவை செய்யலாம். பிற இனத்தவர்கள் ஜென்மபாகவதரின் (உத்தமாதிகாரியின்) ஆணைப்படி அதமாதிகாரிகளாக இருந்து, நித்திய பூசை செய்யலாம். (இக்கருத்துக்கள் பாஞ்சராத்திர பகவதாராதனைக் கிரமம், பரமேசுவரசம்மிதை என்ற நூல்களில் சொல்லப்பட்டுள்ளன.

5. பிறர் பூசிப்பதால் வரும் கெடுதிகள்:— அன்றியும், அர்ச்சனர் விதிப்படலத்தில் 7 முதல் 11 வரையில் உள்ள சுலோகங்கள் பிராமணன் (சுமார்த்தப்பிராமணன் பூசிப்பதால் வரும் கெடுதியைக் கீழ்க்காணுமாறு சொல்லுகின்றன.

சிவாச்சாரியர்கள் அல்லாத மற்றவர்கள் ஆன்மார்த்தத்தை விட்டு வேறாகிய பரார்த்த பூசையைச் செய்வார்களாகில், அவர்களுக்கே கெடுதி உண்டாகும். சிவபெருமானால் உண்டாக்கப்படாமல், நான்முகன் முகத்திலிருந்து உண்டானவர்கள் சாதாரண சுமார்த்தப் பிராமணர்கள். அவர்களுக்குப் பரார்த்த பூசையில் அதிகாரமில்லை. அவர்கள் அதிவேகத்தால் பரார்த்தபூசை செய்வார்களானால், அரசனுக்கும் நாட்டுக்கும் அழிவு உண்டாகும். சாதாரண பிராமணங்கள் கூலிக்காகச் சிவபெருமானைப் பூசிப்பார்களானால், ஆறு மாதத்திற்குள் யாவும் கெடும். ஆதலால் பரார்த்த பூசையில் அவர்களை விலக்கி விடவேண்டும்.

## VII. ஆகமங்கள் பற்றிய விளக்கம்.

1. ஆகமங்கள் பொதுவாகச் சிவசம்பந்தமானவை சைவாகமம் என்றும், சக்தி சம்பந்தமானவை தந்திரம் என்றும், திருமால் சம்பந்தமானவை சம்மிதை என்றும் பெயர் சொல்லப்பெறும்.

2. சைவ ஆகமங்கள்:—

(அ) ஆகமங்கள் வழிபாட்டில் மட்டுமின்றி, பொதுவான வாழ்க்கையிலும்கூட முதன்மை பெற்றுள்ளன. இரண்டையும் குறித்த சில கருத்துக்களை இங்கே குறிப்பிடலாம். மனிதனுடைய மனம் உருவமற்றதைப் பற்றுதற்கு வலிமையற்றது. ஆகவே ஓர் அருள் உருவத்தை நிறுவி, அதை வழிபடுவதற்கான நிலையமாகக் கோயில்கள்

எழுந்தன. கோயில்கள் எழுப்புவதற்கும், அருளுருவங்களை அங்குப் பிரதிட்டை செய்
வதற்கும் ஆகமங்கள் விதி வகுத்தன. பொதுவாகக் கோயில்கள் ஆகம முறைப்படி
எழுப்பப் பெற்றுள்ளன. கோயில்களில் நடைபெறுகின்ற பரார்த்த பூசையானது,
தரிசிக்க வருகின்ற அடியார்களுக்காகச் செய்யப்பெறுவது.

(ஆ) சைவாகமங்கள் 28. அவற்றிலிருந்து பிறந்த உபாகமங்கள் 207.
எல்லா ஆகமங்களும் அச்சிட்டு வெளியாகவும் இல்லை, ஆட்சியிலும் இல்லை.
எனினும் ங்கள் 28 என்றபோதிலும், தமிழ்நாட்டுக் கோயில்களில் ஆட்சியில் இன்று
இருப்பவை மிகச் சில. அவை : காமிகம், காரணம், மகுடம், வாதுளம்,
சுப்ரபேதம். இவற்றுள்ளும் காமிகம், காரணம் இரண்டுமே மிகுதி
யான ஆட்சியுடையன. இவ்விரண்டில் கிரியாபாதங்கள் மட்டுமே கிடைத்துள்ளமை
யால், அவற்றுக்கு ஆட்சி அதிகம். காமிகம் தமிழ் உரையோடு முதன் முதல் 1899-ஆம்
ஆண்டில் கொ. சண்முகசுந்தர முதலியாரால், 12,000 கிரந்தங்களாக* (சுலோகங்களாக)
அச்சிடப்பெற்றமையினால், அது முதல் சில சிவாச்சாரியர்கள் அதை ஓரளவு படித்துத்
தெரிந்துகொண்டிருக்கிறார்கள். காமிகம் என்றால் வேண்டியதெல்லாம் தருவது என்பது
பொருள். காரணாகமம் இதைவிட அதிக விரிவுடையதாய் இருந்த போதிலும், காமி
கத்தையே எல்லாரும் அதிகமாகப் பின்பற்றுகிறார்கள். இதில், பூசை செய்கின்ற
பூசகர் யார் என்பது குறித்து, கிரியாபாதம் முதலாவது தந்திராவதாரப் படலத்தில்
120, 121, 126 சுலோகங்கள் சொல்லுகின்றன. காரணாகமம் கொ. சண்முகசுந்தர
முதலியாரால் பரிசோதிக்கப்பட்டு, அவருடைய பேரர் அழகப்ப முதலியாரால், 1920
மற்றும் 1928-ஆம் ஆண்டுகளில் பூர்வம், உத்தரம் என்ற இரண்டு பாகங்களாக (கிரியா
பாதம் மட்டும்) அச்சிடப்பெற்றுள்ளது. இது 16,151 கிரந்தங்களைக் கொண்டது.

தொன்மையான சிறப்புடைய ஒவ்வொரு கோயிலும் ஒரே ஆகமப்படி கட்டிப் பிர
திட்டை செய்யப்பட்டு, அதே ஆகமப்படி பூசைகள் நடத்தப்பெறுகின்றன. நடராசப்
பெருமானுக்குரிய ஆகமம் மகுடாகமம் என்பர். இது நடராசப்பெருமானுக்குரிய நட
னத்தையும், அதற்கு அங்கமாக உள்ள இசையையும் பெரிதும் தழுவியது. முருகனுக்குக்
காரணாகமமும், குமாரதந்திரம் என்ற உபாகமமும் உரியனவாகும்.

கிரியாபாதத்தில் உள்ள பூசை முறை முதலியவற்றைப் பழங்காலத்திலேயே சிவாச்
சாரியர் சிலர் சுருக்கியும் தொகுத்தும் வைத்துள்ளனர். இவை பூசாபத்ததிகள் என்று
பெயர் பெறும். இவை பதினெட்டு என்பது ஒரு வழக்கு. இவற்றுள் இன்று ஆட்சியில்
இருப்பவை சோமசம்புபத்ததி, அகோரசிவபத்ததி, ஈசானசிவகுருபத்ததி, வாமதேவ
பத்ததி போன்ற சிலவே. இவைபோலவே, பல சாந்திச் சடங்குகளுக்கு ஏற்றனவாக
சாந்தி ரத்தினாகரம், சாந்தி குசுமாகரம் போன்ற சில சிறு பத்ததிகளை ஆகமங்களி
லிருந்து சிவாச்சாரியர்கள் தொகுத்து வைத்துள்ளனர்.

3. <u>பாஞ்சராத்திரமும் வைகானசமும்.</u>— வைகானசம், பாஞ்சராத்திரம் இரண்டின்
வளர்ச்சியும் தமிழ்நாட்டில் மட்டுமே உண்டு. ஆந்திரம் கர்நாடகத்தில் காண்பதெல்
லாம் இவற்றின் வியாபகமே.

வைணவத்தில் வைகானசம் பாஞ்சராத்திரம் என்ற இவ்விரு வைணவப் பிரிவு
களைக் குறித்து, பின்னே பூசை, பூசகர் பற்றிக் கூறும் விளக்கங்களை எளிதில் உணரும்
பொருட்டு, ஒரு சிறு விளக்கம் இங்குத் தருகிறோம்.

<u>(அ) வைகானசம்;</u>—விகினசர் என்ற முனிவருடைய உபதேசம் பெற்ற சந்ததி
யினரும், அவருடைய மாணாக்கரும் வைகானசர் என்ற பெயர் பெறுவர். இவர் வழி
வந்தது வைகானச கல்பசூத்திரம். வைகானசர்கள் இந்தச் சூத்திரத்தை அனுட்டிக்
கிறார்கள். அவர்கள் இதைப் பிறர் யாருக்கும் உபதேசிப்பதில்லை. பிறருக்கு
இவற்றை அனுட்டிக்கும் அதிகாரமும் இல்லை. இவர்கள் ஆகமப்படி பரம்பொருள்
நாராயணன், அவருடைய சக்திக்கு ஸ்ரீ என்று பெயர். சேதனம் (சீவர்கள்), அசேதனம்
(உலகப் பொருள்) ஆகிய இரண்டு சக்தியின் வடிவங்கள், ஜபம், ஹோமம், அர்ச்சனை,
யோகம் ஆகிய நான்கும் நாராயணனை அடைவதற்குரிய சாதனங்கள். இந்நான்கில் இவர்
கள் யோகத்தையே சிறப்பாகக் கருதுகிறார்கள். இவர்களுக்கு, யந்திரம், நியாசம்,
முத்திரை ஆகியவற்றில் உடன்பாடு இல்லை. புருஷன், சத்தியன், அச்சுதன், அநிருத்தன்
என்ற நான்கு நிலைகளில் பகவான் செயல்படுகிறார். வைகானச ஆகமம், பூசைக்கான
எல்லா கிரியைகளையும், பிராயச்சித்தம், ஹோகம் ஆகியவற்றையும், கட்டட
அமைப்பையும் விரிவாகச் சொல்கிறது. அர்ச்சா ரூபமே வழிபாட்டில் சிறப்புடையது
என்று இவர்கள் கருதுகிறார்கள். விகினச முனிவரின் சீடரான பிருகு, அத்திரி, காசியபர்
மரிச்சி என்ற நான்கு முனிவர்கள் நான்கு வைகானச சம்மிதை செய்தார்கள்.
இவற்றில் சிலவே இன்று உள்ளன. பெரும்பகுதி மறைந்து போய்விட்டது.

<u>(ஆ) பாஞ்சராத்திரம்:—</u>

(1) பாஞ்சராத்திரத்தில் 108-க்கு மேற்பட்ட ஆகமங்கள் (சம்மிதைகள்)
இருந்தபோதிலும், பல கிடைக்கவில்லை. சிலவே உள்ளன. இப்பிரிவில் பஞ்ச சம்ஸ்
காரம் (முத்திராதாரணம்) முக்கியமானது.

---

*ஒரு கிரந்தம் என்பது 32 அட்சரங்களாலான இரண்டு வரிகளையுடைய ஒரு
சுலோகம்.

(2) பொருள்.— (அ) பாஞ்சராத்திரம் என்பது ஒரு தினத்துக்கு விதிக்கப்பட்ட ஐந்து கடமைகளைப் பொருளாகக் கொண்டது. ராத்திரம் என்றால் தினம். தினத்து குரிய ஐந்து கடமைகளாவன :—

1. அபிகமனம்.— காலையில் சமயப் பணிகளைச் செய்வதற்காகக் கோயிலுக்குச் செல்லுதல்.

2. உபாதானம்.— பூசைக்கான உபகரணங்களையும் திரவியங்களையும் சேகரித்தல்.

3. ஈஜ்யம்.— பூசைக்கிரியை (பூசை செய்தல்).

4. சுவாத்தியாயம்.— சாத்திரங்களைப் பயிலுதல்.

5. யோகம்.— பகவானைத் தியானித்தல்.

இவ்வைந்தினாலும் பாஞ்சராத்திரம் என்ற பெயர் வந்தது. இவற்றை வேதாந்த தேசிகர் தமது ஸ்ரீவைணவதினசரி என்ற பத்துப்பாடலால் சொல்லியிருப்பதைக் காணலாம்.

(ஆ) பகவான் ஐந்து ராத்திரிகளில் ஐந்து ரிஷிகளுக்கு மெய்ப்பொருளை உபதேசித்தார். அதனால், பாஞ்சராத்திரம் என்ற ஒரு கருத்தும் உண்டு.

(இ) அதுவுமல்லாமல், இந்தச் சமயப்பிரிவு பரம்பொருளாகிய திருமாலின் ஐந்து நிலைகளைப் போற்றி உரைப்பதால், இந்தச் சமயத்திற்குப் பாஞ்சராத்திரம் என்று பெயர் வந்தது என்பது மற்றொரு கருத்து. (கீழே காண்க) :—

(3) பரம்பொருள் லட்சுமியோடு கூடிய நாராயணன். இங்கும் சேதனம், அசேதனம்இரண்டும் ஸ்ரீயின் வடிவமே. பரம்பொருள் இங்கு விபு, விபவம், வியூகம் அந்தர்யாமி, அர்ச்சை என்ற ஐந்து நிலைகளில் தொழிற்படுகின்றான்.

1. விபு.— பரத்துவநிலை.

2. விபவமாவது, வராகமூர்த்தி, நரசிம்மர், இராமர், கிருஷ்ணர் போன்ற அவதாரங்கள்.

3. வியூகமாவது, வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்தியும்னன், அநிருத்தன்.

4. அந்தர்யாமியாவது, அவரவர் உள்ளிருந்து உணர்த்துபவன்.

5. அர்ச்சையாவது, கோயில்கள்தோறும் எழுந்தருளியுள்ள திருமாலின் விக்கிரக வடிவங்கள்.

இந்த ஐந்து நிலைகளிலும் அர்ச்சையே பிரதானம் என்பது பாஞ்சராத்திரத்தின் கொள்கையும் ஆகும்.

(4) ஆகமங்களில், பலவற்றில் பலவகையான கருத்துக்கள் சொல்லப்பட்டிருந்தும், அடிப்படையில் அவை ஒன்றுக்கொன்று துணையாக உள்ளனவே அன்றி, கருத்தில் வேறுபடுவன அல்ல. உதாரணமாக விமானங்களில் வேறுபாடு, பாணத்தில் வேறுபாடு, ஆவுடையாரில் வேறுபாடு, கருவறை வடிவ வேறுபாடு, சில சடங்குகளில் முற்பிற்பாடு முதலான பலவகை வேறுபாடுகளையும் சொல்லுபவை வெவ்வேறு ஆகமங்கள். கோயிலுக்குள் பல தெய்வ உருவங்களுக்குத் துணைக் கோயில்கள் பல அமைந்துள்ளன. உதாரணம் : நடராசர், அம்பிகை, தட்சிணாமூர்த்தி, விநாயகர், முருகர், லட்சுமி முதலியன. (சிறு தெய்வங்களை இங்குப் பேசவில்லை). இத்தனையும் அமைக்க வேண்டிய இடம், அமைக்கும் முறை, சிற்ப வடிவ அமைப்பு, தினசரி பூசை, நைமித்திக பூசை, திருவிழாக்கள் முதலியன அனைத்தையும் விதிப்பது ஆகமம்.

## VIII. வேதங்களும், ஆகமங்களும்— ஆகமங்களின் சிறப்பு.

1. சிவாலயங்களின் சிவவழிபாடு அனைத்தையும், அறுதியிட்டு விதியாகச் சொல்பவை சைவாகமங்கள். இவை அநாதியானவை என்பது ஆன்றோர் கருத்து. மிகச் சிறந்த பொருளாயும், மூலம் அறியப்படாததாயும் உள்ள எதையும் அநாதி என்று சொல்வது இந்து மரபு. ஆகமம் வேதத்தை போலவே அநாதி என்று சொல்லப்படும். ஆகமம் என்ற சொல்லுக்குச் சிவபெருமானிடமிருந்து வந்தது என்றும், இறை, உயிர், தளை என்ற மூன்றையும் விளக்கி உரைப்பது என்றும், உயிர்களின் மலத்தை (பாசத்தை) நாசம் செய்து ஞானத்தை உதிப்பித்து மோட்சத்தைத் தருவது என்றும் பலவகையாகப் பொருள் கொள்ளப்படும்.

2. வேதங்களின் ஞானபாகமாகிய உபநிடதங்கள் காலப்போக்கில் பிற்பட்டுத் தோன்றியவை. உபநிடதங்கள், வேதாந்தம் (வேதத்தின் அந்தம்) என்று சொல்லப்படும். வேதாந்தமாகிய உபநிடதம் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம் (நனவு நிலை, கனவு நிலை, உறக்க நிலை, பேருறக்க நிலை) என்ற நான்கையும் மட்டுமே கூறுகிறது. ஆனால் சமய நூல்களில் மற்றொரு பெரும் பிரிவாகிய ஆகமங்கள், இந்த நான்கினுக்கும் அப்பால் துரியாத்தம் (உயிர்ப்படக்கம் அல்லது பேருறக்கம் கடந்தநிலை) என்ற ஒரு நிலையையும் கூறுவன. இதுவே இவற்றின் சிறப்பு.

இந்து சமயத்துக்கு மூல நூல்களாக உள்ளவை வடமொழியில் வேதங்களும் ஆகமங்களும். தமிழ் மொழியில் சைவத்துக்குத் திருமுறைகளும் மெய்கண்ட சாத்திரங்களும், வைணவத்துக்கு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களும், ஆச்சாரியர்களுடைய அருள் நூல்களும் ஆகும். வேதங்களில், யாகம் சொல்லப்பட்டதே தவிர, ஆலய வழிபாடு சொல்லப்பெறவில்லை. ஆகமங்களே, கோயில்களையும் வழிபாட்டையும் விரித்துச் சொல்லுகின்ற மூல நூலாகும்.

4. வேதம் அதாவது உபநிடதம் ஞானபாகத்தையே விரித்து, அதாவது முதன்மையளித்துச் சொல்கிறது. ஆனால், ஆகமங்களோ ஆன்மாவின் பக்குவத்திற்கு ஏற்றபடி ஒரு சோபானமுறை அல்லது படிக்கிரம முறையை, சரியை கிரியை யோகம் ஞானம் என்ற வளர்ச்சிக்கிரமத்தில் தத்துவப் பொருளாக அமைத்துத் தருகின்றன.

(அ) முதலாவது, சரியை. சரியை என்ற சொல்லுக்கு நடத்தல், ஒழுகுதல் என்று பொருள். இது தனிமனிதர் பின்பற்றவேண்டிய ஆசாரத்தையும், அவர் கோயிலுக்குச் செய்யவேண்டிய தொண்டுகளாகிய திருவலகு, திருமெழுக்கு, திருவிளக்கு, திருமாலை முதலியவற்றையும் சொல்லும் பகுதி.

(ஆ) இரண்டாவதாகிய, கிரியை என்ற சொல்லுக்குச் செய்தல் என்பது பொருள். இது ஆன்மார்த்த பூசையையும், கோயில் சம்பந்தப்பட்ட சடங்குகளையும் சொல்லும் பகுதி. இது மிகவும் விரிந்தது. ஆலயம் அமைப்பதற்கான நிலத்தை உழுது தேர்ந்தெடுத்தல் (பூகர்ஷணம்) ஆலய நிர்மாணம் (கட்டடக்கலை), திருவுருவங்களின் அமைப்பு (சிற்பக் கலை, படிமக்கலை), திருவுருவப் பிரதிட்டை, நந்தவனம், திருக்குளம் அமைத்தல், திருமுழுக்கு (கும்பாபிஷேகம்), நித்திய பூசைகள், விசேஷ பூசைகள், விழாக்கள் முதலியவற்றையும், பூசகருக்குரிய இலக்கணம் (ஆச்சாரிய லட்சணம்) முதலியவற்றையும் மிகவும் விரிவாகவும் விளக்கமாகவும் சொல்வது. பொதுவாக எல்லா ஆகமங்களிலும் இதுவே விரிந்த பாகம். நம் ஆய்வுக்குரிய மிகவும் முக்கிய பொருள்.

(இ) மூன்றாவதாகிய யோகம் என்ற சொல்லுக்கு ஒன்றுதல், கலத்தல் என்பது பொருள். இது நாடிசுத்தி, குண்டலினிசத்தி முதலியவற்றின் தன்மைகளையும், ஆசனம், யோகம் போன்றவற்றையும் எடுத்துரைக்கிறது. இங்கு அட்டாங்க யோகம் என்ற ஆரம்பப்படி நிலையும், பின்னர் வளர்ந்துள்ள நெறியாகிய பிராசாதயோகமும், பிறவும் சொல்லப்படுகின்றன.

(ஈ) நான்காவதாகிய ஞானம் என்ற சொல்லுக்கு அறிதல், அநுபூதி என்பது பொருள். இது ஆன்மா உலகிலுள்ள பந்தங்களிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு முத்திபெறுவதைச் சொல்லும் பகுதி. இது வேதத்தின் இறுதிப் பாகமான உபநிஷத்தை ஒத்தது. இதுவே மெய்ப்பொருள் அல்லது தத்துவ இயல் என்ற பகுதி.

5. பொதுவாக வேதங்கள் ஒரு தெய்வ வழிபாட்டைச் சொல்லவில்லை. அக்கினி, வாயு, இந்திரன், மிருத்யூ, இரண்யகர்ப்பன் முதலானப் பல தெய்வங்களைத் துதிக்கின்ற நிலையை வேதங்களில் காண்கிறோம். இது பல தெய்வ வழிபாடு என்று சொல்லத்தகும். ஆனால் முதன் முதலாக ஆகமங்களே, ஒரு தெய்வ வழிபாட்டைத் திட்டமாகச் சொல்லுகின்றன. சைவாகமங்கள் சிவம் என்ற ஒரு பொருளே பரம்பொருள் என்றும், வைணவ ஆகமங்கள் திருமால் என்ற ஒரு பொருளே பரம்பொருள் என்றும் சிறப்பாகச் சொல்லுவதைத் தத்துவ ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள்.

6. மேலும் உபநிடதமானது மெய்ப்பொருளின் தேட்டத்தை மட்டுமே குறிக்கிறது. ஆனால் ஆகமங்கள் சாதித்த சித்தியை (அனுபூதியை)ச் சொல்லுகின்றன என்று ஆராய்ச்சியாளர் கூறியுள்ளார். இது நன்கறிந்த செய்தி. ''வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே'' என்பது திருவாசகம். ''அல்லதீது, அல்லதீது என மறைகளும் அன்மைச் சொல்லினால் சொல்லித் துதிக்கும் இச் சுந்தரன் ஆடல்'' என்று திருவிளையாடல் புராணத்தில் பரஞ்சோதி முனிவர் பாடுகிறார். இதை வேதாந்திகள் ''நேதி பண்ணுதல்'' என்பார்கள். பின்வரும் சடகோபர் அந்தாதிப் பாடலும் இங்குக் கருதத்தக்கது.

''சாதிக்குமோ பரதத்துவத்தை சமயத் திருக்கை
சோதிக்குமோ ஒன்றுசிந்திக்குமோ அதனைத் தெரியப்
போதிக்குமோ எங்குமோங்கிப் பொதுநிற்கும் மெய்யைபொய்யைச்
சோதிக்குமோ உங்கள் வேதம் எங்கோன் தமிழ், சொல்லெனவே''

வடமொழி வேதம் பரம்பொருள் ஒன்று என்று சொல்லி, அதை அறுதியிட்டு நிலைநிறுத்தாது; தமிழ் மறையை இவ்வாறு செய்யவல்லது என்பது இதன் பொருள். தமிழ் மறை என்று இங்கு சொல்லப்பட்டது நம்மாழ்வார் அருளிச் செய்த 'திருவாய்மொழி'.

7. வேதத்தின் இறுதிப் பாகமாகிய உடநிடதம் பிற்காலத்தில் ஆகமக் கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். உதாரணமாகச் சங்கரரால் பாஷ்யம் செய்யப்பெற்ற பண்டை உபநிடதமாகிய சுவேதாஸ்வதர உபநிடதம் ஆகமக் கருத்துக்களைப் பிரதிபலிக்கிறது என்பது பல ஆராய்ச்சியாளர்களால் இன்று ஒப்புக் கொள்ளப்படுகிறது.

''ஆகம முறைகள் பிற்காலத்தில் உபநிடதங்களைப் போல வேத பகுதியாகப் பிராமணங்களிலிருந்தே விரிவடைந்தன என்ற கருத்தும் சொல்லப்படுகிறது. ''சுவேதாஸ்வதரம்'' போன்ற சில பிற்கால உபநிடதங்கள் பண்டையவற்றைப் போலப் பரம்பொருளைப் பரப்பிரம்மம் என்ற பெயரால் சுட்டுவதில்லை, சமயச் சார்பு பெற்ற ஒரு பெயரால் சுட்டுகின்றன. இந்த உப நிடதங்கள் ஆகமங்களின் தொடர்போடு உருக்கொண்டனவாகும்'' (பி.டி. ஸ்ரீநிவாச அய்யங்கார், இந்திய தத்துவ சாஸ்திரத்தின் வரலாறு, பக்கம் 126—130). அன்றியும் சில ஆமங்கள் வேதாந்தத்தை மறுத்துரைப்பதனால், இவை வேதத்திலிருந்து மாறுபட்டவை என்று கருத இடமுண்டு. மிருகேந்திர ஆகமம் இவ்வாறு சொல்கின்றது. வேதாந்தத்தைப் பின்பற்றுபவர்களை இந்த நூல் ஆத்மவாதிகள் என்று குறிப்பிடுகிறது என்று அவரே எடுத்துக் காட்டுகின்றார்.

8. அருள் என்பது தமிழ் மொழியில் உள்ள ஒரு சிறப்பான தத்துவம். காரணம் பற்றி எழுவது அன்பு (love), காரணம் இல்லாமலும் வருவது அருள் (Grace), இது பற்றித்தான் திருவள்ளுவர்கூட 'அன்புடைமை' என்று சொன்னதில் மன நிறைவு பெறாமல் 'அருளுடைமை' என்ற மற்றோர் அதிகாரத்தையும் அமைத்திருக்கிறார். இந்த அருளுடைமை கடவுளின் இயல்பு. அன்பை கருணை என்றும், இறை அருளை ''நிர்ஹேதுக கடாட்சம்'' என்றும் வடமொழியில் சொல்லுவார்கள். இந்த கடாட்சம் என்பது ஆகமங்கள் சைவ சித்தாந்த வாயிலாக தத்துவ நூல் அறிவுக்கு அளித்துள்ள ஒரு கொடை என்று கல்கத்தா பல்கலைக்கழகத்தின் தத்துவ நூற் பேராசிரியராக இருந்த டாக்டர் சுரேந்திரநாத் தாஸ் குப்தா எழுதுகின்றார்.

9. <u>நிகமமும் ஆகமமும்</u>.—மற்றொரு நிலையும் கருதுதற்குரியது. வேதத்தில் அக்கினி, வாயு, வருணன், இந்திரன் முதலான பல தெய்வங்களின் வழிபாடு சொல்லப் பட்டுள்ளது. அவ்வாறு சொல்லியபோது அவற்றிற்குச் செய்கின்ற நிவேதனங்கள் முதலியன யாவும் நேரே செய்யப்பெறுவதில்லை. இவற்றை அக்கினியில் ஆகுதியாகச் சொரிந்து உரிய தெய்வங்களுக்குக் கொண்டு சேர்க்குமாறு அக்கினியைப் பிரார்த்தித்துக்கொள்கிறார்கள். பிரார்த்தனையினால் மகிழ்ந்த அக்கினி தேவன் யாகம் செய்பவர்களுக்கு ஒரு தூதன்போல, ஆராதனைப் பொருள்களைத் தான் ஏற்று, அந்தந்த தெய்வத்திற்குக் கொண்டு போய்ச் சேர்க்கிறான். இதுவே வேள்வியில் ஆகுதி செய்வதன் பொருள். இதுதான் நிகம முறை.

ஆகமம் எப்போதும் ஒரு தெய்வ வழிபாட்டைச் சொல்கிறது. இது சிவன், திருமால் ஆகிய இரண்டு தெய்வங்களுக்கும் பொருந்தும். தாம் வணங்கும் சிவன் அல்லது திருமாலை, எங்கும் நிறைந்த பரம்பொருளாகவும், அந்த நிலையில் மனம் வாக்குக்கு எட்டாத பொருளாகவும் மக்கள் வழிபடுகிறார்கள். இது இறைவனுடைய அதீதமான நிலை மற்றும் உயிர்கள்மாட்டு உள்ள கருணையினால், அர்ச்சையிலோ அல்லது திருவுருவத்திலோ இறைவனை உடனாக எழுந்தருளியுள்ள பொருளாகவும் மக்கள் வழிபடுகிறார்கள். இது உடனாகி உள்ள நிலை. ஆக இரண்டு நிலைகளிலும் மக்கள் வழிபடுகிறார்கள். ஆகவே ஆகமப்படி செய்கின்ற பூசையில் பரம்பொருளுக்கு அர்ப்பணிக்கின்ற நிவேதனப் பொருள் எதையும் நேரே திருவுருவத்தினிடம் நிவேதிக்கின்ற மரபு ஏற்பட்டிருக்கிறது. திருவுருவத்தில் உறைகின்ற அந்த இறைவன், நிவேதித்த பொருளை நேரே ஏற்றுக் கொள்கிறான் என்பது ஆகம பூசையில் உள்ள நம்பிக்கை. இவ்வாறு நிகமமுறை, ஆகமப்பூசை இரண்டுக்கும் அடிப்படையில் பெருத்த வேற்றுமை உள்ளது.

10. <u>வேத-ஆகம ஒருமைப்பாடு</u>.—எனினும் பொதுவாக உள்ள ஒரு கருத்தை இங்குச் சொல்லியாக வேண்டும். தமிழ் நாட்டில் தமிழ் ஆகமங்கள் மறைந்துபோய் வடமொழியில் செய்யப்பெற்ற ஆகமங்களே நிலவிய காலத்தில், வேதங்களையும் ஆகமங்களையும் ஒற்றுமைப்படுத்த முயன்றவர்கள், இரண்டுக்கும் வேறுபாடில்லை என்று நிலைநாட்ட முயன்றார்கள். முக்கியமாக சூத்திரத்திற்குச் சைவபரமாக மகா பாஷ்யம் செய்த ஸ்ரீகண்ட சிவாச்சாரியார், ''வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் எந்த வேற்றுமையையும் யாம் காணவில்லை'' என்று எழுதுகிறார். ஏறக்குறைய அவர் காலத்தையொட்டி மெய்கண்டார் தமது சிவஞான போதத்தை, முப்பொருள் உண்மையை உணர்த்துகின்ற சைவசித்தாந்தத் தத்துவ மூல நூலாகப் பன்னிரண்டு சூத்திரங்களால், நாற்பது வரிகளில் செய்தருளினார். அக்காலத்தில் இருந்தவர்கள் வேதம் முதல், ஆகமம், தேவாரத் திருவாசகங்கள், மெய்கண்டாரின் சிவஞான போதம் ஆகிய அனைத்திற்கும் ஓர் ஒருமைப்பாடு காட்ட முயன்றிருக்கின்றார்கள். அம்முயற்சியின் விளைவே பின்வரும் பாடல் :

''வேதம் பசு, அதன்பால் மெய்யாகமம், நால்வர்
ஓதும் தமிழ் அதன்உள்ளுறு நெய்—போதமிகு
நெய்யின் உறுசுவையே நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழ் நூலின் திறம்''

ஆசிரியர் பெயர் அறியப்படாத இத் 'தனிப்பாடல் பழமையானது. மேலே நாம் குறிப்பிட்ட ஒருமைப்பாடு உணர்வை இது பிரதிபலிக்கிறதேயன்றி, ஆராய்ச்சிக்கு ஒவ்வாதது. ஏனெனில் ஆகமத்திலிருந்து எடுக்கப்பட்டதுதான் நால்வர் ஓதும் தமிழ் என்று சொல்லுவது, பாலில் இருந்து எடுக்கப்படும் நெய் போன்றது என்ற சொல்லுக்கு நேராகாது. இது ஒப்புக் கொள்ளத்தக்கதன்று. சைவசமயாச்சாரியர்கள் இறைவனுடைய திருவருள் தூண்டுதலினால், தலங்கள்தோறும் கீதங்கள் பாசுரங்களைட

பாடினார்கள். இவற்றுள் ஆகமக் கருத்துகள் காணப்படலாம். ஆனால் இவை ஆகமத்தின் சாரம் என்று சொல்வது பொருந்தாது. இது போலவேதான் வேதம் பசு என்பதும், அதன் பால் ஆகமம் என்பதும் முற்காட்டிய ஒருமைப்பாட்டு உணர்வினால் வந்த உபசாரமொழி என்றே இதைக் கொள்ள வேண்டும்.

## IX. ஆகமங்களுக்கு இருந்த முதன்மை.

புறநானூறு, திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரம் முதலான பண்டை இலக்கியங்களிலிருந்து, பழங்காலத்திலேயே தமிழ்நாட்டில் கோயில் வழிபாடு இருந்தது என்று தெரிகிறது. இராமேசுவரத்தில் இராமபிரான், சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபட்டார் என்பதும், தீர்த்தயாத்திரை செய்து வந்த அர்சுனன் பல தலங்களில் சிவவழிபாடு செய்து வந்தார் என்பதும் முறையே இராமாயணம், மகாபாரதம் ஆகிய வடமொழி இதிகாசங்கள் மூலம் நன்கு அறிகிறோம்.

ரகோசின் என்பவர் தமது "வேதகால இந்தியா" என்ற நூலில் "ஆரியர் வருமுன்பே, இந்நாட்டு மக்களிடையே சிவவழிபாடு இருந்து வந்தது" என்று சொல்கிறார்.

"திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்
திருவெண்ணிறு அணியாத திருவிலூரும்
பருக்கோடி பத்திமையால் பாடா ஊரும்
பாங்கினொடு பல தவிகள் இல்லா ஊரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதாஊரும்
விதானமும் வெண்கொடியும் இல்லா ஊரும்
அருப்போடு மலர்பரித்திட்டு உண்ணா ஊரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே"

—அப்பர் திருத்தாண்டகம்

என்ற கொள்கைக்கு ஏற்ப ஆன்றோர்களால் பல கோயில்கள் நிறுவப்பட்டிருந்தன. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற தொடரும் பிற்காலத்தே எழுந்தது.

சிவபெருமானுடைய மூர்த்தங்களான உமையொருபாகர், சந்திரசேகரர், தென்முகக் கடவுள், நீலகண்டமூர்த்தி முதலிய மூர்த்தங்களும், அவருடைய திருவுருவத்தின் முக்கன், கொன்றைமலர் முதலிய அம்சங்களும் புறநானூறு முதலான சங்கப் பாடல்களில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளன. இந்த உருவ அமைப்புகள் ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ள 25 மூர்த்தங்களுக்கு உரியனவாகும். இந்த நோக்கில் பார்க்கும்போது, சங்க நூல்களில் ஆகமம் என்ற பெயர் சொல்லப்படாவிட்டாலும் கூட, சங்க காலத்தில் ஆகமக் கருத்து நன்கு நிலவியிருந்தன என்பது தெளிவாகிறது. கோச்செங்கன் சோழன் 70 சிவன்கோயில்களைக் கட்டினான் என்பதை

"இருக்கிலங்கு திருவாயென்டோனீசற்கு
எழில் மாடமெழுபது செய்துலகாண்ட
திருக்குலத்துச் சோழன்"

எனத் திருமங்கையாழ்வார் பாராட்டுகிறார்.

சைவசமய ஆச்சாரியர்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர் காலம் தொடங்கி தமிழ்நாட்டில் கோயில்களும் வழிபாட்டு முறைகளும் முதன்மை பெற்று வந்தன. இவர்கள் பாசுரங்களைப் பாடிக் கோயிலிடத்தில் மக்களை ஈடுபடுத்திய காரணத்தால், சோழர்கள் ஆயிரக்கணக்கான கோயில்களைக் கல்லால் கட்டினார்கள். இவை மக்களுக்காக ஏற்பட்டன. பாடல்பெற்ற இடங்களுக்கெல்லாம் போகவேண்டுமென்ற ஆவலானது, இந்த நாட்டில் தெய்வத்தின் பெயரால் ஓர் ஒருமைப்பாட்டு உணர்ச்சியை உண்டாக்கியிருக்கிறது. பல்வேறு இடங்களிலிருந்து வரும் மக்களைக் கவரவேண்டி கோயில்களில் அழகும், கலையும் அமையும்பொருட்டு கட்டடக் கலையும், சிற்பக் கலையும் சிறப்பாக இடம்பெற்றன. இந்தக் கலை அமைப்பை இன்று வரையில் நமக்குத் தருபவை ஆகமங்கள். தமிழ்நாட்டின் கட்டடக் கலையும் சிற்பக் கலையும் உலகப் பிரசித்திப் பெற்றவை. பிறநாட்டில் இக்கலைகள் இன்றுவரை உலகியலைத் தழுவி இருந்து, தமிழ் நாட்டில் மட்டும் ஆன்ம இயலைத் தழுவியிருப்பதற்கு அடிப்படை ஆகமம். உலகச் சிறப்புப் பெற்ற நடராச தத்துவத்திற்கு அடிப்படை ஆகமம். நடராசர் வடிவம் தமிழ்நாட்டிலேதான் தோன்றியது.

தவிர, கோயில் நந்தவனம், நிவேதனப் பொருள்கள், அதன் அளவு, அதை விநியோகிக்கும் முறை, தீர்த்தம் முதலியவற்றையெல்லாம் ஆகமமே சொல்கிறது. இன்றுள்ள சுமார்த்தப் பிராமணர் தங்கள் பூசையை வைதிகப் பூசை என்று சொல்லுகிறார்களே தவிர, ஆகமப் பூசை என்று சொல்லுவதில்லை. பொதுவாகப் பிராமணர்கள் சுமிருதிவழி ஒழுகுவதால், சுமார்த்தப் பிராமணர்கள் எனப்படுகிறார்கள். ஆனால் சிவாச்சாரியர் சிவாகமவழி ஒழுகுவதால், சிவப்பிராமணர் எனப்படுகிறார் வைதிக பூசை செய்யும் சுமார்த்தப் பிராமணர் தங்கள் பூசையில்ஆவாகனம் முதலானசில கிரியைகளுக்கு மட்டுமே ஆகம விதிகளைப் பின்பற்றுகிறார்கள். பெரும்பாலானவற்றுக்கு ஆகமங்களைப் பின்பற்றுவதில்லை. ஆகவே ஆகமங்களைச் செய்தவர்கள் இவர்களல்ல என்பது தெளிவு. மேலும், இன்று வட இந்தியாவில் உள்ள காசிவிசுவநாதர்

கோயில் முதலான பிரசித்தமான கோயில்களைப் பார்க்கும்போது, அவற்றின் பிரதிட்டையும் வழிபாடும் சிறிதளவுதான் ஆகமத்தைத் தழுவி நடக்கின்றனவே தவிர, பெரும்பான்மை ஆகம விதிகளின்படி நடைபெறவில்லை. ஆதலால் வடநாட்டில் ஆகமங்கள் செய்யப்பெறவில்லை என்று நாம் முடிவு செய்யலாம். தமிழ்நாட்டில் அனைத்துப் பெருங்கோயில்களும் ஆகமப்படி பிரதிட்டை செய்யப்பெற்று, ஆகமப்படி வழிபாடு செய்யப்பெற்று வருவதால், இவற்றைச் சொல்லுகின்ற ஆகமங்கள் வடமொழியிலிருந்த போதிலும், தமிழ்நாட்டாராலேயே செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பது உறுதி.

## X. ஆகமம் வளர்த்த கலைவளம்.

1. இக்காலத்தில் மக்கள் பெரிதும் விரும்புகின்ற சங்கீதமும், பரதநாட்டியமும் ஆகமத்தில் இருந்து பிறந்தவை என்றால் மிகையல்ல. கோயிலில் திருவுருவத்திற்குச் செய்யும் உபசாரங்கள் பதினாறு என்பது வழக்கு. இவற்றுள் இறுதி மூன்றாவன : கீதம், வாத்தியம், நிருத்தம் என்பன. கீதமாவது, இன்று நாம் சொல்லும் வாய்ப்பாட்டு. இறைவன் திருமுன் கீதம் ஓதவேண்டும் என்ற விதி ஆகமத்தில் உள்ளது. நாயன்மார் காலம் முதல், சந்நிதிகளில் ஓதுவார் நின்று, அருமையாகத் தேவாரப் பண்களைப் பாடி வந்திருக்கிறார்கள். திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருப்பாணாழ்வார், பாணபத்திரர், கைசிகம் என்ற பண்பாடிய நம்பாடுவான் முதலான தாழ்ந்தகுல பாணர்களும், இறைவன் சந்நிதியில் தங்கள் வாத்திய இசையை அர்ப்பணித்திருக்கிறார்கள். இது ஆகம விதிப்படி நடந்த தொண்டு.

2. மற்றொரு சிறப்பான கலை, நாட்டியக்கலை. பரத நாட்டியத்தில் முகபாவத்திற்கு ஏற்ப கை அபிநயம் பிடிப்பது மிக முக்கியமான அங்கம். இதுவே முத்திரை. எப்படிப் பேச்சுக்கு எழுத்தும், எழுத்தாலான சொல்லும் கருவிகளோ, அதுபோல நாட்டியமாகிய ஒரு கலைக்கு விரல்களும், அவற்றின் அசைவு என்று சொல்லுகின்ற முத்திரையும் கருவிகள். பேச்சு மொழியைப்போல முழுமையுடையது நடனக் கலையில் சைகைமொழியாகிய முத்திரை. இறுதி உபசாரமாகிய நிருத்தம் இறைவனுக்குச் செய்யப்பெறுகின்றது. நிருத்தம் என்பது இசைக்கின்ற கீதத்தின் பொருளை முத்திரையின் மூலம் இறைவனுக்கு அர்ப்பணம் செய்வது. மேலும் சிவாச்சாரியர் செய்கின்ற சிவபூசையில் (ஆன்மார்த்த பூசையிலும்கூட) முத்திரையே முக்கியமான அம்சம். முத்திரை என்ற சொல்லுக்கு, "மகிழ்ச்சி உண்டாகச் செய்வது" என்பதுபொருள். சிவ பூசையில் 36 முத்திரைகள் உள்ளன. இந்தமுத்திரைகள் ஆகமத்தில் விதிக்கப்பட்டு இலக்கணம் கூறப்பட்டுள்ளன. முத்திரையில்லாமல் பூசை இல்லை. முற்காலத்தில் பூசையிலிருந்து எடுக்கப்பட முத்திரைகள் நாட்டியத்தில் கைக்கொள்ளப்பட்டு இறைவனுக்கு அர்ப்பணப் பொருளாயிருந்தன. இவற்றுக்கெல்லாம் அடிப்படை ஆகமம். பரத சாஸ்திரத்தில், பரத முனிவர் இக்கருத்துக்களை ஆகமத்திலிருந்தே எடுத்துச் சொல்லுகின்றார்.

3. தமிழகத்திலுள்ள எல்லாச் சிறப்புத் திருக்கோயில்களும் ஆகம முறைப்படி நிர்மானிக்கப்பெற்று, பூசை செய்து வரப்பெற்றவை. வடநாட்டில் இத்தகைய கோயில்களையோ பூசை முறைகளையோ காண்பது அரிது. ஆதலால் சிற்பக்கலை படிமக்கலை ஆகியவைகளை உள்ளடக்கிய ஆகமங்கள் தமிழ்நாட்டிலேயே தோன்றியவை, தமிழ்நாட்டுக்கே உரியவை என்பதில் ஐயமேதுமில்லை. இதனால்தான் இக்கலைகள் திராவிடக் கட்டடக் கலை (Dravidian architecture) என்று தனித்தும் சொல்லப்படுகின்றன.

4. சிறப்பான பல சிற்ப நூல்கள் பழமையாக எழுதப்பட்டு சமீப காலத்தில் வெளிவந்துள்ளன. மயமதம், மானசாரம் முதலியன பழமையானவை. இந்தியா முழுமையிலும் காணப்படுபவை ; பின்னும் சில சரசுவதிசில்பம், தத்துவநிதி போன்றவை தென்னிந்தியாவில் தோன்றியவை. இவை எங்குத் தோன்றியிருப்பினும், இவற்றில் கூறப்பட்டுள்ள கட்டட அமைப்பும், தெய்வத் திருவுருவங்களின் அமைப்பும் ஆகமங்களிலிருந்து தொகுக்கப்பட்ட கருத்துகள். சைவத்தில் நடராச வடிவம், தட்சிணாமூர்த்தி வடிவம் முதலாயின தென்னாட்டுக்கு மட்டுமே உரியனவாதலால், இவற்றைக் கூறும் சிற்பசாத்திரம் தமிழ்நாட்டு ஆகமங்களையும், கட்டடங்களையும் கண்டே செய்யப்பெற்றது என்பது வெளிப்படை.

5. இன்று மொழி பற்றிய காழ்ப்புணர்ச்சி நம்மிடத்தில் அதிகமாக, நம்மவரில் அறிவு சான்றவர்கள்கூட, ஆகமங்கள் வடமொழியில் எழுதப்பெற்றுள்ளன என்ற ஒரு காரணத்தைக் கொண்டு, அவை தமிழ் மக்களுக்கு அன்னியமானவை என்று கருதுகிறார்கள். இது சரியன்று. வழிபாட்டு முறையின் விரிவுகள், கோயில் பிரதிட்டை, சிவமூர்த்தங்களின் பல்வேறு பேதங்கள் முதலான பலவும் தமிழ்நாட்டிலேயே தோன்றியவை. தமிழ்த் தன்மையே பொருந்தியவை. அவற்றில் வடநாட்டுச் சார்பு சிறிதும் இல்லை. இது வடநாட்டுக் கோயில்களையும் அவற்றின் கட்டட அமைப்பையும் அங்கு நடைபெறும் வழிபாட்டு முறைகளையும் மேல் போக்காகப் பார்த்தாலே நன்கு விளங்கும். முக்கியமாக நடராசர் திருவுருவம் இங்குக் கருதத்தக்கது. தமிழ்நாட்டு வழிபாட்டின் விரிவும் அழகும், வடநாட்டில் இல்லை. எப்படியிருப்பினும், இன்று தமிழ்நாட்டில் வேறெங்குமே காண்பதற்கு அரியதாகிய வளம் பொருந்திய ஒரு சமய மரபும், பண்பாட்டு மரபும், இடையறாது தொடர்புடையனவாய் நிலவுவதைக் காண்கிறோம். இந்தத் தொடர்பு அறாத நிலைக்கு ஆதாரம் ஆகமங்கள். அவைகளே இந்த மரபுகளை முழுவடிவத்தில் காப்பாற்றி வந்திருக்கின்றன.

சில திருக்கோயில்களில் வைதீக பூசை நடக்கிறது என்று சுமார்த்தப் பிராமணர் கூறுகிறார்கள். இதற்கு அவர்கள் காட்டும் மூலம் வேதங்களல்ல. போதாயன சூத்திரம், ஆபஸ்தம்ப சூத்திரம் என்பன. இச்சூத்திரங்கள் பூசைக் கிரியைகளை ஆகமங்களி லிருந்தே எடுத்து வைத்துக் கொண்டுள்ளன. இன்று நடைபெறுகின்ற வைதீக பூசையின் வழிபாட்டு முறைகளும், பூரணமாய் ஆகம அடிப்படையைத் தழுவித்தான் அமைந் திருக்கின்றன.

## XI. இலக்கிய வரலாற்றில் ஆகமச் சான்றுகள்.

1. ஆகமப்படி பூசை எந்தக் காலத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்ற கருத்துப் பற்றி ஆராயும்போது, ஒரு முக்கியமான தெளிவு நமக்குக் கிடைக்கிறது. மொஹஞ்சதாரோ அகழ்வாராய்விலிருந்து சிவவழிபாடு சுமார் 7000 ஆண்டுகளுக்கு முன்பே இருந்ததாகத் தெரியவருகிறது. சிவலிங்க வழிபாடு இருப்பதால், முன்பே பரதகண்டத்தில் ஆகமநெறி முறை பரவியிருக்கக்கூடும் என்ற எண்ணத்தைத்தருகிறது. அவ்வளவு புராதனமான காலத்தில் இலமூரியா குறித்து நாம் கருத்தில் கொண்ட தமிழ் ஆகமங்களே ஆட்சியில் இருந்தன என்ற கருத்து வலியுறுகின்றது. அக்காலத்து நாகரிகம் வடமொழியை ஒட்டிய நாகரிகம் அல்ல என்றும், ஒரு பூர்வீக திராவிட நாகரிகம்தான் என்றும், அஸ்கோபல்போலா முதலான பின்லாந்து தேச ஆய்வாளர் களும், ருசிய ஆய்வாளர்களும், ஐராவதம் மகாதேவன் போன்ற இந்திய ஆய்வாளர் களும், தனித்தனியே முடிவெடுத்திருக்கின்றார்கள். பண்டைய தமிழ் இலக்கியங்கள், ருமுறைகள் ஆகியவைகளிலும் ஆகமங்களின் தொன்மை பற்றிப் பல சான்றுகள் கிடைக்கின்றன.

2. கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்று கருதப்படுகின்ற சங்க நூலாகிய பரிபாடல் என்ற நூலில் 11-ஆம் பாடலில் வருகின்ற " விரிநூல் அந்தணர் " என்ற தொடருக்கு உரை எழுதும்போது பரிமேலழகர் " விரிநூல்— ஆகமநூல் " என்று உரை எழுதுகின்றார். இது ஒரு சிறப்பான குறிப்பு.

3. கி.பி. 2-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியதாகிய திருக்குறளில் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் " கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்— தாளை வணங்காத் தலை " என்ற குறளில் வருகின்ற " என் குணத்தான் " என்ற தொடருக் குப் பரிமேலழகர், சிவபெருமானின் எட்டுக் குணங்களையும் சொல்லி, " இது சைவா கமத்துள் கண்டது " என்று எழுதுகின்றார். வைணவப் பற்றுடைய பண்டைப் பேரறிஞர் பரிமேலழகர் சைவாகமத்தை அறிந்து குறிப்பிடுதல் சிறப்புமிக்க ஒரு குறிப்பாகும்.

4. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவஞானி திருமூலர் செய்த பத்தாம் திரு முறையாகிய திருமந்திரத்தில் ஆகமங்கள் 28 என்று சொல்லி ஒரு பாடலில் 9 ஆகமங் களின் பெயர்களைத் தருகின்றார். கீழ்க்காணும் மற்றப் பாடல் பகுதிகளும் ஆகமத் தைக் குறிப்பிடுவதைக் காணலாம் :—

1. " அஞ்சொடு இருபத்து மூன்றுள ஆகமம் "—57
2. " சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே "—73

ஆகமத்தைத் திருமூலர் சொல்கின்ற ஒரு பான்மையினால், ஐந்தாம் நூற்றாண்டிலேயே இவை மிகவும் பிரசித்தமாய் விளங்கின என்று தெரிகிறது.

5. கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் வாழ்ந்த சைவ சமயாச்சாரியர்களான அப்பர் சுவாமிகளும், திருஞானசம்பந்தரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் ஆகமங்களை நன்கு அறிந்து பல இடங்களில் குறிப்பிட்டுச் செல்கிறார்கள். சில குறிப்புக்களை மட்டும் கீழே காணலாம்.

(அ) சிவபெருமான், உமாதேவிக்கு ஆகமங்களை உபதேசித்தார் என்று அப்பர் சுவாமிகள் தம்முடைய திருக்குறுந்தொகைப் பாடலில் குறிப்பிடுகிறார் :

துணையி லாமையில், தூங்கிருட் பேய்களோடு
அணைய லாவது எமக்கரி தேயெனா
துணையி லாவிடை மாமரு தில்எழு
பணையில் ஆகமஞ் சொல்லும்தன் பாங்கிக்கே
(அப்பர் தேவாரம்—5-15-4).

பிரணவர் முதலிய 66 பேர்களுக்குச் சிவபெருமான் உபதேசித்ததை,

அஞ்சனமேனி அரிவை யோர் பாகத்தன்
அஞ்சொடு இருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே

என்னும் திருமூலர் திருமந்திரம் கூறுகிறது.

(ஆ) சம்பந்தர் தம்முடைய தேவாரங்களில், அங்கம் ஆகமம் வகுத்தவன் ஆகமச் செல்வனார், அரன் ஆகமம் என்றெல்லாம் குறிப்பிடுகின்றார்.

(இ) கி. பி. 7 ஆம் நூற்றாண்டின் இறுதியில் (இராசசிம்ம பல்லவன் காலத்தே) வாழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் '' அண்டர் தமக்கு ஆகமநூல் மொழியும் ஆதி '' என்றும், '' ஆகம சிலருக்கு அருள் நல்கும் பெம்மானே '' என்றும், '' அர ஒலி ஆகமங்கள், தோத்திரங்கள் '' என்றும் ஆகமங்களைக் குறிப்பிடுகின்றார்.

6. கி. பி. 9 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்த மாணிக்கவாசகர் செய்த திருவாசகத்தில் மூன்று இடங்கள் முக்கியமாய்க் கருதத்தக்கன ;

(1) ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க—(சிவபுராணம்).

(2) மன்னுமா மலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்—(கீர்த்தித் திருவகவல்).

(3) கேவேடராகிக் கெளிறது படுத்து
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்திரத் திருந்து
உற்றஐம் முகங்க ளாற்பணித் தருளியும்—(கீர்த்தித் திருவகவல்).

இவற்றால் இரண்டு முக்கியமான கருத்துக்களைப் பெறுகின்றோம். ஒன்று, சிவபெருமான் ஆகம வடிவத்தில் நமக்கு ஆனந்தம் அளிக்கின்றான் என்பது. இரண்டு, சிவபெருமான் மகேந்திர மலையில் தங்கியிருந்து தம் மாணாக்கரான தமிழ் முனிவர்களுக்குத் தமது (சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்ற) ஐந்து முகங்களாலும் ஆகமங்களை உபதேசித்தார் என்பது.

7. மகேந்திர மலையை மாணிக்கவாசகர் குறிப்பிட்டதைச் சொல்லும் இவ்விடத்து வால்மீகி இராமாயணத்தில் கிட்கிந்தா காண்டத்தில் வால்மீகி முனிவர் மகேந்திரமலை குறித்துத் தரும் ஒரு குறிப்பையும் இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம். 42 ஆம் சருக்கத்தில் சுக்கிரீவன், அங்கதன் தலைமையில் தென்திசை நோக்கிச் செல்கின்ற வானரர்களுக்கு, அவர்கள் போகவேண்டிய மார்க்கத்தை கீழ்க்காணுமாறு விரிவாகச் சொல்கிறான். '' சஹ்ய மலையையும் அதிலிருந்து பிரிந்துவரும் காவேரி நதியையும் அந்த மலையின் சிகரத்தில் வீற்றிருக்கின்ற அகத்திய மாமுனிவரையும் சென்று காண்க. பின்பு அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தாமிரபரணி என்னும் நதியையும் தாண்டிச் செல்க...... பின்னர் பொன்மயமான திவ்வியமான முத்துக்களாலும் மணிகளாலும் அலங்கரிக்கப்பெற்ற பாண்டியர்களுடைய தலைநகரமான கபாடபுரத்தைக் காண்பீர்கள். அதற்கு அப்பால் தென்கடலின் கரையில் அகத்தியமுனிவரால் தாபிக்கப்பட்ட மகேந்திர மலை இருக்கின்றது. அது பொன்மயமாய்ப் பல காடுகள் அடர்ந்ததாய் உள்ளது. அங்குத் தேவர், கின்னரர், இருடிகள், அப்சரசுகள், சித்தர், சாரணர், முதலியோர் உள்ளார் கள் '' (கிட்கிந்தா காண்டம், படலம் 42, சுலோகங்கள் 16—21). இதனால் நாம் பெறுவது மகேந்திரமலை என்பது, தமிழருடைய கற்பனை அல்ல என்பதும், வட மொழியில் ஆதிகாவியம் என்று கருதப்படுகின்ற வால்மீகி இராமாயணத்திலே சொல்லப் படுகின்றது என்பதும் ஆகும். அம்மலை வால்மீகி காலத்தில் அல்லது இராமகதை நடை பெற்ற காலத்தில் இருந்திருந்து பின்னர் எப்படியோ கடல் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இது இலெமூரியாவில் இருந்து மறைந்துபோய்விட்டது என்று சொல்வது தமிழ் மரபு.

8. அடுத்து கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் பெரியபுராணம் செய்த சேக்கிழார் திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத்தில் காஞ்சிபுரத்தில் சிவபெருமானைப் பூசிப்பதற்குக் கயிலாயத்திலிருந்து உமாதேவியார் எழுந்தருளியபோது பூசைமுறை என்ன என்று பெருமானையே கேட்டு அறிந்து கொண்டுவந்து பூசை செய்ததாகக் கூறுகிறார் (பெரியபுராணம் 1133). கண்ணப்ப நாயனார் சிவபெருமானைப் பூசித்த காளத்தி மலையில் ஆதிசைவராகிய சிவகோசரியார் '' ஆகமத்தி லியம்பிய பூசனைக் கேற்ப '' வழிபட்டார் (பெரியபுராணம் 784). இலங்கை மகாவம்சத் தொண்டு கி. மு. 2ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் மனுநீதிச் சோழன் ''பூசனைக்கங்கண் நிபந்தம் ஆராய்ந்துளான் துங்க ஆகமம் சொன்ன முறைமையால்''(பெரியபுராணம் 101). இது ஒரு பெரிய சரித்திர உண்மையை உணர்த்துகின்றது. சோழர் காலத்தில் நாடெங்கும் சிவாலயங்கள் புதுப்பிக்கப்பட்டு வழிபாடுகள் யாவும் மக்களைக் கவருகின்ற முறையில் அலங்காரமாகவும் விரிவாகவும் ஆகம முறைப்படி மேற்கொள்ளப்பட்டன என்பதைச் சேக்கிழார் தரும் குறிப்புக்கள் காட்டுகின்றன. அவர் சோழனின் அமைச்சராக இருந்தபடியால் இச் செய்தியை நேரே நன்கு அறிந்து போற்றிக் கூறுகிறார். சேக்கிழார் பெரியபுராணத்தைச் செய்து அரங்கேற்றிய காலம் சுமார் கி. பி. 1140 ஆகும்.

9. இவையல்லாமல் மற்றொன்றையும் குறிப்பிடலாம். ஆன்மார்த்த சிவபூசையில் முடிவில், புத்தகபூசை என்ற பெயரில் சிவாகமத்திற்கே ஒரு பூசை செய்ய வேண்டும் என்று விதிக்கப்பெற்றுள்ளது. அதுவுமன்றி விருத்தாசலம் (திருமுதுகுன்று) என்ற பாடல் பெற்ற சிவதலத்தில் 28 சிவாகமங்களை, 28 சிவலிங்கங்களாக '' காமிகாக மேசர் '' '' காரணாகமேசர் '' என்பன முதலான பேர்களால் எழுந்தருளச் செய்து இந்த ஆகம இலிங்கங்களுக்கு முறையான வழிபாடும் நடைபெற்று வருவதை இன்றும் காணலாம். இது இக்கோவில் கட்டிய செம்பியன்மாதேவி (கி.பி. 920—1001) காலத்தில் தொடங்கப் பெற்றிருக்கலாம்.

10. சிவபுண்ணியச் செயல்களின் பயனைக் கூறும் நூல்களில் தானங்களில் புத்தக தானம் என்ற ஒருவகையைச் சொல்லி, ஆகமங்களை ஏட்டில் எழுதித் தானம் செய்வதனால் பெறும் சிவபுண்ணியப் பலனை விரித்துச் சொல்லியிருக்கக் காணலாம்.
(சிவதருமோத்தரம்).

11. அடுத்தபடியாக, சைவசித்தாந்த சாத்திரங்களாகிய மெய்கண்ட சாத்திரங்களில் ஆகமங்கள் சைவநூல் என்ற பெயரால் மிகவும் உயர்த்திச் சொல்லப்படுகின்றன. இங்கு நாம் கருத்தில் கொள்ளவேண்டியது, நெடுங்காலமாக இருந்து வந்த ஆகமங்கள் யாவும் சிவவழிபாட்டையே கூறுவன. அவைகளே சைவநூல்கள் என்று இந்தச் சந்தான ஆச்சாரியர்கள் போற்றிக் கூறுகிறார்கள் என்பதாகும்,

12. சந்தான ஆச்சாரியர்களில் நான்காமவராகிய உமாபதி சிவாச்சாரியர் (கி. பி. 14 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர்) உபாகமங்களில் ஒன்றாகிய பௌஷ்காரகமத்திற்கு விரிவான ஒரு பேருரை ''பௌஷ்கர சம்மிதா பாஷ்யம்'' என்ற பெயரில் வடமொழியில் எழுதியிருக்கிறார். (இது விரிந்த நூல், கிரந்த லிபியில் அச்சாகியுள்ளது). அதுவன்றியும், இறை, உயிர், தளை, முத்திநெறி என்ற பொருள்கள் பற்றி வடமொழி ஆகமங்கள் பலவற்றிலிருந்து நூறு சுலோகங்கள் ''சதரத்ன சங்கிரகம்'' என்ற பெயரால் திரட்டி, அதற்குச் ''சதரத்ன உல்லேகினி'' (நூறு மணிகளையும் கடைசல் பிடிப்பது) என்ற பெயரால் ஒரு விரிந்த உரையும் எழுதியிருக்கின்றார். இந்த ஆச்சாரியர் சிவப்பிரகாசம் முதலான எட்டு மெய்கண்ட சாத்திரங்கள் தமிழில் அருளிச் செய்தவர். இந்த நூல்கள் யாவும் அச்சாகியுள்ளன. இதனால் தமிழ்நாட்டு மக்கள் ஆகமங்கள் தங்களுடைய சொத்துகள் என்று கருதினார்கள் என்பது நன்கு விளங்கும்.

13. மேலே கூறியவற்றால், தமிழ்நாட்டில் மிகப் பழங்காலம் தொடங்கியே ஆகமங்கள் வழங்கிவந்தன என்பது தெளிவாகிறது. ஆதி காலத்தில் ஆகமங்கள் தமிழிலே செய்யப்பட்டுள்ளனவோ என்று நினைப்பதற்கும் இடமுண்டு. ஐந்தாம் நூற்றாண்டு தொடங்கி வடமொழி ஆகமங்கள் ஆட்சிக்கு வந்திருக்கின்றன. சோழ மன்னர்கள் ஏகாதிபத்தியம் செலுத்திய காலத்தில் (கி பி. 846—1279) ஆகமங்களுக்குக் கோயில் வழிபாட்டில் மிகவும் அதிகமான இடம் அளிக்கப்பட்டிருந்தது.

## XII. ஆகமங்கள் தமிழில் இருந்தன என்பதற்குச் சான்றுகள்

1. சரித்திர காலம் முதலாகத் தமிழ்நாடு தெய்வ வழிபாடு உடைய நாடு என்பது தெரிந்த செய்தி. தமிழுக்கு இலக்கணம் செய்ய வந்த தொல்காப்பியர் ஐந்திணை ஒழுக்கத்தைப் பற்றிக் கூறும்போது தெய்வ வழிபாட்டைத் தவறாது சொல்கிறார். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று திணைகளைப் பிரித்து, அவற்றுக்குரிய தெய்வங்களாக முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை என்போரை அவர் குறிப்பிடுகிறார். 'என்ப', 'என்மனார் புலவர்' என்றெல்லாம் அவர் சொல்லி வருபவற்றால், இக்கருத்துக்கள் அவருக்கு முன்னமே நெடுங்காலமாக மக்களிடை வழங்கி வந்தன என்பதை உணர்தல் வேண்டும். இனி இந்த திணைகளுக்குரிய மக்கட் பகுதிகளை அவர் குறிப்பிடும்போது, இயற்கையாக அந்த ஐந்து திணைக்குரிய வாழ்க்கையும், தொழிலும் உடையவர்களாகவே அவர் மக்களைக் குறிப்பிடுகின்றார் அன்றி, சாதி பற்றி மக்களை அவர் வேறுபடுத்தவில்லை. மேலே ஐந்து தெய்வங்களைக் குறிப்பிட்ட இடத்தில் தொல்காப்பியர் சிவனைச் சொல்லவில்லை. அவர் கருத்தின்படி ஒவ்வொரு தெய்வமும், ஒரு நிலப் பிரிவுக்கு உரியதாய் இருக்க, எல்லா நிலப் பிரிவுகளும் சிவனுக்கு உரியனவாதலால், தனித்துச் சிவனைக் குறிப்பிட வேண்டிய நிலை இல்லை என்று கொள்ளலாம். எனினும் ''கொடி நிலை கந்தழி வள்ளி'' எனத் தொடங்கும் சூத்திரத்தின்கீழ் நச்சினார்க்கினியர் '' ஒரு பற்றுக்கோடு மின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள் '' எனக் குறிப்பிடுகிறார். உய் என்பதன் அடியாகப் பிறந்தது உயிர் என்னும் பெயர். அவ்வுயிருக்கு உடல்போல் அமைந்தது மெய். ஒருவரது உடலைத்தான் முதலில் காண்கிறோம். உயிர் உடலில் இயங்கியுள்ளது. மெய்யெழுத்துகளை இயக்குவது அகரத்தோடு தொடங்கும் உயிர் எழுத்துக்கள். இறைவனும் எல்லா உயிர்களையும் உடனாய் இருந்து இயக்குகிறார் என்பது '' மெய்யின் இயக்கம் அகரமோடு சிவனும் மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே'' எனத் தொல்காப்பியம் கூறுகிறது. இவையெல்லாம் ஆகமங்களின் ஞானப் பகுதிக் கருத்துகள்.

2. சிவம் என்ற சொல் செம்மை என்னும் பொருள் தரும். இது தமிழ்ச் சொல்லுக்குரிய பொருள். இது செம்மை என்ற நிறத்தையும், செம்மையாகிய நன்மை (மங்களம்) தருதல் என்ற பொருளையும் குறிக்கும் என்று ஆன்றோர் கூறியுள்ளனர். பிற்காலத்தில் வேதத் தெய்வமாகிய உருத்திரன், தமிழ் மக்களுடைய தமிழ்த் தெய்வமாகக் கருதப் பெற்றிருந்த சிவத்தோடு ஒற்றுமைப் படுத்திய காலத்தில், சிவம் என்ற சொல் வடமொழியில் கொள்ளப்பட்டது என்று டாக்டர் சட்டோபாத்தியாயா, '' சங்கராச்சார்யர் வரையில் இந்து சமயப் பிரிவுகள் வளர்ந்த வரலாறு '' என்ற நூலில் எழுதியுள்ளார். ''இந்திய மொழியியல் பற்றிய புல ஆய்வு '' (Linguistic Survey of India) என்ற விரிந்த தமது நூலில், டாக்டர் கிரயர்சன் என்ற அறிஞர் சிவம் தமிழ்ச் சொல் எனவும் இதிலிருந்துதான் ஆரியர் கூறும் உருத்திர சிவத்துக்கு ஆதாரம் ஏற்பட்டதெனவும், அவர்கள் தத்துவக் கருத்தும் இதற்கேற்ப மாறுதல் அடைந்தது எனவும் எழுதியுள்ளார்.

3. மொகஞ்சதாரோ உறாரப்பா நாகரிகங்களையும், அங்கு நிலவிய சிவலிங்க வழிபாட்டையும் முன்னமே குறிப்பிட்டோம். அவற்றின் காலத்தைக் கணித்த ஆய்வாளர்கள், அவை வேதகாலத்துக்கு முற்பட்டிருக்கக்கூடுமென்றும், அவை ஒரு ' பண்டைத் திராவிட நாகரிகம் ' ( Proto-Dravidian ) என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். வேத ஆராய்ச்சியாளர் பலரும் இந்தியாவின் ஆதி இலக்கியம் என்று கருதப்படும் முதல் வேதமாகிய ரிக் வேதத்திலும், மற்றவற்றிலும், திராவிட (தமிழ்) மொழிக் கூறுகள் (ஒலியாகவும் கருத்தாகவும்) காணப்படுகின்றன என்று கருதுகிறார்கள். சிவம் என்ற ஒலியும் அது பற்றிய கருத்தும் வேதத்தில் காணப்படுவது உண்மையே ; வேதங்களில் இடைப் பகுதியாகிய கிருஷ்ண யசுர் 'வேதத்தின் இடைப் பகுதியாயுள்ள 11 ஆவது அனுவாகத்தில் மத்திய சுலோகத்தில் நமசிவாயா சிவதராய ' என்ற தொடர்கள் வருகின்றன. இது சிவனைக் குறிக்கின்ற மந்திரம் என்றும், இங்கு வரும் ' நமசிவாய ' என்ற தொடரே சிவப்பிரானின் திருவைந்தெழுத்து என்ற கருத்தும் சொல்லப்பெறும். இதை நன்கு சிந்திக்கும் போது தமிழ் மக்களிடையே வழங்கிய கருத்து வேதத்திலும் புகுந்திருக்கிறது என்று முடிவு செய்தல் பிழையாகாது.

4. அன்றியும் புவியியலை ஆராய்ந்தவர்கள், உலகத்திலேயே, இந்தியாவின் தென்பகுதிதான் மிகப் பழமையான நிலப்பரப்பு என்றும், இதுதான் ஆதி மனிதன் தோன்றிய முதலிடம் என்றும் கூறுவார்கள். மேலும் தற்போதுள்ள கன்னியா குமரி முனைக்குத் தெற்கே ' இலெமூரியா ' என்று இன்று பெயர் சூட்டப்பட்ட ஒரு பெரிய நிலப்பரப்பு இருந்து, கடலில் மூழ்கியது என்ற கருத்தும் அறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பெறுகிறது. இந்த நிலப் பரப்பில் மகேந்திரமலை என்ற மலை இருந்தது என்றும், அங்கிருந்துதான் சிவபிரான் தமது ஐந்து முகங்களால் ஆகமங்களை, பக்குவம் பெற்ற முனிவர்களுக்கு உபதேசித்தார் என்றும் வரலாறுகள் உள்ளன. இதையேதான் மாணிக்கவாசகர் திருவாசகத்தில் மூன்றிடங்களில் குறிப்பிடுகின்றார். இது பற்றிச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியராகயிருந்த திரு. எஸ். எஸ். சூரியநாராயண சாஸ்திரி என்பவர் " ஸ்ரீகண்டரின் சிவாத்துவைதம்" என்ற தமது நூலில் கீழ்க் காணுமாறு கூறுவது இங்கு கருதத்தக்கது:

" இப்போது நிலவும் ஆகமங்கள் முன்னமே இருந்த தமிழ் ஆகமங்களின் வடமொழி பெயர்ப்புகள் என்று சொல்லப்படுகின்றன. அத் தமிழ் ஆகமங்கள். தனித்த சமயக் கொள்கை உடையன. வடமொழியில் மொழிபெயர்த்தவர்கள் அவற்றின் கருத்துகளைத் தங்களுடைய வைதிக சமயத்தில் இயன்றவரையில் சேர்த்துக் கொண்டார்கள் என்றும், தமிழ் மூலங்கள் இயற்கை காரணத்தாலோ அரசியல் காரணத்தாலோ அடியோடு அழிந்து போன பிறகு, வடமொழி பெயர்ப்புகள் மட்டுமே எஞ்சி நின்றன என்றும், அந்த வடநூல்களில் சொல்லப்பட்டபடி ஆகமங்கள் வேதத்திலிருந்து தோன்றியவை என்ற கொள்கை சிறிதும் ஏற்கக் கூடியதல்ல என்றும், ஆகமங்களின் பெயர்களே தங்களுடைய வாதத்திற்குப் பூரண ஆதரவு அளிக்கின்றன என்றும் பலர் சொல்லியிருக்கின்றார்கள். ஆகமம் என்றால் " வந்தது" " வேறு மொழியிலிருந்து வந்தது " என்று பொருள். தந்திரம் என்பது நூல் என்ற தமிழ்ச் சொல்லின் மொழிப்பெயர்ப்பாகிய 'தந்து' என்ற வடசொல்லிலிருந்து வந்தது என்று சொல்லப்படும். ஆகமம் என்பது வேறு சார்பில்லாத கோட்பாடுகளைக் கொண்டது என்றும், இது மற்றொரு கோட்பாடுகளின் தொகுதியாகிய வேதாந்தத்திற்கு மாறானது என்றும் இங்கு தெரிந்துகொண்டால் போதுமானது " (சென்னைப் பல்கலைக் கழகம், 1972).

5. வரலாற்று காலத்திற்கு முன்னர் ஆகமங்கள் திராவிடரால் தமிழில் இயற்றப் பெற்றவை எனவும், அவற்றின் பெரும்பகுதி கடல் கோளால் அழிந்தது எனவும், புதை பொருள் ஆராய்ச்சி சங்கத்தின் செயலாளர் டி. சவரிராயன் கூறியுள்ளார். சிறந்த தமிழறிஞர்களான சூரியநாராயண சாஸ்திரியும் (பரிதிமாற் கலைஞர்), மறைமலை அடிகளும், கா. சுப்பிரமணிய பிள்ளையும் ஆகமங்கள் தமிழிலேயே ஆதியில் இருந்தன என்பதை அறுபது ஆண்டுகளுக்கு முன்பே வலியுறுத்தியிருக்கின்றார்கள்.

## XIII. திராவிடர் வேதம் என்று சொல்லுகின்ற மரபு.

1. வேதங்கள் நான்கு. அவை ரிக், யஜுர், சாமம், அதர்வம் என்பன. இவற்றுள்ளும் அதர்வம் காமியமான பூசையைச் சொல்லுகின்றமையால் வேதத்தைச் சொல்லுபவர்கள் அதர்வத்தை நீக்கி, மூன்று வேதம் என்று மற்றவற்றைக் குறிப்பிடும் மரபும்உண்டு. இதுபோலவே அருளாளர்கள் சைவத்திலும் வைணவத்திலும் பாடி யருளிய பாசுரங்களின் தொகுப்பை ஐந்தாவது வேதம் என்று சொல்லுகின்ற மரபும் நெடுநாளாக நிலவி வருகின்றது. ஒரு பழம் பாடல் மூவர் தமிழையும், தேவார திருவாசகங்களையும், திருமந்திரத்தையும் திருநான்மறைகளோடு ஒத்த பெருமையுடையன என்று சொல்லுகின்றது.

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம் என்று உணர்.

இப் பாடலில் நான்மறையோடு ஒத்தவை திருக்குறளும் மூவர் தமிழாகிய தேவாரங் களும், திருவாதவூர் முனிவர் மொழிந்த திருக்கோவையும் திருவாசகமும், திரு மூலர் சொல்லாகிய திருமந்திரமும் ஒரே சிறப்புடையன என்று சொல்லப்பெறுகின்றது. இவற்றுள் திருக்குறள் தவிர, ஏனையவை யாவும் சைவத் திருமுறைகள்.

2. இந்த மரபுபோல, வைணவத்திலும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்கள் நான்கு வேதங்களாகும் என்று ஓர் மரபும் உண்டு. முதலாயிரம் ரிக் வேதம், இரண்டாவது ஆயிரமாகிய பெரிய திருமொழி யஜுர் வேதம், அடுத்து வரும் இயற்பா அதர்வ வேதம், இறுதியாகிய நம்மாழ்வாரின் திருவாய்மொழி சாம வேதம் என்று கொண்டாடப் பெறுகின்றன. மற்றொரு மரபும் உண்டு. நான்கு வேதங் களையும் நம்மாழ்வார் அருளிச் செய்தார் என்றும், அவருடைய திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி ஆகிய நான்கும் முறையே ரிக் வேதம், யஜுர் வேதம், அதர்வ வேதம், சாம வேதம் ஆகும் என்றும், இந்த வேதங் களுக்கு அங்கமாக திருமங்கையாழ்வாருடைய பிரபந்தங்களான பெரிய திருமொழி பெரியதிருக்கடல், சிறிய திருமடல், திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை ஆகிய ஆறும் வேதாந்தங்கள் என்று சொல்லுகின்ற மரபு உண்டு. அன்றியும் நம்மாழ்வார் பெருமையைக் கூறும்போது "வேதம் தமிழ் செய்த மாறன்" என்றும், "வேதத்தைச் செந்தமிழால் பிரித்துரைத்தான் மொழியே" என்றும் போற்றியுரைக்கக் காண்கின்றோம்.

இவற்றால் இந்தச் சைவத் திருமுறைகளும், ஆழ்வார் அருளிச் செயலாகிய நாலாயிரப் பிரபந்தங்களும், ஐந்தாவது வேதம் அல்லது "திராவிட வேதம்" என்று கருதுகிற மரபு தெளிவாகின்றது.

3. இவையல்லாமலும் சிறப்பான ஆலயங்களில் நைமித்திக பூசைகளின் முடிவில், இறைவனுக்கு வேதங்களைத் தோத்திரமாக அர்ப்பணிக்கின்ற மரபு இருந்து வருகிறது. இந்த மரபில் பூசையை நடத்தி வைக்கின்ற ஆச்சாரியர் சோடசோபசாரங்களின் முடிவில் ரிக்வேதம் அவதாரய, யஜுர்வேதம் அவதாரய, சாமவேதம் அவதாரய, அதர்வவேதம் அவதாரய என்று சொல்லி வேதம் வல்ல பிராமணர்களைக் கொண்டு அவ்வவ் வேதங் களைப் பாடும்படி செய்து, பின்னர் திராவிட வேதம் அவதாரய என்று சொல்லி ஓதுவார்களையோ அல்லது அத்தியாபகர்களையோ கொண்டு சைவத்திருமுறைகள் (இவற்றுள் ஒரு திரட்டுப் போலப் பஞ்சபுராணம் அல்லதுபஞ்சபதிகம்)அல்லதுநாலாயிரத் திவ்வியப் பிரபந்தகங்களை ஓதச் செய்வது நெடுங்காலமாக வழக்கில் இருந்து வருகிறது. இந்த வழக்கு இந்தத் தமிழ்மறைகள் கோயில் வழிபாட்டில் "திராவிடவேதம்" என்று கொள்ளப்பட்டிருப்பதைத் தெளிவாய் உணர்த்தும்.

மக்களின் உணர்வையும் மனத்தில் கொண்டு, மக்களின் கால நிலையையும், அர்ச்சகர் தமிழ்மொழியில் அர்ச்சனை செய்ய வேண்டியது ஈடுபாட்டை பெருக்க வேண்டி, அவசியமாகிறது.

## XIV. ஆகமங்களில் இடைச் செருகல்.

1. ஆகமங்களில் காமிகம், காரணம், அஜிதம், சகஸ்ரம், சுப்ரபேதம், ரவுரவம், மகுடம், மதங்கம், கிரணம், வாதுளம் என்பவற்றின் பகுதிகள் சம்ஸ்கிருதத்தில் அச்சில் வெளி வந்துள்ளன. 28 ஆகமங்களில் புதுச்சேரி பிரஞ்சு ஆராய்ச்சி நிலையத்தில் ( French Ins:itute of Indc(l(gy ) 23 ஆகம ஏட்டுச் சுவடிகள் இதுவரை கிடைத்துள்ளன. உபாகமங்களில் பவுஷ்கரம், பிருகேந்திரம், குமாரதந்திரம் என்பன வும் அச்சாகியுள்ளன.

2. கிடைக்கின்ற ஆகம ஏட்டுச் சுவடிகள் யாவும் நெடுங்காலத்துக்கு முன்னமே தொடங்கி, ஒன்றைப் பார்த்து ஒன்றை எழுதித் தொடர்பாக வந்தவையாகும். இவற்றைப் பெரும்பாலும் சிவாச்சாரியர்களே வைத்திருந்தார்கள். காலப் போக்கில் ஒரு ஏடு சிதிலமாகிப் போகின்ற நிலையில், ஒருவர் அதைப் பார்த்து மற்றொன்றை எழுதி வைத்துக் கொண்டபோது, தான் அவசியம் என்று கருதியவற்றையும் புதிதாக எழுதிச் சேர்த்துக் கொண்டார் என்று நினைக்க இடமுண்டு. ஆகவே நமக்கு இன்று கிடைக்கின்ற ஆகமச் சுவடிகள் மூலச் சுவடிகள் அல்ல. வழிபாடு என்பது மாறிக் கொண்டு வருகின்ற ஒருநெறி. அதைக் கூறுகின்ற ஆகமமும் மாறிக் கொண்டே வந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஓர் உதாரணம் கூறலாம்.

3. 'மாரியம்மன்' என்ற தேவதைத் வழிபாடு சிறுதேவதை வழிபட்டைச் சேர்ந்தது. எந்தச் சிவாயலத்தின் உள்ளும் மாரியம்மன் சிலை வைப்பதில்லை. மாரி ஒரு காவல் தெய்வம். ஊரின் வெளியெல்லையில்தான் இதற்குக் கோயில் உள்ளது. ஆனால் சிவவழிபாட்டைச் சொல்லுகின்ற விரிந்த ஒருநூல் ஆகிய காரணாகமத்தில் இன்றைய அச்சுப் புத்தகத்தில் "மாரிப் பிரதிட்டா விதி" என்ற ஒரு அத்தியாயம் உள்ளது. (காரணாகமம், சொன்னூர் சண்முகசுந்தர முதலியாரால் 1920ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டது). மாரிப் பிரதிட்டை சிவாகமத்தில் சொல்ல வேண்டிய பொருளல்ல. ஆயினும் பிற்காலத்தில் ஒரு சிவாச்சாரியார் தம் கைச்சுவடியில் இதை எழுதி வைத்துக் கொள்ள இதுவும் காரணாகமத்தில் ஒரு பகுதியாக இடம் பெற்றுள்ளது. இது இடைச் செருகல் என்பது தெளிவு. இந்தப் பதிப்பாளர் காரணாகமத்தில் இறுதியில் பத்திரகாளி உற்சவம், நாகப்பிரதிட்டை என்ற இரண்டு அத்தியாயங்கள் (108 சுலோகங்கள்) இந்த

ஆகம ஏட்டுச் சுவடியில், வேறு இடத்திலிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறதைக் கண்டு, அவற்றை ஓர் அநுபந்தமாய் அச்சிடுவதாகச் சொல்லியிருக்கின்றார். ஆனால் இவைகளும் காரணாகமத்தின் பகுதி என்றே மற்றவர்கள் கருதுவார்கள். இதுபோன்ற வேறு சில பகுதிகளும் இருக்கக் கூடும். நமக்கு இன்று வேறுபாடு தெரியாமல் எல்லாம் ஒன்றாகி விட்டன. மாரி என்ற தமிழ்ப் பெயர் இன்று மகாமாரி என்றும், வடமொழியில் சீதலாதேவி என்றும் பெயர் பெற்று விட்டது.

4. காமிகாகமம் ஸ்நான விதிப்படலம் 109ஆவது சுலோகத்தில் புத்தர் (சாக்கியர்), சமணர் (நிர்கந்தர்) ஆகியோரின் நிர்மால்யத்தைப் புசிப்பவர், பிற மதத்தவர் முதலியோரால் தீண்டப்பட்டால், ஸ்நானம் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. இக்கருத்தையே சில ஆகமங்கள் சமண பௌத்த சமயங்களைக் குறை கூறுவதாக எஸ். எஸ். சூரியநாராயண சாஸ்திரியும் தெரிவித்துள்ளார். (சிகண்டரின் சிவாத்து வைதம்). தமிழ்நாட்டில் இம்மதங்களின் தொடர்பு சுமார் கி.மு. 3 —2-ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்டது என்று ஆன்றோர் கருதுகின்றனர். இவர்கள் பற்றிய குறிப்பு ஆகம நூலில் இடம் பெறுகிறது என்றால், அக்கருத்துக்கள் இன்னும் சில நூற்றாண்டுகள் பிற்பட்டே இடம் பெற்றிருக்க வேண்டும். அதாவது சமணர் மதுரையில் ஆதிக்கம் பெற்றிருந்த காலமாகிய கி.பி. 3 —6 ஆம் நூற்றாண்டுகளில் இத்தகைய விதிகள் வகுக்கப்பட்டிருக்கலாம் என்று கருதத் தோன்றுகிறது. ஆனால் காமிகம், காரணம் போன்ற பிரதானமான சில ஆகமங்கள் பல காரணங்களால் கி.மு. 6—5 நூற்றாண்டுகளுக்கு முற்பட்டிருக்க வேண்டும் என்று கொள்ள இடமிருக்கிறது. ஆகவே காமிகாகமத்தில் இப்படி ஒரு விதியை நாம் இப்போது காணும்போது, இது மிகவும் பிற்பட்ட காலத்தில் ஆகமத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்றே முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆதலால் ஆகமங்களில் இடைச்செருகல் நிகழ்ந்துள்ளன என்று எண்ணுவதற்கு இதுவும் மற்றமொரு சான்றாகிறது.

5. வைணவ சமயத்தில் பாஞ்சராத்திர ஆகமம் ஈசுவர சம்மிதையில் 11-வது அத்தியாயத்தில் காணும் ஒரு கருத்து இங்குக் கருதத் தக்கது.

'' ருக் யசுஸ் சாம வேதாம்ஸ் படத்பி: பிருஷ்டத: ஸ்திதை:''

'' காயத் பி: அக்ரே தேவஸ்ய திரமிடீம் சுருதிம் உத்தமாம்''

(சுலோகம் 231, 232)

இதன் பொருளாவது, '' ரிக் யஜுர் சாம வேதங்களைப் பாராயணம் செய்பவர்கள் திருமாலின் பின்புறத்தில் இருந்து கொண்டு சொல்ல வேண்டும்.......உத்தமமான திராவிட வேதமாகிய திவ்வியப் பிரபந்தங்களை அனுசந்திப்பவர்கள் திருமாலுக்கு முன்புறமாக இருந்து அனுசந்திக்க வேண்டும் ''. இதிலிருந்து திவ்வியப் பிரபந்தம் பாடிய ஆழ்வார்களில், திருவய்மொழி பாடிய நம்மாழ்வாரின் காலத்துக்குப் பிறகு (அதாவது 9ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்துக்குப் பிறகு) இந்த ஈசுவர சம்மிதை தொகுக்கப் பெற்றிருக்க வேண்டும். இது ஆகமங்களில் அவ்வப்போது பக்த சமூகத்தின் தேவைக்கு ஏற்ப மாறுதல் செய்யப் பெற்று வந்தன என்பதும், அவற்றில் சொல்லப்பட்ட கருத்துக்கள் எல்லாம் பழமையானவை அல்ல என்பதும், அவற்றில் இடைச் செருகல்கள் நிகழ்ந்திருக்கின்றன என்றும் தெளிவாகின்றன. இதிலிருந்து வைணவ ஆகமங்கள் வேதத்தைவிட திராவிடவேதத்துக்கு அளித்திருக்கின்ற ஏற்றம் நன்கு புலப்படும்.

6. ஒரே ஆகமத்திற்குப் பல இடங்களிலிருந்து கிடைக்கின்ற வெவ்வேறு பிரதிகள் வெவ்வேறான அத்தியாயங்களையும் சுலோகங்களையும் பெற்றிருக்கக் காண்கிறோம். இதனால் மூல ஆகமம் பலர் கைப்பட்டுப் பலவிதமாக மாறி வந்திருக்கின்றது என்றும் உறுதியாகிறது. (பிருகேந்திராகமப் பதிப்புகள்.)

7. ஆகமங்களை உலகுக்கு வெளிப்படுத்திய ரிஷிகளுடைய குலத்தை ஆராய்ந்தால், இடைச் செருகல் இருந்திருக்கும் என்பதற்குச் சான்று கிடைக்கிறது. சிவபெருமான் தமது ஐந்து முகங்களிலிருந்தும், 28 ஆகமங்களை ரிஷிகளுக்கு உபதேசித்தார் என்று காமிகம் முதலான பல ஆகமங்களில் சொல்லப் பெற்றுள்ளது. மாணிக்கவாசகரும் '' மற்று அவை தம்மை மகேந்திரத்திலிருந்து உற்ற ஐம்முகங்களால் பணித்தருளியும் '' என்று கூறுமிடத்து, இக் கருத்தை ஏற்றே பாடுகின்றார். இவ்வைந்து முகங்களாவன : சத்தியோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் ஆகியவை. இவற்றுள் முதல் நான்கு முகங்கள் ஒவ்வொன்றும் ஐந்து ஆகமங்கள் வீதம் 20 ஆகமங்களையும், ஈசான முகம் 8 ஆகமங்களையும், ஆக 28 ஆகமங்களை உபதேசித்ததாக ஆகம வரலாறு. இந்த முகங்களில் உபதேசம் பெற்ற ரிஷிகள் முறையே கௌசிகர், காசியபர், பாரத்துவாஜர், கௌதமர், அகஸ்தியர் என்போர். இதன் விளக்கத்தைக் காமிகம், காரணம் முதலியவற்றின் தந்திராவதாரப் படலத்தில் காணலாம். இவர்கள் பாரத்துவாஜர் பிராமணர். ஏனை நால்வரும் பிராமணர் அல்லர். காசியபர் (கொல்லர் மரபு), கௌதமர் (நாவிதர் மரபு), அகத்தியர் (வேடர் மரபு), இவ்வாறு பிராமணர் அல்லாத, அல்லது சிவப்பிராமணர் அல்லாத வேறு குலங்களில் பிறந்த இந்த ரிஷிகளே உபதேசம் பெற்று உலகத்தில் வெளிப்படுத்தினார்களே அன்றி, சிவப்பிராமணர்கள் அல்லர். இவ்வாறு சொல்லும் பகுதிகள் பிற்காலத்தில் சிவாச்சாரியர்களால் சேர்த்துக் கொள்ளப்பட்டன என்று நினைக்க இடமிருக்கிறது. ஆகமங்களில் இடைச் செருகல் நிகழ்ந்திருக்கிறது என்று கருதுவதற்கு இதுவும் ஓர் ஆதாரமாகும்.

## XV. தமிழர் பண்பாட்டில் பிறப்பும் சாதியும்.

1. கோயிலில் சமூகத்துக்கான வழிபாட்டை நடத்தி வைப்பவர் சிவாச்சாரியர் அல்லது பட்டாச்சாரியர் மட்டுமே என்று அந்தந்த ஆகமங்கள் விதிக்கின்றன. ஆலயத்துக்கு வெளியிலும் கூட அந்தந்தச் சமயப் பிரிவின் மக்களைச் சமயத் துறையில் தத்துவ ஞானம் புகட்டி, ஆன்மிக நெறியில் செலுத்தும் பணியை மேற்கொண்ட ஆச்சாரியர்கள், சைவத்திலும் வைணவத்திலும் காலந்தோறும் இருந்திருக்கிறார்கள். இவர்களால் பக்தியூட்டப் பெற்ற அடியவர்களும் பாகவதர்களும் பலர். இவர்களைப் பற்றிய இலக்கணம், நெறிகள் யாவை என்பதை வரலாற்று ஒழுங்காக நாம் அறிய முயன்றால் நம் மனத்தில் தெளிவு பிறக்க உதவியாய் இருக்கும்.

2. புறநானூறு.—உயர்வு தாழ்வு பிறப்பினால் வருவதில்லை. கீழ்க்குலத்தில் பிறந்த ஒருவன், கல்வியினால் மேம்பட்டு இருந்தால், மேற்குலத்தில் பிறந்த ஒருவனும் இவன் கீழ்க்குலத்தான் என்று பாராது கல்விப் பொருட்டால் அவனிடத்தே சென்று வழிபடுவான் என்று ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்ற பாண்டிய மன்னன் கூறுவது இங்குக் கருதத் தக்கது.

> வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
> கீழ்ப்பா லொருவன் கற்பின்
> மேற்பா லொருவனும் அவன்கட் படுமே (புறநானூறு 183)

3. திருக்குறள்.—தமிழ்வேதம் என்று எல்லாரும் கருதுகின்ற திருக்குறள் தனி மனிதனுடைய தகுதியையே பேசுகிறது. அது எல்லா மக்களும் பிறவியினால் சமம். ஆனால் அவர்களுக்குள் உயர்வு தாழ்வு விளைவது அவரவருடைய தொழில் வேற்றுமையினால். ஆகவே சிறப்பு, சாதியினால் அல்ல. உயர்சாதி, பிறப்பினால் அன்று என்பது தெளிவு.

> பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய் தொழில் வேற்றுமையான் (குறள் 972)

இந்நூலைச் செய்த திருவள்ளுவர், தாழ்ந்த குலத்தினர் என்பது ஒரு வரலாறு. தாழ்ந்த குலத்தில் பிறந்த இவர், தாம் கூறிய கருத்துகளின் சிறப்பால் உலக முழுமையும் உச்சிமேல் வைத்துக் கொண்டாடும் சிறப்பைப் பெற்றிருக்கிறார்.

4. நாலடியார்.—மற்றோர் உதாரணமும் இங்கு எடுத்துக்காட்டாகக் கூறத் தக்கது. பண்டைக் காலத்தில் ஓடம் விட்டவர்கள் கீழ்க் குலத்தார். அது காரணமாகத் தோணி வேண்டாம் என்று யாரும் சொன்னதில்லை. அதுபோல கீழ் வகுப்பினர் கற்று வல்லவராயிருந்தால், அவருடைய கல்வியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நாலடியார் கூறுகிறது.

> தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்
> காணிற் கடைப்பட்டான் என்று இகழார்—காணா
> அவன் துணையா ஆறுபோய் அற்றே நூல்கற்ற
> மகன் துணையா நல்லகொளல் (நாலடியார் 136)

5. மணிமேகலை.—அக்காலத்தில் சாதிக்குப் பெருமை கொடுக்கப்பட்டிருந்த போதும் உண்மையில் சாதியால் பெருமையில்லை, அவரவர் செய்கின்ற நற்கருமங்களே பெருமை தருவன என்ற கருத்து தமிழ்நாட்டில் வழங்கிற்று என்பதை மணிமேகலை என்ற பெருங்காப்பியத்தின் ஆசிரியரான சாத்தனார் 'ஆபுத்திரன் வரலாறு' மூலம் நன்கு உணர்த்துகிறார். அவ்வரலாறு பின்வருமாறு: சாலி என்ற அந்தணப் பெண் தன் கூடாவொழுக்கத்தால ஒரு பிள்ளையைப் பெற்று, அதை ஒரு தோட்டத்தில் விட்டுப் போய்விட்டாள். அந்தக் குழந்தைக்கு ஒரு பசு பால் சொரிந்து காப்பாற்றிற்று. பின்னர் ஓர் அந்தணன் அக்குழந்தையை எடுத்து வளர்த்தான். ஆவினால் காக்கப் பெற்றமையால் அச்சிறுவன் ஆபுத்திரன் என்ற பெயர் பெற்றான். ஒரு சமயம் வேள்விக்காக அந்தணர் கொண்டு வந்து கட்டியிருந்த பசுவை, கொலை செய்வது பாவம் என்று சொல்லி, அவன் அவிழ்த்து விட்டுத் துரத்தியபோது, அவ்வந்தணர் கோபித்து அவனைப் புடைத்தனர். அப்போது அவன் சில அரிய செய்திகளை உணர்த்துகிறான். சிறப்புப் பெற்ற ரிஷிகள் என்று சொல்பவர்களெல்லாம் பிராணி வயிற்றில் பிறந்தவர்கள். அசலன் என்பவன் பசுவின் மகன். சிருங்கி மான் மகன். விரிஞ்சி புலி மகன், கேசகம்பளன் நரி மகன். இவர்களெல்லாம் சிறந்த முனிவர்கள் என்று கொண்டாடப் பெறுகிறார்கள். "ஆதலால் பிறப்பினால் தாழ்வு சொல்லலாகாது என்று அவன் போதித்தான். (மணிமேகலை 13, ஆபுத்திரன் கதை அறிவித்த காதை.)

6. திருமூலர்.—" தமிழில் ஆகமத்தைச் செய்ய வந்தேன் "—" சிந்தை செய்து ஆகமத்தைச் செப்பலுற்றேனே " என்று பாடுகின்ற திருமூலர், " ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் " என்ற ஒரு வரியினால், அனைத்துயிர்களும் கடவுட் படைப்பாகிய ஒரே குலம் என்ற தமிழர் மதத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்.

7. சைவநாயன்மார்.—(அ) இனிச் சைவசமயத்தைப் பார்த்தோமானால், அங்கு நாயன்மார் வரலாற்றில் எண்ணற்ற உண்மைகளைக் காண்கிறோம். இவர்களுள் தீண்டாத வகுப்பைச் சேர்ந்தவர்கள் இருவர் (நந்தனார், திருநீலகண்டயாழ்ப்பாணர்).

அறுபத்துமூன்று நாயன்மார்கள் வரிசையில் சேர்ந்தவர்களாக, கோயில்கள்தோறும் சிலை வைத்து வணங்கப் பெறுகிறார்கள். இவ்விருவர் சிலைக்கும் கூடச் சிவாச்சாரியர்களே பூசை செய்து திருவிழாச் செய்வதும், இங்கு நினைவு கூறத்தக்கது.

(ஆ) <u>திருநீலகண்டயாழ்ப்பாணர்.</u>—அடுத்து, மேற்கூறிய இருவருள் திருநீலகண்ட யாழ்ப்பாணர் வரலாற்றில் ஒரு நுட்பம் இங்குச் சிந்தனைக்குரியது. திருஞானசம்பந்தர் சீர்காழியில் பிறந்த அந்தணர். அவருடைய அடியார் கூட்டத்தில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்பவர், தம் மனைவியோடுகூட யாழ் வாசித்துக் கொண்டு உடன் செல்கிறார். இங்கு, ந்தப் பாணர் மற்ற மேல்வகுப்பினரோடு சம உரிமை பெற்று அவர்களோடு உண்டு உறைகிறார். அது மட்டுமல்ல, இந்த அடியார் கூட்டத்தில் இவருடைய மனைவியாகிய மதங்கசூளாமணியார் ஒருவர் மட் மே பெ பாலர். இதுவும் பாணருக்காக சம்பந்தர் காட்டிய பெருஞ்சலுகையாகும். எ ப குறிப்பிடத் தக்கது.

(இ). <u>திருநீலநக்கர்.</u>—அன்றியும் திருஞானசம்பந்தர் தம்முடைய யாத்திரையில், சோழ நாட்டில் திருப்புகலூரை அடுத்த சாத்தமங்கையில் வழிபடச் சென்றார். அங்கு இருந்த அடியவராகிய திருநீலநக்கர், என்னும் சிவ வேதியர், அவரை வரவேற்று இரவு விருந்தளித்தார். இடம் அக்கிரகாரத்தின் நடுவு. அப்போது குழந்தையாகிய திருஞான சம்பந்தர், அடியவர் கூட்டத்திலிருந்த திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கு வசதி செய்ய வேண்டும் என்ற கவலையினால் நீலநக்கரை விளித்து, ''பாணர் இன்று தங்க, தக்க இடம் கொடுத்து அருளுக'' என்று சொன்னார் இது கேட்ட நீலநக்கர் மகிழ்ச்சியோடு தம்முடைய மனையின் நடுவில் உள்ள வேதிகையின் அருகே பாணருக்கும், அவர் மனைவியாருக்கும் இரவு ப க்க இடம் கொடுத்தார்.

நின்ற அன்பரை நீலகண்டப் பெரும்பாணர்க்கு
இன்று தங்க ஓர் இடங் கொடுத் தருளிவீர் என்ன
நன்றுபின்புற்று நடுமனை வேதியின் பாங்கர்ச்
சென்று மற்றவர்க்கு இடங்கொடுத்தனர் திருமறையோர்

என்று இந்த நிகழ்ச்சியை அழகாகச் சொல்லிய சேக்கிழார், அடுத்த பாடலில் அந்த வேதிகையில் எப்போதும் குன்றாது ஒளி விட்டுக் கொண்டிருக்கும் அக்கினிதேவன், இந்நிகழ்ச்சியைப் போற்றி வலஞ்சுழித்து முன்னையிலும் ஒருபடி மேலாக ஒளிர்ந்தான் என்று சொல்வது அறியத் தக்கது.

ஆங்கு வேதியில் அறாதசெந்தி வலஞ்சுழிவுற்று
ஓங்கி முன்னையில் ஒருபடித் தன்றியே ஒளிர

(ஈ) <u>சம்பந்தர் தேவாரம்.</u>—இறைவனை நேரே வழிபடுவதற்குப் பண்டைத் தமிழ்நாட்டில், சாதி ஒரு தடையாக இருந்ததில்லை என்று அறிகிறோம். ஆடவராயினும் பெண்டிராயினும், அந்தணராகவோ அறவோராகவோ வேந்தராகவோ தாழ்ந்த குலத்தவராகவோ, எவராக இருந்தாலும், அவர்களிடத்தில் அன்பும் ஒழுக்கமும் இருக்குமாயின், அவர்கள் நேரே இறைவனை வழிபடலாம் என்பது, தேவார ஆசிரியர்க் காலத்தில் இருந்த ஒரு வழிபாட்டு முறை. அக்காலத்தில் சாமானிய மக்கள் கூட கையில் குடத்தில் நீர் சுமந்து கொண்டு, மலர்களை ஏந்தி வந்து இறைவனை நீராட்டி வழிபட்டார்கள் என்று திருஞானசம்பந்தர் பாடல்களால் அறிகிறோம் :

தடங்கொண்ட தொர்தா மரைப் பொன்முடி தன்மேல்
குடங்கொண் டடியார் குளிர்நீர்சுமந் தாட்டப்
படங்கொண்ட தொர்பாம் பரையார்த்த பரமன்
இடங்கொண்டிருந்தான்தன் இடைமரு திதோ

நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாடோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையுஞ் செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதிச் சரத்தானே

இவை போன்ற எடுத்துக் காட்டுகள் எத்தனையோ காணப்படுகின்றன.

(உ) <u>அப்பர் தேவாரம்.</u>—இனி சம்பந்தரோடு உடன் காலத்தில் வாழ்ந்த அப்பர் சுவாமிகள் தமது திருத்தாண்டகம் ஒன்றில், பக்தியிருந்தால் எத்தகைய இழிகுலமும், தொழுநோயும் தமக்குப் பொருளல்ல என்று பாடுவது அறிதற்பாலது:

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியோடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கே காந்தர் அல்லா ராகில் ;
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார்சடைக் கரந்தார்க்கு அன்ப ராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே 6.95.10

எவரும் சிவத்தை சிந்தையில் இருத்தாமல், தோத்திரப் பெருமையையும், குலப்
பெருமையையும் கொண்டாடுவது பெருந்தவறு என்பதை, அப்பர் சுவாமிகள் திருக்
குறுந் தொகையில் பல பாடல்களில் தெளிவாகச் சொல்லுகிறார். பின்வரும் பாடல்
காண்க :

சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்
பாத்திரம் சிவம் என்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளும் மாற்பேரறே 5.39.3
கோலும் புல்லும் ஒருகையிற் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயரமுற் றென்பயன்
நீல மாமயி லாடு துறையனே
நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந் தோர்கட்கே 5.59.8

சம்பந்தர், அப்பர் ஆகிய இருவரும் சைவசமய ஆச்சாரியர்கள் என்பதை நினைவில்
கொள்ள வேண்டும்.

(ஊ) <u>சோமாசிமாறர் வரலாற்றுக்கதை.</u>—அறுபத்து மூன்று நாயன்மார்களில்
ஒருவரான சோமாசி மாறநாயனார் வரலாற்றில் ஒரு நயமான செய்தியுள்ளது, இவர்
சோமயாகம் செய்த சிறந்த அந்தணர். இவருடைய ஊர் திருவாரூரிலிருந்து சுமார்
பத்து மைல் வடக்கேயுள்ள அம்பர் என்பது. இவர் ஒரு சமயம் தாம் செய்கின்ற யாகத்
தில் திருவாரூரில் கோயில் கொண்டுள்ள தியாகராசப் பெருமான் நேரில் வந்து தம்
யாகத்தில் அவியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆவல்கொண்டு, அப்போது
திருவாரூரில் பரவையார் மனையில் தங்கியிருந்த சுந்தரமூர்த்திநாயனாரை அணுகி,
அவருடைய அன்பைப் பெற்று, அவர்மூலம் தம்முடைய விருப்பத்தைத் தியாகராச
சுவாமிக்குத் தெரிவிக்கச் செய்தார் என்பது தலவரலாற்றுக் கதை. அவரும்
அவ்வாறே தெரிவித்துப் பெருமானுடைய கருத்தைத் தெரிந்து வந்து, “அய்யா தங்க
ளுடைய விருப்பத்திற்குப் பெருமான் இசைகிறார், எந்த வடிவத்திலாயினும் அவர்
குறித்த நேரத்தில் வருவார், அவரைத் தெரிந்து வணங்கி அவிஅளிப்பது உம்முடைய
பொறுப்பு'' என்று மாறருக்குச் சொன்னார். மிக்க மகிழ்ச்சியோடு மாறர், அப்பர்
சென்று யாகத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தார். பெருமான் வருவார்
என்று எல்லாருக்கும் சொல்லிவைத்தார். குறித்த நேரம் வந்தது. தூரத்தில்
புலையர் அடிக்கும் பறையின் சத்தமும், நாய்களின் குரைப்பும் கேட்டன. ஒரு புலை
யரும் புலைச்சியும், நாய்கள் சூழ நெருங்கி வந்துவிட்டனர். யாகத்தில் பணிபுரிந்த பிர
மணர்கள், ''இங்கு வராதே விலகிப்போ'' என்று பலமுறை கத்தியும், புலையர்அதைக்
காதில் வாங்காமல் நெருங்கிவந்துவிட்டார். 'புலைத்தீட்டு' என்று அஞ்சிப்பிராமணர்கள்
யாகசாலையைவிட்டு ஓடிவிட்டார்கள். ஆனால், மாறரோ இந்தப் புலையரே தியாக
ராச சுவாமி என மனத்தில் உறுதிகொண்டு, தம் மனைவியோடு அவரை வணங்கி,
இருக்கை கொடுத்து வந்தவரை அமரச் செய்து, வேள்வியில் உரிய அவியை வந்தவர்
கையில் அளித்தார். புலையராக வந்த பெருமானும் தம் தேவியுடன் மகிழ்ச்சியோடு
அந்த அவியை வாங்கி உண்டு மறைந்துவிட்டார். பெருமானுடைய சொல்லை நம்பி,
அந்த நேரத்தில் வந்த புலையனையே இறைவன் வந்ததாகக் கொண்டு வழிபட்ட
பெருமை மாறறுக்குரியது. இன்னும் அந்த அம்பர் என்ற ஊரில் திருமாகாளம்
என்ற பகுதியில் இந்த வரலாற்றைச் சிறப்பிக்கின்றயாகம் பெரும் மக்கள் திரளைக்
கூட்டுவிக்கின்ற பெருவிழாவாகக் கோயிலில் நடைபெறுகிறது.

(எ) <u>சேந்தனார் வரலாறு.</u>—வைணவத்தில் பெரியாழ்வார் திருமாலுக்குப் பல்
லாண்டு பாடியது போல, சிவபெருமானுக்குப்பல்லாண்டு பாடிய ஒரு பெரும் சிறப்பு
டையவர்; சைவ சமயத்தில் தோன்றிய சேந்தனார் என்பவர். இப்பல்லாண்டு, ஒன்பதாம்
திருமுறையாகிய திருவிசைப்பாவில் இறுதிப் பதிகமாக இன்று அச்சிடப்பட்டு வருகிறது.
அன்றியும் சில சந்நிதிகளில் ஓதுவார்கள் 'பஞ்சபுராணம் ஓதுதல்' என்ற மரபில் திருப்
பல்லாண்டில் ஒரு பாடல் சொல்வது மரபு. 8,000-க்கு மேற்பட்ட தேவாரப் பாடல்
களில் ஒரு பாடலே பாடும்போது, திருப்பல்லாண்டு 13 பாடலில் ஒரு பாடல் பாட
வேண்டும் என்ற நிலை இதன் பெருமையை நன்குணர்த்தும். சேந்தனார் வரலாற்றில்
பல செய்திகள் இன்று நாம் ஆராயும் கருத்துக்குப் பொறுத்தம் உடையன.

திருவிசைப்பாப் பாக்களையெல்லாம் தொகுத்த நம்பியாண்டார் நம்பி, சேந்த
னாருடைய அருந்தொண்டைக் குறிப்பிடும்போது,

ஆந்தன் பழைய அன்பாகிய அவிழை பண்டைப்பறைச்
சேந்தன் கொடுக்க அதுவும் திருவமிர் தாகியதே.

என்ற தம்முடைய பதினோராந் திருமுறைப் பிரபந்தமாகிய கோயில்திருப்பன்னியர்
விருத்தத்தில் குறிப்பிடுகிறார். இக்குறிப்பினால் பல்லாண்டு பாடிய சேந்தனார் 'பறை
யர்' வகுப்பைச் சேர்ந்தவர் என்று திட்டமாகத் தெரிகிறது.

இவர் வாழ்க்கை இங்கு அறிதற்குரியது. இவர் சிதம்பரத்தில் விறகு வெட்டியாக
இருந்து, வெட்டிய விறகை விற்று அதுகொண்டு அரிசி வாங்கிச் சமைத்து உண்டு
வாழ்ந்தார். தாம் பகலுணவு உண்ணும் முன், சிவனடியார் ஒருவருக்கு அன்னமிட்ட
பின்பே உண்பது இவருடைய வழக்கம். ஒரு நாள் கனமழை காரணமாக விறகு வெட்ட
வும், புதிய அரிசி வாங்கவும் முடியாமற் போயிற்று. அப்போது, முதல்நாள் இருந்து
எஞ்சிய பழஞ்சோற்றில் ஒரு பகுதியை, வழக்கம்போல் சிவனடியார் ஒருவரை உண்ணு
மாறு அழைத்துத் தாமும் உண்ணலாம் என்று எண்ணி, இவர் அலைந்து சிவனடியார்
ஒருவரைக் கண்டார். அவரை அழைத்து வந்து பழஞ்சோற்றைப் படைத்தார். அவரும்

அதை விரும்பி உண்டு, ''அன்பனே, இந்த மழையில் இந்தச் சோறு நீ அளித்தது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. அடுத்த வேளை எனக்குச் சோறுஎங்கே கிடைக்கப் போகிறது? உன்னிடம் மிச்சமுள்ளதையும் நான் எடுத்துக் கொண்டு செல்கிறேன்'' என்று சொல்லி, சேந்தனாரின் மண்பானையில் இருந்த சோற்றைத் தம் கந்தையில் கட்டி எடுத்துக்கொண்டு போய்விட்டார்.

வந்தவர் நடராசப் பெருமான். சேந்தனாருடைய பக்திப் சிறப்பை உலகத்தாருக்குக் காட்டவே அவர் இத் திருவிளையாடல் புரிந்தார். ஆனால் இது சேந்தனாருக்கோ வேறு எவருக்குமோ தெரியாது. பிறருக்கு இதை உணர்த்தவேண்டி, பெருமான் மற்றும் சில திருவிளையாடல்களை நிகழ்த்தினார்.

அக்காலம் தில்லையில் இருந்த மன்னர் சிவபக்தி மிக்கவர். தம்முடைய தினசரி ஆன்மார்ந்த பூசையின் இறுதியில் அப்பூசையை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக நடராசப் பெருமான் தம்முடைய பாதச் சிலம்பை ஒலித்துக் காட்டுவார். அதை நாள் தோறும் அரசர் கேட்டு வந்தார். ஆனால் குறிப்பிட்ட தினத்தில் அரசர் அச் சிலம் பொலியைக் கேட்கவில்லை. ''எனது பூசையில் ஏதோ தவறு நிகழ்திருக்கிறது போலும், அதனால்தான் பெருமான் சிலம்பை ஒலிக்கவில்லை'' என்று எண்ணி, அரசர் பெரிதும் கவலையுற்று உணவு கொள்ளாது படுத்துறங்கிவிட்டார்.

இரவு ஒரு கனவு கண்டார். கனவில் நடராசப் பெருமான் தோன்றி, ''அன்பனே, உன்னுடைய பூசையில் குறைவு ஒன்றுமில்லை. சேந்தன் இன்று நமக்கு களியமுது தந்தான்; அதை உண்பதற்காக அவன் இல்லம் சென்றிருந்தோம். அதனால்தான் உனக்குச் சிலம்பொலி காட்ட இயலவில்லை'' என்று கூறினார். கேட்ட அரசர் விழி தெழுந்து மிக்க ஆச்சரியம் அடைந்தவராய், இப்படியும் ஒரு பக்தர் உண்டா? என்று அதிசயித்து, பொழுது புலந்ததும் மந்திரிகளை அழைத்தார்.

இதற்கிடையில் காலையில் வழக்கம்போல் தில்லையில் பூசகர் நடராசப் பெருமானுடைய கோயில் திருக்காப்பு நீக்கித் திறந்து பார்த்தபொழுது, அங்கு தரைமுழுவதும் நடராசப்பெருமான் திருமேனியிலும்கூட, பழம்சோறு (களி) சிதறிக் கிடக்கக் கண்டார்கள் ஏதோ அபசாரம் நிகழ்ந்திருக்கிறது என்று அவர்கள் பதறிப்போய், விரைந்து சென்று, அரசரிடம் இதைத் தெரிவித்தார்கள். அரசர் பின்னும் அதிசயமும் மகிழ்ச்சியும் ஒருங்கே அடைந்து, இரவில் தாம் கண்ட கனவை எல்லோருக்கும் சொல்லி பெருமான் கூறியபடி சேந்தன் இட்ட களியே இவ்வாறு சிதறிக்கிடந்தது என்று அனைவருக்கும் உணர்த்தி, அந்தச் சேந்தனாரை யார் என்று கண்டுபிடிக்குமாறு உத்தரவிட்டார். மந்திரிகள் அனுப்பிய ஏவலர்கள் மேல்சாதி மக்கள் வசிக்கும் இடங்களிலெல்லாம் தேடிப் பார்த்து, கண்டுபிடிக்க முடியவில்லை. என்று தெரிவித்தார்கள் சேந்தனார் சேரியில் வாழ்ந்தார் என்பது அவர்களுக்குத் தெரியாது. இதை அவர்களுக்கு அறிவிப்பதற்குப் பெருமான் ஒரு வழி செய்தார்.

அன்று தேர்த் திருநாள். பெருமானைத் தேரில் எழுந்தருளச் செய்து எல்லோருமாக வடம் பிடித்தார்கள். தேர் நிலையை விட்டு அசையவே யில்லை. அரசரும் வந்தும் பார்த்துத் தம்முடைய யானைப் படையைக் கொண்டு இழுக்கச் செய்தும்கூட, தேர் நகரவில்லை. அப்போது வானில் ஒரு குரல், ''சேந்தா, ஒரு பல்லாண்டு பாடு'' என்று கேட்டது. அச் சமயம் சேந்தரும் எல்லாரோடும் சேர்ந்து தேர்வடத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தார். ''அற்பனாகிய என்னையும் இவ்வாறு ஆட்கொள்ளும் அற்புதத்தை என்னென்று சொல்வேன்'' என்று ஆனந்தக் கண்ணீர் பொழியப் பாட ஆரம்பித்தார். அவர் நாவில் நாமகள் குடிகொண்டாள். அவர் நாவிலிருந்து

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
 வஞ்சகர் போய் அகல
பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
 புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
 அடியோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப்
 பல்லாண்டு கூறுதுமே

என்ற பல்லாண்டுப் பாடல் உதயமாயிற்று. இவ்வாறு பதின்மூன்று பாடல்கள் பாடினார்.

இதுவரை சேந்தர் யார் என்று அறியாமலிருந்த அனைவரும், இப்பொழுது சேந்தர் யார் என்பதை அறிந்து கொண்டார்கள். அரசர் ஓடோடிவந்து அவர் திருவடியில் விழுந்து வணங்கி, பலவாறாக அவரைப் போற்றிப் பெருமை செய்தார். அன்று முதல் தாழ்ந்த குலத்தினராகிய அவர் பெருமானுக்கு அளித்த களி உணவு நாடெங்கும்-ஊரெங்கும் வாழும் தமிழ் மக்கள் மார்கழித்திருவாதிரை தோறும் தங்கள் இல்லங்களிலும் கோயில்களிலும் நடராசப்பெருமானுக்கு நிவேதிக்கின்ற திருவாதிரைக்களி ஆயிற்று. இவர் பாடிய திருப்பல்லாண்டுப் பாடல் கோயில்கள் தோறும் ஓதுவார்கள்

இறைவன் சந்நிதியில் ஓதுகின்ற திருமுறைப் பாடல்களின் இன் யமையாத ஒரு பகுதி யாகவும் ஆயிற்று. இவ்வாறு சேந்தனாருக்குச் சைவத்தில் ஏற்பட்டிருக்கின்ற ஏற்றம், வைணவத்தில் திருப்பாணாழ்வாருக்கு ஏற்பட்டிருக்கின்ற ஏற்றத்தை ஒத்தது.

8. **வைணவ வரலாறுகள்.**—(அ) **திருப்பாணாழ்வார்.**—வைணவ சமயத்தில் ஆழ்வார் பன்னிருவரில் திருப்பாணாழ்வார் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். இச் சமயத்தில் ஆழ்வார்களும், ஆச்சாரியர்களும் பகவானிலும் ஏற்றம் பெற்றவர் களாக மதிக்கப்பெறுகின்றனர். திருப்பாணாழ்வார் வரலாறு நன்கறிந்ததொன்று. பாணர் குலத்தவராகிய அவர் திருவரங்கநாதனுக்கு இசை வாசிக்கும் தொண்டையே செய்துவந்தார். பாணராகிய தாம் திருவரங்க எல்லையை மிதிக்கத் தம் சாதி காரண மாகத் தகுதியற்றவர் என்று கருதி, கோயிலுக்கு வெளியே மட்டுமல்லாமல், நகருக்கு வெளியிலிருந்தே தம்முடைய யாழிசையைப் பெருமானுக்கு அர்ப்பணித்து வந்தார். அவருடைய பக்திச் சிறப்பை உயர்குல மக்களுக்கு உணர்த்த எண்ணிய அரங்கநாதப் பெருமான், பெரிய பெருமாளுடைய திருமஞ்சனார்த்தமாக சகல வைபவங்களுடன், திருக்காவேரியிலிருந்து தீர்த்தம் கொண்டு வருகிறவராகிய லோக சாரங்க முனிவர் என்கிற ஜீயருடைய கனவில் தோன்றி, ''மறுநாள் சென்று பாணரைத் தம் தோளில் கோவிலுக்குச் சுமந்து வருமாறு'' கட்டளையிட்டார். (குரு பரம்பராப் பிரபாவம் பன்னிராயிரப்படி, 1928 ஆம் ஆண்டு பதிப்பு, பக்கம் 105). அப்படியே அவரும் சென்று அவரைச் சுமந்து வந்து கருவறையை அணுகியவுடன், திருப்பாணாழ்வார் அரங்கநாதப் பெருமானுடைய திருவடிகளில் ஐக்கியமாகிவிட்டார். என்பது வைணவ குருபரம்பரை கூறும் வரலாறு. அச்சமயம் பாணர்பாடிய ''அமலனாதிப்பிரான்'' என்ற பாசுரம் ஸ்ரீவைணவர்கள் தினமும் சேவிக்க வேண்டிய ''நித்தியானுச்சந்தானம்'' என்ற பாசுரத் தொகுப்பில் சேர்ந்துள்ளது.

(ஆ) **நம்மாழ்வாரின் திருவாய் மொழி.**—வைணவர்களுக்குச் சிறப்பு வேதமானது திருவாய்மொழி. அதைப் பாடியவர் நம்மாழ்வார். அவருடைய பாசுரங்களில் ஒன்று, ஒருவர் சாதியில் எவ்வளவு தாழ்ந்தவராய் இருந்தாலும் கூட, அவர் உள்ளத்தில் திருமால் பக்தி நிலவுமானால் அவரே வணங்கத்தக்கார் என்று சிறப்பான பொருளைக் கொண்டது.

> குலந்தாங்கு சாதிகள் நாலினும் கீழிழிந்து, எத்தனை
> நலந்தானிலாத சண்டாள சண்டாளர்களாகிலும்,
> வலந்தாங்கு சக்கரத் தண்ணில் மணிவண்ணற் காளென்றுன்
> கலந்தார், அடியார் தம்மடியா ரெம்மடிகளே

(இ) **பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் பாடல்.**—இவர் பாடிய அஷ்டப்பிரபந்தம் வைணவ உலகத்திலும் தமிழ் இலக்கிய மரபிலும் சிறப்பு வாய்ந்த இலக்கியம். அதனுள் திருவரங்கக் கலம்பகப் பாடல் ஒன்றில் இவர் நம்மாழ்வார் கருத்தையே பாடுவது காணத்தக்கது.

> பாதியாய் அழுகிய கால்கையரேனும்
> பழிதொழிலும் இழிகுலமும் படைத்தோ ரேனும்
> ஆதியாய் அரவணையாய் என்பா ராகில்
> அவரன்றோ நாம்வணங்கும் அடிகளாவார்

(ஈ) **இராமாநுசர் வரலாறு.**—இன்றைய வைணவத்துக்கு விசிட்டாத்துவைதம் என்ற சிறப்பான ஓர் அத்வைத தத்துவநெறியை வகுத்தளித்த ஆச்சாரியரான இராம நுசருடைய வாழ்க்கையிலும், அவருடைய சீடர்களின் வாழ்க்கையிலும் மிகப்பல செய்திகள், பக்தி ஞான மார்க்கங்களில் சாதிக்கு இடமில்லை, ஈன சாதியில் பிறந்தவர் களுக்கும் பக்தி ஞானம் காரணமாக எல்லா உரிமைகளும் தாமே வாய்க்கின்றன என்ற செய்தியை அறிகிறோம். துலுக்கர் தென்னாட்டில் புகுந்த காலத்தில் திருநாராயண புரம் உற்சவமூர்த்தியான இராமப்பிரியரை அவர்கள் பிற கொள்ளைப் பொருள் களோடு சேர்ந்துக் கவர்ந்து கொண்டுபோய், டில்லியிலிருந்து பாதுஷாவிடம் சேர்ப் பித்தார்கள். அந்த மூர்த்தி பாதுஷாவின் மகளிடம் ஒரு விளையாட்டுப் பொருளாக இருந்து வந்தது. மிகுந்த சிரமப்பட்டு இராமாநுசர் டில்லிக்குச் சென்று, தம்முடைய சாமார்த்தியத்தால் இராமப்பிரியரைப் பெற்றார். பெற்று, ''நம் செல்வப் பிள்ளையோ'' என்று தழுவிக் கொண்டார். அது பற்றி அந்த மூர்த்திக்குச் செல்வ நம்பி என்ற ஒரு பெயரும் வழங்கிற்று. மூர்த்தியைப் பெற்ற இராமாநுசர், பின்னால் ஏதேனும் இடையூறு விளையுமோ என்று அஞ்சி, இரவோடு இரவாக விரைந்து தென் நாடு நோக்கி வரும்போது இந்த மூர்த்தியைப் பிரிந்த பாதுஷாவின் மகள், அதை மீண்டும் பெற விரும்பியபடியால், பாதுஷா சில படைகளை அவளுடன் அனுப்பி, மூர்த்தியைக் கைப்பற்றி வருமாறு உத்திரவிட்டார். உத்திரவிட்ட படைகள் நெருங்கி வந்துவிடவே இராமாநுசர் அப்போது திருநாராயணபுரம் என்ற மேல்கோட்டையை அணுகவும், படைகளிடமிருந்து தப்ப வேண்டி, அருகிலிருந்த ஒரு சேரிக்குள் அடைக்கலம் புகுந்தார். சேரி மக்கள் இவருக்கும் மூர்த்திக்கும் பாதுகாப்பு அளித்து, படைகளை விரட்டி விட்டார்கள். அவர்கள் செய்த நன்றிக்குக் கைம்மாறாக இராமாநுசர் அன்று முதல் திருநாராயணபுரத்தில் சேரி மக்கள் எவ்விதத் தடையுமில்லாமல் கோயி

லுக்குள் தேர்த் திருவிழாவன்றும், வேறு சில சிறப்பு நாள்களிலும் சென்று, தங்கள் விருப்பம்போல் வழிபாடுகளை நடத்தலாம் என்றதோர் சிறப்பான உரிமையினை அளித்தார். ஆபத்தில் கிடைத்த உதவிக்காக இவர் இவ்வாறு செய்தது. வைணவ உலகம் நன்கறிந்த செய்தி. இதனுள் நம் சிந்தையில் கொள்ளவேண்டியது, ஆபத்துக் காலத்தில் இராமாநுசர் ஆகமங்களையும், நடைமுறை விதிகளையும் ஒதுக்கி வைத்து முன் உரிமை இல்லாத மக்களுக்கு அப்போது எல்லா உரிமைகளையும் கொடுத்தார் என்பதாகும்.

டில்லி பாதுஷாவின் மகள், தான் இராமப் பிரியரை வைத்து விளையாடிய காலத்தில் தம் நாட்டு வழக்கப்படி அவருக்கு ரொட்டி முதலியன உணவாக ஊட்டினாளாம். படைகளோடு மூர்த்தியைப் பெற வேண்டும் என்று வந்த அப்பெண், அம்மூர்த்தியினிடம் கொண்டிருந்த அன்பின் மிகுதியால், மூர்த்தி கிடைக்கவில்லை என்று அறிந்து உயிர் விட்டாள். இச்செயலை மிகவும் போற்றி, இராமாநுசர் திருவரங்கம் கோயிலில் அப்பெண்ணுக்கு ஒரு பக்தைக்குரிய சிலை பிரதிட்டை செய்து, அவள் செய்தவாறு பெருமாளுக்கு ஒரு நாள் ரொட்டி நிவேதனம் செய்யுமாறு கட்டளையிட்டிருக்கிறார். இந் நிவேதனம் இன்றும் நடைமுறையில் உள்ளது. இந்தச் சம்பிரதாயப்படியே தாம்பூலம் வஸ்திரம் முதலியனவும் நடைபெறுகின்றன.

இவற்றால் அவருடைய திருவுள்ளத்தின்படி சாதி மட்டுமல்ல மத வேறுபாடு கருத கூட வேண்டியதில்லை பக்தி ஒன்றையே கருத வேண்டும் என்று தெரிகிறது.

(உ) பிள்ளை உறங்கா வில்லிதாசர்.—மற்றொரு சிறப்பான வரலாறு, பிள்ளையுறங்கா வில்லிதாசரைப் பற்றியது. அவர் வேடர் என்று சொல்லுகின்ற தாழ்ந்த குலத்தவர். இராமாநுசருடைய கருணைக்குப் பாத்திரராகிய வில்லிதாசர், அரச சேவகத்தை விட்டு இராமாநுசருக்கே தொண்டு பூண்டு ஒழுகினார். அவருடைய தொண்டின் சிறப்பைக் குறித்த சம்பவங்கள் பல. அவருடைய பக்தியுள்ளத்தை இராமாநுசர் நன்கு உணர்ந்திருந்தார். அவர் பூசைக்குச் செல்லுமுன், திருக்காவேரியில் நீராடி வருவது வழக்கம். நீராடப் போகும்போது, பெருஞ் செல்வத்தாலும், பதவியினாலும் கல்வியினாலும், பரம்பரையாலும் சிறப்புடைய தம் சகோதரி மகனாகிய முதலியாண்டான் தோள்மீது ஈரத்துணியை மடித்து வைத்து, அதன் மீது கையை வைத்துக் கொண்டு போவார். காவேரியில் நீராடிப் புனித நிலையில் திரும்பி வரும்போது, தாழ்ந்தசாதியினரான வில்லிதாசர் தோள்மீது எந்தத்துணியும் இல்லாமல் கைவைத்துக் கொண்டு வருவார். இதைப்பலநாள் கவனித்துக் கொண்டிருந்த அவருடைய சீடர்கள், அவரை ஒரு நாள் பணிந்து, இந்தச் செயலின் பொருள் தங்களுக்கு விளங்கவில்லை எனவும், அசுத்தராகப் போகும்போது கூடத் தம் உறவினரான முதலியாண்டாரைத் தொடவில்லை, சுத்தமாகி வரும்போது தாழ்ந்த சாதி வில்லிதாசரைத் தொட்டுக் கொண்டு வருவதன் பொருளைத் தங்களுக்கு உணர்த்துமாறு வேண்டினார்கள். அப்போது இராமாநுசர் கூறினார் :

''முதலியாண்டான் செல்வத்தாலும், வித்தையாலும், பதவியாலும் குலத்தாலும் மேன்மை பெற்றவர். அவரைத் தொட்டால் அவற்றால்வரும் செருக்கு எனக்கு வந்துவிடுமோ என்று அஞ்சி அவரை நான் தொடுவதில்லை. இதற்கு மாறாக வில்லியினுடைய பணிவும் பிரபத்தியும் எனக்கு உண்டாக வேண்டும் என்பதற்காக வில்லியை நான் அணைத்துக் கொள்கிறேன். இதுவே இதிலுள்ள இரகசியம்'' என்று விளக்கம் சொன்னார். எனவே இங்கு இராமாநுசருடைய திருவுள்ளம் தெளிவாகிறது. பணிவும், பக்தியும் எவ்வளவு தாழ்ந்தவரிடத்தில் கண்டாலும் கூட அவரே போற்றத் தக்கவர் என்பதை அவர் செயல் மூலம் செய்து காட்டினார். இவ்வாறு இராமாநுசர் செய்து காட்டிய பல செய்திகள் காலத்தின் தன்மையை ஒட்டி ஆகமத்துக்குப் புறம்பாக இருந்த போதிலும் கூட வழிபாட்டில் மேற்கொள்ளத்தக்கன என்பதை உணர்த்துகின்றன.

(ஊ) நம்பிள்ளை.—இராமாநுசர் மட்டுமின்றி, அவருக்குப் பின்வந்த வைணவ ஆச்சாரியர்கள் பலரும் இதே கருத்தைத் தங்கள் வாழ்க்கையில் கடைபிடித்திருப்பதை, வைணவ குருபரம்பரைகள் விளக்கமாகக் கூறுகின்றன. இரண்டொரு செய்திகளைக் குறிப்பிடுவோம்.

நம்பிள்ளை வரலாற்றில் ஒரு நிகழ்ச்சி. அவருக்கு இரண்டு மனைவியர். மூத்த மனைவி பக்தி மிகுந்தவள். இளைய மனைவி உலகியல் நிலையில் உள்ளவள். இதை அவர் பரீட்சித்துத் தெரிந்து கொண்டார். இருவரையும் தனித்தனியாக அழைத்து, ''என்னையும் உன்னையும் எவ்வாறு கருதியிருக்கிறாய்'' என்று கேட்டபோது, மூத்தவள் ''தங்களைப் பெருமானுடைய அவதாரமான ஆச்சாரியன் என்றும், என்னைக் கைங்கரியம் செய்யும் சிஷ்யை என்றும் நினைத்திருக்கின்றேன்'' என்றாள். இளையவள் ''தங்களைப் பர்த்தா என்றும், அடியேனைப் பாரியை என்றும் கருதியிருக்கின்றேன்'' என்றாள். இது கேட்ட நம்பிள்ளை இளையவளுக்குப் பக்குவம் போதாது என்று கருதி, மூத்தவளையே தமது ஆராதனைக்குத் தளிகை செய்து தருமாறு நியமித்தார். சில நாளில் மூத்தவளுக்கு வீட்டு விலக்கு வந்த காலத்தில், இளையவள் தளிகை செய்து கொடுத்தாள். அதைப் பெற்ற நம்பிள்ளை, பக்குவமில்லாத அவள் செய்தது ஆராதனைக்குத் தகுதியற்றது என்று தாம் கருதியபோதிலும், பிள்ளை ஏறுதிருவுடைய

148 326—40

தாசர் என்ற மரமேறி வகுப்பைச் சேர்ந்த தம்முடைய சீடரைப் பெரும் ஞானி என்று அவர் கருதியமையால், அதைக் கையால் தொடச் செய்து, அந்த நிவேதனம் பரிசுத்த மானதாகக் கருதி, அதைக் கொண்டு நிவேதனம் செய்வார். இது பற்றிக் குரு பரம்பராப் பிரபாவம் "தமக்கு அபியமதராய் *உத்கிருஷ்ட ஜென்ம ஜாதராய் வேதகப் பொன்போலே இருந்துள்ள பரமதத்துவ நிஷ்டரான வைணவ அக்ரகண்யர் பிள்ளை ஏறு திருவுடையதாசர் கரஸ்பர்சமாக்கி அமுது செய்தருளுவர்" என்று சொல்கின்றது. இதனால் பெருமாள் நிவேதனத்துக்குக் தகுதியில்லாத தளிகையையும் பக்திமிக்கவரான தாழ்ந்த குலத்தார் தொட்டுப் புனிதமாக்கியதாக ஆச்சாரியர் கொண்டார் என்று அறிகிறோம்.

(எ) விளாஞ்சோலைப்பிள்ளை.—நம்பிள்ளையின் சீடர் வடக்குத் திருவீதிப் பிள்ளையின் மூத்த புதல்வர் பிள்ளைலோகாச்சாரியர் என்ற பெயருடைய தென்கலை ஆச்சாரியர். இவர் தம் அந்திம காலத்தில் தம்க்குப் பின் ஆச்சாரியராக வரத் தக்கவர், மதுரையில் அர்சாங்க அலுவல் பார்த்து வந்த திருமலையாழ்வார் என்பவரே என்று முடிவு செய்து, தம் மாணாக்கர்களை அழைத்து, "நாம் பரமபதம் அடைந்தபின் நீங்கள் ஒவ்வொருவரும் நம்மிடம் காலட்சேபம் செய்த ஒவ்வொரு சாஸ்திர விசேஷத் தைத் திருமலையாழ்வார்க்கு உபதேசித்து அவரை இந்த வைணவ சம்பிரதாயத்துக்கு ஆச்சாரியராக ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களில் விளாஞ்சோலைப்பிள்ளை திருமலை யாழ்வாருக்குத் திருவாய்மொழியை உபதேசிக்கட்டும்" என்று சொல்லிவிட்டு, சில நாளில் பரமபதம் அடைந்தார். இவ் விளஞ்சோலைப்பிள்ளை என்பவர் தீண்டாத வகுப்பினர். திருவனந்தபுரத்தைச் சேர்ந்தவர். பிள்ளைலோகாச்சாரியர் காலமான பின், இவர் திருவனந்தபுரம் அடைந்து அங்குக் கோயிலுக்குள் செல்ல முயன்ற போது அங்குள்ள பட்டர் இவர் தாழ்ந்த குலத்தினர் என்பது பற்றி இவரை தடுத்து விட்டனர். இவர் அதன்மேல் அங்கு எதிரிலுள்ள ஒரு விழாஞ்சோலையில் தங்கி, தம் ஆச்சாரியர் கட்டளையின்படி திருமலையாழ்வாரின் வரவை எதிர்நோக்கி இருந்தார். காலக் கிரமத்தில் திருமலையாழ்வாரும் திருவரங்கம் வந்து, பிள்ளைலோகாச்சாரியரின் கருத்துக் களை உணர்ந்து, திருவனந்தபுரம் அடைந்து விளாஞ்சோலைப்பிள்ளையிடம் திருவாய் மொழியைக் காலட்சேபம் செய்தார். இவ்வாறு பெற்ற ஞான மிகுதியால் திருவாய் மொழிப்பிள்ளை என்ற பெயரும் பெற்று, வைணவ சமயத்திற்கு ஆச்சாரியருமாகித் தமக்குப் பின்னர் மணவாளமாமுனிகளை ஆச்சாரியராக்கினார். விளாஞ்சோலைப் பிள்ளை ஏழு பாடல் கொண்ட "சப்தகாதை" என்ற ஒரு சிறு நூல் செய்திருக்கின்றார். இந்தப் பாடல்கள் தென்கலையார் நித்தியானுசந்தமாகத் தினந்தோறும் ஓதவேண்டும் என்பது சம்பிரதாயமாகும். இவ்வாறு வைணவர்கள் தாழ்ந்த சாதியார் செய்த பாடல்களைப் போற்றுவது, சமயம் சாதியைக் கடந்தது என்றகருத்தை விளக்கு கிறது.

9. சங்கரர் வரலாற்றில் ஒரு நிகழ்ச்சி.— இக் கருத்து தமிழ் மரபில் மட்டுமன்றி வட மொழி மரபிலும் பண்டை நாளில் இருந்தது என்பதற்கு ஆதிசங்கரர் வரலாற்றில் ஒரு சான்று உண்டு.

மகா வாக்கியங்களில் ஒன்றை இங்கு நினைவு படுத்திக் கொள்ளலாம். அத்வைத வேதாந்தத்தின்படி, ஒரு மகாவாக்கியம் அகம் பிரம்மாஸ்மி என்பது. அதாவது பரம்பொருளாகிய பிரமம் மாயையினால் கலக்குண்டபோது உலகில் காணப்படும் இத்தனை வெவ்வேறு வடிவங்களாகத் தோன்றியது என்பதாகும். ஆகவே அக்கருத் தில், தனி ஆன்மா என்பது இல்லை. ஆன்மா பிரம்மசொரூபம். ஆதலால் அதற்குச் சாதியில்லை. இதை விளக்க ஆதிசங்கரர் வரலாற்றில் ஒரு செய்தி சொல்லப்படும். அவர் காசியில் சுத்த அத்வைத நிர்ணயம் செய்து முடித்துப்பின் போய்க்கொண்டிருந்த போது அவர் எதிரே ஒரு சண்டாளன் வந்தான். அவருடைய ஞானத்தைச் சோதிப் பதற்காகச் சிவபெருமானே இச்சண்டாள வடிவத்தில் வந்ததாகச் சொல்வர். பிரா மணர், தீண்டத்தகாதவோரிடமிருந்து பதினாறு முழ தூரத்தில் இருக்கவேண்டும் என்று சாத்திரங்களில் சொல்லப்பட்டுள்ளது. சண்டாளர் தம்மை நெருங்கி வரு வதைக் கண்ட சங்கரர் 'விலகிப்போ' என்று சொன்னார். கேட்ட அச் சண்டாளன் 'யாரைச் சொன்னீர்கள்' என்று ஒரு கேள்வி கேட்டான். அந்தக் கேள்வியினால் சங்கரர் உள்ளத்தில் புதிய ஞானம் பிறந்தது. 'இவ்வளவு தூரம் அத்வைதத்தை நிலைநாட்டிய தமது உள்ளத்தில் சாதி பற்றிய உயர்வு நீங்கவில்லையே' என்று அவர் எண்ணினார்.

சண்டாளன் கேட்ட கேள்வி மிக்க பொருள் பொதிந்தது. 'யாரை' என்ற சொல்லில், உயிரையா உடலையா என்ற ஒரு வினா அடங்கியுள்ளது. உயிரை என் றால் உயிர் பிரம்ம சொரூபம் ஆதலால் அதற்குச் சாதியில்லை. உடலை என்றால் உடல் பஞ்சபூதங்களால் ஆனது. பஞ்சபூதங்கள் ஜடம். ஜடத்துக்குச் சாதியில்லை இத்தனை விளக்கமும் 'யாரை' என்ற கேள்வியில் அடங்கியிருக்கிறது. இப் பொருளை. அக்கணமே உணர்ந்த சங்கரர், அச் சண்டாளன் காலில் விழுந்து, வணங்கி மன்னிப்புக் கேட்டதோடு, இப் பொருளை விளக்கி 'மனிஷாபஞ்சகம்' என்ற ஒரு சிறு நூல் செய்தார் என்பது வரலாறு.

---

*அபிமதர்—பிரியமானவர்; உத்கிருஷ்ட—உயர்ந்த; வேதகப்பொன்—புடமிட்ட பொன்; அக்ரகன்யர்—உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றத் தக்கவல்; கரஸ்பரசம்—கையயல் தொடச்செய்து.

இதில் பொதிந்துள்ள பொருள், ஞானியானவன் சாதியைப் பார்க்கவேண்டிய தில்லை என்பதாகும். பொதுவாக ஆன்மாவுக்குச் சாதியில்லை என்பதை இந்து சமயத்தின் எல்லாப் பிரிவுகளுமே ஒப்புக் கொள்ளுகின்றன. பரம்பொருள், சிவ பெருமான் ஆயினும் திருமால் ஆயினும் சாதியைப் பாராட்டுவதில்லை என்றுதான் எல்லா வரலாறுகளும் கூறுகின்றன.

10. அவ்வையார் நல்வழிப்பாடல்:—மனிதப் பிறவியில் இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர் என்ற இரண்டு சாதிகள் உள்ளன என்பது அவ்வையார் பாடல்.

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி

என்ற நல்வழிப் பாடல் காண்க. (பட்டாங்கு-சாத்திரம்). இவையாவும் நால்வகை வருணம் பழந்தமிழ் மரபில் ஏற்றுக் கொள்ளப்பெறவில்லை என்பதைப் புலப்படுத்தும்.

11. கபிலரகவல்.—தமிழ்நாட்டில் திருவள்ளுவர், அவ்வை ஆகியோர் பிறப்புப் பற்றி பழமையாக விளங்கும் ஓர் கதையும் இங்குக் கருதத் தக்கது. பகவன் என்ற பிராமணன் ஆதி என்ற புலச்சியை மணந்து, அவர் இட்ட நிபந்தனைப்படி குழந்தை பிறந்த இடத்திலேயே அதை விட்டுவிட்டு, அவளை அழைத்துக்கொண்டு போய்விடு வது பழக்கம். அவ்வாறு பிறந்த குழந்தைகளே கபிலர், அவ்வை, திருவள்ளுவர் முதலான எழுவர். கபிலரைக் குழந்தையாகக் கண்டு ஓர் அந்தணன் எடுத்து வளர்த்தான். ஏழு வயதில் அச்சிறுவனுக்குப் பூணூல் அணிவிக்க அந்த அந்தணன் முயன்றபோது ஏனைய அந்தணர், அவன் கண்டெடுத்த பிள்ளையாதலால் அவனைப் பிராமணனாக ஏற்றுப் பூணூல் அணிவிக்க முடியாது என்று மறுத்துவிட்டனர். அப்போது அருள்பெற்று விளங்கிய அச்சிறுவர், இறைவனின் படைப்பில் நான்கு சாதி என்பது இல்லை என்பதை நன்கு விளக்கி, அவர்களுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்திப் பாடிய கபிலரகவல் என்ற பாடல் பிரசித்தி பெற்றது.

பார்ப்பன மாந்தர்காள், பகர்வது கேண்மின்
நால்வகைச் சாதியிந் நாட்டில்நீர் நாட்டினீர் !
மேல்வகை கீழ்வகை விளங்குவது ஒழுக்கால்
சேற்றிற் பிறந்த செங்கழு நீர்போல்,
பிரமற்குக் கூத்தி வயிற்றிற் பிறந்த வசிட்டரும்,
வசிட்டர்க்குச் சண்டாளி வயிற்றிற் பிறந்த சத்தியரும்!
சத்தியர்க்குப் புலைச்சிதோள் சேர்ந்து பிறந்த பராசரரும்
பராசரருக்கு மீன்வாணிச்சி வயிற்றிற் பிறந்த வியாசரும்
வேதங்கள் ஓதி, மேன்மை பட்டு,
மாதவ ராகி, வயங்கின ரன்றோ?

குலமு மொன்றே; குடியு மொன்றே;
இறப்பு மொன்றே; பிறப்பு மொன்றே:
வழிபடு தெய்வமு மொன்றே யாதலால்
சிறப்புச் சீலமு மல்லது
பிறப்புநலந் தருமோ பேதை யிரே!

இந்தப் பாடலை மேற்கோள் காட்டி, பரிதிமாற் கலைஞர் என்று தம்பெயரை மாற்றிக் கொண்ட, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி, என்ற தமிழறிஞர் தாம் 1903இல் எழுதிய ''தமிழ் மொழி வரலாறு'' என்ற நூலில், ''வடமொழியாளர் நால்வகை வருணங்களைத் தமிழ்நாட்டில் புகுத்தியிருக்கின்றார்கள்'' என்று எழுதியிருக்கின்றார்.

12. பூசையில் பெண்கள் நிலை.—தமிழர் கொள்கைப்படி, உயிர்களிடையே பால்வேற்றுமை கருதப்படாமையால் ஆடவரைப்போலவே பெண்ணும் முக்திக்குத் தகுதி உடையவள் ஆகிறாள். ஆகவே முக்தி சாதனமாகிய கோயில் வழிபாட்டிலும் பெண்ணுக்கு முழு உரிமை உண்டு. இதை நாயன்மார் வரலாற்றினாலும் அறி கிறோம். காரைக்காலம்மையார், திலகவதியார், மங்கையர்க்கரசியார், ஆகியோர் இந்த நிலைக்குத் தக்க சான்றுகள். மேலும் திருப்பனந்தாள் சிவாலயத்தின் பெய ராகிய தாடகைமிச் சுரம் என்பது, ஒரு பெண் வழிபட்ட சிறப்பைக் கொண்டது. இவ்வரலாறு பெரியபுராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. அவ்வூர் அர்ச்சகர் பெண்ணாகிய தாடகை என்பவள் தன் தந்தையார் வெளியூர் சென்றிருந்தபோது தான் பூசை செய்தாள். அச் சமயம் பூமாலையைச் சிவலிங்கத்தின் முடியில் அணிவிக்க எழுந்தபோது இடையில் இருந்த ஆடை நழுவவே அதைத் தன் இரண்டு கைகளாலும்

நழுவாது இடுக்கிக்கொண்டாள். அந்த நிலையில் பெருமான் சமீபம் இவளால் செல்ல முடியவில்லை. இவளுடைய பக்திக்கு அருள்கூர்ந்த பெருமான், தம் முடியைச் சாய்த்து பூமாலையை ஏற்றுக்கொண்டார். தாடகைக்கு அருள்செய்தமையால் இத்தலத்திற்குத் தாடகையீச்சுரம் என்று பெயர் வந்தது. இப்பெயரைத் திருஞானசம்பந்தர் இத்தலத்தின் தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளார். பின்புறம் முடிசாய்ந்த இலிங்க உருவத்தை நிமிர்க்க முடியாமல், குங்குலியக் கலய நாயனார் என்ற அடியவர்க்கே நிமிர்க்க முடிந்தது என்று பெரியபுராணம் கூறுகிறது.

பெண்கள் பூசிக்கலாகாது என்று ஆகமத்தில் எந்தத் தடையும் விதிக்கவில்லை. தற்போதும் தமிழ்நாட்டில் சில அம்பிகை கோயில்களில் பெண்களே பூசித்து வருகிறார்கள்.

## XVI. கோவில்களில் இன்று பூசை செய்பவர் பற்றிய விளக்கம்.

1. இனி, கோயில் பூசையைக் கருதுவோமானால், இந்து சமயக் கோயில்களைப் பின்வரும் ஆறு பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ளலாம்.

(1) சிவாலயங்கள் —(அ) சிவாச்சாரியரின் பூசை நடைபெறும் கோயில்கள்.
(ஆ) பிறர் பூசை செய்யும் கோயில்கள்.

(2) வைணவ கோயில்கள் —(அ) வைகாசை ஆகமப்படி பூசை நடைபெறும் கோயில்கள்.
(ஆ) பாஞ்சராத்திர ஆகமப்படி பூசை நடைபெறும் கோயில்கள்.

(3) விநாயகர் கோயில்கள்.

(4) முருகன் கோயில்கள்.

(5) சக்தி கோயில்கள்.

(6) பிற சிறு தெய்வக் கோயில்கள்.

2. தமிழ்நாட்டுக் கோயில்களை மேலே கண்டவாறு ஆறு பிரிவுகளில் கருத முடியும். இருப்பினும் சிவன் கோயில், விநாயகர், முருகன், சக்தி ஆகிய கோயில்களைப் பொதுவாகச் சைவக் கோயில் என்ற தலைப்பிலும், இருவகைத் திருமால் கோயில்களையும் வைணவக் கோயில் என்ற தலைப்பிலும் அடக்கலாம். சிறு தெய்வக் கோயில்கள் சைவமுறைகளையே பின்பற்றுகின்றமையால் அவற்றையும் சிவன் கோயில் என்ற தலைப்புக்குள் அடக்கலாம். இவ்வாறாக எல்லாக் கோயில்களும், சிவன் கோயில்—திருமால் கோயில் என்ற இரண்டு தலைப்புக்குள் அடங்கிவிடுகின்றன.

3. சிவாலயங்கள்—(அ) பொதுவாக எல்லாச் சிவாலயங்களிலும் சிவாச்சாரியர்களுடைய பூசையே நடைபெற்றபோதிலும் கூட, அபூர்வமாகச் சில பெருங் கோயில்களிலும், சிறு கோயில்களிலும் பிற இனத்தவர் நித்திய பூசை செய்கிறார்கள். பெரியதும் மிக முக்கியமானதுமான கோயிலாகிய சிதம்பரம் சபாநாயகர் கோயிலில் இன்று பூசை செய்து வருகின்ற பொதுதீட்சிதர் என்போர் தாங்கள் 'சிவாச்சாரியர்கள்' என்று சொல்லிக்கொள்வதில்லை. இவர்களே நித்திய பூசை மட்டுமல்லாமல், நைமித்திகம், பிரதிட்டை, கும்பாபிஷேகம், திருவிழாக்கள் அனைத்தையும் நடத்துகிறார்கள். இது அல்லாமல் திருநெல்வேலி மாவட்டம் இராசவல்லிபுரம், செப்பறை நடராசர் கோவிலில் குருக்கள் ஐயாவே பூசை செய்துவருகிறார். இவர் தேசிகர் என்ற பட்டம் கொண்ட தொண்டமண்டல முதலியார் வகுப்பைச் சார்ந்தவர். பூசகராக மட்டுமல்லாமல், அங்குள்ள வேளாள மக்கள் இவரைக் குரு என்றே கொள்கிறார்கள்.

(ஆ) மிகவும் பிரசித்த பெற்ற தேவாரப் பாடல் கொண்ட சிவாலயங்களாகிய திருவானைக்கா, இராமேசுவரம், திருவிழிமிழலை, திருவொற்றியூர் ஆகிய கோயில்களில் சிவாச்சாரியர் பூசை நடைபெறவில்லை. திருவானைக்காவில் பண்டிதரும் (சுமார்த்த பிராமணர்), இராமேசுவரத்தில் மராத்தி பிராமணரும், திருவிழிமிழலையில் விழியர் ஐந்நூற்றுவர் (சுமார்த்த பிராமணர்) என்ற பெயருடையவர்களும், திருவொற்றியூரில் அம்பிகைக்கு நம்பூதிரிகளும் (கேரள பிராமணர்) பூசை செய்கின்றனர்.

(இ) மாணிக்கவாசகர் அருள் பெற்ற தலமாகிய திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார்கோயிலில் நம்பிகள் (சுமார்த்த பிராமணர்) பூசை. பெங்களூர் சிவாலயத்தில் அரிசனபூசை நடப்பதாகக் காஞ்சி ஆச்சாரியசுவாமிகள் சொன்னார்கள். திருநெல்வேலி மாவட்டம் உவரி சுயம்புலிங்க சுவாமி ஆலயத்தில் தேசிகர் பூசை நடைபெறுகிறது.

(ஈ) மூவர் தேவாரப் பாடல் பெற்ற தலமாகிய திருப்பருப்தம் என்ற குசைலத்தில் இன்று நடப்பது வீரசைவர் பூசை. இந்தத் தலம் (இன்று இருப்பது ஆந்திர மாநிலம்) சிதம்பரத்தில் சைவசமய சந்தான ஆச்சாரியர்களுள் நான்காமவராகிய உமாபதிசிவாச்சிரியர் சிவலிங்கவடிவத்தில் பூசிக்கப்பெறும் கொற்றவன்குடி என்னும் தலத்தில் இன்று ஒரு வீரசைவபத்தர் (பொற்கொல்லர்) பூசை செய்கிறார். இந்த இடம் இன்று குமாரதேவர் மடத்தின் ஆதினத்தில் உள்ளது.

4. திருமால் கோயில்கள்:— திருச்சி மாவட்டத்தில் கல்லங்குறிச்சியில் சென்ற நூற்றாண்டில் தோன்றிய கலியுகவரதராசப்பெருமாள் கோயிலில் மூலஸ்தானத்தில் வன்னியர் பூசை நடைபெறுகிறது.

5. விநாயகர் கோயில்—சிவாலயத்தில் அமைந்திருக்கிற பரிவார கோயிலில் சிவாச்சாரியரே பூசை செய்கிறார். வேறு உள்ள தனிக்கோயில்களில், அந்தந்தச் சூழ்நிலையை அனுசரித்து வெவ்வேறு இனத்தார் பூசை செய்கிறார்கள்.

6. முருகன் கோயில்—ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய திருச்செந்தூரில் இன்று நம்பூதிரி பூசை. மற்றொன்றாகிய பழநியில் இன்று சிவாச்சாரியர் பூசை நடைபெற்று வருகிறபோதிலும், முன்னமே இங்குச் சைவப்பண்டாரம் பூசை செய்து வந்தார். அதை மதுரைத் திருமலைநாயக்கருடைய படைத்தலைவராக இருந்த தளவாய் இராமப்பையன் மாற்றிச் சிவாச்சாரியர்களுக்கும் கொடுத்தார் என்று பழநி ஆலயத்திலுள்ள ஒரு தாமிரப்பட்டயம் கூறுகிறது. இதன் காலம் சுமார் கி.பி. 1644.

7. சக்தி கோயில்கள்.—சென்னையில் முண்டகக்கன்னியம்மன் முதலான பல சிறப்புக் கோயில்களில் ''உவச்சர்'' பூசை. கன்னியாகுமரி பகவதியம்மன் கோயிலில் 'போத்தி' பூசை. திருவேற்காட்டில் முன்பு அரிசனங்களாலும், கிராமணிகளாலும் பூசை செய்யப்பெற்று, இப்போது சிவாச்சாரியர் பூசை நடைபெறுகிறது. பொதுவாகக் காமாட்சியம்மன் கோயில்களில் பல இடங்களில் விஸ்வகர்மா பூசை. தஞ்சை நகரத்திலுள்ள பங்காரு காமாட்சியம்மன் கோயிலில் மட்டும் சுமார்த்தப்பிராமணர் பூசை. திருச்சி சிறுவாட்சியூர் மதுரகாளியம்மன் கோயிலில் உடையார் பூசை. செங்கற்பட்டு மாவட்டம் பெரியபாளையம் பவானியம்மன் கோயிலில் நாயக்கர் பூசை.

8. சிறு தெய்வங்கள்.—மாரி, பிடாரி, செல்வி, அங்காளம்மன், மாடன் முதலிய தெய்வங்களுக்கு ஆங்காங்கு சூழ்நிலையை ஒட்டி பல இனத்தாரும் பூசை செய்கிறார்கள். பொதுவாக அய்யனார்கோயிலில் குயவர் பூசை. வேறு சில இனத்தாரும் பூசை செய்வது உண்டு. வானமாமலை ஜீயர் சுவாமிகள், தங்கள் ஆதிக்கத்திலுள்ள சிறுதெய்வக் கோயில்களில் அரிசனர், கொல்லர், இசைவேளாளர், போன்றோர் பூசை செய்வதாகக் கூறினார்கள். குபேரன் முதலிய தெய்வங்களைச் சுமார்த்தப் பிராமணர்களும், துர்க்காதேவியைப் பாகவதர்களும், காளிதேவியைக் குயவர்களும் பூசிக்காலாம் என்று பாஞ்சராத்திர ''பிராசாதபிரசாதனம்'' என்ற நூல் சொல்வதாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

9. மேலே குறிப்பிட்டவை எடுத்துக்காட்டாக முக்கியமான சில கோயில்கள் மட்டுமே, எல்லாக் கோயில்களையும் இங்கு முழுமையாகச் சொல்லவில்லை. இவற்றால் எல்லாப் பூசைகளுமே சிவாச்சாரியர் பட்டாச்சாரியார் ஆகியோரால் மட்டும் நடைபெறவில்லை. சில இடங்களில் பலவகை இனத்தாரும் பூசை செய்து வருகிறார்கள் என்பது தெரிகிறது. சம்பிரதாயமாக இங்கு தீட்டுப்பட்டுவிட்டதாகவோ, புனிதம் கெட்டதாகவோ, ஆபாசம் விளைந்ததாகவோ மக்கள் கருதவில்லை என்று ஏற்படுகிறது. இங்கெல்லாம் பிராமணர் உட்பட எல்லாச் சாதி மக்களும் பெருந்திரளாகத்தான் சென்று வழிபட்டுப் பிரசாதம் பெற்றுச் சொல்கிறார்கள் ஆலயமும் திருவருள் பொலிவோடு விளங்குகிறது.

## XVIII இன்றைய சிவாச்சாரியர் பட்டாச்சாரியர் நிலை.

1. சோழப் பேரரசு உன்னத நிலைக்கு வளர்ந்து வந்த காலத்தில் ஆலய வழிபாடும் வளர்ந்து உன்னதநிலையை அடைந்தது. விசயாலய சோழன், தஞ்சையைக் குறுநில மன்னர்களிடமிருந்து மீட்டு, கி.பி. 846 ஆம் ஆண்டில் தஞ்சையில் புதிய சோழப் பேரரசைத் தொடங்கினார். அவன் தெய்வபக்தி நிரம்பியவன். நிசும்பசூதனி என்ற காளியை வணங்கி, அவள் அருளால் தான் வெற்றி பெற்றதாக அவன் கருதி, அந்தத் தெய்வத்தை மிகவும் சிறப்பித்தான். அது முதல் வளர்ந்த பேரரசு, சுமார் 400 ஆண்டுகளுக்குப் பின்னர், மூன்றாம் இராசேந்திர சோழன் சந்ததியில்லாமல் 1279 ஆம் ஆண்டில் இறந்துபோனபோது நாட்டை விட்டு மறைந்துவிட்டது. இந்த இடைக்காலத்தில் 430 ஆண்டுகளுக்கும் மேலாக இடையறாத சோழர் ஆட்சி நிலவிற்று. சோழர்களில் இராசராச சோழன், அவன் மகன் இராசேந்திரன் ஆகியோர் பெரும் சக்கரவர்த்திகளாக வரலாற்றுப் புகழ்படைத்திருந்தனர். அவர்களுடைய கடற்படை கீழ்த் திசையில் சென்று, இன்றுள்ள மலேசியா, இந்தோனேசியா, பர்மா முதலான நாடுகளை வெற்றி கொண்டு, அங்கெல்லாம் தமிழ் நாகரிகத்தைப்பரப்பியது மட்டுமல்லாமல், அங்கிருந்து ஏராளமான செல்வத்தைத் தமிழ்நாட்டில் கொண்டுவந்து குவித்தது. சோழ மன்னர்கள் தங்களுக்கென்று பெரிய அரண்மனைகள் கட்டிக் கொள்ளாமல், மன்னர் மன்னனாகிய சிவபெருமானுக்கு மலை மலையாகக் கோயில்களை அமைத்தார்கள். தமிழ்நாடு கட்டடக்கலை, சிற்பக்கலை, இசை நடனம் வழிபாட்டு முறை முதலிய பலதுறைகளில் ஒரு கலைக் களஞ்சியமாகப் புகழ் பெற்றிருந்தது. முதலாம் இராசேந்திர சோழன் (கி.பி. 1012–1044) கங்கை நீரைக் கொண்டு வந்து, கங்கைகொண்ட சோழபுரம் கோயில் கும்பாபிஷேகத்திற்கு அந்த நீரைப் பயன்படுத்தினான். வறண்ட பிரதேசமாகிய கங்கைகொண்ட சோழபுரப் பகுதியில், மக்களுடைய நன்மைக்காகச் சோழ கங்கம் என்ற ஒரு பேரேரியை அமைத்து, அதில் கங்கை நீரை கலப்பித்தான் என்றெல்லாம் கல்வெட்டுகளால் அறிகிறோம்.

2. ஆகம வழிபாடு சிறப்பாக ஓங்கிய இக்காலத்தில், இராசராச சோழன், தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டியபோது, அங்கு நூற்றைம்பது சிவாச்சாரியர்களைத் தமிழ்நாட்டின் பலபகுதிகளிலிருந்தும் கொண்டுவந்து குடியேற்றி அவர்களுக்குத் தனித்தனியாக வீடுகள் கட்டிக் கொடுத்திருப்பது, அவருடைய சாசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதனோடுகூடச் சோழ மன்னர் பலரும் அவர்கள் காலத்திலிருந்த கிராமசமூகமும் சிவாச்சாரியர் நன்முறையில் வாழ்வதற்காக நிலமானியங்கள் விட்டிருக்கிறார்கள். இவ்வாறு விட்டதன் கருத்து அவர்கள் ஓர் அரசனையோ வேறு தனிமனிதனையோ நம்பி வாழவேண்டியதில்லை. கோயிலும் கோயிலையொட்டி எழுந்த மானியங்களும் சிவாச்சாரியர்களைக் காப்பாற்றும் என்பதாகும். இவ்வாறு சோழர் ஆட்சிக் காலம் சிவாச்சாரியர் வரலாற்றில் ஒரு பொற்காலமாகும்.

3. ஆனால் காலச்சக்கரம் சுழன்றபோது சோழரும் அவருக்குப் பின் கொஞ்ச காலம் சிறப்பாக ஆட்சி செய்த பாண்டியரும் மறைந்துவிட்டார்கள். முஸ்லீம் படையெடுப்பினால், நாடே சீர்குலைந்தது. கோயில்கள் நசிந்தன. விசயநகர மன்னர் தோன்றி, கோயில்களுக்கும் வழிபாடுகளுக்கும் மீண்டும் புத்துயிர் கொடுக்கிற வரையில், ஒன்றரை நூற்றாண்டுகாலம் சிவாச்சாரியர்களுடைய நிலை தாழ்ந்து போயிருந்தது. அப்போது அவர்களுடைய கல்வியும், ஆகமப்பயிற்சியும் குன்றி விட்டன என்று கருதுவது பிழையல்ல. பின்னர் விசய நகரத்து ஆட்சியும், அதைத் தொடர்ந்து மதுரை, திருச்சி, தஞ்சை ஆகிய பகுதிகளில் நிலவிய நாயக்கர் ஆட்சியும், சிவாச்சாரியர்களுக்குக் கோயில்களின் பாதுகாப்பின் மூலம் ஓரளவு அமைதியும் ஆதரவும் கிடைக்கச் செய்தன. நாயக்கர் தெலுங்கைத் தாய்மொழியாக உடையவர்கள்; அனைவரும் வைணவர். அவர்களால் அமைதியான வாழ்க்கை கிடைத்தது; பலபெருந் திருப்பணிகளும் செய்தார்கள் என்பது உண்மை. ஆனால் அவர்களுக்கு வடமொழி மோகம் அதிகம். எனவே இந்த இயல்புகள், தமிழை மூல உயிர்நாடியாகக் கொண்டிருந்த தமிழ்நாட்டுக் கோயில் வழிபாட்டு முறைகளைப் பாதித்தன என்பது கண்கூடான உண்மை. ஆனால் பின்னர் அயல் நாட்டார் இங்கு வந்து வியாபாரத்தில் தொடங்கினார்கள், பின் நாட்டைப் பிடிப்பதாக அவர்கள் நிலை வளர்ந்தபோது, மீண்டும் கோயில்களின் நிலை தாழ்ந்து விட்டது. சிதம்பரம் கோயிலிலும், திருவரங்கக் கோயிலிலும் நீண்ட காலம் பூசையே நடைபெறாமல் இக்கோயில்களில் முகம்மதியர் படைகள் தங்கியிருந்தன என்று வரலாற்றில் அறிகிறோம்.

4. (அ) இப்படிப்பட்ட கொந்தளிப்புகளால், சமூகத்தில் எல்லா நிலைகளும் பாதிக்கப்பட்டது போலவே, சிவாச்சாரியர்கள் நிலையும் பாதிக்கப்பட்டது அவர்களுடைய கல்விக்கும் பயிற்சிக்கும் அதிக இடமில்லாமல் போயிற்று. ஏதோ இருந்த கோயில்களில் அவர்கள் தெரிந்த அளவு பூசை நடத்திவந்தார்கள் என்று சொல்லலாமேயொழியப் பொதுவாக ஆகமப்படி அவர்கள் பூசை செய்துவந்தார்கள் என்று சொல்வதற்கு இடமில்லை. மேலும் இந்தத் தகுதிக் குறைபாடுகளோடு கூட இந்த சமூகமே சீனமடைந்து வந்திருப்பதைப் பார்க்கிறோம். எடுத்துக் காட்டாகத் தில்லைவாழ் அந்தணர் மூவாயிரர் என்று எல்லா இலக்கியத்திலும் வாழ்க்கையிலும் சிறப்புப்பெற்றிருந்த ''மூவாயிரவர்'' என்று சொல்லுகின்ற தீட்சிதர் சமூகம் பெரிதும் நலிவடைந்திருப்பதைப் பார்க்கிறோம்.

இன்று 200 தலைக்கட்டுகள் உள்ளன என்றும் அவர்கள் சொல்லிக்கொள்கிறார்கள். இந்த எண்ணிக்கையும் சரிதானா என்பதும் ஐயப்பாடே. மூவாயிரம் இருநூற் றுக்குக் குறைந்ததே ஒரு பெரிய நிகழ்ச்சி அல்லவா? இந்த நிலை சிவாச்சாரி யர் சமூகத்துக்கும் முழுமையாக பொருந்தும். இதுபோலவே திருவிழி மிழலையில் ''விழியர் ஐநூற்றுவர்'' என்று திருவிசைப்பாவில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்று இந்நிலையெல்லாம் மறைந்துபோய், விரல்விட்டு எண்ணக்கூடிய நிலைக்கும் குறைந்துவிட்டனர்.

(ஆ) இரண்டாவதாக இவ்வாறு கோயில்களில் பரார்த்த பூசைக்கு உரியவர் களாக இருந்த இனத்தார் இன்று எண்ணிக்கையிலும் குறைந்து விட்டார்கள், தகுதியிலும் தாழ்ந்து விட்டார்கள். காரணத்தைக் கவனிக்க வேண்டியதில்லை. இது இன்றுள்ள நிலைமை. பல இடங்களில் கோயிலில் பூசை செய்வ தற்கே ஆள் கிடைக்கவில்லை. தகுதியைப்பற்றி என்ன சொல்ல முடியும்.

(இ) மூன்றாவதானதொரு நிலையையும் கருதவேண்டும். சிவாச்சாரியர் களுக்குக் கோயிலைச் சார்ந்து முன்பிருந்த மானியங்கள் இன்று இல்லை. சமு தாயம் இன்று வளர்ந்து வந்திருக்கின்ற உலகச் சூழ்நிலையில், பெரும்பான்மையான கோயில்களில், பூசையை நடத்தி வருகின்ற பூசகருக்கு வாழ்க்கைக்குத் தேவையான வருவாய் ஊதியமாக அளிக்கப் பெறவில்லை. அவர்கள் தாழ்ந்த நிலையிலேயே குடும்பம் நடத்திவர வேண்டியிருக்கிறது. இதனால் அவர்களுள் திறமையும் சிறிது வசதியும் உடையவர்கள், கல்வியில் முன்னேறிக் கோயில் பூசையைக் கைவிட்டு வசதி அதிகம் உள்ள அலுவல்களைத் தேடிப் போய்விட்டார்கள். இதனாலும் பூசகர் சமூகங்கள் மிகவும் சுருங்கிவிட்டன.

(ஈ) நான்காவதாகக் காலப்போக்கில் சமுதாய வளர்ச்சி காரணமாக மக்க ளுடைய விருப்பத்திற்கேற்பப் பல புதிய கோயில்கள் தோன்றியுள்ளன. இவை நன்முறையில் மக்களுக்குப் பயன்படவேண்டி, தகுதிபெற்ற பூசகர் தேவையும் பெருகி யுள்ளது.

எனவே முதலாவதாகப் பூசகருடைய ஞானமும் பயிற்சியும் குறைய, இரண் டாவதாக அவர்கள் எண்ணிக்கையும் குறைய, மூன்றாவதாக அவர்கள் வாழ்க்கைக் குத் தேவையான வருவாயும் குறைய, நான்காவதாக கோயில்கள் பெருகியதால் பூசகர் அதிகம் தேவை என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது.

5. மேலே சொல்லப்பட்டபடி ஆலயங்கள் வழிபாடுகளை நடத்தி வைக்கின்ற பூசகர்களுக்கு ஆகமங்கள் விரிவாக இலக்கணம் சொல்லியிருந்தபோதிலும், காலத்தின் விபரீதங்களினால் இவர்களுடைய அறிவு நிலை மிகவும் தாழ்ந்து போய்விட்டது. மாலிக்காபூர் மதுரையை அழித்தகாலம் முதல் நூற்றைம்பது ஆண்டுகள் கழிந்து விசய நகர அரசர்கள் இந்துமதத்தைக்காக்க முன்வந்த காலம்வரை, கோயில்கள் கேட்பா ரற்றுப் போய், அர்ச்சகர்கள் நிராதரவாகி விட்டார்கள். நூற்றைம்பது ஆண்டுகள் என்றால் குறைந்தது 5–6 தலைமுறைகளாகும். இவ்வாறு ஐந்தாறு தலைமுறைகள் அவர்கள் ஆதரவற்றுப் போகவே ஆகம அறிவும் குன்றிவிட்டது. படித்தவர்கள் குறைந்துபோய், வடமொழி அறிவும் அவர்களுக்கு இல்லாதவராயர் பூஜை வெறும் சடங்காக மட்டும் ஆகிவிட்டதே, தவிர அதில் திருத்தமோ பொருளறிவோ அடி யோடு மறைந்துவிட்டது. இது பற்றி டாக்டர் சி. பி. இராமசாமி ஐயர் தலைமை யில் இந்து சமய அறநிலையக் கமிஷன் (1960–62) இந்திய அரசிற்குச் சமர்ப்பித்த அறிக்கையில் கூறியுள்ள பின்வரும் கருத்துகள் மீண்டும் சிந்திக்கத்தக்கன :

''அர்ச்சகர்களும் பூசாரிகளும் எழுத்து வாசனை அற்றவர்கள், அல்லது அரை குறைப் படிப்பேயுள்ளவர்கள். அன்றியும் இவர்கள் பொதுவாகப் பணம் பறிக்கும் நோக்கமே கொண்டிருந்தார்கள். மந்திரங்களை இவர்கள் உச்சரிக்கின்ற முறையும் சுரந்தவறிச் சொல்லும் முறையும், கேட்போர் மனத்தில் பிழைபடவும் விருப்பம் உண்டாக்காமலும் இருந்தன. இதில் மிகவும் நொந்து கொள்ள வேண்டிய தன்மை என்னவென்றால், இவர்களுக்குத் தாங்கள் சொல்லுவதன் பொருளோ, கருத்தோ கொஞ்சமும் தெரியாது. இதனால், தெய்வ அருள்வேண்டிக் கோயிலுக்கு வரும் சேவார்த்திகள் மற்றும் பக்தகோடிகளிடத்தில் பக்தியுணர்வையும் தெய்வ உணர்வையும் இவர்களால் ஊட்டமுடிவதில்லை என்பது தெளிவு'' (பக்கம் 47)

6. ஆகமங்கள், சைவசித்தாந்தச் சமயத்திற்கு உரிய சாத்திரங்கள் என்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. தேவார காலங்களில் பிராமணர் சிவ வேதியர் என்று இருந்த நிலைமை மாறி சங்கரர், இராமானுசர் ஆகிய இருவருக்கும் பிறகு, தமிழ்நாட்டில் பிராமணர் சுமார்த்தர்களாய் இருந்தவர்கள் சங்கரையே பரமாச்சாரியர் என்றும், வைணவராய் இருந்தவர்கள் இராமானுசரையே பரமாச் சாரியர் என்றும், தங்களுக்குச் சைவ சித்தாந்தம் சம்பந்தமில்லை என்றும், சைவா கமங்கள் வடமொழியில் எழுதப்பெற்று இருந்தும்கூட, தங்களுக்கும் அவற்றிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் முடிவு செய்துவிட்டார்கள். ஸ்ரீகண்டசிவாச்சாரியர், அப்பைய தீட்சிதர், அரதத்தர் போன்ற சிலர் இந்தக் கருத்துக்கு விலக்காய் இருந்தபோதிலும், பொதுவாகப் பிராமணர்கள் இந்த வடமொழிச் சாத்திரங்களைக் கைவிட்டதால், இவற்றின் பயிற்சியும் ஆட்சியும் குறைந்துவிட்டது. வைணவத்தில்

இராமானுசரின் சீடர்கள் தங்களை ஸ்ரீவைணவர்கள் என்ற ஒரு தனி இனமாகக் கொண்டு தங்களுக்குரிய வைணவாகமங்களைப் போற்றி வந்தது உண்மை : ஆனால் இவை மற்ற (சாத்தாத) வைணவர்களுக்குத் தெரியாது.

7. இந்திய கண்டம் முழுமையிலும் ஆகமங்கள் பெரும் ஆட்சி பெறாமல் இருந்ததற்குஓர் முக்கியமான காரணம், இவை பிற்காலத்தில் வடமொழியில் எழுதப் பெற்று அதிகம் கற்றறிந்தோரிடை மட்டுமே ஆட்சியில் இருந்தமை ; பொதுமக்களிடையே ஆட்சி பெறவில்லை. ஆகமங்கள் முன் சொன்னவிதமாக தமிழ்நாட்டிலேயே எழுதப் பெற்றிருந்தன. இவை எழுதப் பெற்றிருந்த எழுத்துக்குக் கிரந்தலிபி என்பது பெயர். இவ்வெழுத்து தமிழ்நாட்டில் மட்டுமே வழங்கிற்று. கிரந்தலிபி என்பது தமிழ் மக்கள் வடமொழியைப் பயில்வதற்கென்று தாங்கள் புதிதாக படைத்துக் கொண்ட ஒரு லிபி. இது சுமார் 1,500 ஆண்டுகளாக ஆட்சியில் இருக்கிறது. தமிழ் நாட்டில் பண்டைக் காலத்தில் நாகர லிபி உபயோகத்தில் இல்லை. சென்ற தலைமுறை வரையில் சிவாச்சாரியருக்குத் தெரிந்திருந்தது கிரந்தலிபியே தவிர, நாகர லிபி அல்ல. ஆகமங்கள் யாவும் கிரந்தலிபியிலேயே எழுதப் பெற்றிருந்தன. இவை பரவாமைக்கு இதுவும் ஒரு காரணம்.

## XVIII. பூசகர் பணியை ஒரு தொழில் என்று கருதமுடியுமா ?

1. ஊதியம் பெற்றுக் கொண்டு பரார்த்த பூசை செய்வது ' தோஷம் ' என்பது ஆகமங்களில் சொல்லப்படும். இவ்வாறு செய்பவன் தேவலகன் என்று சொல்லப்படுகின்றான். இவன் எந்தக் கோயில் காரியத்திலும் விலக்களிக்கப்படுகிறான். இது காரணாகமம் பூர்வபாகம் புண்ணியாபிஷேக விதிப்படலத்தில் (பக்கம் 309) விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. இங்குத் தேவலகன் ஐந்து வகையாகச் சொல்லபடுகிறான் :

(அ) <u>தர்மதேவலகன்</u> :—தீட்சையின்றி ஒருவருடம் ஊதியம் பெற்று பரார்த்த பூசை செய்வானாகில் அவன் தர்மதேவலகன் எனப்படுவான்.

(ஆ) <u>கல்பதேவலகன்</u>. —தீட்சை பெறாது தன் காரியங்களை முறையாகச் செய்தாலும்கூட, மூன்றாண்டு ஊதியம் பெற்றுக் கொண்டு பரார்த்த பூசை செய்வானாகில் கல்பதேவலகன் எனப்படுவான்.

(இ) <u>சுத்ததேவலகன்</u>.— தான் ஆசார அனுட்டானங்களில் தாழ்ந்த நிலையில் இருந்து கொண்டு பிறருக்கு ஊதியத்துக்காக உபதேசம் செய்பவன் சுத்த தேவலகன் எனப்படுவார்.

(ஈ) <u>ஈனதேவலகன்</u>.—தன் சாஸ்திரப்படியாவது, அந்நிய சாஸ்திரப்படியாவது பூசையை முறையே செய்யாமல், கேவலம் ஊதியத்திற்காக இஷ்டப்படி பூசை செய்பவன் ஈனதேவலகன் எனப்படுவான்.

(உ) <u>சுவிஷ்ட தேவலகன்</u>.— தன் ஆசாரத்தை விடாமல் கோயில் பரார்த்த பூசையை ஊதியம் பெற்றுக் கொண்டு செய்பவன் சுவிஷ்ட தேவலகன் எனப்படுவான்.

2. இவர்கள் சுபாசுப காரியங்களில் விலக்கத்தக்கவர்கள். பிரதிட்டை முதலியவற்றிலும் விலக்கப்படுகிறார்கள். எந்தத் தேவர்களையாகிலும், சிவலிங்கத்தையேயாகிலும் ஊதியத்துக்காகப் பூசிப்பவன், எல்லாப் பூசாக் காரியங்களிலும் விலக்களிக்கப்படுகிறான். அதாவது இவன் பூசை செய்யலாகாது : செய்தால் தெய்வத்தின் புனிதம் கெடும் என்பது பொருள்.

3. இவற்றால் ஏற்படுவது, கோயில்களில் சிவாச்சாரியர் செய்யும் பூசையானது வேறு உலகியல் தொழில்களோடு ஒப்ப ஊதியம் பெறும் ஒரு தொழிலாகாது. அவ்வாறு சிவாச்சாரியர் எவரும் ஊதியம் பெற்றுப் பூசை செய்தால் அது சுவிஷ்ட தேவலகன் என்ற தோஷத்திற்கு இடமளிக்கிறது. அர்ச்சகர் தாம் செய்யும் பரார்த்த பூசைக்குச் சம்பளம் வாங்கக்கூடாது என்ற ஆகம விதியை மனத்தில் கொண்டுதான் முற்காலத்தில் அவர்கள் நல்ல முறையில் வாழ்க்கை நடத்த உதவும்படி, அரசரும் பிறரும் அவர்களுக்குத் தகுந்த மானியங்களும் கட்டளைகளும் அமைத்திருந்தனர். கால முறையில் இந்த மானியங்களெல்லாம் மறைந்துபோகவே, அவர்கள் கோயில் நிர்வாகிகளிடமிருந்து ஊதியம் பெறும் நிலை ஏற்பட்டது. இந்த நிலை ஆகம விதிகளுக்குப் புறம்பானது. இருந்தும் அர்ச்சகர் ஆற்றும் இந்தப் பணியை ஒரு தொழில் என்று கருதிவிடக்கூடாது. ஆனால் இன்று அது ஊதியம் பெறும் ஒரு தொழிலாக ஆகி விட்டது.

4. இது சம்பந்தமாகப் பின்னும் இரண்டு நிலைமைகளை இங்கு கவனிக்க வேண்டும்.

(அ) சிவாச்சாரியர், கோயிலில் குறித்த நேரங்களில் மட்டும் பணி செய்பவர் அல்லர். ஹோமம், உற்சவம், வேறு நைமித்திக பூசைகள் ஆகியவை நடைபெறும் போது, அவருடைய வேலை நேரம் மற்றத் தொழில்களில் உள்ளதுபோல, இந்த மணி முதல் இந்த மணிவரை என்ற அளவில் அமையாது. எடுத்துக்காட்டாக ஒரு

பிரம்மோற்சவத்தில் முதல் நாள் கொடியேற்றுதல் தொடங்கி, கடைசி நாள் தீர்த்த வாரி முடிகின்றவரையில் அவர் தலத்தைவிட்டு வெளியே செல்லமுடியாது; செல்லக் கூடாது என்பது ஆகம விதி. தொடக்கத்தில் அவர் காப்புக் கட்டிக் கொள்கிறார் (ரட்சாபந்தனம்). இதன் பொருளாவது, எடுத்துக் கொண்ட காரியத்தை அதாவது திருவிழாவை இவர் நிறைவேற்றுகின்றவரையில் இறைவன் இவருக்குக் காப்பாக இருக்கின்றான் என்பது பொருள். கோயிலிலேயே இவர் எல்லாநேரமும் இருக்க வேண்டியவர். விழாவில் பத்து அல்லது பதினோரு நாட்களில், குடும்பத்தில் எந்த நன்மை தீமை நிகழ்ந்தாலும், அதனால் அவர் பாதிக்கப்படாமல், வீட்டுக்குப் போகாமல் தெய்வத்துக்கே தம்முடைய அந்த நாள்களின் சேவைகளையும் அர்ப்பணிக்கிறார். உதாரணமாக மூர்த்தி வீதியுலா வருகின்ற காலத்தில் இரவு பத்து மணிக்குச் சுவாமி புறப்பட்டால் ; சில சமயம் மறு நாள் காலை ஆறுமணிக்குச் சுவாமி கோயிலுக்குத் திரும்பக்கூடும். அதுவரையில் பூசகர், சுவாமி கூடவே இருக்க வேண்டியவர். இங்கெல்லாம் நேரவரையறை இல்லை. இவ்வாறு சிவாச்சாரியருடைய நிலை ஓர் அர்ப்பண வாழ்க்கை; தொழிலல்ல.

(ஆ) மற்றொரு நிலை. காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோயிலில் 200க்கு மேற்பட்ட மூர்த்திகளுக்குத் தினசரி பூசை நடைபெற்று வருகின்றது. இங்கெல்லாம் சில பூசகர் மட்டும் எல்லாப் பூசைகளையும் நிறைவேற்ற முடியாது. ஆகவே இங்கு 16 குடும்பங்களில் அவர்களுக்குள்ளேயே முறை அமைத்துக் கொண்டு பூசை செய்து வருகின்றனர். சில குடும்பங்களில் ஒரு சமயம் சுபாசுபம் முதலான காரியங்களால் ஆசௌசம் ஏற்பட்டுப் பூசை செய்ய முடியாமல் இருந்தால், அப்போது வேறு பூசகரைத் தேடும் நிலைமை ஏற்படாமலும் கோயில் பூசைக்கும் தொடர்பு குன்றாமலும் ஒழுங்காகப் பூசை நடந்து வர முடிகிறது. அல்லாமலும் தொண்டைநாட்டில் மூன்று சிறப்பான சிவாச்சாரியர் பிரிவினர் திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம், திருவண்ணாமலை என்று பெயர்களால், ஆகமம் ஒன்றாயிருந்தாலும் கூட வெவ்வேறு பத்ததிகளைக் கடைப் பிடித்து ஆங்காங்கு மட்டும் பூசை செய்து வருகிறார்கள். இவர்கள், ஒருவரிடத்தில் மற்றொருவரை ஏற்றுக் கொள்வதில்லை. இந்த நிலை வழிபடுகின்ற பொதுமக்களுக்கு மிகவும் வசதியாக இருந்து வருகிறது.

இவ்வாறு காட்டிய நிலைமைகள், பூசகர் செய்யும் பணியானது, பிற வாழ்க்கைத் துறைகளில் உள்ளதுபோல ஒரு தொழிலாகக் கருத இடம் கொடுக்காது என்பதைக் காட்டும்.

## XIX. உள்துறை.

1. இதுவரை பூசகர் நிலையை மட்டுமே ஆராய்ந்தோம். இனி, கோயில்களில் சுவாமிக்குப் பணிவிடை செய்ய நியமிக்கப் பெறும் பிற ஊழியர் நிலையைக் குறிப்பிடுவோம். இவர்கள் உள்துறை ஊழியர் எனப் பெறுகின்றனர்.

2. உள்துறை ஊழியர் என்பது தமிழ்நாடு இந்து சமய அறநிலைய நிறுவனங்களில் பணியாளர்கள் மற்றும் ஊழியர்களைக் குறித்த ஊதிய விதிகளில் 2ஆவது விதியில் வரையறை செய்யப்பட்டிருக்கிறது. உள்துறை ஊழியர், குறித்த தெய்வத்துக்குப் பூசை மற்றச் சடங்குகள், வேறு ஊழியங்கள் ஆகியவற்றைச் செய்வதிலும், செய்வதில் உதவி புரிவதிலும், மந்திரங்கள், வேதம் நாலயிரப் பிரபந்தம், தேவாரம் முதலான பாசுரங்கள் பாடுவதிலும், இப்படிப்பட்ட வேலைகளிலோ, பாசுரம் பாடுவதிலோ உள்ள கடமைகளை நிறைவேற்றுவதிலும் சம்பந்தப்பட்ட பணி புரிபவர் என்று இலக்கணம் சொல்லப் பட்டிருக்கிறது. இதன்படி நாம் கருதத்தக்க உள்துறை ஊழியர் பின்வருவோர் ஆவர்.

1 பூசகர்
2 பரிசாரகர் (நிவேதனம் தயாரித்துக் கொடுப்பவர்)
3 உள்துறை மணியம்
4 திருமாலைகட்டி
5 திருவிளக்கு
6 திருவலகு
7 மேளம்
8 மெய்காவல்
9 ஓதுவார்
10 பிரபந்தம் சேவிப்பவர்
11 வேதப்பிராமணர்

3. இவர்களில் பூசகரைப் பற்றி விரிவாக முன்னரே ஆராயப்பட்டது. ஏனைய ஊழியர்களில் பரிசாரகம் ஒன்றைத் தவிர, மற்ற அனைத்து ஊழியங்களும் யாரும் செய்ய முடியும்; இன்னார்தான் செய்ய வேண்டும் என்று வரையறைஇல்லை.

4. பரிசாரகர் என்ற பெயர் இன்று நிவேதனம் அமைக்கும் தொழிலைக் குறிப் பிட்டும்கூட, ஆகமப்படி இத் தொழிலைச் சிவாச்சாரியருள் பாசகர் என்ற பிரிவினர்தான் உண்மையில் செய்ய வேண்டியவர். பாசகர் என்ற சொல்லுக்குச் சமைப்பவர் என்று பொருள். ஆயினும் இன்று வசதிக்காக, பாசகர், பரிசாரகர் என்ற இரண்டு தொழிலையும் பரிசாரகரே செய்து வருகிறார். இவர் சிவாச்சாரியராய் இருக்க வேண்டும் என்பது ஆகம விதி. ஆனால் நடைமுறையில் அவ்வாறு இல்லை. பூசை செய்பவர் யாராயிருந்தபோதிலும், சுமார்த்தப் பிராமணரே, பரிசாரகர் தொழிலைச் செய்து வருகிறார். இவர் நைவேத்தியம் தயாரித்துக் கொடுப்பதோடு, தீபம் எற்றிக் கொடுத்தல், பரிவட்டம் துவைத்து உலர்த்திக் கொடுத்தல், அபிஷேகத் தீர்த்தம் கொண்டு வந்து தருதல் முதலான பரிசாரகரின் காரியங்கள் பலவற்றையும் செய்பவர். ஆயினும் இவர் கருவறைக்கு வெளியே, அதாவது நடுமண்டபத்தில் (அர்த்த மண்டபத்தில்) இருந்துதான் இந்த ஊழியங்களைச் செய்ய வேண்டுமே தவிர கருவறைக்குள் போகக் கூடாது என்பது ஆகம விதி. ஆனால் நடைமுறையில் அவர்கள் கருவறைக்குள் செல்வதால், ஆகம விதிப்படி புனிதம் கெடுகிறது என்று கூறலாம் அல்லவா ?

5. உள்துறையில், வேதம் ஓதுதல் மட்டும் அத்தியயனப் பயிற்சி பெற்ற வேதப் பிராமணர்களே செய்யக் கூடும். மற்றவர்கள் வேதம் ஓதலாகாது என்ற கொள்கை இக்காலம் வரையில் இருந்தமையால், இதில் தேர்ச்சி பெற்ற பிற இனத்தார் யாரும் இல்லை.

## XX. கருத்துக்கோவை.

இத்தலைப்பில் பெரியோர் பலர் குழுக் கூட்டங்களிலும், குழுவிடத்தும் வெளியிட்ட கருத்துக்களின் சுருக்கத்தைத் தொகுத்துத் தருகிறோம்:—

(அ) பூர்வாங்கக் கூட்டத்தில் செய்த ஆய்வுப் பொருள் தொகுப்பு.—இதுவரையில் முன்னுரையாகக் கூறியுள்ள கருத்துக்களை அனுசரித்துக் குழு அங்கத்தினர், ஏனைய அறிஞர், சமயாச்சாரியர் ஆகியோரிடம் கருத்துக்களைத் தெரிந்துகொள்ள வேண்டி 25—1—1980-ல் நடந்த பூர்வாங்கக் கூட்டத்தில், அங்கத்தினர்களால் ஆய்வுப் பொருள் பின்வருமாறு தொகுத்துக்கொள்ளப்பட்டது.

(1) சிவாச்சாரியர் பிறவியினாலேயே சிவாச்சாரியர் ஆகிறாரா ? சிவாச்சாரியர் ஏதாவது ஒரு தனிக் குலத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டுமா ? அக்குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் பூசையில் உரிமையுண்டா ? அல்லது பயிற்சி யினாலும் தகுதியினாலும் மற்றக் குலத்தைச் சேர்ந்தவர்கள் சிவாச்சாரியர் ஆகிறார் களா, ஆக முடியுமா ?

(2) பட்டாச்சாரியர் பிறவியினாலேயே பட்டாச்சாரியர் ஆகிறாரா ? பட்டாச்சாரியர், ஏதாவது ஒரு தனிக் குலத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டுமா ? அக்குலத்தைச் சேர்ந்தவருக்கு மட்டும் பூசையில் உரிமையுண்டா ? அல்லது பயிற்சி யினாலும், தகுதியினாலும், மற்றக் குலத்தைச் சேர்ந்தவர்கள் பட்டாச்சாரியர் ஆகிறார்களா, ஆக முடியுமா ?

(3) பிறவி, பயிற்சி, தகுதி, பணி ஆகிய நான்கும் சேர்ந்திருப்பதால், சிவாச்சாரியராக—பட்டாச்சாரியராக ஆகின்றனரா ? அல்லது பயிற்சி, தகுதி இருந்தால் போதுமா ?

(4) சிவாச்சாரியர் தவிர, பிராமணர் உட்பட மற்ற வகுப்பினர்களில், தேவையான அறிவும் பயிற்சியும் தகுதியும் இருந்தால் அவர்களை சிவாலயங்களில் அர்ச்சகராக நியமிக்கலாமா ?

(5) இதேபோல், பட்டாச்சாரியர் தவிர மற்றவர்கள் வைணவ ஆலயங்களில் பூசை செய்யலாமா ? (வைணவர்கள் மற்றும் ஸ்ரீவைணவர்கள்.).

(6) பட்டாச்சாரியர், சிவாச்சாரியர் ஆகியோர்தான் பூசை செய்ய வேண்டும் என்று ஆகமத்தில் வரையறுக்கப் பெற்றுள்ளதா ?

(7) ஆகமப்படிக்கான பூசை எந்தக் காலத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது?

(8) " கோயில்கள் " என்று சொல்லும்போது, ஆகமப்படிப் பூசை நடைபெறுகிற கோயில்கள் பற்றி நாம் பேசுகிறோமா ? அல்லது மற்றக் கோயில் களையும் சேர்த்துப் பேசுகிறோமா ?

(9) சிவாச்சாரியர்—பட்டாச்சாரியர் மாமூலாகப் பூசகர்களாக இல்லாத கோயில்களுக்கு, எல்லா இனத்தவர்களையும் பூசகர்களாக நியமிக்கலாமா ?

(10) பிறவியினால் சிவாச்சாரியர்—பட்டாச்சாரியர் என்ற நிலையில் இல்லாத மற்றவர்கள் அத் தொழிலுக்குரிய பயிற்சி, அறிவு, தகுதிகள் உடையவராக இருந்தாலும், அவர்கள் மூர்த்தியைத் தீண்டினால் புனிதம் கெட்டு விடுமா ?

(ஆ) அழைப்பின்பேரில் வந்த அறிஞர் கருத்து.—15–3–1980ஆம் நாளில் கூடிய
வல்லுநர் குழுவின் கூட்டத்தில், குழுவின் அழைப்புக்கிணங்கி வந்திருந்த சமய அறிஞர்கள்
தெரிவித்த கருத்துக்களின் சாரம் பின்வருமாறு:—

(1) எல்லாச் சைவ—வைணவ ஆகமங்களின்படியும் சிவாச்சாரியராக அல்லது
பட்டாச்சாரியராகப் பிறந்து, ஆகமங்களில் விதித்திருக்கிற விதிமுறைகள்படி தகுதி
யுள்ளவர்களைத் தவிர, வேறு பிராமணர்களையோ அல்லது பிற சமூகத்தில் பிறந்தவர்
களையோ, சைவ—வைணவ ஆகமப்படி பூசை நடைபெறுகிற கோயில்களில் பூசர்களாக
நியமனம் செய்வது ஆகமப்படி சரியல்ல.

(2) வைகானச ஆகமப்படி நடக்கிற தமிழ்நாட்டு வைணவக்கோயில்களில்,
வைகானச ஆகமத்தில் விதித்திருக்கிற விதிமுறைகளின்படி, தகுதியுள்ள வைகானசர்
கள்ளத்தான் அர்ச்சகர்களாக நியமித்தல் வேண்டும் என்று வைகானசஆகமம் கூறுகிறது.
மேற்படி கோயில்களில் வைகானச குடும்பத்தைச் சார்ந்தவர்களைத் தவிர, வேறு
வைணவர்களோ, வேறு குலத்தவர்களோ (ஜீயராக இருந்தலுாம்கூட) கோயில்களில்
பட்டாச்சாரியராக இருப்பது ஆகமப்படி சரியல்ல. அவர்கள் திருமேனியைத் தீண்டக்
கூடாது என்று வைகானச ஆகமம் கூறுகின்றது.

(3) பாஞ்சராத்திர ஆகமப்படி நடக்கிற தமிழ்நாட்டு வைணவக் கோயில்களில்
காத்தியாயன சூத்திரம், காண்வ, சுக்கில, யஜுர் சாகையைச் சார்ந்த ஔபகாயனர்,
சாண்டில்யர், பாரத்வாசர், கௌசிகர், மௌஞ்சியாயனர் என்னும் பஞ்சகோத்திரத்தைச்
சேர்ந்த பாஞ்சராத்திர ஆகமத்தில் விதித்திருக்கிற விதிமுறைகள்படி, தகுதியுள்ள
பிராணமர்கள்தான் முக்கியமான அர்ச்சகர்கள். பிரதிட்டை, மகாசம்புரோக்ஷணம்,
சிறப்பு உற்சவம் என்பவற்றை இவர்கள்தான் செய்தல் வேண்டும். இவர்களே முக்கியமான
அர்ச்சகர்களாகிய உத்தமாதிகாரிகள் ஆவர். இந்த உத்தமாதிகாரர்களிடம் தீட்சை
பெற்ற பிறர் வைணவ ஆகம விதிமுறைகளின்படி தகுதி பெற்ற பிராமணர்கள், கௌண
அதிகாரிகளாக (மத்தியமாதிகாரிகளாக) இருந்து திருமேனியைத் தொட்டு, நித்தியபூசை
அபிடேகம், சாதாரண உற்சவங்கள் ஆகியவற்றைச் செய்யலாம் என்று பாஞ்சராத்திர
பகவத் ஆராதனக் கிரமம் என்ற நூலில் விதிக்கப்பட்டிருக்கிறது.

(4) ஆகமப்படி நடைபெறாத சைவ—வைணவக் கோயில்களில், நான்கு
அல்லது ஐந்து ஆண்டுகள், உரிய சமயப் பயிற்சி கொடுத்து, ஒழுக்கம் உள்ள எந்தச்
சமூகத்தைச் சேர்ந்தவர்களையும் அர்ச்சகர்களாக நியமிக்கலாம்.

(இ) சமயத் தலைவர்களைப் பல்வேறு தேதிகளில் அவர்களுடைய இடங்களில்
சென்று அணுகி, கருத்துக்களை அறிய விரும்பியபோது, அவர்கள் எல்லோருமே மேலே
கண்ட நான்கு கருத்துகளையும் அங்கிகரித்தார்கள் அவர்களுடைய பிற கருத்துக்
களைக் கீழே காணலாம்.—

(1) சைவ ஆச்சாரியர்கள் கருத்து.—(அ) தருமபுரம் ஸ்ரீ ஆதினகர்த்தர்
அவர்கள்.—தமிழ்நாட்டுப் பூசை முறையிலுள்ள ஓசைச் சிறப்பினால், வெளிநாட்டாரும்
இம்முறையைப் பெரிதும் விரும்புகிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள ஆலய ஆன்மீகநிலை
வேறெங்கும் இல்லை; இந்த அடிப்படையைக் காப்பாற்ற வேண்டும்.

(ஆ) மதுரை ஸ்ரீ ஆதினகர்த்தர். அவர்கள்.—எங்கள் மடத்தைச் சார்ந்த
சிறு தெய்வக் கோயில்களில் பிற இனத்தவர் பூசை செய்கிறார். பாரம்பரியத்தை
மாற்றுவது சரியல்ல.

(இ) குன்றக்குடி ஸ்ரீ ஆதினகர்த்தர் அவர்கள்.—கடல் கொண்ட தென்குமரி
நாட்டில் திருக்கோயில்கள் இருந்திருக்கக் கூடும். அங்கிருந்தே ஆகமங்கள் வழிவழி
தமிழ் முனிவர்களால் கொண்டு வரப்பட்டு, காலப் போக்கில் சரிவரப் பேணப்படாமல்
அழிந்துள்ளன. ஆகமங்கள் ஒரு காலத்தில் தமிழில் இருந்திருத்தல் வேண்டும். அவை
களில் ஆர்வம் உடையவர்களுக்கே புலப்பட வேண்டும் என்று, ஆரியமொழியில் பிற்காலத்
தில் எழுதி வைத்தார்கள். ஆரியர்களுக்கு ஆகமங்களில் அறிமுகமும் தொடர்பும்
இல்லை. வேதவழிப்பாட்டில் ஈடுபாடு கொண்ட அவர்களுக்கு ஆகம வழிபாட்டில்
உடன்பாடு இல்லை. ஆகமங்கள் ஒரே காலத்தில் தோன்றின என்பதும், அவைகள்
ஒரேபடித்தானவாக இருந்தது என்பதும் ஏற்க இயலாது. பிறப்பினால் சிவாச்சாரியர்
ஆகிறார் என்பது பொருத்தமன்று. சிவாச்சாரியர் குடியில் தோன்றுபவர்களைச் சிவ
சிருஷ்டி என்று கூறுவது உலகியல் வழக்கு. ஏழு வயது முதல் தீட்சைகளும்
ஆச்சாரிய அபிடேகமும் பெற்று ஒழுகி வருபவரே சிவாச்சாரியர் ஆவர். உயிர்ப்
பலியும் தீண்டாமையும் சட்ட மூலம் மாற்றப்பட்டுள்ளதுபோல, திருமுறைகளுக்கும்
மெய்கண்ட சாத்திரங்களுக்கும் சிவாகமங்களுக்கும் முரணில்லாமல், காலத்துக்குத்
தேவையான சீர்திருத்தம் செய்வது தவறாக மாட்டாது. சீர்திருத்தம் செய்யும்போது,
சிவாச்சாரியர்களுக்குரிய முன்னுரிமையைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

(2) வைணவ ஆச்சாரியர்கள் கருத்து.—(அ) வானமாமலை ஸ்ரீமத் ஜீயர் சுவாமிகள்.—ஆகம விதிகளுக்குப் புறம்பாக எந்த மாற்றம் செய்தாலும் புனிதம் கெடும். பூசை, மாந்திரிகம் தாந்திரிகம் என இருவகை. மாந்திரிக பூசை ஆகம விதிப்படி, மந்திரம் சொல்லிப் பூசை செய்வது, தாந்திரிக பூசை மந்திரமின்றித் தூபம் தீபம் மட்டும் பயன்படுத்திச் செய்வது. மடத்தில் சிறுதெய்வக் கோவில்களில் பல்வேறு இனத்தார் பூசை செய்கிறார்கள். அவ்வாறு செய்யும் மரபுகளை மாற்றுவது சரியாகாது.

(ஆ) திருவரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள்.—ஆகமங்கள் ஆலயங்கள் மூலம் நமது அருங்கலைகளையும் பண்பாட்டையும் காப்பாற்றி வந்துள்ளன. சிற்பி வடித்துத் தரும் சிலையில் தெய்வ சாந்நித்தியத்தை வருவிப்பவர் அர்ச்சகர். வடமொழி இறைவனை வருவித்துத் தருகிறது. ஆனால் தமிழிலுள்ள பாசுரங்கள் இறைவன் அனுக்கிரகத்தைப் பெற்று அளிக்கின்றன. அர்ச்சகர்களுக்குப் பயிற்சி அளிப்பதும், அவர்களுக்குப் போதிய வாழ்க்கை வசதி அளிப்பதும் அரசின் முக்கியமான கடமைக ளாகும். அர்ச்சகர் ஆகமத்தில் கூறப்பட்டுள்ள இலக்கணம் பொருந்தியவராய் இருக்க வேண்டும்.

(இ) அகோபில மடம் ஸ்ரீமத் ஜீயர் சுவாமிகள்.—அரிசனங்களும் இந்துக் களே. தாமும் அரிக்குத் தொண்டர் என்ற முறையில் ஓர் அரிசனன், என்று சொல்லிக் கொள்ளலாம். பூசையில் உத்தமாதிகாரிகளான அர்ச்சகர்களுக்குதான் எல்லாச் சுதந்திரமும் உண்டு. ஜீயரான நமக்குக்கூட அவர்களுக்குள்ள பூசா உரிமை இல்லை. பிறவித் தகுதி முக்கியமானது. பிறவியோடு ஞானமும் பயிற்சியும் திட்சையும் முக்கியம். எல்லாக் கோயில்களும் ஆகம விதிப்படி அமைக்கப்பட்டனவையே, ஆகம விதிப்படி பிரதிட்சை செய்யப்படாத கோயில் இல்லை.

(3) அத்வைத மடாதிபதிகள் கருத்து.—வெளிமாநிலங்களில் சென்று, தமிழ் நாட்டுத் தொடர்புடைய சமயத் தலைவர்களைச் சந்தித்துப் பெற்ற கருத்துக்களின் சாரம்,—

(அ) காஞ்சி ஆச்சாரிய சுவாமிகள்.—15–3–1980 ஆம் நாளில் வல்லுநர் குழுக் கூட்டத்தில் பிற அறிஞர்களை கலந்து தொகுத்த கருத்துக்களின் முதல் கருத்தை ஏற்றுக் கொள்வதாகவும், இரண்டாவது, மூன்றாவது கருத்துக்கள் வைணவத் தொடர்பாக உள்ளதால் அதைப்பற்றித் தாம் கருத்துத் தெரிவிக்கவில்லை என்றும் சொல்லி, 4 ஆவது கருத்துப்பற்றிப் பின்வருமாறு கூறினார்கள் :

தமிழ்நாட்டில் சிறு தெய்வக் கோயில்கள்கூட ஆகம விதிப்படியே அமைந் துள்ளன. அந்தந்தக் கோயில்களில் இன்று பூசை செய்கிற அந்தந்த வகுப்பினரே பூசையைச் செய்யலாம். ஆகம விதிகளின்படி பிறவியினால் அமைகிற தகுதி இன்றி யமையாதது. ஆகமப் பயிற்சி அளிக்கும்போது பிறவியினால் தகுதிப்படைத்தவர்களுக்கே பயிற்சி கொடுக்க வேண்டும்.

(ஆ) காஞ்சி பெரியவர்கள்.—ஆலயங்களில் பூசை செய்வது ஊதியத்திற் காகச் செய்யும் ஒரு தொழிலல்ல. மற்றத் தொழில்களுடன் இதை ஒப்பிடக்கூடாது. பூசைக்காக சம்பளம் வாங்குவது தோஷம் என ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ளது. இதை ஒரு தொழிலெனக் கருதி, பிற தொழில்களையொத்த சம உரிமை கோருவது சரியல்ல. கோயில் ஒரு பிரார்த்தனைக் கூடமல்ல ; பூசாக்கிரகம், பஜனைமடங்கள் ஆகியவைகளில் யார் வேண்டுமானாலும் பூசை செய்யலாம். அங்கு நடைபெறுவது சங்கீர்த்தனம். அது பூசையல்ல. தமிழ்நாட்டில்தான் ஆகமப் பூசை விரிவாகவும் சிறப்பாகவும் தூய்மையோடும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டின் பண்பாடு பிறநாட்டுப்பண்பாடுகளைவிட மிக உயர்ந்தது. அவ்வுயர்வுக்குக் காரணம் இப்பண்பாடு சமய அடிப்படையில் அமைந்ததுதான். பிறநாட்டார் இதைக் கற்பதற்கு இங்கு வருகிறார்கள். ஆகவே ஆகமமுறைப் பூசையில் மாற்றம் செய்ய முயலுமுன், அம்மாற்றத்தால் இந்தப் பண்பாடு உயருமா அல்லது தாழ்வு அடையுமா என்பதைச் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

(இ) சிருங்கேரி ஆச்சாரிய சுவாமிகள்.—பரார்த்த பூசை சிவப் பிராமணர் களாலேயே செய்யப்பட வேண்டும். ஆனால் சில பெருங் கோயில்களில் இவர்கள் அல்லாத சுமார்த்தப் பிராமணர் பூசையும் இன்று நடைபெறுகிறது. ஆகவே தகுதி யுடைய சிவப் பிராமணர் கிடைக்காதபோது, சுமார்த்தப் பிராமணருக்குத் தீட்சை, பயிற்சி முதலான தகுதிகளைக் கொடுத்து, அவர்களைக் கொண்டு பூசைசெய்விக்கலாம். ஏனெனில் இவர்களுக்கே வேதம் ஓதும் அதிகாரம் உண்டு. பூசை செய்வதற்கு சிவப் பிராமணர் கிடைக்கவில்லை என்று கோயிலை மூடி விடுவது சமூகத்திற்கு நல்லதல்ல. சிவாச்சாரியர்கள் ஐந்துமுனிவர்மரபில் வந்த ஐந்து கோத்திரத்தார். ஆனால் அந்த முனிவர்கள் கீழ்ச்சாதியில் தோன்றியவர்கள். ' ரிஷிமூலம் பார்க்கக் கூடாது ' என்பது பழமொழி. மற்றவர்கள் பூசை செய்யும் கோவில்களில் யார் யார் எங்கெங்குப் பூசை செய்கிறார்களோ அங்கெல்லாம் அவர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களையே பூசை செய்ய நியமிக்கலாம். எதையும் நாம் மாற்றுவதற்கு முன் இன்னும் மேலான ஒரு நிலையை ஏற்படுத்த முடிந்தாலொழிய அதை மாற்றக் கூடாது.

(ஈ) கயிலாச ஆசிரமம் திருச்சி சுவாமிகள்—கர்நாடக மாநிலம், பங்களூரை அடுத்த கஞ்சனகல்லி கயிலாச ஆசிரமம்.—திருச்சி சுவாமிகள் அவர்களது கருத்து பின்வருமாறு:—

ஆலயங்களில் பூசை செய்யும் சிவாச்சாரியர்களுக்குப் பிறவித் தகுதியோடு கூட ஆகமங்களில் சொல்லப்பட்ட மற்றத் தகுதிகளும் இன்றியமையாதவை. ஆகம ஞானமின்மை பயிற்சியின்மை தகுதிக்குறைவு ஆகியவை இருந்தால் பிறவியினால் வரும் தகுதி மட்டும் பயன்தராது. சிவத்துவிஜர்கள் கிடைக்காதபோது, இராமாநுசர் புரட்சி செய்தபடி, சாதி இன வேறுபாடு கருதாமல் சிறுவர்களுக்குப் போதுமான நீண்டகாலப் பயிற்சி கொடுத்து, ஆச்சாரிய லட்சணப்படி அவர்களைத் தகுதியுடையவர்களாக்கி, படிப்படியாக பூசைமுறையில் பக்குவப்படுத்தி, பின் பூசை வாய்ப்பைத் தரலாம். இதற்குச் சாதி அடிப்படைத் தேவையில்லை. பிரசித்த பெற்ற முனிவர்களில் பெரும்பாலோர் தாழ்ந்த குலத்தில் பிறந்தவர்கள். உயர் பிறப்பு இருந்தும் தகுதியால் நீசனாய் இருப்பவனைவிட பிறப்பால் நீசனாய் இருந்தும் தகுதியால் உயர்ந்திருப்பவனே மேலானவன். சிறு தெய்வக் கோயில்களில் வெவ்வேறு இனத்தார் பூசை செய்து வருகின்ற நிலையில், தொன்மையாகப் பூசை செய்துவரும் ஓர் இனத்தாரை மாற்றி, மற்றோர் இனத்தாரைப் புதிதாக நியமித்தல், பொதுமக்கள் மனத்தில் அதிருப்திக்கு இடம் தரும். மக்களுடைய தெய்வ நம்பிக்கையும் குறைந்து போகும். ஆகமத்தை அனுசரிக்காமல் சில காரியங்கள் நடந்தாலுங்கூட அவை விதியாகமாட்டாது. ஆனால் சிவாலயங்களில் பூசை செய்வதற்குச் சிவாச்சாரியர் கிடைக்காதபோது, அதனால் கோயிலையே பூசை இன்றி மூடிவிடாமல், வேதமறிந்த சுமார்த்தப் பிராமணரையேனும் வைத்துப் பூசை செய்வது சமூகத்திற்கு நல்லது.

## XXI. ஆய்வில் கண்ட தெளிவான நிலைமைகள்.

1. ஆகமத்தில் ஆச்சாரிய லட்சணம் என்பதாகச் சொல்லப்பட்ட தகுதிகளுக்கு உட்பட்டு, சிவாலயங்களில் சிவாச்சாரியர்களும், வைணவ ஆலயங்களில் பட்டாச்சாரியர்களும் பூசை செய்ய வேண்டும் என்பது வடமொழி ஆகம விதி.

2. இன்று ஆகமங்கள் வடமொழியில் இருப்பினும், மிகப் பழங்காலத்தில் ஆகமங்கள் தமிழில் இருந்தன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. ஆனால் காலப் போக்கில் அவை மறைந்து வடமொழி ஆகமங்கள் ஆட்சிக்கு வந்தன. இவை பலநூறு ஆண்டுகளாக செவி வழியாக வந்தமையால் இவற்றுள் இடைச் செருகல்கள் பல புகுந்துள்ளன என்று தெரிகிறது. எல்லா ஆகமங்களும் கிடைக்கவில்லை, கிடைத்தவற்றில் எல்லாப் பாகங்களும் இல்லை, அச்சாகவும் இல்லை.

3. ஆகமங்களில் சிவாச்சாரியர் பட்டாச்சாரியருக்கு, உடல் கல்வி சமயவுணர்வு பற்றிய தகுதிகள் வரையறை செய்யப் பெற்றுள்ளன; இன்ன தகுதிக் குறைபாடு உள்ளவர்கள் பூசை செய்யக் கூடாது என்றும் விதிக்கப் பெற்றுள்ளது. ஆனால் இன்று நடைமுறையில், தகுதியில்லாதவர்களும், தகுதிக் குறைபாடு உள்ளவர்களும், பல கோயில்களில் திருமேனியைத் தொட்டுப் பூசை செய்கிறார்கள். இது ஆகமத்திற்கு முரண். ஆகமப்படி இதனால் மூர்த்தியின் புனிதம் கெடுகிறது.

4. ஆகமங்கள் விதி வகுத்த காலத்தில், ஆலயங்கள் குறைவாகவே இருந்தன. நாளடைவில் மக்கள் தொகை மிகவும் பெருகி, அவர்கள் வழிபடும் இடங்களும் பெருகி, கோயில்கள் எண்ணிக்கையில் முன்னிருந்ததைவிட இன்று பன்மடங்கு அதிகமாகியுள்ளன. எடுத்துக்காட்டாக, இந்து அறநிலைய நிர்வாகத் துறையின் ஆட்சியில் 20 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த கோயில்கள் சுமார் 5,000. இன்று அவை 33,000-க்கும் அதிகமாகப் பெருகியிருக்கின்றன.

5. (அ) இந்த நிலைமைக்கு மாறாக, கோயில்களில் பூசை செய்யும் சிவாச்சாரியர், பட்டாச்சாரியர் எண்ணிக்கை மிகவும் குறைந்துபோயிருக்கிறது.

(ஆ) தமிழ்நாட்டில் இடைக்காலத்தில் ஏற்பட்ட அந்நியர் படையெடுப்புகளால், சிவாச்சாரியர் பட்டாச்சாரியருடைய வாழ்க்கையும் பூசையும் நிலைகுலைந்து, அவர்களுடைய பூசை தடைப்பட்டு, நின்றுபோய், ஞானமும் பயிற்சியும் குறைந்துவிட்டன.

(இ) பூசகருக்கு இருந்த கோயில் மானியங்கள் இல்லாமற்போய், அவர்கள் சம்பளம் பெறவேண்டிய நிலை ஏற்பட்டு, ஆகமங்களில் குறிப்பிட்ட கூலிக்குப் பூசை செய்தல் என்ற (தேவலகத்துவ) தோஷம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

(ஈ) பெரும்பாலோருக்கு, வசதியாக வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய வருவாய் கிடைக்காமல், அவர்களில் திறமை மிக்கவர்கள் வேறு அலுவல் தேடிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய பல காரணங்களால், கோயில்களுக்கு வேண்டிய தகுதி பெற்ற சிவாச்சாரியர்-பட்டாச்சாரியர் கிடைப்பது வரவர அருமையாகி வருகிறது.

6. அன்றியும் சிறப்பான பல சிவாலயங்களில், சிவாச்சாரியர் அல்லாத சுமார்த்த பிராமணர் பூசை நடைபெறுகிறது. உதாரணம்: சிதம்பரம், இராமேசுவரம், திருவிழிமிழலை, கன்னியாகுமரி, திருவானைக்காவல், திருச்செந்தூர். ஆதலால் சிவாச்சாரியர் மட்டுமே பூசை செய்யவேண்டும் என்றவிதிக்கு மாறான நிலை தொன்று தொட்டே இருந்து வருகிறது.

7. குறிப்பிட்ட சமூகங்களுக்கு என்று ஏற்பட்ட கோயில்களில் அவ்வச் சமூகத்தாரே தொடர்ந்து பூசை செய்து வருகிறார்கள். உதாரணம்: விசுவகர்மாபூசை செய்கிற காமாட்சியம்மன் கோயில், குயவர் பூசை செய்கின்ற அய்யனார் கோயில் முதலியன.

8. சிவாச்சாரியர்-பட்டாச்சாரியர் அன்றி, வேறுபல இனத்தாரும் பல கிராமக் கோயில்களில் பரம்பரையாகப் பூசை செய்து வருகிறார்கள். உதாரணம்: சைவர், வீரசைவர், உவச்சர், வன்னியர்விசுவகர்மா, நாயக்கர், குயவர், இசைவேளாளர், ஆதி திராவிடர்.

9. முன்னமே பிற இனத்தார் பூசை செய்த கோயில்களில் இக்காலத்தில் சிவாச்சாரியர் ஆகமபூசை நடத்தி வருகிறார்கள். எடுத்துக்காட்டு: பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயில், திருவேற்காடு கருமாரியம்மன் கோயில் முதலியவை.

10. கருவறைக்குள் சிவாச்சாரியர் அல்லாத பிறர் புகுந்தாலும் திருவுருவத்தைத் தொட்டாலும் மூர்த்தியின் புனிதம் கெடும் என்று ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ளது. இதற்கு மாறாகப் பல கோயில்களில் பணிகள் நடைபெறுகின்றன. தொன்மையான பல சிவாலயங்களில் சுமார்த்தப் பிராமணர் அபிடேக தீர்த்தம் கொடுத்தல், பரிவட்டம் துவைத்து உலத்திக் கொடுத்தல், கருவறையை சுத்தம் செய்தல், நைவேத்தியப் பாகம் செய்து கருவறைக்குள் கொண்டு வந்து தருதல், கருவறைக்குள் திருவிளக்கு இடுதல் முதலான பணிகளைச் செய்கிறார். இவ்வளவும் ஆகம விதிகளுக்கு மாறானவை.

11. தமிழ்நாட்டில் வருணங்கள் என்ற கொள்கை என்றுமே நிலவியதில்லை. பிராமண குலம் என்ற பெயர் இருந்தபோதிலும்கூட, க்ஷத்திரிய வைசிய சூத்திர குலங்கள் இருந்ததில்லை. மக்களை அவரவர் தொழிலால் குறிப்பிடும் நிலை இருந்திருக்கிறதே தவிர, வருணத்தால் குறிப்பிடும் நிலை இருந்ததில்லை. வருணம் என்ற பெயரையும் சூத்திரர் என்ற பெயரையும் ஆரிய மரபை ஒட்டி, ஆன்றோர் சிலர் சொல்லியபோதிலும், ஆழ்வார், நாயன்மார் வரலாறுகளின் மூலம் நாம் அறிவது பக்தியும் ஞானமும் அனைத்திலும் மேம்பட்டவை என்பதும் உயர்ந்த குலத்தில் பிறந்தும் தகுதியால் தாழ்ந்து இருப்பதைவிட, தாழ்ந்த குலத்தில் பிறந்து தகுதியால் உயர்ந்து இருப்பவரே வணங்கத்தக்கார் என்பதும் ஆகும்.

12. சாதியால் உயர்வுஇல்லை, பக்தி ஞானத்தால்தான் பெருமை என்ற கொள்கையை நாட்டில் இராமாநுசர் தம்முடைய பல செயல்களால் நிலைநாட்டி இருக்கிறார். இராமாநுசர் தம்முடைய வாழ்க்கையில் திருமால் கோயில் பூசை நெறிகளில் ஆகமத்துக்குப் புறம்பான பல மாறுதல்களைச் செய்திருக்கிறார். உதாரணம்:

(அ) திருநாராயணபுரத்தில் செய்நன்றி பாராட்டித் தீண்டாத வகுப்பினருக்கு ஆலயப்பிரவேசம் அளித்தமை (இராமாநுசார்ய திவ்விய சரிதை).

(ஆ) திருவரங்கப்பெருமாள் ஆலயத்தில், சுமார்த்தராகிய திருவரங்கத்தமுதனாருக்கு உரிமையாக இருந்த புரோகிதம் காணியைப் பெற்றுத் தமக்குச் சீடராய் இருந்த கூரத்தாழ்வாருக்கு அளித்தமை

(இ) திருவரங்கம் முதலான பல கோயில்களில் வைகானச பூசை முறையை மாற்றி, பாஞ்சராத்திர பூசையாக ஆக்கியமை.

(ஈ) துலுக்க நாச்சியாரின் அன்பைப் பாராட்டித் திருவரங்கம் கோயிலில் அவளுக்கு வழிபாட்டினை ஏற்பாடு செய்தமை.

இவைபோன்ற மாறுதல்கள் காலத்தின் தேவைக்கு ஏற்ப சமூக நலனுக்காக ஆச்சாரியரே செய்து காட்டியவையாகும்.

13. வைகானச பூசையைப் பாஞ்சராத்திர பூசையாகப் பல கோயில்களில் மாற்றிய போது, வைகானச சூத்திரத்திலிருந்து வேறு சூத்திரத்திற்குரியதாகப் பூசை முறையும் மாறியிருக்கிறது. இது ஆகமவிதிக்கு மாறாக நடந்தது என்பது நினைவு கூறத்தக்கது.

14. ஆகமத்துக்கு மாறாக எதுவும் செய்யக் கூடாது என்ற கருத்தைத் தெரிவிக்கும் போது, இன்று உண்மையிலேயே எத்தனை விதங்களில் ஆகமவிதிகள் மீறப்பட்டுள்ளன என்று தெரிந்து கொள்வதும் அவசியம். ஆகம விதிகளுக்கு வேறுபட்டு நடைபெறுகின்ற செயல்களையும், ஆகமங்களுக்கு மாறான வேறு செயல்களையும் இங்குத் தொகுத்துக் கூறலாம்;

(அ) பூசகர் ஊதியம் பெறுவது கூடாது, அதனால் தேவலகத்துவதோஷம் வரும், ஆலயத்தின் புனிதம் கெடும் என்று ஆகமங்கள் விதித்திருக்க (காரணாகமம், பூர்வபாகம், புண்ணியாபிஷேக விதிப்படலம், பக்கம் 309) பெரும்பான்மையான பெருங்கோயில்களில் கூட பூசை செய்யும் பூசகர் மாதச் சம்பளமே பெற்று வருகிறார்.

(ஆ) மனைவியில்லாதவர் (அபத்நிகன்), பிரம்மச்சாரி ஆகியோர் நைமித்திகம் முதலான பூசை செய்யக்கூடாது என்பது ஆகமவிதி. ஆனால் இவர்கள் இன்று பல கோயில்களில் நித்திய நைமித்திக பூசை ஆகிய இரண்டும் செய்கிறார்கள். ஆகம விதிக்கு முரணான உடல் குறைபாடு உடையவர்களும் பூசை செய்கிறார்கள்.

(இ) பூசகர், மந்திரங்களை எழுத்துச்சோரமில்லாமல் திருத்தமாக உச்சரிக்க வேண்டும் என்பது ஆகமவிதி. பூசகரிற் பலர் மந்திரங்களைப் பிழையாகச் சொல்கிறார்கள்.

(ஈ) பூசகர், ஒரு தெய்வத்திற்குரிய மந்திரத்தை மற்றொரு தெய்வத்துக்குச் சொல்வதையும் பார்க்கிறோம். தேவி மந்திரத்தை துர்க்கைக்கும், காளிக்கும், மாரிக்கும் வித்தியாசம் இல்லாமல் சொல்லிவருகிறார்கள். அல்லாமலும் நடராசர், தட்சிணாமூர்த்தி முதலிய பெருந்தெய்வங்களுக்குத் தனியாக மந்திரங்கள் இருந்தும் கூட, பூசகர் எல்லாவற்றிற்கும் ஒரே வகையான மந்திரங்களைச் சொல்லி வருகிறார்.

(உ) சுமார்த்தப் பிராமணர் பூசை செய்யும்போது அவர்கள் வைதீகப் பூசை என்கிறார்கள். அதாவது தாங்கள் போதாயன சூத்திரம், ஆபஸ்தம்ப சூத்திரம் ஆகியவற்றின்படி பூசை செய்து வருவதாகச் சொல்கிறார்கள். அந்த இடங்களில் பிரதிட்டை முதலான கிரியைகள் ஆகமப்படி நடந்திருக்கும்போது, இந்தச் சூத்திரங்களின்படி பூசை செய்வது ஆகம விதிகளுக்கு மாறு. இங்கெல்லாம் ஏதோ ஒரு காலத்தில் அரசியல் சூழ்நிலையில் ஏற்பட்ட தவறு பழக்க வழக்க மாகியிருக்கிறது.

(ஊ) பொதுவாக எல்லாக் கோயில்களிலும் அக்கினி மூலையில் மடைப்பள்ளி அமைந்திருக்கும். அங்குச் சிவாச்சாரியரே நிவேதனம் தயாரித்துக் கொண்டுவந்து நிவேதிக்கவேண்டும் என்பது ஆகமவிதி. ஆனால் இப்போது பெருங்கோயில்களில் மடைப்பள்ளியில் தீட்சைகூட இல்லாத ஒரு சுமார்த்தப் பிராமணர், பரிசாரகர் என்ற பெயரில் அன்னம் சமைத்து வந்து நிவேதனமாகத் தருகிறார். இதைத்தான் சிவாச்சாரியர் பெற்று நிவேதிக்கிறார். முன்னமே காட்டியபடி ஐந்து பிரிவான சிவாச்சாரியர்களுள் பாசகர் என்ற பிரிவுக்குரிய சிவாச்சாரியர் நிவேதனம் தயாரிக்கவேண்டும்.

(எ) சில பெருங்கோயில்களில்கூட மடைப்பள்ளி யிருந்தும் அங்குச் சமைக்காமல் சிவாச்சாரியர் தம் வீட்டிலேயே சமைத்துக்கொண்டு வந்து நிவேதனம் செய்கிறார்.

(ஏ) மிகச் சில பெருங்கோயில்களைத் தவிர மற்றெங்கும், சிவாச்சாரியர் ஒரு தட்டிலுள்ள ஒரே நிவேதனத்தை எல்லா மூர்த்திகளுக்கும் காட்டிவிடுகிறார். துவாரபாலகருக்குக் காட்டுவதையே சிவலிங்கத்துக்கும் காட்டுகிறார்.

(ஐ) திருமாலுக்குப் பட்டாச்சாரியர் பூசை செய்வதே முறை. ஆனால் காஞ்சி ஏகாம்பரேசுவரர் கோயிலின் உட்பிராகாரத்தில் அமைந்துள்ள, மங்களாசாசனம் பெற்ற 108 வைணவ திவ்விய தேசங்களில் ஒன்றாகிய நிலாத்துண்டப் பெருமாள் சந்நிதியில் சிவாச்சாரியரே பூசை செய்கின்றார்.

(ஒ) ஆகம விதிகளில் முக்கியமான ஒன்று பிரதிட்டை முதல் கும்பாபிஷேகம் நித்திய பூசை நைமித்திகம் வரையில் ஒரே ஆகமத்தின்படித்தான் நடத்தவேண்டும், வேறு ஆகமத்தை இடையில் புகுத்தக்கூடாது என்பதாகும். ஆனால் இன்றைய நடைமுறையைப் பார்க்கும்போது இங்கு காமிகப் படி பூசை செய்கிறோம், இங்கு காரணப்படி பூசை செய்கிறோம் என்றெல்லாம் மேலுக்குச் சிவாச்சாரியர்கள் சொல்லுகிறார்களே தவிர, ஒன்றிலிருந்து மற்றொன்று எப்படி வேறுபடுகிறது என்பதை அறிந்து சொல்கிறவர் சிலர்கூட இல்லை. இவ்வாறு தெரிந்து பூசை செய்யாதிருக்கும்போது இது ஆகமத்துக்குப் பொருந்தாது என்பது தெளிவு. உதாரணமாக ஒரு கோயில் பூசகர் ஏதோ காரணத்தால் பூசைக்கு வரமுடியாத போது, மற்றொரு கோயிலிலிருந்து இங்கு வந்து ஒருவர் பூசை செய்கிறார். அவர் தாம் அறிந்தபடி செய்கின்றாரே தவிர, இந்தக் கோயில் ஆகம முறை என்ன என்று தெரிந்து செய்வதில்லை. தனக்குத் தெரிந்து பழக்கமாக உள்ள முறையிலே பூசை செய்கிறார். ஒவ்வொரு கோயிலிலும் இப்போது உள்ள ஆகமபூசை முறை எந்தக் காலத்தில் தொடங்கியது, அதே முறைதான் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று யாரும் ஆதார பூர்வமாக கூறமுடியாது. இவை பற்றி ஆலயங்களிலும் முறையான ஆவணங்கள் இல்லை. பணி செய்கின்ற அர்ச்சகரோ, பட்டாச்சாரியரோ கூறுவதுதான் அப்படியே ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

(ஓ) மற்றுமோர் உதாரணம் : சிதம்பரம் நடராசர் பூசை மகுடாகம பூசை. மகுடாகமமே, தமிழுக்குச் சிறப்புப் பிரிவுகளாகிய இசை நாடகம் இரண்டையும் சிறப்பிக்க வந்த ஆகமம். இந்த இரண்டின் வடிவம் நடராசமூர்த்தி. அதனால் அவருக்கு மகுடாகமம் பிரதானம் என்று சொல்வது பொருத்தமுடையது. பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த இரட்டைப் புலவர்கள் தாங்கள் பாடிய தில்லைக் கலம்பகத்தில்

நடராசப்பெருமான் மகுடாகமப் பூசை கொள்கிறார் என்று பாடியிருக்கின்றனர். ஆனால் தில்லையில் மகுடாகமப்படி பூசை நடைபெறவில்லை பதஞ்சலிபத்ததிப்படி பூசை நடக்கிறது. இது வைதிக பூசை என்று தீட்சிதர்கள் சொல்கிறார்கள். அவர்கள் கூற்று சரியானதாக ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஏனெனில் வேதத்தில் சிவபூசை அல்லது நடராச பூசை இல்லை. அங்கு உள்ள தெல்லாம் அக்கினி காரியமே தவிர, மூர்த்தி பூசை இல்லை. தமிழ்நாட்டில் எந்தக் கோயிலும், சிதம்பரம் நடராசர் கோயில் உள்பட, ஆகமப் பிரதிட்டையே அன்றி வைதிகப் பிரதிட்டையில்லை. சிவாச்சாரியர்கள் வேதமந்திரங் களைச் சேர்த்துக் கொள்வது அதிகப்படியானது. ஆகமங்களிலேயே அவற்றுக்கு வேண்டிய கிரியைகளுக்குரிய மந்திரங்கள் சொல்லப்பட்டு உள்ளன. இங்கு வேத மந்திரம் இன்றியமையாத அங்கம் அல்ல. சிவாச்சாரியர்கள் வேறிடத்தில் கூறிய வேத ஆகம ஒருமைப்பாட்டுணர்ச்சியின் விளைவாகத்தான் வேத மந்திரங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் தமிழ்நாட்டுக்கே உரிய, வெறெந்த நாடும் கண்டிராத, நடராசர்மூர்த்தியின் பூசை வைதிக பூசை என்று கூறுவது பெரும் பிழை மட்டுமல்ல, தமிழ் மக்களுடைய புராதனமான கடவுள் கொள்கைக்கும் பண்பாட்டுக்கும் செய்கிற பெருந் தீமையுமாகும். எப்படியாயினும் வைதிகபூசை என்று சொன்னால் ஆகம விதிப்படி இதுவும் புனிதம் கெடுவதாகும்.

15. **ஆகம விதிகளுக்கு மாறான ஆலய அமைப்புகளும் உள்ளன.** சில பின்வருவன:

(அ) காவல் தெய்வங்களின் கோயில்கள் கிராமங்களில் அல்லது நகரங்களில் இன்ன இடத்தில்தான் அமைய வேண்டும் என்று ஆகமம் விதிக்கிறது. ஆனால் இந்த விதிக்கு மாறாக அக்கிரகாரத்தின் நடுவில் அய்யனார் கோயில் கட்டப்படுவதைப் பார்க்கிறோம். இது ஆகமத்திற்கு மாறானது.

(ஆ) முழுமையாக ஆகமங்களுக்கு முரணான கோயில்கள் தோன்றியுள்ளன. உதாரணமாக, சிவ-விஷ்ணு கோயில் என்று ஒரு கோயில் அமைப்பது சைவாக மத்திலோ, வைணவாகமத்திலோ சொல்லப்படவில்லை. இருப்பினும் இப்படி ஒரு கோயில் சென்னையில் பிரபலமாகி இருப்பதைப் பார்க்கிறோம்.

(இ) ஆகமங்களில் மிகவும் புகழ்வாய்ந்த ஓர் அங்கம் அதன் கட்டட அமைப்பு. என்னென்ன வகைகளில் கட்டடங்களை அமைத்துத் தெய்வப் பிரதிட்டை செய்ய வேண்டுமென்று, காமிகம், காரணம் முதலான ஆகமங்கள் விரிவாகத் திட்டம் வகுத்துத் தருகின்றன. அப்படியே வைணவத்திலும் பல சம்மிதைகள் இது பற்றி உள்ளன. ஆனால் இவை ஒன்றிலும் அடங்காமல் சென்னையில் அஷ்டலட்சுமி கோயில், இரத்தின கிரீசுவரர் கோயில், சிவவிஷ்ணு கோயில் என்று பல கோயில்கள் தோன்றி யுள்ளன. அஷ்டலட்சுமிகோயில் ஒன்றின்மேல் ஒன்றாக லட்சுமியை அடுக்கி வைத்தது போல அமைக்கப்பெற்றிருப்பதைப் பார்க்கிறோம். இது சொந்த மனோ பீஷ்டத்தின் மேல் செய்கிற காரியமே தவிர, எவ்வளவுதான் பிரசித்தம் பெற்றிருந் தாலும், ஆகமசாத்திர சம்மதமானது அன்று.

இது வரை 14 ஆம் பத்தியில் ஆகமபூசை விதிகளுக்கு மாறு என்று குறிப்பிட்ட வற்றாலும், பின்னர் 15 ஆம் பத்தியில் ஆகம ஆலய அமைப்பு விதிகளுக்கு மாறு என்று குறிப்பிட்டவற்றாலும், மூர்த்தியின் புனிதம் கெடுகிறது, தெய்வ சாந்நித்தியமும் இல்லாமல் போகிறது. மேற்குறித்த அத்தனையும் ஆகமத்திற்கு மாறாக இருந்த போதிலும்கூட, பழக்க வழக்கங்களாக நிலைபெற்றுவிட்டன. இவ்வாறு ஆகமத் தவறு கள் நடைபெற்றிருந்தும் அவற்றால் புனிதம் கெட்டதாக யாரும் கருதியதில்லை. ஒவ்வொரு முறையும் பிராயச்சித்தமும் செய்வதில்லை. ஆகவே இந்த நிலைகள் நிலவுவதையும் கருத்தில் வைத்துத்தான், ஆகமவிதியில் கூறப்படாத ஒன்று செயல் முறையில் இருந்தால், ஆகமவிதிக்கு முரணானது என்று ஒதுக்கிவிடக்கூடாது என்ற உண்மை நிலையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

<u>16. சட்டரீதியாக அரசு செய்துள்ள மாற்றங்கள்.</u>—(அ) ஆகமத்தைத் தழுவா தவை :—1. பொதுவாக எல்லாச் சிவன் கோயில்களிலும் சிவாச்சாரியர் மட்டுமே உட்சென்று வழிபாட்டுக் கிரியைகளை நிகழ்த்தலாம்; நடுமண்டபத்தினுள் சுமார்த்தப் பிராமணர் செல்லலாம் ; ஷத்திரியரும் வைசியரும் மகாமண்டபத்தினுள்ளும், சூத்திரர் கோபுரத்திற்கு வெளியில் நின்றும் தரிசனம் செய்ய வேண்டும் என்று பெரும்பான்மை யான ஆகமங்கள் விதிக்கின்றன. தமிழ்நாட்டில் சூத்திரர் என்று ஒரு வகுப்பு முன்னும் இருந்ததில்லை, இன்றும் இல்லை. ஆதலால் இந்த ஆகம விதிக்குப் பொருள் இல்லை. எனினும், ஆகமத்தில் சூத்திரரைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. சூத்திரர் கோபுரத் துக்கு வெளியே இருந்து தரிசனம் செய்ய வேண்டும் என்பது இதில் சொல்லிய விதி. அனைவரின் சிந்தனைக்கும் இது பற்றிச் சில கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறி, நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. இவ்வறிக்கையில் முன்பே சொல்லியபடி தமிழ்நாட்டில் நான்கு வருணங்கள் இருந்ததில்லை. பிராமணர் இருந் தனர்; பார்ப்பனர் என்பது அவர்கள் பெயர். ஷத்திரியர் இல்லை. அரசர் இருந்தார்— சேர, சோழ, பாண்டியர் இவர்கள் முடியுடை வேந்தரேயன்றி, ஷத்திரியர் என்று யாரும் சொன்னதில்லை. தங்களையும் இவர்கள் அவ்வாறு சொல்லிக்கொண்ட தில்லை. பழைய நூல்கள் அரசரென்று சொல்லுமேயன்றி ஷத்திரியர் என்ற ஒரு தனி வருணமாகக் குறிப்பிட்டு எங்குமே சொன்னதில்லை. அது போலவே வைசியர்

என்ற வருணமும் பிற்காலத்தில் செட்டி என்ற பட்டம் தரித்தோர் வைசியர் என்று கொள்ளப்பெறுகிறார்கள். பழந்தமிழ் நூல்களில் வாணிகம், வணிகன் என்ற சொற்கள் உள்ளனவேயன்றி, செட்டியோ அல்லது வைசியரோ சொல்லப்பெறவில்லை. எனவே இந்த வருணப் பிரிவுகள் தமிழ்நாட்டுக்குப் பொருந்தா.

தமிழ்நாட்டில் அவரவர் தொழிலால் மக்கள் தனிப்பிரிவினராகச் சொல்லப்பெற்று வந்தனர். ஆனால் சூத்திரர் என்று ஒரு வருணம் இருந்ததில்லை. சூத்திரர் என்ற கருத்தே சங்க நூல்களில் சொல்லப்பெறவில்லை. இச்சொல் தமிழ்நாட்டில் கி. பி. 11 ஆம் நூற்றாண்டுக்குப் பின்புதான் வழக்கில் வந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. ஆதலால் அக்காலம் வரை ''சூத்திரர்'' என்ற பெயர் கொண்ட சமூகப் பிரிவு தமிழ் நாட்டில் இருந்ததாகக் கொள்வதற்கில்லை.

பிற்காலத்தில் ''சூத்திரர்'' என்ற சொல் நுழைந்துவிட்டது. ஆகவே மேற் சொல்லியவற்றால் இக்கருத்து எங்கிருந்தாலும் அது பிழை என்றே முடிவு செய்ய வேண்டும். ஆகமத்தில் சூத்திரரைச் சொல்லுமிடம் இடைச் செருகல் என்றே கருத வேண்டும். இது யார் யாருக்கு இட்ட பெயர் என்பதை யாரும் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. இழிவான நிலையைக் குறிக்கும் வடமொழிப் பெயரை, தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டு தங்களை அப்பெயரிலேயே குறிப்பிட்டுக் கொண்டனர், மற்றவர்கள் இவர்களை அவ்வாறே அழைக்கவும் செய்தனர் என்பதற்கு எவ்விதச் சான்றும் கிடையாது. ஆக சூத்திரர் என்ற பெயரின்கீழ், பிராமணர், சிவாச்சாரியர் ஆகியோர் நீங்கலாக உள்ள ஏனைய தமிழ் மக்களைப் பாகுபடுத்துவதே தவறென்று தெளிவாகிறது. சேக்கிழார் போன்ற ஆன்றோர்கள் இச் சொல்லைப் பயன்படுத்துவதனாலேயே தமிழர்கள் தான் சூத்திரர் என்று கொள்ள முடியாது. பிறர் வழங்கும் வழக்கை அனுசரித்து இவ்வாறு சொல்லியுள்ளார்கள் என்றாலும், இது பிழையே. தமிழ்நாட்டில் கோயில்களில் அநாதி காலமாக உட்சென்று வழிபடும் உரிமை எல்லோருக்கும் இருந்தது. கருவறைக்குள் செல்லவில்லையே தவிர, பிற இடங்களில் ஆசாரத்தோடு அனைவரும் புகலாம். சில மக்கட் பிரிவுகளைத் தாழ்ந்த குலம் என்று கருதி, அவர்களுக்கு இவ்வுரிமை இல்லாதிருந்தது. ஆயினும் திருப்பாணாழ்வார், திருநீலகண்டயாழ்ப்பாணர் போன்ற ஞானிகளுக்கு உயர்வு கொடுக்கப்பட்டிருந்ததையும் பிற இடங்களில் குறிப்பிட்டிருக்கிறோம்.

ஆகவே, ஆகமங்களில் இன்ன வருணத்தாருக்கு இன்ன இடம், சூத்திரருக்கு வெளியில் இடம் என்று குறிப்பிட்டிருப்பது பிற்காலத்தில் ஏற்பட்ட இடைச் செருகல் என்றே கருத வேண்டும். இலக்கியங்களிலும் பிறவற்றிலும் நாம் காணும் தமிழ் நாட்டு மக்கள் இனப்பாகுபாடு அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்பனவே யாகும். இவர்களிடையில் மேலே காட்டியபடி சூத்திரர் என்ற பெயர் பொருந்துமா, அப்பெயரை எவரேனும் ஏற்றுக் கொண்டிருப்பார்களா என்பதையும் சிந்திக்க வேண்டும். ''சூத்திரர்'' என்ற இனமே இல்லாத தமிழ் நாட்டில் சூத்திரர் என்று சொல்லி, அவர்களுக்கு இடம் வெளியில் என்று சொல்வது மிகவும் பிற்காலக்கருத்து. இது தமிழ் மக்களின் இசைபுடன் ஏற்பட்ட பெயராகாது. ஆகமத்தில் இக் கருத்து விதியாக நுழைக்கப்பட்டிருப்பதால், ஆகமங்களில் இடைச்செருகல் உண்டு என்று நாம் முன்னமே கூறிய கூற்றுக்கு இதுவும் ஒரு சிறந்த சான்றாகும். ஆக, ஆகமத்தில் உள்ள ''சூத்திரர்'' என்ற சொல், பிராமணர், சிவாச்சாரியர்கள் அல்லாத தமிழர்களைத்தான் குறிக்கிறது என்று எடுத்துக்கொள்ள வேண்டியதற்கு நியாயமுமில்லை, அவசியமுமில்லை.

அச்சிட்ட காமிகாகமத்தில் ''அதிக பாடம்'' என்று—மந்திராவதாரப்படலத்தின் பின், பல மந்திரங்களும் சுலோகங்களும் சேர்க்கப்பட்டிருப்பதைக் காண்கின்றோம். இதன் பொருளாவது, பின்னொரு காலத்தில் ஓர் ஏட்டில் அல்லது பல ஏடுகளில் இவை புதிதாகச் சேர்த்து எழுதப்பட்டிருந்தன என்பதாகும். ஆகவே இவை இடைச்செருகல் என்பது தெளிவு. இது போலவேதான் கோயில் வழிபாட்டில் சிலருக்கு உயர்வு கற்பித்தும், சிலருக்குத் தாழ்வு கற்பித்தும் உள்ள இடங்கள் காலப் போக்கில் சமூகத்தில் தோன்றிய சமூகப் பிளவு, பிரிவினை ஆகியவற்றின் காரணமாகப் புதிதாக எழுதிச் செருகப்பட்டன என்று சொல்வது தவறாகாது.

இந்த ஆகம விதியை மாற்றித் தமிழ்நாடு அரசு 1947 ஆம் வருடத்து 5 ஆவது சட்டமாகிய ஆலயப்பிரவேச அனுமதிச் சட்டத்தின்படி, இந்துவாய் உள்ளவர் எவரும் கோயிலினுள் சென்று தரிசிக்கலாம், கோயில் ''புஷ்கரணி''யில் (திருக்குளத்தில்) ஸ்நானம் செய்யலாம் என்றெல்லாம் காலத்திற்கு ஏற்ப மக்களின் உணர்வுகளையும் மதித்துச் சமூக நன்மையும், சமூக சீர்திருத்தமும் வேண்டிச் சட்டம் இயற்றியுள்ளது. இவ்வாறு செய்துள்ள மாறுதல் ஆகம விதிகளுக்கு மாறாக இருந்த போதிலும் கூட, இதை உச்சநீதிமன்றம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஏற்றுக் கொண்டிருக்கிறது. 1959 ஆம் ஆண்டு 22 ஆவது சட்டமாகிய இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 28 (1) பிரிவில் இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(2) தினந்தோறும் அல்லது உற்சவங்கள்தோறும் பூசையின் இறுதியில் சுவாமி திருமுன் காட்டப்பெறுகின்ற 16 உபசாரங்களில் (ஷோடசோபசாரம்) இறுதி உபசார

மாகிய நிருத்தியத்தை தேவதாசி செய்ய வேண்டும் என்று ஆகமங்களில் விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்நாடு அரசு, தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டத்தின்படி தேவதாசி முறையை நீக்கியபோது, இந்தத் நிருத்தியம் நிறுத்தப்பட்டுவிட்டது.

இவை ஆகம விதிகளுக்கு முரணானவை என்பது வெளிப்படை. ஆயினும் இவை சட்டபூர்வமாக அங்கீகாரம் பெற்றுவிட்டன.

(ஆ) பழக்க வழக்கங்களில் மாறுதல்கள்.—பெரும்பான்மையும் சிறுதெய்வக் கோயில்களில் [மாரியம்மன், காளி, பிடாரி, திரௌபதி) கோயில் விழாக்களில், ஆடு, கோழி முதலான பிராணிகளைப் பலியிடும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் இது உயிரிரக்கமற்றது, பெரிதும் அநாகரிகமானது என்று கருதி, 1950ஆம் ஆண்டு 32வது சட்டமாகிய தமிழ்நாடு பிராணிகள் பலியிடுதல் தடுப்புச் சட்டத்தின்படி, தெய்வப் பிரீதிக்காக ஆடு, கோழிகளைப் பலியிடுவது முற்றிலும் தடுக்கப்பட்டு, அப்பலியிடும் செயல் தண்டிக்கத்தக்க குற்றமாகவும் கொள்ளப்பெற்றுள்ளது. வேத யாகங்களில் விதிக்கப்பெற்றுள்ள உயிர்ப்பலியும் நிறுத்தப்பட்டுள்ளது. இச் சட்டம் நெடுநாளைய பழக்க வழக்கத்தைக் காலப்போக்கை அனுசரித்து மாற்றியிருக்கிறது என்பது வெளிப்படை.

(இ) மற்றொன்றையும் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். 1959 ஆம் ஆண்டு 22 ஆவது சட்டமாகிய தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 55 ஆவது பிரிவை 1971 ஆம் வருடத்திய 2 ஆவது திர்ருத்தச் சட்டத்தின் மூலம் சமூக சீர்திருத்த அடிப்படையில் மாற்றி அமைத்ததை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு, அந்த அடிப்படையில் பிற மாநிலங்களுக்கும் சட்டம் கொண்டுவருவது உசிதம் என்று அறிவுரை வழங்கியுள்ளது. இந்த நிலையையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

## XXII. முடிப்புரை.

இதுவரை தெரியவந்த கருத்துக்களைப் பின்வருமாறு சுருக்கிச் சொல்லலாம் :—

(1) காலத்தின் தேவையை அனுசரித்து இராமாநுசர் போன்ற சமய ஆச்சாரியர்கள் ஆகம சாத்திர அனுட்டானத்தில் பெரு மாறுதல்களையும் சீர்திருத்தங்களையும் செய்திருக்கிறார்கள்.

(2) எதிர்ப்பு இருந்தும் கூட, தேவையை அனுசரித்தும், சமூக நலனையும் முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டும், இந்திய அரசு ஹிந்து—லா-வில் சட்டத் சீர்திருத்தங்கள் பலவற்றைச் செய்திருக்கிறது.

(3) காலத்தின் தேவையை அனுசரித்தும், சமூக நலனையும் முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டும், தமிழ்நாடு அரசும் ஆகமத்திற்கு மாறுபட்ட சில சட்டங்களைச் செய்திருக்கிறது.

(4) இப்போது மத மாற்றமும் சமூகக் கிளர்ச்சியும் ஏற்பட்டு, இவற்றின் விளைவாய் வன்முறைச் செயல்களும் நிகழ்ந்திருப்பதால், சமய ஒருமைப்பாட்டினை உருவாக்கும் பொருட்டு மேலும் சீர்திருத்தம் செய்ய ஓர் அவசியம் விளைந்திருக்கிறது. செய்யப்படும் சீர்திருத்தத்தால் ஆகம விதிகளுக்குப் பாதகமில்லை; ஏனெனில் பூசையிலும் சடங்குகளிலும் எந்தத் தலையீடும் இல்லை.

(5) ஏற்கெனவே பல ஆகம முரண்பாடுகள் தாமே எழுந்து, நடைமுறையில் உள்ளன. அவற்றால் புனிதம் கெட்டதாக யாரும் கருதியதில்லை. பிராயச்சித்தம் எங்கும் செய்யப்படுவதில்லை.

(6) எதிர்காலத்தில் பூசை சிறப்பாக நடைபெற வேண்டியும், மக்களின் ஈடுபாட்டைப் பெருக்க வேண்டியும் அர்ச்சகர் நியமனம் பிறவியின் அடிப்படையில் இல்லாது சாதி இன வேறுபாடு இன்றி, பணித் தகுதி அடிப்படையில் அர்ச்சகர்களை நியமிக்கலாம் என்ற கருத்து கிரமமாக ஆகமத்துக்கு முரணாகாது என்பதே இவ்வல்லுநர் குழு எடுக்கும் தெளிவான முடிபாகும்.

## XXIII. பரிந்துரைகள்.

காலத்தின் தேவையை அனுசரித்து அரசே அவ்வப்போது சமூக நலனுக்கும் மக்களுடைய ஆர்வத்துக்கும் வளர்ச்சிக்கும் ஏற்றவாறு சட்டபூர்வமான பல மாறுதல்களைச் செய்து வந்திருக்கிறது. அரிசன ஆலயப் பிரவேசம், தேவதாசி ஒழிப்பு என்பன ஆகம விதிகளுக்கு மாறாக இருந்த போதிலும் கூட, விதிகளை மாற்றிச் சட்டம் செய்ய அரசு தயங்கவில்லை. அதுபோலவே கோயில்களில் தெய்வத்தின் பெயரால் நிகழ்ந்துவந்த உயிர்ப்பலியை அரசு சட்டபூர்வமாக தடை செய்ததும், நெடுங்காலமாக நிலவி வந்த பழக்க வழக்கத்துக்கு மாறான ஒரு சிறந்த மாறுதலாகும்.

இவைகளனைத்தையும் இந்துக்கள் வரவேற்றுள்ளனர். சிறப்பாக குடியாட்சி வந்த பிறகு மக்களுடைய நலனையும் வளர்ச்சியையும் கருதி, பால்யவிவாகத் தடை, பெண்களுக்குச் சொத்துரிமை, விவாகரத்து உரிமை முதலான முன்னேற்றக் கருத்துக்கள் சட்டபூர்வமாக ''இந்து-லா-வில்'' இடம்பெற்றன. இந்தச் சட்ட மாறுதல்கள் செய்யும்பொருட்டு இந்து சமூகத்தில் எந்தவிதக் கலவரமும் அமைதிக்குறைவும் ஏற்படாதபோதும், சமூகத் தேவையையும் சமூக நலனையும் மட்டும் கருதி இந்த சட்டங்கள் செய்யப்பட்டன. இவை, தமிழ்நாடு அரசு மட்டுமல்ல, இந்திய யூனியன் அரசும் செய்தவையாகும். வல்லுநர் குழு, மேற்சொன்ன இத்தனைக் கருத்துக்களையும் ஊன்றி நோக்கி, அரசுக்கு பின்வரும் ஆலோசனைகளைப் பரிந்துரை செய்கிறது.

(1) தமிழ்நாட்டில் இந்து சமய வாழ்விற்கே அடிப்படையாக உள்ள ஆழ்வார்—நாயன்மார்களுடைய பாசுரங்களையும், வாழ்க்கையையும், அவர்களுக்கு முன்னமே தொடங்கித் தொன்மையாக நிலவி வருகின்ற பண்பாட்டையும், சமய வரலாற்றையும், சமய இலக்கியங்கள் காட்டும் மெய்ப்பொருள் தத்துவங்களையும் கூர்ந்து சிந்திக்கும்போது, இன்றைய சூழ்நிலையில் எதிர்காலத்தில் இந்து சமயம் சிறப்பாக வளரும் பொருட்டு, இந்துக்களுக்கு சாதிவேறுபாடு இன்றித் தீவிரமான பயிற்சி அளித்துக் கோயில்களில் பூசகர்களாக நியமிப்பது ஆகமத்திற்கு மாறுபட்டதாகும் என்று கருதுவதற்கு இடமில்லை.

(2) (அ) செயல் திட்டம் என்ற பகுதியில் சொல்லப்பட்ட திட்டத்தின்படி அர்ச்சகராகத் தேர்ந்தெடுப்பவருக்கு ஐந்தாண்டு கால தீவிரமான கல்விப் பயிற்சியும் செயல்முறை பயிற்சியும் அறநிலையத் துறையின் பொறுப்பில் அளிக்கவேண்டும்.

(ஆ) பயிற்சி சம்பந்தமாக சேர்க்கை விதிகள், பயிற்சிப் பாடத்திட்டம், தேர்வுத் திட்டம், பாட புத்தகங்கள் முதலான அனைத்துக் காரியங்களையும் நிர்வகிப்பதற்கு, அறநிலையத் துறை ஆகம சபை ஒன்றை நிறுவ வேண்டும்.

(இ) இப்போது நடந்து வருகின்ற ஆகமப் பாடசாலைகள் அனைத்தையும் ஒரே தரமான நிலைக்குக் கொண்டுவரும்பொருட்டு, அங்கு உள்ள சேர்க்கை முறை, கல்விமுறை தேர்வு முதலியன அனைத்து அம்சங்களையும் முன்கூறிய ஆகமசபை நிர்வகித்து வரவேண்டும்.

(ஈ) இப்போது பூசகராயுள்ளவர்களின் குடும்பங்களிலிருந்துவரும் மாணாக்கருக்கு ஆகம கல்லூரிச் சேர்க்கையில் கூடுமானவரை முன்னுரிமை அளிக்கவேண்டும்.

(உ) செயல்திட்டத்தில் கூறியபடி வெற்றிகரமாகத் தேர்வை முடித்து வருகின்ற அர்ச்சக மாணாக்கர்களுக்கு உடனே வேலைக்கும் தகுந்த ஊதியத்திற்கும் உ_தி ளித்து, பிற எல்லா வசதிகளையும் செய்து தரவேண்டும்.

(ஊ) செயல் திட்டத்தில் கூறியுள்ளபடி அறநிலையத்துறை ஆகமநூல்களை உரையோடு வெளியிட்டு மாணாக்கருக்குத் தேவையான புத்தகங்களையும் அச்சிட்டுத் தரவேண்டும்.

(3) நெடுங்காலமாக சிவாச்சாரியரும் பட்டாச்சாரியரும் செய்து வந்த கோயில் பணியை இன்று நாம் நினைவு கூறாமல் இருக்க முடியாது. நாட்டில் முகம்மதியர்களால் ஏற்பட்ட கொந்தளிப்புக்காலத்தில், பூசைமுறைகள் அழிந்து போகாமல் தொடர்ந்து இருக்குமாறு காப்பாற்றி வந்தது இந்தப் பூசகருடைய அருஞ்சேவை. பிள்ளைலோகாச்சாரியர் என்ற வைணவ ஆச்சாரியர், திருவரங்கத்தில் முகம்மதியர்களால் கலகம் விளைந்தபோது உற்சவமூர்த்தியைத் தூக்கிக்கொண்டு ஓடி மூர்த்தியை அணைத்தபடியே உயிர்விட்டார் என்று வரலாறு சொல்கிறது. அதுபோல, நடராசப்பெருமான் கோயிலுக்குள் முகம்மதியர் தங்கித் தங்களைப் பாதுகாப்புச் செய்து கொண்டிருந்த காலத்தில், கோயில் பூசகர் நடராசமூர்த்தியைத் தூக்கிக் கொண்டு ஓடிக் காப்பாற்றி வைத்திருந்து, பிறகு மீண்டும் கொண்டுவந்து பிரதிட்டை செய்தனர் என்றும், அவர்கள் மூர்த்தியை ஒளித்து வைத்த இடம் அம்பலப்புளி என்று வழங்கிற்று என்றும் வரலாறுகள் சொல்கின்றன. இப்படி பல சமயங்களில் பல ஏழைப் பூசகர்கள் மூர்த்திகளைக் காப்பாற்றியதோடு கூட, தங்களுக்கு ஊதியம் கிடைக்காதபோதும் எப்படியோ ஒரு விளக்கை ஏற்றி, மலரைத்தூவி, தாங்கள் உண்ணும் அன்னத்தை கொண்டு போய் சுவாமிக்கு நிவேதித்து, பூசை மரபைக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். சிவபூசை அல்லது திருமால்பூசை தங்கள் குல தருமம் என்றும், அதை என்ன இடுக்கண் வந்தாலும் கைவிடாது பேணிக்காக்கவேண்டும் என்றும் அவர்கள் உறுதியோடு இருந்து கொண்டிருந்தார்கள். இந்த உறுதியினால் கோயில் வழிபாடும் சமயமும் காக்கப்பெற்றன. ஆதலால் இந்தச் சமய-பண்பாட்டு நிலைகளை அரசு கருத்தில் கொண்டு, பூசகர் சுமாரான வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய வாழ்க்கை வசதியும், தொழிலுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு உண்டு என்ற உறுதியும், சமூகத்தில் போதிய அந்தஸ்தும், குறைந்த அளவிலேனும் அரசு செய்து தரவேண்டும்.

(4) தமிழில் அர்ச்சனை செய்வது ஆகமத்துக்கு உடன்பாடே. ஆதலால் தமிழ் அர்ச்சனைப் பயிற்சியைக் கல்லூரிகளில் பாடத்திட்டத்தின் பகுதியாகச் செயல்படுத்துவதோடுகூட, அத்தலைப்பில் சொல்லப்பட்டபடி, அறநிலையத்துறை அஷ்டோத்தரம், சகஸ்ரநாமம் முதலியவற்றைத் தயாரித்து வெளியிட்டு, கோயில்களில் கடைப்பிடிக்கச் செய்ய வேண்டும்.

(5) உள்துறை ஊழியர்களைப் பொறுத்தவரையில், முக்கியமாக பாசகர் பரிசாரகர் என்ற நிலையில் பணிபுரிபவர்களை, அவர்களுடைய பண்பாடு பக்தி ஆசாரம் இவற்றை அனுசரித்துத் தேர்ந்தெடுக்கவேண்டும். ஆகமத்தில் சொல்லியபடி இவர்களுக்கும் தீட்சை அளிப்பது அவசியம்.

திரு. எஸ். மகாராஜன்

,, என். ரெங்கராஜ பட்டர்

,, வி. விசுவநாத சிவாச்சாரியர்

,, கோ. மு முத்துசுவாமி பிள்ளை

,, டி. எஸ். சாம்பமூர்த்தி சிவாச்சாரியார்

,, அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்

,, மு. அருணாசலம்.

,, எஸ். சுந்தரராஜ பட்டாச்சாரியர்

,, சி. சுவாமிநாத குருக்கள்

,, யு. சுப்ரமணியன்

,, இரா. அர்ஜுனன்

## XXIV அர்ச்சகர் நியமனமுறை பற்றி வல்லுநர் குழுத் தலைவர் தரும் சட்ட சம்பந்தமான குறிப்பு.

1. சென்ற இரண்டு ஆண்டுகளாக இந்த வல்லுநர் குழுவின் தலைவனாயிருக்கும் சிறப்புரிமை பெற்றிருந்தேன். இந்தக் குழுவில் சிறந்த தமிழ் அறிஞர்களும், வரலாற்று அறிஞர்களும், அரசின் வருவாய்த் துறையில் மாவட்ட ஆட்சியாளராகவும், இந்து சமய அறநிலையத்துறையில் ஆணையராகவும் விரிந்த அனுபவம் பெற்றவர்களும், உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். இவர்களையன்றி இந்தக் குழுவில் சைவசமயத்தைச் சார்ந்த மூன்று சிவாச்சாரியர்களும், வைணவ சமயத்தைச் சார்ந்த இரு பட்டாச்சாரியர்களும் (வைகானசம்- பாஞ்சராத்திரம்) பணி புரிந்திருக்கின்றனர். இவர்கள் இந்து சமயத்தில் ஆகமக் கிரியைகளை ஆச்சரியராக இருந்து நடத்திவைக்க வல்லவர்கள் என்று தமிழ்நாடு முழுவதும் புகழ் பெற்றுள்ளவர்கள். இவர்கள் அனைவரும் இந்து சமய பக்தர்கள். இப்போது தமிழ்நாட்டுக் கோயில்களில் நிலவுகின்ற கிரியைகளும் சடங்குகளிலும் வந்து மாறுதல் செய்வதையும் இவர்கள் சாதாரணமாய்ப் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது.

2. ஆயினும், இவர்கள் இந்து மதத்தை நன்கு பேணும்பொருட்டும், அழியாது காக்கும் பொருட்டும், ஆகமப்படி அமைக்கப்பட்டுள்ள சிவன் கோயில்களிலும் விஷ்ணு கோயில்களிலும் அர்ச்சகர் பதவிகளில் சாதியைக் கருதாமல் இந்துக்களாய் உள்ள அனைவருக்கும் இடங்கொடுக்கலாம் என்ற ஒருமித்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இதிலிருந்து, இந்து மதத்தைச் சேர்ந்த எந்த மனிதனையும் அழைத்துக் கோயிலில் கருவறைக்குள் புகுந்து திருவுருவத்தைத் தீட்டி, அர்ச்சகர் செய்கின்ற பிற கிரியைகளையும் சடங்குகளையும் செய்ய இவர்கள் அனுமதிப்பார்கள் என்று பொருளாகாது. அர்ச்சகருடைய கடமைகளைச் செய்வதற்குத் தகுதியுடையவர்கள் என்று யாரையும் ஏற்றுக்கொள்வதற்குமுன், அவர்கள் குறிப்பிட்ட சில கடுமையான பூர்வாங்க நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தாக வேண்டும் என்று இவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

3. இந்தப் பூர்வாங்க நிபந்தனைகளை விவரிக்குமுன், திருநெல்வேலி மாவட்டம் மீனாட்சிபுரத்திலும், இந்தியாவில் வேறுபல இடங்களிலும் நடைபெற்றுள்ள சில நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டுவது பொருத்தம் என்று நினைக்கிறேன். இந்த நிகழ்ச்சிகள் இந்தியா முழுமையிலும் உள்ள சங்கராச்சாரியர்களுக்கும், மடாதிபதிகளுக்கும், பிற இந்து சமயத் தலைவர்களுக்குக்கும், சமய உணர்வில் பொருத்த அதிர்ச்சியை உண்டுபண்ணியிருக்கின்றன. மீனாட்சிபுரத்தில் கீழ் வகுப்பைச் சேர்ந்தவர்களை, மேல்வகுப்பு இந்துக்கள் தாக்கி கொலைகளும், இரத்தக்களரிகளும், வன்முறைச் செயல்களும் செய்திருக்கிறார்கள். அவற்றின் விளைவாகக் கீழ்வகுப்பு இந்துக்கள் இஸ்லாம் மதத்திற்கு மாறி விட்டார்கள். இந்தியாவில் வேறுசில இடங்களில் இந்துமதத்தைச் சேர்ந்த ஐம்பது லட்சம் மக்கள், இச்சமயத்தில் உள்ள சாதிமுறைக்கொடுமை காரணமாகத் தங்களுக்கு ஏற்பட்டிருந்த இழிவைக்கண்டு மனக் கசப்பு அடைந்து, புத்த சமயத்துக்கு மதம் மாறியிருக்கிறார்கள் என்று பத்திரிக்கைச் செய்திகள் கூறுகின்றன. இந்த நிகழ்ச்சிகள் ஒரு புறம், அரபு நாடுகளிலிருந்து வருகின்ற பணம் இன்னொருபுறம். இந்துக்கள் இஸ்லாம் சமயத்திற்கு மாறுவதற்கு மேற்கண்டவை காரணங்கள் என்று வதந்தி உலவுகின்றது. இவை சாதியின் பெயரால் சில மக்கள் மீது பழிப்பு முறையிலும், ஆத்திரம் ஊட்டத்தக்க முறையிலும் விதித்திருக்கும் தடைகளைக் குறித்து வைதிகமான இந்து சமயத் தலைவர்களைப் புனராலோசனைப் பண்ணும்படி செய்துள்ளன. ஆச்சாரிய சுவாமிகளில் ஒருவர், ஆகமத்திலும் வேத அத்தியனத்திலும் கீழ்வகுப்பு இந்துக்களுக்கும் பயிற்சி அளிக்க ஒரு பாடசாலை தொடங்க முன்வந்திருக்கிறார்; இதன் மூலம் இவர்கள் கோயில் அர்ச்சகர்களாக ஆவதற்கு இடமுண்டு. ஆதலால் கோயிலில் அர்ச்சகர் பதவிகளை எல்லா இந்துக்களுக்கும் உரியனவாக ஆக்க வேண்டும் என்றும், அவர்கள் ஓர் ஐந்து வருடகால சமயபோதனைக்குரிய கடுமையான கட்டுப்பாட்டில் பயிற்சி பெறுவதன் மூலம் கருவறைக்குள் புகுவதற்கும், திருவுருவங்களுக்கு அபிடேகம், அலங்காரம், அர்ச்சனை முதலான பூசைச் சடங்குகளைச் செய்வதற்கும் தகுதி பெறுபவர்களாக ஆகலாம் என்றும் இந்தக் குழுவிலுள்ள சிவாச்சாரியர்களும் பட்டாச்சாரியர்களும் பிறவைதீக மனமுடைய உறுப்பினர்களும் ஏகோபித்த முடிவுக்கு வந்ததில் ஆச்சரியமில்லை.

4. இனி, அர்ச்சகராக நியமனம் பெறுவதற்கு ஒருவர் தம்மைத் தகுதியுடையவராக ஆக்கிக் கொள்வதற்கு முன், அவர் நிறைவேற்ற வேண்டிய கடுமையான பூர்வாங்க நிபந்தனைகளை இப்பொது பார்க்கலாம். இந்துவாய் உள்ள எவருக்கும் அர்ச்சகர் பதவியை அளிக்கலாம் என்று சொல்வதற்கு முன், வேதிட்டங்களோடுகூட, பின்வரும் திட்டங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், பின்னே குறிப்பிடும் தேவைகளை நிறைவேற்றியாகவேண்டும் என்றும் எங்களுடைய ஆலோசனைக் கூட்டங்களின் கடைசி நாளன்று ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

(அ) அர்ச்சகர் பதவிக்கு வர விரும்புவோருக்குச் சமஸ்கிருதத்திலும் தமிழிலும், ஆகமங்கள், சைவத்திரு முறைகள், திவ்யப் பிரபந்தங்கள் பிற சமய சாத்திரங்கள் ஆகியவற்றிலும், ஓரளவு நல்ல அறிவு ஊட்டுவதற்காகத் தமிழ் நாட்டின் பொருத்தமான இடங்களில் அறநிலையத்துறை பல ஆகமக் கல்லூரிகளை நிறுவ வேண்டும்.

(ஆ) இந்த ஆகம அறிவுக்கான பயிற்சித் திடம் ஐந்தாண்டுக் காலம் நடைபெற வேண்டும்.

(இ) அர்ச்சகர் வேலைக்கு வருபவர் சைவ உணவு கொள்பவராக இருத்தல் வேண்டும்; இந்த ஐந்து வருட காலப்பயிற்சியில் அவர் அறிவுத் துறையில் பயிற்சியும், சமயத் துறையில் பயிற்சியும் பெறுவது மட்டுமல்லாமல், உடலைத் தூய்மையாக வைத்திருப்பதிலும், ஆசாரத்திலும், நல்லொழுக்கத்திலும், நன்னடத்தையிலும் கூடப் பயிற்சி பெற வேண்டும்.

(ஈ) இந்தப் பயிற்சியில் சேர்க்கப்படுவோருக்கு அறநிலையத் துறை ரூ. 250 உதவித்தொகையாக மாதந்தோறும் அளிக்க வேண்டும்.

(உ) இந்தப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பிறகு, இவர் பாடசாலையின் தலைவரிடமிருந்து பயிற்சியில் வெற்றிபெற்றார் என்று ஒரு சான்றிதழ் பெறுவார்; அதன்மேல் இவர் தகுதிவாய்ந்த ஆச்சாரியரிடமிருந்து உபதேசம் பெற்று, ஆகமங்களில் விதித்துள்ள தீட்சையும் பெற வேண்டும்.

(ஊ) இவ்வாறு ஐந்தாண்டுக்காலப் பயிற்சியைத் திருப்திகரமாக முடித்துத் தகுதிவாய்ந்த ஆச்சாரியரிடமிருந்து உபதேசம் பெற்றவருக்கு, அவருடைய பயிற்சிக்குப் பொருந்துமாறு, சைவ சம்பிரதாயப்படியோ, வைணவ சம்பிரதாயப் படியோ, ஒரு கோயிலில் அர்ச்சகராக நியமனம் தரப்படும் என்ற உறுதியும் அளிக்கப்பெறுதல் வேண்டும்.

(எ) மேற்குறிப்பிட்ட முறையில் பயிற்சி பெற்றவர், அர்ச்சகராக நியமனம் பெற்ற பிறகு, அவருக்குக் கவுரமான மாதச் சம்பளம் அளிக்க வேண்டும். பயிற்சி பெற்ற அர்ச்சகருக்கு, கோயில் நிதியில் வசதியிருக்குமானால், மாதம் ரூ. 500 சம்பளம் கொடுக்கவேண்டுமென்று ஒரு லட்சிய நிலையில் நாம் பரிந்துரை செய்கிறோம்.

(ஏ) இதைப் பொறுத்த பிற விவரங்களை இந்த அறநிலையத் துறை விரிவாகத் தயாரிக்க வேண்டும்.

5. ஆகம விதிப்படி, குறிப்பிட்ட ஒரு சாதி அல்லது சாதிகளைச் சேர்ந்தவர்களுக்கே கட்டுப்பாடாக உரியதாய் இருந்த அர்ச்சகர் பதவியில் பிற சாதியினரையும் நியமிக்கலாம் என்று தளர்த்தியபோது, மேலே குறிப்பிட்ட திட்டங்களின் அடிப்படையில்தான் இந்தக் குழு இத்தளர்ச்சியை அனுமதித்திருக்கிறது.

6. அடுத்தபடி சட்ட நிலைமைகளையும் நாம் ஆராய்ந்து, இது வரையில் உச்ச நீதி மன்றத்தாரால் பொருள் சொல்லப்பட்டிருந்த சட்டமானது, இந்து மதத்தைச் சேர்ந்த எந்தச் சாதியினரையும் அர்ச்சகராக நியமிப்பதை அங்கீகரிக்குமா என்பதை காண்போம். இதற்குச் சம்பந்தப்பட்ட வகைமுறைகளை இந்திய அரசியலமைப்பின் 25, 26 உறுப்புகளில் காணலாம். 25 ஆவது உறுப்பில் இதற்குச் சம்பந்தப்பட்ட பகுதி பின்வருவது:

25. (1) பொது ஒழுங்கு, ஒழுக்கநெறி சுகாதாரம் ஆகியவற்றுக்கும் இந்தப் பகுதியில் பிற வகைமுறைகளுக்கும் உட்பட்டு, ஆட்கள் அனைவரும் மனச்சாட்சிக்கும் சுதந்திரத்துக்கும் தடையின்றிச் சமய நம்பிக்கையை விளம்புவதற்கும் சமயத்தைப் பயில்வதற்கும் பரப்புவதற்கும் சமமான உரிமையுடையவர் ஆவர்.

(2) இந்த உறுப்பில் எதுவும்

(அ) சமயப் பயிற்சியோடு சம்பந்தப்பட்டதாக இருக்கலாகும் பொருளாதார, நிதி, அரசியல் நடவடிக்கை, அல்லது சமயச்சார்பற்ற பிற நடவடிக்கை எதனையும் முறைப்படுத்துகிற அல்லது கட்டுப்படுத்துகிற,

(ஆ) சமூக நலத்துக்கு மற்றும் சீர்திருத்தத்துக்கு அல்லது பொதுத் தன்மை வாய்ந்த இந்து சமய நிறுவனங்களை இந்துக்களின் எல்லாச் சமய நிறுவனங்களையும், இந்துக்களின் எல்லா வகுப்பினருக்கும் பிரிவினருக்கும் திறந்து விடுதலுக்கும் வகை செய்கிற,

தற்போதுள்ள சட்டம் எதனுடைய செயற்பாட்டையும் பாதித்தலோ, அல்லது அத்தகைய சட்டம் எதையும் அரசு இயற்றுவதைத் தடுத்தலோ, ஆகாது.

7. 25 (1) உறுப்பின்படி சமயத்தை அனுசரிப்பதற்கும், ஏற்று நடப்பதற்கும், பிரசாரம் செய்வதற்கும் உள்ள உரிமை பொது ஒழுங்கிற்கும், ஒழுக்க நெறிக்கும் சுகாதாரத்திற்கும் உட்பட்ட உரிமை என்பதைக் கவனிப்பது முக்கியமாகும். இந்திய சட்டத் தீர்ப்பறிக்கை 1951 பம்பாய் 775 ஆம் பக்கத்தில் (பம்பாய் அரசு-எதிர் நரசு அப்பாமாலி) தலைமை நீதிபதி சக்ளா அவர்கள் பின்வருமாறு கருத்தைக் கூறினார்:

"இப்போது சமயக்கொள்கை மற்றும் நம்பிக்கைக்கும், சமயச் செயல் முறைகளுக்கும் இடையில் திட்டமான ஒரு வேறுபாட்டை நாம் வகுத்துக் கொள்ள வேண்டும். அரசு பாதுகாப்பு அளிப்பது சமயக் கொள்கைக்கும் நம்பிக்கைக்குமே ஆகும். சமய செயல்முறைகள் பொது ஒழுங்கு, ஒழுக்கநெறி மற்றும் சுகாதாரத்திற்கு அல்லது அரசு நிறைவேற்றப் புகுகின்ற ஒரு சமூகக் கொள்கைக்கு மாறாக இருக்குமானால் அப்போது சமயச் செயல்முறைகள் கைவிடப்பட்டு நாட்டிலுள்ள அனைத்து மக்களின் நன்மைக்கே முதலிடம் கொடுக்கவேண்டும்."

8. இப்போது இரத்தக்களரி, கலகம் செய்தல், கற்ழித்தல் ஆகியன நாட்டு மக்களின் பொது ஒழுங்கு, ஒழுக்கநெறி மற்றும் சுகாதாரத்துக்கும் அரசு நிலை நாட்டப் புகுவதாகிய சாதியற்ற சமூகத்தையும், சமூக நலனையும் முன்நடத்திச் செல்லும் கொள்கைக்கும் மாறாக உள்ளன. இதன் விளைவாக இந்துக்களிடையே பல்வேறு சாதிகளிடையில் வேறுபாடு செய்கின்ற சமயச் செயல் முறையையும், இந்துக் கோயில்களில் அர்ச்சகர் பதவியை சில மேல்சாதிகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே உரியதாக்கும் நிலையையும் ஒதுக்கிவைத்து, பொது ஒழுங்கு, ஒழுக்கம், மற்றும் சுகாதாரம் இவற்றைப் பாதுகாப்பதற்கும், சமூக நலனைக் குறித்த அரசின் கொள்கையைச் செயல்படுத்துவதற்கும் முதலிடம் கொடுக்க வேண்டும். இந்துக்களில் குறிப்பிட்ட ஒரு சாதி அல்லது சாதிகள் கொண்டாடும் உரிமையானது, பொதுஒழுங்கு, ஒழுக்கநெறி, சுகாதாரம் இவற்றைப் பாதிக்கும் சூழ்நிலைக்கு இடங்கொடுத்து அந்தச் சூழ்நிலையில் மேற்சொன்ன உரிமையை அங்கீகாரம் செய்யவேண்டிய வழக்கு ஒன்றும் உச்சநீதி மன்றத்தில் இதுவரையில் வந்ததில்லை. ஆயினும், தேவையான தகுதிகள் இருக்குமானால் இந்துக்களில் எல்லாப் பிரிவினரையும் இந்துப் பொதுக் கோயில்களில் அர்ச்சகர் பதவியில் நியமிக்கலாம் என்று இந்தக் குழுவின் பிரேரணை செல்லத்தக்கதென்று உச்சநீதிமன்றத்தார் ஏற்றுக் கொள்வார்கள் என்று எந்த அளவு உறுதியோடும் எதிர்பார்த்துச் சொல்ல முடியாது. ஆதலால் அறநிலையத்துறையினர் இந்தக் குழுவின் பிரேரணையை உடனடியாகச் செயல்படுத்தத் தொடங்குவது ஆபத்தானது என்று நான் நினைக்

கிறேன். ஏனெனில் இந்துக்களில் எல்லாப் பிரிவினருக்கும் அர்ச்சகர் பதவியில் இடங்கொடுக்கலாம் என்பதை, உச்சநீதி மன்றத்தார் சட்டத்திற்கு முரணானது என்று சொல்லி நிராகரித்து விடக்கூடும். ஆகவே இந்தக் குழுவின் சிபாரிசுகளைச் செயலுக்குக் கொண்டுவருவதற்கு முன், சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்து கொள்வது பொருத்தமாயிருக்கும்.

9. திருத்தங்களை நாம் குறிப்பிடுவதற்கு முன்பு, தமிழ்நாட்டில் உள்ள இந்துப் பொதுக் கோயில்களில் அர்ச்சகருடைய நிலையைக் குறித்து உச்ச நீதிமன்றத்தில் வந்துள்ள சமீப காலத்துத் தீர்ப்பை நான் இங்குக் குறிப்பிட எண்ணுகிறேன். அந்தத் தீர்ப்பானது அனைத்திந்திய தீர்ப்பறிக்கை 1972 உச்சநீதி மன்றத்தாரின் தீர்ப்பு 1586 ஆம் பக்கத்தில் (எத்திராஜ ராமாநுஜ ஜீயர் முதலியோர் மனுதாரர், தமிழ்நாடு அரசு எதிர் மனுதாரர்) உள்ளது. அந்த வழக்கில் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் திருத்தச் சட்டம் ஆட்சேபிக்கப்பட்டது. இந்தத் திருத்தச் சட்டம், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு 22 ஆவது சட்டமாகிய, தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டம் ஆகிய மூலச் சட்டத்திற்குச் செய்த திருத்தமாகும். வழக்கின் இரு பக்கத்தாரும் மூலச்சட்டத்தின் வகைமுறைகளை தமிழ்நாட்டின் சைவக் கோயில்களுக்கும், வைணவக் கோயில்களுக்கும் பொருந்தும் என்று ஒப்புக் கொண்டார்கள். திருத்தச் சட்டம் செய்ததெல்லாம் குறித்த கோயில்களில் அர்ச்சகர் பதவிக்கு வாரிசு முறையில் வருவதற்கிருந்த உரிமையை நீக்கிவிட்டதாகும். உச்சநீதி மன்றத்தில் மாண்புமிகு நீதிபதிகள் கீழ்க்கண்ட முடிவுகளுக்கு வந்தார்கள் :

" பூசை செய்யும் அர்ச்சகர் எந்தக் காலத்திலும் ஒரு சமய நிறுவனத்தின் தலைவர் என்று கருதப்படவில்லை. அவர் நன்கு கற்றவராய்க் கோயிலில் செய்யவேண்டிய கிரியைகளிலும் ஆகமங்களிலும் வல்லவராயும் இருக்கலாம். ஆயினும் ஒரு சமயத் தலைவருக்குரிய அந்தஸ்து அவருக்கு இல்லை. அறங்காவலர் அவரை நியமிக்கிறார்; அர்ச்சகர் கோயில் ஊழியராகிறார். ஒரு கோயிலில் பரம்பரை அர்ச்சகர் நிலைமைகூட அறங்காவலரின் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்துக்கு உட்பட்ட ஊழியர் நிலையேயாகும் என்று கே. சேஷாத்திரி அய்யங்கார்-எதிர்-ரங்கபட்டர் (1912 ஐ. எல். ஆர். 35, சென்னை 631) வழக்கில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அறங்காவலர் அத்தகைய ஊழியரின் நடத்தை குறித்து விசாரணை நடத்தி, தவறான நடத்தைக்காக அவரைப் பதவியிலிருந்து நீக்கலாம். மூலச்சட்டத்தின் திருத்தப்படாத படியுள்ள 56 ஆவது பிரிவில் ஏற்றுக் கொள்ளப்பட்டபடி அந்த ஊழியர் அறங்காவலரின் ஒழுங்கு நடவடிக்கைக்கும் மேல்விசாரணைக்கும் உட்பட்டவராவார்............". அர்ச்சகருடைய அந்தஸ்தை ஆலோசித்தபிறகு, அர்ச்சகரின் நிலைமை இவ்வாறு இருத்தலினால், அறங்காவலர் செய்கின்ற அர்ச்சகர் நியமனம் என்ற செயலானது, முற்றிலும் அடிப்படையில் சமயச் சார்பற்றது என்றும், சமயச்செயல் அல்ல என்றும் மேற்சொன்ன நீதிபதிகள் கருதியிருக்கிறார்கள்.

10. நியமனத்திக்குரிய விண்ணப்பதாரர் பதவியில் கடைசியாக இருந்தவருக்கு வாரிசுமுறையில் அடுத்து வரக்கூடியவர் என்ற ஒரே காரணத்துக்காக அவரை நியமிக்க அறங்காவலர் கடமைப்பட்டவரல்ல என்றும் நீதிபதிகள் மேலும் முடிவு செய்திருக்கிறார்கள்.

11. இந்த கருத்துரைகளின்படி, அர்ச்சகரர் நியமனம் என்ற செயலானது சமயச் சார்பற்ற செயலாய் இருத்தலினால், சாதியைக் கருதாமல் அர்ச்சகரை நியமிக்க வழிசெய்யும் எந்தச் சட்டத்தையும் அல்லது விதியையும் அரசியலமைப்புச் சட்டத்தின் 25 ஆவது உறுப்பை அது மீறுகிறது என்ற காரணத்தினால் தள்ளிவிட முடியாது என்று வாதிடுவதற்கு உரிமை இருப்பதாக ஒருவர் நினைக்கலாம். ஆனால் இதற்கு மாறான நிலையை உச்சநீதிமன்றத்தின் சில கருத்துரைகள் தெரிவிக்கின்றன. எடுத்துக்காட்டாக மேற்படி தீர்ப்பில் 1594 ஆம் பக்கத்தில் நீதிபதிகள் பின்வருமாறு கருத்து கூறுகிறார்கள்:

" திருத்தச் சட்டத்தின்படியும், அதற்குத் தெவிக்கப்பட்ட நோக்கத்தின் படியும், ஆகமத் தேவைகளைப் புறக்கணித்து, எல்லாக் கோயில்களிலும் ஒரே மாதிரியான அமைப்புடைய கிரிகைகளை, அரசு நிர்ணயிப்பதையும், ஆகமங்களில் அங்கீகரிக்கப்படாத இனங்களைச் சேர்ந்தவைகளான அர்ச்சகர்களைக் கோயில்களின்மீது திணிப்பதையும் தடுப்பதற்கு ஏதுமில்லை என்று மனுதாரர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இத்தகைய ஒரு மாறுதல், முன்னே சுட்டிக்காட்டியபடி, திருவுருவத்தின் புனிதத்தைக் கெடுப்பதில் வந்து முடிவது உறுதியாதலால், திருத்தச் சட்டத்தின்படி அரசு மேற்கொள்ளுகிற அதிகாரங்கள், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 25, 26 உறுப்புகளில் உறுதியளிக்கப்பட்டுள்ள சமய சுதந்திரத்தில் தலையிடுவனவாக முடியும். இவ்வாறு மனுதாரர்களின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளனவற்றின் சாரமானது அரசின் சார்பில் ஆசராகியுள்ள கல்விமிக்க தமிழ்நாடு தலைமை வழக்கறிஞராலும் உணரப்பட்டது ".

12. 1959 ஆம் பக்கத்தில் உச்ச நீதிமன்றத்தார் பின்வருமாறு கொண்டிருக்கிறார்கள்:

'' மூலச் சட்டத்தின் 28 (1)ஆம் பிரிவு அறக்கட்டளையின் திட்டங்களை அனுசரித்து அல்லது குறித்த நிறுவனத்தின் பழக்கவழக்கத்தை அனுசரித்துக் கோயில் விவகாரங்களை அறக்காவலர் நிர்வகித்து வரவேண்டும் என்று உத்தரவிடுகிறது. சட்டத்தின் திருத்தப்பட்ட 55ஆவது பிரிவின்படி அறங்காவலர் செய்கின்ற அர்ச்சகர் நியமனத்தை மேற்படி பிரிவு கட்டுப்படுத்தும் என்று கல்விமிக்க தலைமை வழக்கறிஞர் கருதுவதை நாங்கள் ஏற்றுக்கொள்வதில் சிரமமில்லை. ஒரு சைவ அல்லது வைணவக் கோயிலில் அக்கோயிலுக்கு விதி வகுக்கின்ற ஆகமங்களில் சொல்லப்பட்ட விதிகளின்படி, அங்குக் குறிப்பிட்ட ஒரு இனம் சாதி அல்லது பிரிவிலிருந்து அர்ச்சகரை நியமிக்கவேண்டும். அவ்வாறு செய்யத் தவறும்பட்சத்தில் அச்செய்கை அந்தக் கோயிலின் பழக்க வழக்கங்களை அறங்காவலர் அனுசரித்து நடக்கவேண்டும் என்று விதிக்கின்ற மூலச்சட்டத்தின் 28 (1) ஆம் பிரிவுக்கு மாறாகப்போவதுமல்லாமல், அது ஒரு சமயச் செயல் முறையில் தலையிடுவதுமாகும். இத்தலையீட்டின் பயன் திருவுறுவத்தின் புனிதத்தைக் கெடுப்பதில் வந்து முடியும் என்பது உறுதி''.

13. சாதி, கொள்கை, இனவேறுபாடற்ற அர்ச்சகர் பிரிவு ஒன்றை அமைப்பது மாநில அரசின் கொள்கையாயிருக்கிற காரணத்தால், இவ்வரசு அர்ச்சகர் பதவிக்கு உரிய தகுதிகளை ஆகமங்களுக்கு மாறாகவே நிர்ணயிக்கலாம் என்று மனுதாரர்கள் அச்சம் தெரிவித்தார்கள். இந்த அச்சத்தை நீக்கும் முறையில் உச்சநீதிமன்றத்தார் பின்வருமாறு (1598 ஆம் பக்கத்தில்) கூறினார்கள்:

'' கோயில்களில் நடைபெற்றுவரும் கிரிகைகளிலும் சடங்குகளிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவது இந்தச் சட்டத்தின் நோக்கங்களில் ஒன்று என்று எந்த இடத்திலும் குறிப்புத் தரவில்லை. இதற்கு மாறாக மூலச் சட்டத்தின் 107 ஆவது பிரிவானது, அரசியலமைப்புச் சட்டத்தின் 26 ஆவது உறுப்பின்படி, ஒரு சமய இனத்தினருக்கோ அல்லது அவர்களின் ஒரு பிரிவினருக்கோ, அளிக்கப் பட்டுள்ள உரிமைகளை மீறவல்ல எந்த அதிகாரத்தைத் தருவதாகவும் அல்லது எந்தக் கடமையை விதிப்பதாகவும் இந்தச் சட்டத்தில் கண்டதெதுவும் கருதப் படமாட்டாது என்று வலியுறுத்திச் சொல்லுகிறது. மேலும் கோயில்களில் கிரியைகளில் வரும் சடங்குகளிலும் தலையிடுவதாகப் பொருள்படக்கூடிய ஏதேனும் ஒரு விதியானது அரசினால் வகுக்கப்பட்டால், கோயில் வழிபாட்டில் அக்கறையுடையவர்கள் அதை ஆட்சேபிப்பதற்கு அது உள்ளாகும், அதலால் மனுதாரர்கள் இப்போது வெளியிட்டிருக்கின்ற அச்சங்கள் ஆதாரமற்றவை என்றும், உரியதருணம் வருவதற்குமுன் கூறப்படுபவை என்றும் நாங்கள் கருதுகிறோம்.''

14. ஆகமங்களில் குறிப்பிட்டுள்ள இனங்கள் அல்லாத மற்ற எந்த இனத்தையும் சேர்ந்த ஒருவரை அர்ச்சகராக நியமிக்கும்படி அறங்காவலருக்கு அதிகாரம் கொடுக்கத் தக்க ஒரு விதி செய்யப்பட்டிருக்குமானால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 25, 26 ஆம் உறுப்புகளின்படியும், மூலச்சட்டத்தில் 28-வது பிரிவின்படியும் உறுதியளிக்கப்பட்டுள்ள சமயச் செயல்முறையை மீறுவதாக அந்த விதி உள்ளது என்று அதை நீதிபதிகள் தள்ளுபடி செய்திருப்பார்கள் என்பது, மேலே எடுத்துக்காட்டிய பல்வேறு வாசகங்களிலிருந்து தெளிவாகும்.

15. ஆதலால் இந்தக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்கு முன்பே சில திருத்தங்களைச் செய்வது அவசியம் என்று நான் கருதுகிறேன். இந்தியாவில் அரசியலமைப்புச் சட்டத்தில் 25ஆவது உறுப்பும் அதனுடன் சேர்ந்த 1,2 விளக்கங்கள் பின்வருமாறு உள்ளன:

25. (1) பொது ஒழுங்கு, ஒழுக்க நெறி, சுகாதாரம் ஆகியவற்றுக்கும் இந்த பகுதியின் பிற வகைமுறைகளுக்கும் உட்பட்டு, ஆட்கள் அனைவரும் மனசாட்சிக்கும் சுதந்தரத்திற்கும் தடையின்றிச் சமய நம்பிக்கையை விரும்புவதற்கும் சமயத்தைப் பயில்வதற்கும் பாராட்டுவதற்கும் சமமான உரிமை உடையவர் ஆவர்.

(2) இந்த உறுப்பில் எதுவும்

(அ) சமயப் பயிற்சியோடு சம்மந்தப்பட்டதாக இருக்கலாகும் பொருளாதார, நிதி, அரசியல் நடவடிக்கை, அல்லது சமயச் சார்பற்ற பிற நடவடிக்கை எதனையும் முறைபடுத்துகிற அல்லது கட்டுப்படுத்துகிற,

(ஆ) சமூக நலத்துக்கு மற்றும் சீர்திருத்தத்துக்கு அல்லது பொதுத் தன்மை வாய்ந்த இந்து சமய நிறுவனங்களை இந்துக்களின் எல்லா வகுப்பினருக்கும் பிரிவினருக்கும் திறந்து விடுதலுக்கும் வகை செய்கிற, தற்போதுள்ள சட்டம் எதனுடைய செயற்பாட்டையும் பாதித்தலோ, அல்லது அத்தகைய சட்டம் எதையும் அரசு இயற்றுவதைத் தடுத்தலோ, ஆகாது.

**விளக்கம்**— 1 : கிர்ப்பான்கள் அணிவதும் கொண்டு செல்வதும் சீக்கிய சமய நம்பிக்கையை விளம்புவதில் உள்ளடங்கியனவாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**விலக்கம்—2 :** (2)-ஆவது கூறில் (ஆ) உட்கூறில் இந்துக்கள் என்று குறிப்பிடும் சுட்டானது சீக்கிய, சமண அல்லது பௌத்த சமயத்தைப் பயிலும் ஆட்கள் என்று குறிப்பிடும் சுட்டையும் உள்ளடக்குவதாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும் இந்து சமய நிறுவனங்கள் என்று குறிப்பிடும் சுட்டும் அவ்வண்ணமே பொருள் கொள் ளப்படுதல் வேண்டும்.

16. அரசியலமைப்புச் சட்டத்தின் 25 ஆவது உறுப்பின் (ஆ) உட்கூறில் விளக்கம் 3 என்பதைப் புதிதாகச் சேர்த்துத் திருத்தம் செய்தல் நலம் என்று பரிந்துரை செய் கிறேன். நான் இப்போது பரிந்துரை செய்யும் விளக்கம்—3 பின்வருமாறு அமையும் :

**விளக்கம்—3 :** இரண்டாவது கூறில் (ஆ) உட்கூறில் ''இந்து சமய நிறுவனங்களை இந்துக்களின் எல்லா வகுப்பினருக்கும், பிரிவினருக்கும் திறந்து விடுதலுக்கும்'' என்ற வாசகத்தில் '' ஆகமங்களிலும் செய்ய வேண்டிய கிரியைகளிலும் போதுமான அறிவைப் பெற்றுள்ள இந்துக்களின் எல்லா வகுப்பினருக்கும் பிரிவினருக்கும். அர்ச்சகர் பதவியைத் திறந்து விடுதல்'' என்பதும் அடங்குவதாகக் கொள்ளவேண்டும்.

17. இந்த விளக்கம் எளிமையானது : அரசு தோற்றுவிக்க எண்ணும் சாதியற்ற சமூகம் என்ற கருத்துக்கு ஒத்தது. கோயிலில் பணிபுரியும் பிற ஊழியர்களைப் பொறுத்த வரையில் குறித்த ஒரு சாதியில் இருந்துதான் அவர்களை நியமிக்கவேண்டும் என்று ஆகமம் கட்டுப்படுத்தவில்லை. இதனோடு சார்ந்து (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு 22 ஆவது சட்டமாகிய) 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து அறநிலையச் சட்டத் தின் 28 ஆம் பிரிவும் திருத்துவதற்குரியது. ஏனெனில் குறித்த அறக்கட்டளையின் திட்டங்களை அனுசரித்தும் அல்லது அந்த நிறுவனத்தின் பழக்க வழக்கங்களை யொட்டியும், கோயிலின் அறங்காவலர் கோயில் விவகாரங்களை நடத்திவரவேண்டும் என்று அந்தப் பிரிவு விதிக்கிறது; அன்றியும் உச்சநீதிமன்றத்தார் கருத்தின்படியும் அந்த நிறுவனத்தின் பழக்கவழக்கம் என்பது, ஆகமங்களில் விதிக்கப்பட்டுள்ளபடி, குறிப்பிட்ட இனத்திலிருந்தே அர்ச்சகரை நியமிக்கவேண்டும் என்று பொருள்படும்.

18. ஆகவே 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 28 ஆவது பிரிவில் பின்வரும் விளக்கத்தைப் புதிதாய்ச் சேர்த்துக் திருத்திக் கொள்ளலாம் என்று யோசனை கூறுகிறேன்.

**விளக்கம் :** '' 28 (1) ஆம் பிரிவின் அந்த நிறுவனத்தின் பழக்க வழக்கம் என் பதைக் குறிக்கும்போது அந்தச் சமய நிறுவனத்தின் உள்துறை ஊழியர்களின் சாதியை விலக்குவதாகக் கொள்ளவேண்டும்''.

மேற்குறிப்பிட்ட இரண்டு திருத்தங்களையும் அமைத்துக் கொண்டால், இந்த குழுவினர் குறிப்பிடும் திட்டங்களை, அரசியலமைப்புச் சட்டத்துக்குப் பொருந்தாதவை, அல்லது சட்ட விரோதமானவை என்று தள்ளிவிடக்கூடும் என்ற அச்சத்துக்கு இடமில்லாமல் செயல்படுத்த முடியும்.

19. இந்தக் குறிப்பை முடிக்குமுன், இந்தக் குறிப்பிலுள்ள அலுவல் சார்பற்ற உறுப்பினர்கள் செய்துள்ள மதிப்புயர்ந்த கருத்துதவியை மிகவும் போற்றிப் பாராட்ட வேண்டியது என் கடமையாகும். கூட்டங்களில் விவாதங்கள் நிகழ்ந்தபோது உறுப் பினர் மனம் திறந்து யாதொரு தடையும் இன்றிப் பேசினார்கள். அந்த உறுப்பினர் கள், தெளிவில்லாத பல பிரச்சினைகளைத் தெளியச் செய்தார்கள். இவர்கள் ஆக மங்களில் எவ்வளவு பாண்டித்தியம் உடையவர்கள் என்பது அப்போது விளங்கிற்று. இந்த ஆலோசனைகள் நெடுகிலும் அவர்கள் காட்டிய ஒத்துழைப்புக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவிக்கிறேன். இந்தக் குழுவின் அங்கத்தினராய் உள்ள திரு. மு. அருணாசலம் அவர்களுடைய உதவியைச் சிறப்பாகக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகியவற்றில் நமக்குள்ள சிறந்த புலமையினாலும் தமிழருடைய பண்பாடு இலக்கிய வரலாறு சமயத்துறை ஆகியவற்றில் ஊடுருவிப் பாயும் தம்முடைய உள்ளுணர்வினாலும் இந்தக் குழுவின் அறிக்கைக்கு அவர்கள் ஒரு பேரிலக்கியத்தின் மணத்தையே ஊட்டியிருக்கிறார்கள்.

20. இக்குழு, தமிழ்நாட்டில் சிறப்புமிக்க சமயத் தலைவர்கள் பலரையும் கண்டு, அவர்கள் கருத்தை அறிவதற்குச் சென்றபோது, தமிழ்நாடு அறநிலையத் துறை ஆணையர் திரு. யு. சுப்ரமணியன் அவர்கள் மிகுந்த அக்கறையோடும் கவனத் தோடும் குழு உறுப்பினர்களுக்குத் தேவையான வசதி செய்து கொடுத்தார்கள். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இந்தக் குழுவில் அமைப்புச் செயலாளராகிய திரு. இரா. அர்ஜுனன் அவர்கள் தமிழ்நாட்டுக் கோயில் களில் கிரியைகளையும் சடங்குகளையும் பற்றித் தமக்கிருந்த நுணுக்கமான அறிவை யெல்லாம் இந்தக் குழுவினர் பயன்படுத்துவதற்கு உதவினார். அவர்களுக்கும் எனது பாராட்டுதலை நான் இங்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒம்) எஸ். மகாராஜன்,

வல்லுநர் குழுத் தலைவர்.

# THE CHAIRMAN'S NOTE ON THE LEGAL POSITION

1. The Committee, over which I have had the privilage of presiding for about 2 years, consists of a number of scholars in Tamil of historians and of persons, who have had great experience as Collectors of Districts in the Revenue Department as well as in the Department of Hindu Religious and Charitable Endowments. The Committee also consists of 4 Sivachariars pertaining to the Saivite Sect and two Bhatacharias pertaining to the Vaishnavite Sect. They are venerated throughout Tamil Nadu not only as authorities on the Agamas concerned but also as Acharyas competent to initiate others in religious and Agamic rituals. It may be noticed that all these gentlemen are devout Hindus and would not ordinarily tolerate any departure from the established rituals and ceremonies that have been in vogue, in the various temples of Tamil Nadu.

2. Yet, they have all unanimously come to the decision that in the interests of preserving Hinduism and to save it from extinction, the posts of Archakas in Saivite and Vaishnavite temples built according to Agamas shall be thrown open to all Hindus irrespective of caste. It is not as if they would allow any man in the street belonging to the Hindu community to straightway touch the holy idol and perform the other ritual and ceremonial duties of an archaka. They have insisted on their fulfilling certain stringent pre-conditions before they can be declared competent to perform the duties of the Archaka.

3. Before I deal with those pre-conditions I think it right to draw attention to the happening of certain events in Meenakshipuram in Tirunelveli District and other places in India, which have shocked the religious conscience of Sankaracharyas and Matathipathis and other leaders of Hindu religious thoughout India. At Meenakshipuram, there were murders, bloodshed and acts of violence committed by high caste Hindu against members of the lower caste and there has been consequent conversion of low caste Hindu to Islam. There are certain other places in India where, according to newspaper reports, 50 lakhs of Hindu became converted to Buddhism beacuse of their disgust with the humiliation, to which the caste system has subjected them. These events and the rumour that Gulf money has played some part in the conversion of Hindus to Islam have forced the orthodox Hindu leaders to reconsider the inglent and provocative embaroos imposed upon people in the name of caste. One Sankaracharya has come forward with the proposal to start a school in which even lower caste Hindus will be given training in the Agamas and Vedic lore in order utlimately to enable them to become Archakas of temples. It is therefore little surprise that the Sivachariars and Bhattacharyas and the other orthodox members of this Committee have come to the unanimous docision that the posts of Archakas in Hindu temples shall be thrown open to all Hindus, who, by submitting themselves to a rigorous discipline of a 5 year course of religious instruction render them selves fit to enter the holy of holies and perform abhishekam and adornment of the deities and do Archana therefor.

4. I shall now turn to the rigorous pre-conditions a candidate for the post of Archaka should fulfil before he can make himself eligible for appointment as Archaka. On the concluding day of our delibrations it was unanimously decided that the following among other proposals should be accepted and the following requirements should be fufilled, before the post of Archaka is thrown open to any Hindu.—

(*a*) That a number of schools be established by the H. R. and C.E. Department at suitable centres in Tamil Nadu for giving the would be candidates for archaka-ship a fairly good knowledge of Sanskrit and Tamil and of Agemas, Thevaram, Thiruvasagam and other religiuos lore;

(*b*) That the said course shall last for 5 years ;

(*c*) That during this period of 5 years, the candidate, who must be a vegetarian should receive not merely intellectual and religious instruction but also training in personal cleanliness an *ch aras* and in character and conduct ;

(*d*) That the canditates admitted to this course shall be paid by the H.R. C.E. Department a monthly stipend of Rs. 250.

(*e*) After the successful completion of this course, the candidate will get a certificate to that effect from the Head of the School and then be shall be initated by a competment Acharya and given the "Deeksha" prescribed in the Agamas ;

(*f*) The candidate, who has satisfactorily undergone this 5year course and has been initiated by a competent person, shall be guaranteed appointment as archaka in Saivite or Vaishnavite temple according to the Saivite or Vaishnavete lore, in which the candidate has specialised ;

(*g*) Once the candidate trained on the lines indicated above the been appointed as archaka he shall be paid an attractive salary. An idealist would even recommend that if the temple funds allow a salary of Rs. 500 p.m. may be paid to a trained archaka.

(*h*) The other relevant details will have to be worked out by the H. R. & C.E. Department.

5. It is on the basis of the above proposals that the committee permittec relaxation of the Agamic rule, which has made the post of Archaka a close preserve of the members of a spcified caste or castes.

6. Next we will examine the legal position and find out if the last as so far interpreted by the Supreme Court Could countenance the appointment of the member of any caste of Hindus as archaka. The relevant Articles are 25 and 26 of the constitution of India. The relevant portion of Articles 25 runs as follows :—

"(1) *Subject to Public Order, Morality and Health* and to the other provisions of this part all persons are equally entitled fo freedom to conscience and the right freely to profes practices and propagrate religion.

(2) *Nothing.*—in this articles shall affect the opreation of any existing law or prevent the State from making any law :—

(*a*) regulating or restricting any economic, fincnaial, political or other secular activity which may be associated with religious prctice ;

(*b*) providing for social welfare and reform or the throwing open of Hindu religoous tnstitutions of a public charactor to all classes and sections of Hindus.

7. It is important to note that under Article 25(1) the right to prefeess, practice and propagate religion is subject to public order, morality and helath. In I.L.R. 1951, Bombay, page 775 (State of Bombay Vs. Narasu Appa Mali), Chagla C.J. observed as follows :—

" Now a sharp distinction must be drawn between religious faith and belief and religeous practices. What, the State protects is religious faith and belief. If religious practices run counter to public order, morality or health or a policy of social welfare, upon which the State has embarked, then the religious practices must give way before the good of the people of the State as a whole".

8. Now blood shed, rioting and rape run counter to public order, morality and health of the Nation and to the policy of ushering in a casteless society and social welfare, upon which the State has embarked. Consequently, the religious practice of discriminating between different castes of Hindus and confining the office of Archaka in Hindu temples excelusively to members of certain higher castes must give way before the presevation of public order, morality and health and the State Policy of Social welfare . So far, no case has come up before the Supreme Court or India in which the right claimed by a particular caste or c stes of Hindus has been pitted against pulbic order, morality and health.It is however not possible to presiblewithany degree of certainly if the Supreme Court would uphold the validity of the proposal of this Committee to throw open the post of Archaks in public Hindu temples to all divisions of Hindus, provided, of course, they have the requisite qualifications. I think it, therefore, risky for the H.R. &C.E. Department to straightway implement the propsal of this committee lest the throwingopen of the post of Arcjhaka to all divisions of Hindus should be struck down by the Supreme Court as contrary to law. It would be safer to effect certain Amendments to the law before putting into force the recommedations of this Committee.

9. Before suggesting the Amendmets, I shall refer to the latest and the only ruling of the Supreme Court, which deals with the status of Archak of Hindu public temples in Tamil Nadu. That ruling is reported in A.I.R. 1972 supreme court at P. 1586 (Ethiraj a Ramanuja Jeer, etc.,...... Petitioners Vs. The State of Tmil Nadu.........Respondents). In that case the validty of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendments) Act, 1970 was called in question. This amendment Act itself was made to the Princip l Act viz., The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act 1959 (Tamil Nadu Act XXII of 1959). Both the parties agreed that the provisions of the Principal Act apply to the Saivite and Vaishanvite temples in Tamil Nadu. What the Amendment Act did was to abolish the right of succession to the Office of Arckaka in the temples concerned. Their Lord ships of the Supreme Court held :—

"The Archaka has never been regarded as a spiritual head fo any institutions. He may be an accomplished person, well versed in the Agamas nd rituals necessary to be performed in a temples, but the does not have the status of a spitirual head. The Dharmakart a or Sheba it makes the appointment and the Archaka is servant of the temple. It has been held in K. Seshadri Aiyangar Vs. Ranga Bhattar (1912) I.L.R. 35 Mad. 631 that even the position of herediatary Archaka of a temples is that of a servant subject to the disciplinary power of the trustees. The trustee can enquire into the conduct of such a servant and dismiss him for misconduct. As servant, he is subject to the discipline and control of the trustee as recongnised by the unamended section 56 of the Principal Act "......After considering the status of an archaka, their Lordships held that being the position of an archaka, the act of his appointment by the trsutee is essentially secular and not religious.

10. Their Lordships furthr decided to hold that the Trsutee is not bound to make the appointment on the sole ground that the candidate is next in line of succession to the last hoeer of Office.

11. In the light of these obsertations one may feel entitled to contend that the Act of appointment of Archaka being a secular Act, any law or rule which provides for appointment of an archaka irrespective of caste cannot be struck down on the ground that it is a violation of Article 25 of the Constitution. But there are certain observation of the Supreme Court which indicate the contrary. For instance, at P.1594 of the said ruling their Lordship observe as follows:-

"In view of the Amendment Act and its avowed object there was nothing, in the petitioner's submission, to prevent the Government from prescribing a standardized ritual in all temples ignoring the agamic requirements, and Archakas being forced on temples from denominations unauthorised by the Agamas. Since such a departure, as already shown would inevitably lead to the defilement of the image, the powers thus taken by the Govrnment under the Amendment Act would lead to interfrence with religious freedom guaranteed under Articles 25 and 26 of the Constitution. The force of the above submission made on behalf of the petitioners was not lost on the learned Advocate-General of Tamil Nadu who appeared on behalf of the State".

12. At page 1595, the Supreme Court held :-

"We have found no difficulty in agreeing with the learned Advocate-General that section 28(1) of the principal Act which directs the trustee to administer the affairs of the temple in accordance with the terms of the trust or the usage of the institution, would control the appointment of the Archaka to be made by him under the amended section 55 of the Act.

In a Saivite or a Vaishnavite temple the apointment of the Archaka will have to be made from a specified denomination, sect or group in accordance with the directions of the Agamas govering those temples. Failure to do so could not only the contrary to section 28(1) of the Principal Act which requires the trustee to follow the usage of the temple, but would also interfere with a religious practice the inevitable result of which would be to defile the image."

13. At page 1598 of the said report while allaying the apprehensions of the petitioners that in view of the avowed object of the State Government to create a class of archaka irrespective of caste, creed or race, it would be open to the Government to prescribe qualifications for the office of an archaka which were in conflict with Agamas, the Supreme Court held :-

"The Act nowhere gives the indication that one of the purposes of the Act is to effect change in the rituals and ceremonies followed in the temples. On the other hand section 107 of the Principal Act emphasis that nothing contained in this Act would be deemed to confer any power or impose any duty in contravention of the rights conferred on any religious denomination or any section thereof by Article 26 of the Constitution......... Morevever, if any rule is framed by the Government which purports to interfere with the vituals and ceremonics of the temples, *the same will be liable to be challenged by those who are interested in the temple worship*. In our opinion, therefore, the apprehensions now expressed by the petitioners are groundless and premature."

14. It would be clear from the different passages abstracted above that if any rule had been framed, which enabled the trustee to appoint as archaka any person belonging to any sectin of Hindus other than the designation specified in the Agams, their Lordship would have struck down the rule as violatice of reliogious practive guaranteed under Articles 25 and 26 of the Constitition of India as well as section 28 of the Principal Act.

15. I think it therefore necessary that certain amendments ought to be effected before the recommendation of this committee is put into force. Article 25 of the Constitution along with it explanation 1 and 2 are as follows :—

*Article* 25 (1):—

*Subject to public Order Morality and Health and* to the other provisions of the Part, all persons are equally entitiled to freedom of conscience and the right freely to profess practice and propagate religion.

(2). Nothing in this article Shall affect the operation of any existing law or prevent the State from making any law:-

(a). regulating or restricting any economic, financial political or other secular activity which may be associated with religious practice.

(b) providing for social welfare and reform or the throwing open of Hindu religious and institutions of public character to all classes and sections of Hindus.

*Explanation* I: The wearing and carrying of kirpans shall be deemed to be included in the prefession of the Sikh religion.

*Explanation* II:—In sub classes (b) of clause (2), the reference to Hindus shall be construed as including a reference to persons professing the Sikh Jaina or Budist religion and the reference to Hindu religious Institution shall be construed accordingly ''

16. I recommend that the above Article be amended by incorporating explanation III to sub-clause 2 of Article 25 of the Constitution. Explanation III as proposed by me will run as follows:—

*Explanation* III:—The reference in sub-clause (b) of clause (2) to "throwing open of Hindu religious institutions of a public Character to all classes and sections of Hindus" shall be construed to include the "throwing open of the post of archaka to all classes and sections of Hindus having the requisite knowledge of Agamas and prescribed rituals".

17. This is an explanation which is simple and in conformity with the casteless society which the State wants to bring about. As regards the other servants of the temple, there is nothing in the Agamas, restricting their appointment to any particular caste. Incidentally, section 28 of the Tamil Nadu Hindu Religious and Chritable Endowments Act, 1959 (Tamil Nadu Act XXII of 1959) will also have to be amended because that section directs the trustee of a religious institution to administer the affairs of the temple in accordance with the terms of the Trust or usage of the institution and according to the Supreme Court, the usage of the institution, would mean that the archaka shall be appointed from a specified denomination, sector group in accordance with the directions of the Agamas.

18. I, therefore, suggest that section 28 of the Tamil Nadu H.R. & C.E. Act, 1959 be amended by incorporating the following explanation :—

"The reference in section 28(1) to "the usage of the institution" shall be construed to exclude the caste of the "Ulthurai" servants of the religious institution."

If the two amendments suggested above are incorporated, the proposal of this committee can be put into force without there being any danger of the same being struck down as unconstitutional or illegal.

19. Before I part with this report, I deem it my duty to record with appreciation the valuable contribution made by the non-official members of this Committee. The discussions were open and free and the non-official members shed light on many obscure problems and showed how deeply learned they are in Agamas. I must express my appreciation to their unstinted co-operation and alertness of mind throughout the deliberations. I must make special mention of the contribution made by Thiru M. Arunachalam, who is a member of this committee and a great school in Tamil, English and Sanskrit with his erudition and his penetrating sense of the cultural, literary and religious history of the Tamils, he has lent a classic touch to the report submitted by this committee.

20. Lastly I must record with thanks the services rendered by Thiru U. Subramanyan, who is the commissioner of H.R. and C.E. Department. He with great concern and solicitude looked to the convenience of the members of this Committee during the tour in Tamil Nadu to hear the evidence of distinguished men of religion. I also record my tribute to Thiru R. Arjunan, the Secretary of this Committee who has placed at the disposal of this Committee his intimate knowledge of the rituals and ceremonies in Tamil Nadu Temples.

S. MAHARAJAN,
*Chairman of the Committee.*

## தமிழ் அருச்சனை பற்றிய குறிப்பு.

1. அருச்சனை என்பது இட்ட தெய்வத்தின் சந்நிதியில் அந்தத் தெய்வத்தின் பல்வேறு பெயர்களையும், புகழ்களையும், ஆற்றல்களையும் ஒவ்வொன்றாகச் சொல்லி, ‘இப்படிப்பட்ட உனக்கு வணக்கம்’ என்று ‘ஓம்’ என்ற பிரணவத்தை முதலாவதாக வைத்துத் துதிக்கின்ற ஒரு மந்திரம் போன்ற தொடராகும். அருச்சனை என்பது ஒவ்வொரு பக்தரும் தம்முடைய நன்மைக்காக அர்ச்சகர் மூலமாக இறைவனிடம் இறைஞ்சிச் சொல்லுகின்ற வேண்டுகோளாக உள்ளது. இன்று இந்து சமூகத்தில் அருச்சனையானது அஷ்டோத்ரம் (108) திரிசதி (300), சகஸ்ரநாமம் (1000) என்று பலவகையாக நடைமுறையில் உள்ளது. சகஸ்ரநாம அருச்சனை நூறு தொடர்ந்து செய்தால், லட்சார்ச்சனை என்றும், "சகஸ்ரநாமம்" ஒரு லட்சம் செய்தால் கோடி அருச்சனை என்றும் சொல்லப்பெறுகின்றன.

2. இந்த அருச்சனை, பரார்த்த பூசையில் ஓர் அங்கமல்ல. இது ஆகமங்களில் சொல்லப்படவில்லை. ஆகமங்களில் அர்ச்சனா விதிப்படலம் என்று ஒரு படலம் உள்ளது. இது பூசா விதி என்னும் பொருளையுடையது. இப்பகுதியில் சொல்லப் படுவது, குறித்த தெய்வத்திற்குச் செய்யப்படும் பூசை ஆகும். அருச்சனை என்றால் இங்குப் பூசனை என்று பொருள். பூசையின் இறுதியில் அர்ச்சகர் தெய்வத்துக்கு "மந்திர புஷ்பம்" சமர்ப்பிப்பதோடு, ஆகம பூசை நிறைவு பெறுகிறது. இதன் பிறகு தான் அர்ச்சகர் பக்தர் வேண்டுகோளை நிறைவேற்ற அருச்சனை செய்கிறார். இது காமியமானது. அதாவது பக்தர் ஒருவர் சார்பில் சிவாச்சாரியர் அவருக்குச் சங்கல்பம்

செய்வித்து (இன்னாராகிய நான் இன்ன காரியத்துக்காக சிவாச்சாரியர் மூலம்
உன்னை வேண்டிக்கொள்கிறேன் என்று) குறிப்பிட்ட தெய்வத்தை வேண்டிக்கொள்வ
தாகும். அருச்சனைக்குரிய நாமாக்கள் பொதுவாகப் புராணங்களில் சொல்லப்பட்
டுள்ளன. ஒவ்வொரு தெய்வத்துக்கும் மேற்குறிப்பிட்ட மூன்று விதமான அருச்சனை
களும் தனித்தனியாகவே உள்ளன. இவை பொதுவாகப் பௌராணிகமானவை
(புராணத் தன்மை பொருந்தியவை). திரிசதி அருச்சனை மட்டும் பஞ்சதசாட்சரி என்ற
15 அட்சரங்கள் கொண்ட தேவி மந்திரத்தில் ஒவ்வோர் அட்சரத்துக்கும் 20 மந்திரங்க
ளாக 15 அட்சரங்களுக்கும் 300 தொடர்களைக் கொண்டது.

3. சகஸ்ரநாம அருச்சனைகளுள் மூன்று சிறப்புடையனவாகக் கருதப்படும்.
அவையாவன: கணேச சகஸ்ரநாமம், விஷ்ணு சகஸ்ரநாமம், லலிதா சகஸ்ரநாமம்
ஆகியவை. இவை மூன்றும் இவற்றிற்கு எழுதப்பட்ட பாஷ்யங்களால் (விரிவுரை
களால்) சிறப்புப் பெற்றன. விஷ்ணு சகஸ்ரநாமத்திற்குச் சங்கரரும், கணேச
சகஸ்ரநாமத்திற்கும் லலிதாசகஸ்ரநாமத்திற்கும் பாஸ்கரராயரும் பாஷ்யம் எழுதி
யிருக்கிறார்கள். இந்த பாஷ்யங்களில் தத்துவ ரீதியாகப் பொருள் விளக்கம் சொல்
லப்பட்டுள்ளமையால் இவற்றுக்குப் பெருமதிப்பு ஏற்பட்டுள்ளது. விஷ்ணு சகஸ்ர
நாமம் விஷ்ணு புராணத்திலும், கணேச சகஸ்ரநாமம் கணேசபுராணத்திலும்,
லலிதா சகஸ்ரநாமம் பிரமாண்ட புராணத்திலும் உள்ளன. இவை எந்த ஆகமத்திலும்
இல்லை. இந்த நாமாக்கள் எல்லாம் வடமொழியில் அமைந்துள்ளன.

4. பொதுமக்கள் இன்று பெருந்திரளாகக் கோயிலுக்குச் செல்கிறார்கள். சமூக
ரீதியாக விழிப்பு ஏற்பட்டு, எல்லா இனத்தாரும் தங்கள் சமூக உரிமைகளை வலியுறுத்து
வது போலவே, சமய ரீதியாகவும் அவர்களுக்கிடையில் விழிப்பு ஏற்பட்டு, தங்கள்
கருத்துக்களையும் விண்ணப்பங்களையும் தாங்கள் நன்கு உணருகின்ற நிலையில்
தங்களுக்கு நன்கு புரிகின்ற மொழியில் தெய்வத்திடம் சேர்ப்பிக்கவேண்டும் என்று
அவர்கள் கருதுவது காலத்தின் மாறுதலுக்கும் வளர்ச்சிக்கும் அடையாளம். இது
இயல்பே. அரசு மக்களுடைய அரசு. அம்மக்கள்பால் பொறுப்பு உடையது.
அவர்கள்பால் தோன்றுகின்ற நோக்கங்களில் சிறப்பானவற்றைச் செயல்முறைக்குக்
கொண்டுவருவது அரசின் முக்கிய கடமையாகும்.

5. சில அர்ச்சகர் வட மொழி கருத்துக்களைச் சொல்லும்போது நன்கு
பொருள் தெரிந்து அழகாக நாமாக்களை உச்சரித்து அருச்சனைகளை நடத்திவைப்பது
உண்மையாயினும், அவர்கள் மிகச் சிலரே, பெரும்பான்மையோர் பொரு
ளோடு செல்வதில்லை. மக்களுக்கும் அவை புரிவதில்லை. பொதுமக்கள் அவற்
றைப் புரிந்து கொள்ளாத நிலையில், அந்த அர்ச்சனைகளில் அவர்களுக்கு முழு ஈடுபாடு
பிறக்கவில்லை. ஆதலால் இன்று காலத்தின் தேவை என்பது, ஒரு சிலருக்குமட்டு
மல்லாமல், எல்லா மக்களுக்கும் பக்தியும் ஈடுபாடும் விளையத்தக்க முறையில், மக்க
ளுடைய தாய்மொழியிலேயே நாமாக்களைச் சொல்லித் தெய்வத்தை மகிழ்வித்து
வேண்டுகோளைத் தெரிவிக்கும் தாய்மொழி அருச்சனைகளைச் செய்விப்பதாம்.

6. சொல்லுவதைப் பொருள் தெரிந்து சொல்லவேண்டும் என்ற கருத்துத்
திருமுறைகள் அனைத்திலும் சொல்லப்பட்டுள்ளது. " சொல்லிய பாட்டின்
பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தில் உள்ளார் சிவனடிக்கீழ்"
என்று மாணிக்கவாசக சுவாமிகள் தமது சிவபுராணத்தில் இறுதி வரிகளில் சொல்லுவது
சிந்திக்கத்தக்கது. அப்பர் சுவாமிகளும் சொல்லில் அமைந்த பொருளை நன்றாகத்
தெரிந்து சொல்லாவிட்டால், அறிவில் உள்ள இருளைச் சிவபெருமான் போக்கமாட்டார்
என்று சொல்கிறார். " சொற்பாவும் பொருள் தெரிந்து தூய்மை நோக்கித் தூங்கா
தார் மனத்திருளை வாங்காதானை " என்பது அவருடைய கீழ்வேளூர்த் திருத்தாண்டகம்.
சுந்தரமூர்த்தி நாயனாருடைய திருமணத்தைத் தடுத்து, அவரை ஆட்கொண்டபோது
'நீ நம்மீது அருச்சனை செய்' என்று வேதியராக வந்த சிவபெருமான் கட்டளையிட்டார்.
சுந்தரரை நோக்கி

> அர்ச்சனை பாட்டேயாகும், ஆதலால் மண்மேல் நம்மைச்
> சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்

என்று சேக்கிழார் பெரியபுராணத்தில் கூறுகிறார். அதன் பொருளாவது இறைவன்
" நீ தமிழ்பாடு, தமிழே நமக்கு அருச்சனை " என்று சொன்னார் என்பதாகும்.
தமிழ் அருச்சனைக்கு இதுவே மிகச் சிறந்த சான்று, திராவிட வேதமாகிய திருமுறையில்
சொல்லப்பட்ட சான்று.

7. மக்கள் தாங்கள் அறிந்த அளவில் இறைவனை வழிபடுவது எல்லோராலும்
சொல்லப்பட்டுள்ளது. சங்க நூலாகிய நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை, சைவத்
திருமுறையுள் பதினோராந் திருமுறையில் ஒருபிரபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.
அங்கு எவ்வாறு முருகன் சந்நிதியில் சென்று இறைவனை ஏத்தவேண்டும் என்று சொல்லு
மிடத்து, பின்வருமாறு நக்கீரர் சொல்கிறார் :—

> போர்மிகு பொருந, குரிசில் எனப்பல
> யான்அறி அளவையின் ஏத்தி ஆனாது
> நின்அளந்து அறிதல் மன்உயிர்க்கு அருமையின்
> நின்அடி உள்ளி வந்தனென் நின்னொடு
> புரையுநர் இல்லாப் புலமையோய்

என்று திருமுருகாற்றுப்படை (276–280) கூறுகிறது. இதன் பொருளாவது : " போர்க் களத்தில் போர் புரிதலில் வல்ல வீரனே, தலைவனே, இணையற்றவனே ; என்று எனக்கு இவ்வாறு தெரிந்த அளவில் உன்னை நான் போற்றுகின்றேன். மனித உயிர்கள் உன்னை அளந்து உணர்தல் இயலாது. உன்னுடைய திருவடி (திருவருளை) நாடி வந்தனன் " என்பது. இங்கு ஏத்தி என்று சொல்லும்போது சாமானிய இரவலன் அல்லது புலவன் தன்னுடைய மொழியாகிய தமிழ் மொழியிலேயே போற்றுகின்றான் என்பது கருத்து.

8. நக்கீரர் இங்கு பழமுதிர்சோலையில் நடைபெறும் வழிபாட்டை விவரிக்கும் போது, சொல்லுகின்ற ஒரு கருத்து நன்கு சிந்திக்கத்தக்கது. திருமுருகாற்றுப்படையில் சொல்லப்பட்டுள்ள ஆறுபடைவீடுகளும், பண்டைக்காலத்தில் முருகவழிபாட்டில் சிறப்பான இடம்பெற்றிருந்த வழிபாட்டுத் தலங்கள் என்பது எல்லோரும் நன்கறிந்தது. இங்குக் குறமகளிர் முருகனைப் பூசிக்கிறார்கள். (அக்காலத்து ஐவகை நிலப் பாகுபாடுகளுள் குறிஞ்சி நிலப்பகுதிக்குரிய தெய்வம் முருகன். அந்நிலத்திற்குரிய மக்கள் குறவர், குறத்தியர் என்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கது. இன்றைய நாடோடி குறவர், குறத்தியரை நாம் இங்குக் கருதக்கூடாது) கோழிக் கொடி அமைத்து வணங்கி அழகிய பூக்களைச் சூடிப் போற்றுகிறார்கள். அப்போது குறமகள் மந்திரம் சொல்லுகிறாள். மந்திரம் சொல்லுவதில் மூன்றுவகை உண்டு என்று சாத்திரங்கள் சொல்லும். ஒன்று, பிறர் கேட்பதற்காகக் கம்பீரமாய் உரத்து உச்சரிப்பது. இரண்டு, பிறர் செவியில் கேளாதபடி, தன் செவியில் மட்டும் விழுமாறு மெல்ல உச்சரிப்பது. இதில் உதட்டின் அசைவு தெரியும், ஒலி கேளாது. மூன்று, தன் செவியிலும் விழாதபடி மானசீகமாக மனத்தாலேயே மந்திரத்தை எண்ணிக்கொள்வது. நக்கீரர் இனி மந்திரம் உரைக்கும் தன்மையைக் கூறும்போது " ஐது உரைத்து " (வரி 228) என்று கூறுகிறார். இதற்குப் பொருளாவது : வெளியே கேளாதபடி மந்திரத்தை உச்சரித்தல். மேற்கூறிய மூன்று வகைகளுள் இது இரண்டாவது வகை என்று கருதலாம். இத்தொடருக்கு உரை எழுதுகிற நச்சினார்க்கினியர் " ஐது உரைத்து—தான் வழிபடுதற்குரிய மந்திரத்தைத் தோன்றாமல் உச்சரித்து " என்கிறார். இதிலிருந்து நாம் பெறுவது குறமகள் மந்திரம் சொல்லி வழிபடுகிறாள். தனக்கு மட்டும் கேட்கும்படியும், வெளியே தோன்றாதபடியும் (கேட்காதபடியும்) மந்திரத்தைச் சொல்லுகிறாள். இதிலிருந்து பல செய்திகளைப் பெறுகிறோம். அவள் சொல்லுவது வெறுந் தோத்திரமல்ல, மந்திரம் என்பது. இரண்டு, குறமகள் சமஸ்கிருதம் தெரிந்து சொல்கிறாள் என்று எண்ண இடமில்லை. தன் தாய்மொழியாகிய தமிழிலேயே மந்திரம் சொல்கிறாள் என்றுதான் எண்ண வேண்டும். காலம் சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்.

இந்த உரையைச் சொல்லுகின்றவர் நச்சினார்க்கினியர். இவர் தமிழ் மொழியில் இலக்கண இலக்கியங்களுக்கு உரை செய்து பெரும் புகழ் பெற்றவர். இவர் மதுரையில் வாழ்ந்தவர், பரத்துவாச கோத்திரத்தைச் சேர்ந்த பிராமணர். இவர் விளக்கம் சொல்லும்போது பண்டைக் காலத்தில் இறைவன் சந்நிதியில் எல்லா இனமக்களும் தமிழில் தோத்திரங்களையும் மந்திரங்களையும் சொல்லி வழிபட்டார்கள் என்று தெளிவாகத் தெரிகிறது.

இது முக்கியமான செய்தி. இவ்வளவு பழங்காலத்தில் தமிழிலேயே மந்திரங்களைச் சொல்லி, ஒரு பெண் இறைவனைப் பூசித்தாள் என்று நாம் எண்ணும்போது, மந்திரமல்லாத வெறும் தோத்திரப்பொருளேயுள்ள அருச்சனையைத் தமிழில் செய்யலாமா என்ற கேள்வி எழுவதற்கு இடமேயில்லை. நக்கீரருடைய சொற்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே தமிழில்தான் துதிகள் நடைபெற்றன என்பதற்குச் சிறந்த சான்று பகர்கின்றன.

9. இது தொடர்பாக வைணவத்தில் முதலாழ்வாருள் முதல்வராகிய பொன்கையாழ்வாரின் அருளிச் செயலும் அறியத்தக்கது. உலகளந்த மூர்த்தியாகிய திருவிக்கிரமனை (திருமாலை) மக்கள் சித்திரமாகவும் பிரதிமையாகவும் அமைத்துத் தாங்கள் தம் அறிவிற்கு ஏற்றவாறு பாடலால் ஏற்றித் தொழுகின்றார்கள் என்று அவர் பாடுகிறார்.

அவரவர் தாம்தாம் அறிந்தவாறு ஏத்தி
இவரிவர் எம்பெருமான் என்று—சுவர்மிசை
சார்த்தியும் வைத்தும் தொழுவர் உலகளந்த
மூர்த்தி உருவே முதல்

இதில் " அறிந்தவாறு ஏத்தி " என்ற தொடருக்குத் தமக்குத் தெரிந்த துதிப்பாடல்களால் அதாவது தமிழ் மொழியால் என்பது பொருளாகும்.

10. அப்பர் தேவாரத்துள் திருக்கயிலைத் திருத்தாண்டகம் இரண்டு பதிகங்களும், திருவாரூர் திருமூலட்டானத் திருப்பதிகம் முழுமையும் அருச்சனை ரூபத்தில் அமைந்த " போற்றி " என்று முடிகின்ற அடிகளைக் கொண்டவை. இங்கு ஒவ்வோர் அடிக்கும் தொடக்கத்தில் " ஓம் " என்ற பிரணவ ஒலியைச் சேர்த்துக்கொண்டால், அவ்வடி முழு அருச்சனைக்குரிய நாமமாகும். இப்பதிகங்கள் போலவே மாணிக்கவாசகருடைய போற்றித் திருவகவல் முழுமையும், சிவபுராணம் திருவண்டப் பகுதியில் சில அடிகளும், திருச்சதகத்தில் ஏழாம் பகுதி முழுமையும், அதிலேயே 90, 100 ஆம் பாடல்களும், திருவெம்பாவை 20 ஆம் பாடலும் முழுமையும் " போற்றி" என்று முடிகின்ற அருச்சனைற

வடிவத்தில் உள்ளன. இவை போலவே நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஆண்டாள் திருப்பாவை 24 ஆம் பாடலாகிய '' அன்று இவ் உலகம் அளந்தாய் அடிபோற்றி '' என்று தொடங்குகின்ற பாடல் முழுமையும் '' போற்றி '' என்ற தொடரால் முடி கின்ற அடிகளைக் கொண்டது.

11. வேதங்கள் தங்களுக்கே உரியவை என்று பிராமணர்கள் சொல்லி பிறருக்கு இவற்றில் இடமில்லை என்று விதி செய்து வைத்தமையால், மிகப் பெரும்பான்மையான பொதுமக்கள், வேதங்களுக்கும் கோயில்களுக்கும் முகம்மதியரால் பேராபத்து விளைந்த போது முழுமனத்தோடு இவைகளைப் பாதுகாக்க முன்வந்ததாகத் தெரியவில்லை. இச்சாத்திரங்களிலும் கோயில்களிலும் அவர்களுக்கு எல்லா உரிமைகளும் இல்லாமை யால், முகம்மதியர்கள் கத்தி முனையில் மக்களை மதம் மாற்றியபோது, சாமானிய மக்கள் எளிதில் மாறிவிட்டார்கள். பல காரணங்களில் கோயில் சடங்குகளும் வழி பாட்டுச் சடங்குகளும் தமிழ் மொழியில் செய்யப்பெற்று மொழி மூலம் மக்களை ஈடு படுத்தவில்லை என்பதும் ஒரு காரணம். இப்படியில்லாமல் அன்று தமிழ் மொழியே சமயச் சடங்குகளில் முழு ஆதிக்கம் பெற்றிருக்குமானால், தமிழ்நாட்டின் சரித்திரம் நிச்சயம் வேறுவிதமாக இருந்திருக்கும்.

12. நிகழ்ந்துபோன சரித்திரத்தை மாற்றி எழுத முடியாது. ஆனால், எதிர் காலச் சரித்திரத்தை நிர்ணயிப்பது நம் கையில் இருக்கிறது. இன்று நம்முன் உள்ள பிரச்சினை, எத்தனையோ துறைகளில் தமிழ்மொழி ஆட்சிக்கு வந்திருப்பதுபோல, சமயத்துறையிலும் தமிழ்மொழி ஆட்சிக்கு வர வேண்டுமென்பது மக்கள் நலனையும், நாட்டு நலனையும் கருதும் எவரும் இதை மறுக்க இயலாது. தமிழ்நாட்டில் இன்று தமிழர் ஆட்சி, கல்விமுறையில் தமிழ், ஆட்சித்துறை எல்லாம் தமிழ். நீதித் துறையும் தமிழாகி வருகிறது. சமயத்துறையும் தமிழாகி வருவது முறையேயாகும்.

13. இதுகாறும் அருச்சனையானது ஆகம பூசை பெற்ற கோயில்களில் பொதுவாக வடமொழியில் நடைபெற்று வந்தது. பூசை குறித்த விதிகள் எல்லாம் சமஸ்கிருதத் திலேயே சொல்லப் பெற்றிருந்தமையால், அவ்விதிகளின்படி நடந்த பூசையும் சமஸ்க் கிருதத்திலேயே செய்யப்பெற்று வந்தது. இதை அனுசரித்து அருச்சனைகளும் சமஸ்க் கிருதத்தில் செய்யப்பெற்று வந்தன. பூசையை சமஸ்க்கிருதத்தில்தான் செய்ய வேண்டும், தமிழில் செய்யக்கூடாது என்று ஆகமத்தில் எங்கும் சொல்லப்பெறவில்லை.

14. கோயில்களில் மக்கள் சென்று வழிபடும் சமயத்தில் வடமொழிக்கும் தமி ழுக்கும் என்ன நிலை உள்ளது என்று சிந்திக்க வேண்டும். எங்கும் வியாபித்துள்ள இறைவனை வணங்க வருகின்ற மக்கள் கண்முன்னே அர்ச்சாரூபத்தில் அல்லது சிவ லிங்கத் திருமேனி வடிவில் திருக்கோயில்கள் நமக்குத் தருகின்றன. இவை ஆகமப்படி பிரதிட்டை செய்யப்பெற்றன என்றெல்லாம் நாம் அறிகிறோம். இவ்வாறு மூர்த்தியை எழுந்தருளிவிப்பதற்கு ஆவாகனம் செய்தல் என்று பெயர். இந்த மூர்த்தியிடத்து மக்கள் தமிழ் மொழியில் தங்கள் எண்ணத்தை விண்ணப்பம் செய்கிறார்கள். '' சிக் கெனப்பிடித்தேன் எங்கெழுந்தருளுவது இனியே '' என்று மாணிக்கவாசகர் பாடுகின் றார். '' ஒன்றே என் உள்ளத்தில் உள்ளடைந்தேன் '' என்று காரைக்காலம்மையார் பாடுகின்றார். '' அவன் உள்ளத்தில் உள்ளான் என்று ஓர் '' என்று ஆழ்வார் பாடு கின்றார். இவ்வளவு உறுதியாக ஆண்டவனைப் பற்றுவது தமிழ்மொழியினால்தான். அவனுடைய அருளைப் பெறுவதற்குரிய மொழி, நினைக்கின்ற பேசுகின்ற மொழி யாகிய தமிழ்தான். இதை ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள் ஆவாகனத்துக்கு (அதாவது இறைவனை வருவிப்பதற்கு) வடமொழி, அனுக்கிரகத்திற்கு (அருள் பெறுவதற்கு) தமிழ்மொழிதான் என்று திட்டவட்டமாக அறிந்தமை இங்கு நினைவு கூரத் தக்கது.

15. தமிழ் என்ற!!லே ஆகமத்தின் விரோதம் என்று சிலர் தவறாக நினைக்கிறார் கள். இது பெரிதும் பிழைபட்டது. ஏனெனில், ஆகமத்திலேயே பூசை முடித்து அலங் கார நைவேத்தியங்கள் ஆன பிறகு உபசாரங்களைச் சொல்லுமிடத்து கீதம் என்ற உபசாரமாகிய கானம் அல்லது பாட்டைச் சொல்லும்போது ஆகமங்களில் தமிழ்ப்பாட்டு சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணமாக காமிகாகமம் நாலாம் படலமாகிய அர்ச்சனா விதிப்படலம் 438 ஆவது சுலோகம் இங்கு காணத்தகுவது.

ஊர்த்துவம் திராவிட பாஷாங்கம், கானம் நிருத்தயுதம் துவா
சமஸ்கிருதா தனப ப்ரம்சம் நா நாஸ்வர ஸம்ன்விதம்

இதன்மேல் திராவிட பாஷையில் அங்கமான காலத்தை (தோத்திர ரூபமான பாட்டை) நானாவித சுரங்களோடு கூடியதாகிய சமஸ்கிருத நடனத்தோடு செய்தல் வேண்டும். இதற்கு அடுத்த பாஷையில் காலத்தையும் செய்ய வேண்டும் என்பது இதன் பொருள். சுலோகத்தில், பரதகண்டத்தில் அக்காலத்தில் பதினெட்டு மொழிகள் வழங்கியமையாக பதினெட்டு மொழிகளிலும் தோத்திரங்களைப் பாடலாம் ஒரு கருத்து இருந்தமையால், என்று ஆகமங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தோத்திரங்களைத் தாய்மொழி யில் பாடலாம் என்று ஆகமம் விதிப்பதை அனுசரித்து, தோத்திரம் என்று கருதத்தக்க அர்ச்சனையையும் அதே விதியின்படி தமிழிலேயே செய்துகொள்வது பெரிதும் பொருத்த முடையது.

16. வைணவ சமயத்திலும் அர்ச்சனைகளைத் தமிழிலே செய்யலாம் என்ற கருத்து பாஞ்சராத்திர ஆகமங்களாகிய நாராயணசம்மிதையைக்கு வைபவ காண்டம் 7ஆம் அத்தியாயம் 26—28 சுலோகங்களிலும், ஈஸ்வரசம்மிதை 11 ஆம் அத்தியாயம் 231—235 சுலோகங்களிலும் சொல்லப்பட்டுள்ளது. ஈஸ்வர சம்மிதையில் ரிக்வேதம் முதலிய வேதங்கள், சுவாமி புறப்பாட்டில் திருமாலுக்குப் பின்புற மாகவும், திராவிட தேவமாகிய பிரபந்தம் திருமாலுக்கு முன்புறமாகவும் ஓதப் பெறவேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளமை முன்னமே இவ்வறிக்கையி ப் ஆகமங்களில் இடைச்செருகல்' என்ற தலைப்பில் ஆகம மேற்கோளுடன் சொல்லப் பட்டுள்ளன. இவற்றாலும் திராவிட வேதத்துக்குரிய முதன்மை நன்கு விளங்கும் ஈஸ்வரசம்மிதையானது. 108 வைணவ ஆகமங்களில் இரத்திரத்திரயம் என்று கருதும் சாத்வத சம்மிதை, பவுஷ்கர சம்மிதை, ஜயாகிய சம்மிதை என்ற மூன்றில் சாத்வத சம்மிதைக்கு உபப்ரும்மணம் (உபாகமம் போல்வது).

17. இங்கிலாந்தில் சென்ற நூற்றாண்டில் இடைப்பகுதிவரை நீதிமன்ற நடவடிக்கைகள் லத்தீன் மொழியில் நடைபெற்று வந்தன. லத்தீன் தேவபாஷை என்பது அவர்கள் கருத்து. சமயதுறையிலும், நீதிதுறையிலும் அங்கு லத்தீன் மொழியே ஆதிக்கம் பெற்றிருந்தது. ஒருநாள் மக்களுக்கு உணர்வு வந்தது. உடனே நீதித்துறையில் லத்தினை அகற்றிவிட்டு, ஆங்கில மொழிலிலேயே அனைத்தையும் நடத்த ஆரம்பித்தார்கள். அதுபோல, இந்தியாவுக்கு வந்த கிருஸ்துவப் பாதிரியார்கள் இங்கும் தங்கள் மாதா கோயில்களில் லத்தினிலேயே சமயச் சடங்குகளை நடத்தி வந்தார்கள். தொடக்க காலத்தில் கிருஸ்துவ மக்கள் '' லத்தீன் மொழியால்தான் நமக்குச் சொர்க்கவாசல் திறக்கிறது'' என்று உண்மையிலேயே எண்ணினார்கள். ஆனால் காலம் மாறிவிட்டது. போப் ஆண்டவருடைய அங்கீகாரத்தின்மேல் தமிழ்நாடு மாதாகோவில்களில், அனைத்தையும் இன்று தமிழிலேயே அவர்கள் நடத்துகிறார்கள்.

18. தமிழ்நாட்டில் வழிபாட்டை நடத்துகிற பொறுப்புடையவர்கள் இதை மனதில் எண்ணிப்பார்க்கவேண்டும். தமிழர்ச்சனை வேண்டுமென்போர் சொல்வதெல்லாம் கோயில்களில் பாமர மக்களுக்குப் புரிகிற மொழியாகிய தமிழுக்குச் சம இடம் கொடுத்தல் வேண்டும் என்பதாகும். திருஞானசம்பந்தர் தாம் சொல்வதெல்லாம் இறைவன் உரை, '' எனதுரை தனதுரையாக'' என்கிறார் (திரு இலம்பையங் கோட்டூர்த் தேவாரம்). அவர் உரையெல்லாம் தமிழ். நமது பாடல்களாகிய மந்திரங்களை ஓதுபவர்கள் ''வானில் அரசாள்வர் ஆணை நமதே'' என்ற திருஞானசம்பந்தர் பல இடங்களில் சொல்கிறார் (கோளறு பதிகம் முதலாயின).

19. அப்படியே வேதத்தில் தெரியாதனவெல்லாம் ஆழ்வார்கள் தமிழை ஓதித்தான் தெரிந்து கொள்கிறோம் என்கிறார் வடகலை ஆச்சாரியரான வேதாந்த தேசிகர் :

செய்யதமிழ் மாலைகள்நாம் தெளிய ஓதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே

[அதிகார சங்கிரகம் முதல்பாட்டு; மாலைகள்-பன்னிரு அழ்வாரின் அருட் பிரபந்தங்கள். மறைநிலங்கள்-வேதப்பொருள்கள்] நம்மாழ்வாரைப் போற்ற வந்த ஒருவர், '' வேதங்களையெல்லாம் கடந்து செல்கின்ற தொல்லைமூலப் பரஞ் சுடர், நம் குருகூர்ப் புனிதனாகிய நம்மாழ்வார் கவியில் ஒரு பாதத்தைக் கடந்து செல்லாது '' என்று சொல்கிறார்.

வேதத்தின் முன்செல்க, மெய்யுணர்ந்தோர் விரிஞ்சன் முதலோர் கோதற்ற ஞானக் கொழுந்தின் முன்செல்க, குணங் கடந்த போதக்கடல் எம்குருகூர்ப் புனிதன் கவியின் ஒரு பாதத்தின் முன்செல்லுமோ, தொல்லை மூலப் பரஞ்சுடரே

—சடகோபர் அந்தாதி.

அவர் கருத்தாவது வேதத்தினாலும், ஞானிகளாலும், பிரமன் முதலான குறைவற்ற அறிவுடையவர்களாலும் உணர்வதற்கு எட்டாத பரம்பொருள், நம்மாழ்வருடைய தமிழ் வேதமாகிய திருவாய் மொழியின் ஒவ்வொரு பாடலின் அடிதோறும் கட்டுண்டிருக்கிறார் என்பதாகும்.

20. இவ்வாறெல்லாம் தமிழே மந்திரமொழியாகி எல்லாம்தரும் என்றும், தமிழே இறைவனுக்கு விருப்பமானது என்றும் ஆச்சாரியருடைய வாக்காகிய திராவிட வேதங்கள் ஆணையிட்டுச் சொல்கின்றன.

21. கோயில் பூசை செய்வோரில் அனேகர் வடமொழி மந்திரங்களைச் சரியாக உச்சரிப்பதில்லை. வடமொழியில் ஓரெழுத்தை மற்றோர் எழுத்தாக உச்சரித்தால் பொருள் முற்றிலும் மாறிவிடும். 'பயஹரி' என்பது பயத்தைப் போக்குபவன் என்ற பொருள் உடையது. அர்ச்சகர் சொல்லும்போது 'பயகரி' என்று சொல்லிவிட்டால், பயத்தை உண்டுபண்ணுபவன் என்று பொருளாகிவிடும். எத்தனை மாறான பொருள் :

இப்படி எத்தனையோ, தாய்மொழி அல்லாமையால் கேட்கும் தமிழ் மக்களுக்கு இதில் எதுவும் விளங்குவதில்லை. பிழை தெரியப்போவதும் இல்லை. வேண்டுகோளும் விபரீதமான வேண்டுகோள் ஆகிறது. தவிர ஒரு தெய்வத்துக்கு

148-326—8a

மற்றொரு தெய்வத்தின் மந்திரத்தைச் சொல்வது எங்கும் வழக்கமாக உள்ளது. நவராத்திரியின்போது துர்க்கைக்குச் சிறப்பு அருச்சனைகள் நடைபெறுகின்றன. அர்ச்சகர் எல்லாம் அப்போது லலிதா சகஸ்ரநாமத்தை அதன் சிறப்புக் கருதிச் சொல்லுகின்றார்களேயன்றி, துர்க்கை அஷ்டோத்திரமோ, சகஸ்ரநாமமோ சொல் வதில்லை. இப்படியும் எத்தனையோ பிழைகள் நடைபெறுகின்றன.

22. மேலும் ஆகமங்கள் கிரியை அர்ச்சனை பாவனை என்ற மூன்றைச் சொல்லுகின்றன. இம்மூன்றின் பொருளாவது மனம், மொழி, மெய் ஆகிய மூன்று கரணங்களும், வழிபாட்டில் ஒருமித்துச் செய்யப்படுவதாகிய ஒருமைப்பாடு. கிரியை-காலத்தால் செய்வது. அருச்சனையாவது வாக்கினால் சொல்வது பாவனை என்பது சொல்லிச் செய்கின்றதை உணர்ந்து மனத்தால் எண்ணுவதாகிய தியானம். இங்கே சொல்வதன் பொருள் தெரியாமையால் மனம் எண்ணுவதில்லை. மனம் எண்ணாதபோது செய்கின்ற செயலே ஆகமத்துக்கு மாறாகி விடுகிறதல்லவா?

23. எனவே இங்கு இரண்டு முறையில் நிலைமையைத் திருத்திக் கொள்ள முடியும். ஒன்று, செய்கிற அருச்சகர்களை பொருள் தெரிந்து தியானத்தோடு செய்யும்படியும், திருத்தமாக உச்சரிக்கும்படியும் பயிற்றுதல். மற்றொன்று, தெரிந்த தமிழ்ச்சொல் மந்திரங்களைச் சொல்லும்படி பயிற்றுதல். இந்த இரண்டில் பிந்தியது சிறப்பு. ஏனெனில் முந்தியதில் கிரியை, அருச்சனை, பாவனை என்ற மூன்றும் சரியாய் இருந்தாலும், வந்திருக்கிற மக்கள் அவற்றைப் பின் பற்ற முடியாது. அர்ச்சகர் பிழை செய்தாலும் இவர்களுக்கு தெரியாது. ஈடுபாடும் இவர்களுக்கு உண்டாகாது. ஆனால் பிந்தியதில் பொதுமக்கள் அருச்சனை வரிகளைத் தமிழ்மொழி என்ற காரணத்தால் நன்றாக மனம்வைத்து உணர்வார்கள் உணரும்போது, மனம் அதில் லயிக்கும், லயிக்கும்போது அவர்களுடைய பக்தி பெருகி, மக்களே இன்னும் மேல்நிலைக்கு வரமுடியும். அதலால் முந்தியதைவிடப் பிந்தியது சிறப்புடையது. அருச்சனை என்பது அறியாமையையோ அல்லது தவற்றையோ அனுமதிப்பதாக இருத்தல் கூடாது.

24. தமிழ் அருச்சனை என்று சொல்லும்போது அவரவர் மனம் போன போக்கில் பெயர்களைத் தொகுத்துச் சொல்லி அருச்சிப்பது என்று பொருளாகாது. மந்திரம் என்ற சொல்லுக்கு நினைப்பவரைக் காப்பது என்பது பொருளாகும். ஆழ்வார் நாயன்மாருடைய அருட்பாடல்கள் யாவும் பல்வேறு சந்தர்ப்பங்களில் மக்களுக்குப் பாதுகாப்பு தந்திருக்கின்றன. எனவே மந்திரங்களாகிய அப்பாடல் களிலிருந்து இறைவனை விளித்துச் சொல்கின்ற புகழ் மொழிகளையும் வேண்டுகோள் மொழிகளையும் தொகுத்து அமைத்துக் கொண்டால் அத்தொகுப்புக்களே அஷ்டோ தரம், சகஸ்ரநாமம் என்ற இரண்டு வகையும் ஆகும். தொடக்கத்தில் ' ஓம் ' என்ற சப்தத்தை அமைத்துக்கொள்ளவேண்டும். ஓம் என்பதற்குப் பலபொருள்கள் சொன்ன போதிலும் கூட, அது இந்த நாட்டில் இந்துவாய் உள்ள அனைவருக்கும் பொதுவான ஓர் மந்திர ஒலியே அன்றி, ஒரு மொழிக்கேயுரிய சொல்லல்ல. இரண்டாவதாக வருவது இறைவனைப் போற்றுகின்ற சொல் அல்லது தொடர். மூன்றாவதாக நம : என்ற ஒலி வடமொழியில் அமைக்கப்பெற்றுள்ளது. இவ்வாறு மூன்று பகுதிகளைக் கொண்ட வடமொழி நாமாவைப்போல, தமிழில் அமைத்துக்கொள்ள முடியும். 'ஓம் பவாய நம :' என்று வடமொழியில் ஓர் அர்ச்சனைத் தொடர் இருக்குமானால், அதுபோலவே தமிழில் ' ஓம் ஈசனடி போற்றி', ' ஓம் எந்தையடி போற்றி' என்ற முறையில் (இவை திருவாசகத் தொடர்கள்) தமிழில் அமைத்துக் கொள்ளலாம். போற்றி என்ற சொல்லுக்கு வணக்கம் என்பதே பொருளாகும். நம : என்ற சொல் வடமொழி மத்திரங்களிலும் அருச்சனை நாமாக்களிலும் ஆளப்படுகிறது. மந்திரங் களில் வருவது வேறு. ஆனால் நாமாக்களில் வரும்போது அதற்கு மந்திரப்பொருள் இல்லை. இது வணங்குகிறேன் என்ற சாமானியப் பொருளையே கொண்டுள்ளது. இதற்கு நேர் தமிழ்ச் சொல் போற்றி என்று கொள்வதில் எவ்விதத் தடையும் இருக்க வியலாது. பல ஆண்டுகள் பல்லாயிரம் கோயில்களில் பல்லாயிரம் மக்கள் உணருமாறு இத் தமிழ் மந்திரங்கள் சொல்லப்பெறுமானால் இவற்றில் பூர்ண தெய்வ சாந்நித்தியம் அமைந்து இருப்பது மக்களுக்குப் புலனாகும்.

இங்கு வற்புறுத்தும் முக்கிய கருத்து, அமைக்கின்ற மந்திரத் தொடர்கள் யாவும் சைவத்திருமுறைகள், நாலாயிரப்பிரபந்தம் ஆகியவற்றில் அருளாளர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ள அருள்வாக்குகள் மட்டுமே அமைத்துக்கொள்ளவேண்டும் என்பதாகும்.

25. இவ்வாறு அமைத்துக்கொள்ளப்பெறும் நாமாக்கள் எல்லாக் கோயில்களுக்கும் பொதுவான அருச்சனைகள், சிலசமயம் சில கோயில்களில் அவ்வத் தலபுராணங்களை யொட்டியும், அவ்வத் தெய்வத்தின் அருள் விளையாடல்களையொட்டியும் நாமாக்கள் அமைக்கப்பெறுவதும் உண்டு. இவ்வாறே இவற்றையும் தமிழில் அமைத்துக்கொள்ள லாம். இவை அவ்வக் கோயில்களுக்கு மட்டும் சிறப்பாக உரியவை.

26. பொதுவாகச் சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் ஆலயங்கள்தோறும் தமிழில் செய்யத்தக்க அருட்சனை முறைகளை இதுவரையில் சொன்னோம். பரம் பொருளின் வடிவங்களான இத்தெய்வங்களையன்றி, இவ்விருவகைக் கோயில்களிலும் வேறுபல தெய்வ மூர்த்திகளுக்கு இன்று அர்ச்சனைகள் நடைபெற்று வருகின்றன. சிவாலயத்தில் அம்பிகை, நடராசர், தட்சிணாமூர்த்தி, விநாயகர், முருகப்பெருமான் துர்க்கை; திருமால் ஆலயத்தில் தாயார், இராமர், கிருஷ்ணர், நரசிம்மர், வராக,

மூர்த்தி இவைகளைப்போல பின்னும் பல இருப்பதும் உண்டு. இந்த மூர்த்தங்களுக்கெல்லாம் தமிழ்மொழியில் அருச்சனைகளை வகுத்தமைக்கவேண்டும். பொதுவாகத் திருமுறைகளில் சிவபெருமான் துதிகளே காணப்படுகின்றன. திருமுறைகளில் தனியாக அம்பிகை முதலான பிற தெய்வத் துதிப்பாடல்கள் இருப்பது அருமை. ஆயினும் உமையொரு பாகர் என்ற நிலையில் உமை பற்றிய குறிப்புகளும், தனியே நடராசர், தென்முகக்கடவுள், விநாயகர் பற்றிய குறிப்புகளும், மிகவும் அபூர்வமாய் துர்க்கையைப் பற்றிய குறிப்புகளும் கிடைப்பதுண்டு. முருகனைப் பற்றித் திருமுறைகளிலும் அருணகிரிநாதர் திருப்புகழ் போன்ற சிறப்புமிக்க அருள்நூல்களிலும் குறிப்புகள் அதிகம். அப்படியே பிற்காலத்தில் தோன்றிய அபிராமியந்தாதி முதலான தோத்திர நூல்களில் அம்பிகை பற்றிய குறிப்புகள் அநேகம். ஆகவே இத் தெய்வங்கள் பற்றி நாமாக்களைத் தொகுக்கும்போது அருணகிரிநாதர், அபிராமி பட்டர், தாயுமானவர் அவ்வையார் (விநாயகர் அகவல்) போன்ற அருளாளர் பாடல்களை ஆராய்ந்து அவற்றிலிருந்து ஏற்ற தொடர்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.

27. இவைபோல வைணவ மரபில் இராமர், கிருஷ்ணர் போன்ற மூர்த்தங்களுக்குத் தோத்திரங்கள் நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்திலேயே நிரம்பக் காணப்படும் தாயார் தோத்திரமாக நாலாயிரத்துள் சில வரிகளும், பிற்காலத்தில் அதிவீரராம பாண்டியர் பாடிய புராணத்தில் அடங்கிய இலக்குமிதோத்திரம் முதலியனவும் பயன்படும்.

28. இந்தத் தெய்வங்களுக்கு வடமொழி அருச்சனைகளில் சொல்லப்படுகின்ற நாமாக்கள் யாவும் புராணத் தொடர்புடையவை. இவற்றை யார் தொகுத்தார், எதிலிருந்து தொகுத்தார் என்பது நமக்கு விளக்கமாகத் தெரியவில்லை. தவிர இவை ஒரு காலத்தில் ஒருவரால் தொகுக்கப்பெறவில்லை. வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பக்தர்களால் தொகுக்கப்பெற்றவை. அன்றியும் இவை விரிந்த நிலப்பரப்புடைய தமிழ் நாட்டில், வெவ்வெறு பகுதிகளில் வெவ்வேறாகவும் உள்ளன. இங்கெல்லாம் கருத்தில் இருக்கவேண்டிய முக்கிய சிந்தனை அருளாளர் வாக்கேயன்றி, வேறு வாக்குகளைப் பயன்படுத்தக்கூடாது என்பது. ஆகவே இவற்றைத் தமிழில் தொகுக்கும்போதாவது அருளாளர் வாக்குகளாகவும் பல இடங்களில் ஒரேவிதமான அமைப்புடைய தொகுப்புகளாகவும் தொகுத்தோமானால், அர்ச்சகர்களை நியமிக்கும்போது அவர்கள் எந்தப் பகுதியில் பணிபுரிந்தாலும் அங்கு அவற்றை அறிந்து சொல்லுதல் எளிதாயிருக்கும். இது தொடக்க நிலையிலேயே மனத்தில் கொள்ளவேண்டிய செய்தி.

29. தமிழ் அருச்சனைகளுக்குத் தொகுக்கப்பெறும் நாமாக்களில் பின்வரும் தன்மைகள் பொருந்தியிருக்கவேண்டும்.

(அ) கவிதைத் தன்மை.—தகுதிக்குரிய எதுவை மோனை வழிஎதுகை முதலான அம்சங்கள் சொல்நயம்.

(ஆ) இசைத் தன்மை.—பெரும்பாலும் வடமொழி அருச்சனைகள் இன்று மோகனராகத்தில் சொல்லப்பெறுகின்றன. தமிழிலும் இத்தன்மை இருப்பது நல்லது. அர்ச்சகர் இசையில் வல்லவராயிருந்தாலும்கூட, அர்ச்சனை செய்யுமிடம் இன்னிசை வித்தியாசத்திற்கு ஒத்துவராது. இதை மனத்தில் கொண்டு தொகுக்கவேண்டும்.

(இ) கவர்ச்சித் தன்மை.—சொற்களின் அமைப்பும் தேர்வும் அவற்றின் ஒழுக்கும் கம்பீரமாக இருந்து, தங்கள் ஓசை நயத்தால் கேட்போரைக் கவரவும் உருக்கவும் வல்ல முறையில் அமைதல் வேண்டும்.

(ஈ) தத்துவப் பொருள்.—கோயிலிலும் மூர்த்தங்களும் சமய தத்துவங்களை உணர்த்தும் முறையில். அமைக்கப்பெற்றுள்ளன. ஆதலால் மூர்த்தங்ளைப் புகழும் அர்ச்சனைத் தொடர்கள் தத்துவப் பொருள்களை உள்ளடக்கி மட்டுமல்லாமல், அவற்றைச் சோபான முறையில் வளர்த்துகொண்டு போவனவாய் இருக்கவேண்டும்.

(உ) தேவாரப் பதிகங்கள் முதலியவற்றை அப்படியே எடுத்து அமைத்துச் சாத்துமுறை அருச்சனையாகவும் கொள்ளலாம். இதற்கு உதாரணங்கள் அப்பர்சுவாமிகளுடைய திருக்கயிலாயத் திருத்தாண்டகங்கள், தோன்றும் என்று முடிகின்ற பதிகம் (திருப்பூவணப் பதிகம்), நாதவிந்து கலாதீ நமோ நமோ போன்ற திருப்புகழ்ப் பாடல்கள் முதலியன.

30. இதுகாறும் சொல்லியவற்றால் தமிழ் அருச்சனை ஆகமத்துக்குப் பொருத்தமானது, ஆகமத்திலேயே விதிக்கப்பட்டது என்பதும், அதை விரிவாகவும் பொருள் பொதிந்த வகையிலும் செயல்படுத்துவது அரசாங்கத்தின் கடமை என்பதும் நன்கு விளங்கும். இதனால் வடமொழியை அகற்றிவிடவேண்டும் என்பது பொருள் அன்று. பெருகிவரும் மக்களுடைய ஆர்வத்தை நன்கு மதித்து, தமிழுக்கும் இடங்கொடுக்கட்டும், இதன்மூலம் பிற சமய மத மாற்றத்துக்கும் ஓரளவு அணைகோலட்டும்.

## செயல்திட்டம்.

### ஆகமக் கல்லூரி அமைத்தல் :

1. மத்திய அரசு 1960—62—ல் நியமித்த இந்து அறநிலையக் கமிஷன், டாக்டர் சி.பி. இராமசாமி அய்யர் தலைமையில் சமர்ப்பித்த அறிக்கை அத்தியாயம் 16, பத்தி 8இல் முக்கியமான இந்து சமய தலங்களில் பூசகர்களுக்குப் பூசை முறைகளில் பயிற்சி

அளிப்பதற்கான அவசியம் ஒப்புக்கொள்ளப்பட்டு, சுருக்கமான திட்டமும் சொல்லப்பட்டுள்ளது. அதன் பிறகு இப்போது, கடந்த 20 ஆண்டுகளில் அப்படிப்பட்ட ஒரு பயிற்சியின் அவசியம் இன்னும் பெருகியிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம், ஆகமப் பயிற்சியும் பூசைப் பயிற்சியும் சிறப்பாகப் பெற்றிருந்து பூசகர் தலைமுறை மறைந்து போனதும், அடுத்து வந்த இளந்தலைமுறையினர், பூசையில் சிரத்தைகுன்றி, மேற்ப் போக்காகவே பூசையில் ஈடுபடும் மனப்பான்மை கொண்டிருப்பதும் ஆகும். இன்று கோயிலுக்கு வரும் பொதுமக்கள் கோயில் வழிபாட்டில் அதிகக் கவனம் செலுத்துகிறார்கள். ஆதலால் வழிப்பாட்டை நடத்துகின்ற பூசகர், வழிபட வருவோருடைய மரியாதைக்குப் பாத்திரராகவும், அவர்களை வழிபாட்டில் இன்னும் அதிக ஈடுபாடு கொள்ளும்படி செய்ய வல்லவராகவும், பக்தியையும் வழிபாட்டுத் துறையில் அறிவையும் அவர்களிடத்தில் பெருக்க வல்லவராகவும் அமைதல் இன்றியமையாதது. முன்பெல்லாம் பக்தி ஒன்றையே கொண்டு மக்கள் கோயிலுக்குச் சென்றார்கள். ஆனால் இன்று பகுத்தறிவோடு கூடிய பக்தி வளர்ந்து வருகின்றது. அதற்கு ஈடு கொடுக்கக்கூடியவாறு பூசகருடைய தகுதி மேம்பட்டிருக்கவேண்டும். ஆதலால் பூசகர் அனைவருக்குமே காலத்தின் தேவைக்கு ஏற்ற செம்மையான பயிற்சிமுறை ஒன்றை அரசே அமைத்து நிர்வகித்து வருவது முக்கிய கடமை. இன்று ஏற்படும் மதமாற்றங்களை நாம் மனத்தில் கொண்டுபார்தோமானால், இந்தக் கடமை எவ்வளவு பெரியது என்பதும் பெறப்படும்.

## இன்றுள்ள ஆகமப் பாடசாலைகள் :

2. இன்றும் தமிழ்நாட்டில் சில பெருங்கோயில்களின் சார்பில் வேதாகம பாடசாலைகள் நடைபெறுகின்றன. அவை யாவும் அவ்வக்கோயில் அறங்காவலரின் மேற்பார்வைக்கு உட்பட்டு கோயில் நிதி உதவியினால் நடைபெற்று வருகின்றது. இருப்பினும், அவற்றுள் ஒத்த பயிற்சி முறையோ, பாட அமைப்போ, பாட புத்தகங்களோ, பொதுவான தேர்வுத் திட்டமோ, பொதுவான ஒரு நிருவாகமோ இன்று வரை ஏற்படவில்லை.

ஒவ்வொரு வேதாகம பாடசாலையிலும் பயிற்சிக் காலம் ஐந்தாண்டு. ஆனால் அங்குப் பயிற்றும் ஆசிரியர்கள் இருவரே உள்ளனர். ஒருவர் வேதத்துக்கு, மற்றவர் ஆகமத்திற்கு. சில பாடசாலைகளில், தேவாரமும் கற்பிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தேவாரப் பயிற்சிப் பொறுப்பைக் கோயில் ஓதுவாரே ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஓராண்டில் 20 மாணாக்கரைச் சேர்த்த பின், இந்த ஆசிரியர்களே ஐந்தாண்டுக்காலம் அவர்களுக்குப் பாடம் கற்பித்துக் கொடுத்து, அவர்கள் தேர்வு பெற்று வெளியேறிய பிறகுதான், அடுத்த இரண்டாம் முறை மாணாக்கர் சேர்க்கை நடைபெறுகிறது. அதாவது இங்கு ஐந்தாண்டுக்கு ஒரு முறைதான் மாணாக்கர் சேர்க்கை நடைபெறுகிறது. இப்படித்தான் நடைபெறவும் முடியும்.

3. தற்போது நடந்துவரும் பாடசாலைகளின் விவரம் :

| வரிசை எண்ணும் ஆலயத்தின் பெயரும். (1) | பயிற்சிக் காலம். (2) | பயிற்சி பெறும் மாணவர் எண்ணிக்கை. (3) (சுமார்) | குறிப்பு. (4) |
|---|---|---|---|
| அருள்மிகு— | | | |
| 1 அக்கினீசுவரர் கோயில், திருப்புகலூர், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | ஐந்தாண்டு. | 25 | .. |
| 2 தண்டாயுதபாணிசுவாமி கோயில், பழனி, மதுரை மாவட்டம். | ஐந்தாண்டு. | 30 | .. |
| 3 இராமநாதசுவாமி கோயில், இராமேசுவரம். | ஐந்தாண்டு | 20 | .. |
| 4 வேதாகம பாடசாலை, அல்லூர், திருச்சி மாவட்டம் (காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகள் மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது). | ஐந்தாண்டு. | 30 | ஆணையர் பொது நல நிதியிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ. 20,000 முன்பு வழங்கப் பட்டு வந்தது. |
| 5 தருமையாதினம், தருமபுரம், மாயூரம் வட்டம், தஞ்சை மாவட்டம். | ஐந்தாண்டு. | 20 | .. |
| 6. திருக்கடையூர், மாயூரம் வட்டம், தஞ்சை மாவட்டம் (பிச்சைக் கட்டளை). | ஐந்தாண்டு. | 5 | .. |
| முன்பே நடந்து இப்போது நின்றுபோனது — | | | |
| 1 மணலி இராமகிருஷ்ண முதலியார் அறக்கட்டளை, மணலி. | ஐந்தாண்டு. | 15 | .. |

முதற் பகுதியில் குறித்த 6 நிலையங்களிலும், ஆசிரியர் சம்பளம் நடைமுறைச் செலவு, மாணாக்கர் உணவு ஆகிய செலவினங்களை அந்தந்த கோயில்கள் அல்லது மடமே ஏற்றுக்கொண்டுள்ளன.

4. இருப்பினும் இப்போது இது சம்பந்தமான தேவை:—

1. முழுமையான ஒரே தரமான ஐந்தாண்டுப் பயிற்சி திட்டம்.

2. மாணாக்கர் சேர்க்கை பற்றிய ஒரே தரமான சட்ட திட்டம்.

3. ஒரே தரமான பாடப்புத்தகங்கள் அவற்றை அச்சிட்டு மாணாக்கர் கையில் அளித்தல்.

4. மாநில ரீதியான பொதுத் தேர்வுத் திட்டம்.

5. எல்லா இடங்களிலும் கட்டாயமாக தேவாரம் அல்லது திவ்வியப் பிரபந்தப் பயிற்சியும், சமய இலக்கிய பாடப் பயிற்சியும்.

5. இப்போது செய்யத் தக்கது.—(அ) இத்தனையும் மனத்திற்கொண்டு தமிழ் நாட்டுக் கோயில்களின் பெரும் எண்ணிக்கையும் கருதி, சில ஆகமப் பயிற்சிக் கல்லூரி களையேனும் அறநிலையத் துறை பொறுப்பேற்று அமைத்து நடத்தி வரவேண்டும். இப் பயிற்சிக் கல்லூரிகள் கீழ்க்காட்டிய ஆறு இடங்களில் அவற்றுக்கு எதிரே குறித்த மாவட் டங்களில் அமைத்துக் கொள்ளலாம். இவை இந்த நகரங்களில்தான் நடக்க வேண்டும் என்பதில்லை. இவற்றினருகேயுள்ள ஏதேனுமொரு பெரிய கோயிலைக்யொட்டிக் கிராமத்தில் நடந்தால் மாணாக்கருடைய பயிற்சிக் கட்டுப்பாட்டை அமுல் படுத்துவதும், அவர்களுக்குச் செயல்முறைப் பயிற்சியளிப்பதும் எளிதா யிருக்கும்.

1. சென்னை—செங்கற்பட்டு, வட ஆற்காடு.

2. கும்பகோணம்—தஞ்சாவூர், தென்னாற்காடு.

3. திருச்சி—புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி.

4. மதுரை—மதுரை, இராமநாதபுரம்.

5. கோயம்புத்தூர்—கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, நீலகிரி, பெரியார் மாவட்டம்.

6. திருநெல்வேலி—திருநெல்வேலி, கன்னியாகுமரி.

(ஆ) இவை யாவும் அறநிலையத்துறை ஆணையருடைய பூரண மேல்விசாரணை யில் நடக்கவேண்டும். தற்போதுள்ள ஆகமப் பாடசாலைகள் எந்தெந்த ஆலயங் களின் சார்பில் நடக்கின்றனவோ அவ்வாறே அவை இயங்கலாம். மாணவர் சேர்க்கை, பாடத்திட்டம், தேர்வுத் திட்டம், சான்றிதழ் வழங்குதல் ஆகியவை மேற்கூறிய பொதுத் திட்டத்தின்படியே நடத்த வேண்டும். பொதுத் திட்டத்தின்படி நடைபெறும் இந்த ஆறு கல்லூரிகளும், ஆணையர் பொதுநல நிதியிலிருந்தோ அல்லது அரசு நிதியுதவியைக் கொண்டோ நடைபெற வேண்டும். இக் கல்லூரிகளில் சேர்க்கப்பெறும் மாணாக்கர் களுக்கு இலவச உணவு, இருக்கை, புத்தகம் முதலான வசதிகள் கல்லூரியின் சார்பில் செய்து கொடுக்கவேண்டும்.

(இ) கர்நாடக மாநிலத்தில் மைசூர் மகாராஜா சம்ஸ்கிருதக் கல்லூரியில் ஆகமக் கல்வி ஒரு பிரிவாக இணைந்து, ஆணையர் மற்றும் அரசு மேற்பார்வைக்கு உட்பட்டு நடந்து வருவதும், அதற்கு ஜெனரல் முசரி பண்ட் (பொது அறக்கட்டளை) என்று அரசு வருடந்தோறும் ரூ. 4 லட்சம் வழங்குவதும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. இந்தப் பயிற்சியின் நிர்வாகத்துக்குப் பொறுப்பேற்கும்படி தகுதியுடைய பாஞ்ச ராத்திரம், வைகானசம், சைவாகமம் ஆகிய மூன்றுக்கும் ஏற்ற ஆகமப் பண்டிதர்களை ஆணையாளர் அலுவலக மேலாளர் சம்பள விகிதத்தில் அங்கு நியமனம் செய்யப்பட் டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலும் இவ்வாறு செய்யவேண்டும்.

6. பயிற்சித் திட்டம்.—சைவாகமப் பயிற்சியும் வைணவாகமப் பயிற்சியும் இரண்டு நிலைகளிலும் சிறந்த அம்சங்களில் வெவ்வேறாகவே நடைபெறும். சைவ-வைணவ ஆசாரங்கள், சின்னங்கள் (திருநீறு, திருமண் முதலியன) வலியுறுத்தப்படும். இப் பயிற்சி ஐந்து ஆண்டு நடைபெறும்.

(அ) இளநிலை.—(1) முதல் இரண்டு ஆண்டுகளில் பயிற்சி பெற்றவர் கோயில் களில் நித்திய பூசையும் பிராயசித்த பூசையும், சிறு விழாக்களும் நடத்த தகுதி பெற்றவ ராக ஆக்குவது நோக்கம். இப்பயிற்சி இளநிலைப் பயிற்சி எனப் பெயர்பெறும். இதன் முடிவில் தேர்வும் சான்றிதழும் உண்டு. இச்சான்றிதழ் பெற்றவர் கோயில் நித்திய பூசை செய்யும் தகுதி பெறுகிறார்.

(2) இவர்கள் அனைவருக்கும் தேவாரம், திவ்வியப் பிரபந்தம், தோத்திரப் பாடல்கள் பயிற்சி அளிக்கலாம். இன்று வழிபடுவோர் எல்லாக் காரியங்களிலும் நல்ல நாள் பார்ப்பது மரபாக இருக்கிறபடியால், இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான அடிப்படை சோதிடப் பயிற்சி இந்த இரண்டு ஆண்டுக்காலத்தில் தரப்படவேண்டும்.

(3) சில தெய்வக் கோயில்களில் பூசை செய்வோருக்கும் இதிலேயே போது மான பூரண பயிற்சி அளித்துவிடலாம். இந்தப் பயிற்சியே அவர்களுக்குப் போது மானது.

(ஆ) முதுநிலை.—அடுத்த மூன்றாண்டு பயிற்சி முதுநிலை எனப்படும். இப்பயிற்சியில் எல்லா நைமித்திக பூசைகளும் (கர்ஷணகி பிரதிஷ்டாந்தம்), பிரதிட்டை, கும்பாபிஷேகம், பிற பெருவிழாக்கள் ஆகியவற்றை நடத்தும் பயிற்சியும் அளிக்கப்படும் இது முதுநிலை எனப்படும். இதன் முடிவில் தேர்வும் சான்றிதழும் உண்டு. இத் தேர்வு முடித்தவர் சம்பந்தப்பட்ட கோயிலில் எவ்வகையான கிரியைகளையும் நடத்தி வைக்கும் ஆச்சாரியருக்குரிய தகுதி பெறுகிறார்.

(இ) மாணவர் சேர்க்கை.—சாதி இன வேறுபாடின்றி எந்த இந்து இனத்தவரும் இங்குச் சேர்க்கப்படுவர். மற்றபடி ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ள தகுதிக்குறைபாடுகள் இருக்கக்கூடாது. புலால் உண்ணுபவரும், வழக்கமாக மது அருந்துபவரும் சேர்க்கப்படமாட்டார். மாணாக்கரைப் பயிற்சிக்குச் சேர்த்த உடனேயே முதல் அங்கமாக அவருக்குச் சமய தீட்டைச் செய்து வைக்கப்படும். குறைந்த கல்வித் தகுதி ஆரம்ப காலத்தில் 5 ஆம் வகுப்பு என்று வரையறை செய்யலாம். ஆரம்ப காலத்தில் வயது வரம்பு வற்புறுத்த வேண்டாம். எந்தக் கோயில்களில் எந்த இனத்தவர் பூசை செய்து வருகிறார்களோ, அந்தக் கோயிலின் பூசை குறித்துப் பயிற்சி அளிப்பதில் அந்த இனத்தாருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(ஈ) பாடத் திட்டம்.—விரிவான பாடத் திட்டங்கள், ஆகம சபையால் தயாரிக்கப்படும். இந்தப் பாடத் திட்டங்களில் மந்திர பாகம் தவிர மற்றவை தமிழ் மொழியிலேயே கற்பிக்கப்படும். படிப்பு முறைக்கான புத்தகங்களை அறநிலையத் துறையே கல்லூரி தொடங்கும் காலத்திலே தயாரித்து வைத்திருக்கவேண்டும். ஆயினும் பழைய சாத்திரங்களை அறிவதற்குப் போதிய சம்ஸ்கிருதப் பயிற்சியும் கட்டாய பாடமாக இருக்கும்.

(உ) ஆகம சபை.—இத்தனைப் பயிற்சி நிலைகளையும் நிர்வாகம் செய்வதற்கு அலுவல் சார்பற்ற ஒரு மாநில ஆகமச் சபை அமைக்கப்பெறும். அதற்கு அறநிலையத் துறை ஆணையாளர் தலைவராயிருப்பார். எல்லா ஆகமப் பாடசாலை (துறை மற்றும் தனியார்) முதல்வர்களும் பதவி வழி உறுப்பினராக இருப்பர். தென்னிந்திய அர்ச்சகச் சங்கக் காரியதரிசியோ அல்லது தலைவரோ பதவி வழி உறுப்பினராக இருப்பார். ஆகமத்தில் வல்லுநர்களாக, சைவம், பாஞ்சராத்திரம், வைகானசம் ஆகிய ஒவ்வோர் ஆகமத்துக்கும் இருவர். சைவ சித்தாந்த சாத்திரம், சைவத் திருமுறைகள் வைணவ சித்தாந்தம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றில் வல்லுநர் நால்வர். ஒரு வேத பண்டிதர், ஒரு ஓதுவார், அரசு சிற்பக் கலைக்கல்லூரித் தலைவர் (மகாபலிபுரம்) உறுப்பினர்.

இந்த ஆகம சபையானது பல்வகைப் பயிற்சிகளுக்கும் வேண்டிய பாடத் திட்டங்களையும், அவற்றிற்குப் பயன்படத்தக்க பாடப் புத்தகங்களையும், தேர்வுத் திட்டங்களையும், நிதி வசதி முதலியவற்றையும், அறநிலையத்துறை மூலம் ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும்.

இவ்வாகமசபை நடைபெறுவதற்கான விதிகளை அறநிலையத் துறை வகுக்கலாம்.

7. அர்ச்சகர்களுக்கான நூல் வெளியீடு—

(அ) எல்லா ஆகமங்களும் அழிந்து போகாமல் காக்கும் பொருட்டு, அச்சில் கிடைக்காது ஏட்டில் மட்டும் இருப்பவற்றைப் பிரதி செய்து தமிழுரையுடனும் விளக்கப் படங்களுடனும் வெளியிடுதல், முன் அச்சிடப்பட்டு இப்போது கிடைக்காமலுள்ள ஆகமங்களையும் தமிழுரையோடும் விளக்கப் படங்களுடனும் வெளியிடுதல்.

(ஆ) பயிற்சியாளருக்கு வேண்டிய பல்வகையான பாடப் புத்தகங்களையும் பின்னால் உதவத்தக்க கையேடுகளையும் வெளியிடுதல்.

(இ) தமிழ் அருச்சனை என்ற இணைப்பில் விளக்கிக் கூறியபடி, சைவத் திருமுறைகள், வைணவ திவ்வியப் பிரபந்தங்கள், பிற சிறப்பு நூல்கள் ஆகியவற்றிலிருந்து தக்கவர்களைக் கொண்டு, முக்கியமான தெய்வங்களைக் குறித்த பெயர்களைத் திரட்டச் செய்து, தமிழ் அருச்சனைக்கேற்ற அஷ்டோத்ரம், சகஸ்ரநாமம் போன்ற தொகுப்புகளை விரைவில் வெளியிடுதல்.

8. உள் துறைக்குரிய பிற ஊழியர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சியளித்தல்.

இதுவரை கூறிய கருத்துக்களை அனுசரித்து உள் துறை ஊழியம் செய்வது பற்றி தகுதிச் சான்றிதழ் பெறுவதற்குக் குறித்த விதி 12ஐயும்; சம்பந்தப்பட்ட இதர விதிகளிலும் திருத்தம் செய்து கொள்ளவேண்டும்.

இந்தக் கல்லூரியில் பயின்று பூசகர் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு கீழ்க்கண்ட உறுதிகள் அளிக்கப்பெறுதல் வேண்டும்.—

1. நியமனம் கிடைக்கும் என்ற உறுதிமொழி.
2. சேவை செய்கின்ற கோயிலுக்கு ஏற்றமாதிரியும், வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான அளவிலும் ஊதியம் அளிக்கும் உறுதி.
3. கோயிலை ஒட்டியே குடியிருப்பதற்கு வசதியோடு கூடிய இல்லங்கள்.
4. Contribu ory Provident Fund அமல்படுத்துதல்.
5. நியமனம் முதலான குடும்ப நிகழ்ச்சிக்குரிய கடன் வசதி.
6. விழாக்கால கடன் வசதி.

(ஆளுநரின் ஆணைப்படி.)

பி. வி. வெங்கடகிருஷ்ணன்,
ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்,